உ

வேலுமயிலுந்துணை

ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள்

அருளிச்செய்த

கந்தரந்தாதி மூலமும்

அக்காலத்தில் அதற்கு

வில்லிபுத்தூரார் செய்த உரையும்

திருச்சுழியல்

வைக்கீல். முத்துக்கருப்பண பிள்ளையவர்கள்

குமாரரும் பன்னூலாசிரியருமான

வித்வான். M. வீரவேற் பிள்ளையவர்கள்

புதிதாக எழுதிய

கருத்துரை விசேடவுரையும்

பி. நா. சிதம்பர முதலியார் பிரதர்ஸ்,

வித்தியா ரத்நாகரம் பிரஸ்,

சென்னை.

பதிப்புரிமை] 1938 [அணா 8

முகவுரை

"செஞ்சர ணுதகீத கிண்கிணி நீபமாலை
திண்டிறல் வேல்மயூர முகமாறும்
செந்தமிழ் நாளுமோதி உய்ந்திட ஞானமூறு
செங்கனி வாயிலோர்சொ லருள்வாயே."

மூவுலகங்களுந் துதித்தற்குகந்த தனிப்பரம்பொருள் முருகப்பெருமானே யாமென்பது வேத சிவாகமங்களின் றுணிபாகும். கலியுகப் பிரத்தியட்ச தெய்வமாகிய அவனது திருவருட் செல்வம் படைத்துள்ள மெய்யடியார் பலருள்ளும், இற்றைக்கு நானூற்றைம்பது வருடங்கட்கு முன்னர், திருவண்ணாமலையென்னும் பதியில், பூர்வ புண்ணியத் தோற்றமாயவதரித்து, வடிவேற்காளையின் வரப்பிரசாதியாய் விளங்கித் தமதுள்ளங் கனியக் கனிய அன்புவெள்ளம் பொங்கித் ததும்பிக் கற்பகத் தருவனைய அற்புதம் வாய்ந்த பற்பல செந்தமிழ்த் தீஞ்சுவைக் கவிமாரி பொழிந்துதவி, யுலகப் பெரும்புகழ் படைத்த மெஞ்ஞானப் பெரியார் ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகளின் சரிதம் தெரியா ரெவரு மிங்கில்லையென்பது வெள்ளிடை வாசகமாகும்.

கந்தனையன்றி மறுதெய்வங் கனவினுங் கருதாத அடிகள் பாடியுள்ள அருட்சுவை மலிந்த பன்னூற்களிற் கந்தரந்தாதி யென்னு மிந்நூலுமொன்றாகும். இதின் பெருமை நவிலுதற் கரியதாகும். அக்காலத்தில் வித்தியாகர்வம் படைத்துத் திக்கு விஜயம் புரிந்து பற்பல புலவமக்களின் செவிகளைக் குறும்பி யளவாகத் தோண்டி வெற்றிகொண்டு எதிர்ப்பாரின்றித் தமிழுலகமெங்கணும், மதகளிறுபோன் றுலாவித் திரிந்த வில்லிபுத்தூராரென்னும் புலமைப் பெருமகனார், திருவண்ணாமலை யடைந்தபோது, அங்கு பேரின்பச் செல்வரா யெழுந் தருளியிருந்த, நமது சுவாமிகளின் றிருமுன்னர் வாது தொடுத்து, அவரது அருட்கவிதைக் காற்றாது, தோல்வி யெய்தி, செருக்கொழிந்து, தமது பிழையைப் பொறுத்தருள வேண்டுமெனக் குறையிரந்து, அருணகிரியின் றிருவடிகளிற் சிரம் தாழ்த்தி வணங்கும்படி செயல்தந்துள்ள மகத்துவ மானது இந்நூலுக்கே யுரியனவாகும்.

ஆதலின் கருணையங்கடலாகிய கந்தன்மீது அன்புத்தேன் சொட்டுகின்ற அருள்வாக்காகிய இந்நூல் சன்மார்க்க சீலர்கள் பக்தியுடன் பாராயணம் செய்து சதுர்வித புருடார்த்தங்களை யும் அடைதற் குரியனவாகுமென்பது அருணகிரி வள்ளலின் மெய்யான பொன்னுரையாம்.

“ஐயா வருணகிரி யப்பா வுனைப்போல
மெய்யாக வோர்சொல் விளம்பினர் யார்.” என்னுந்

தாயுமான சுவாமிகளின் அருமைக் கவிதையும் அருணகிரியை வியந்து போற்றுகின்றன. எனது சிற்றறிவிற் கிசைந்தவாறு

பன்னூற்களையு மாராய்ந்து திருவருட் டுணைகொண்டு கருத்துரையும், விசேடவுரையும் எழுதியுள்ளேன். கலாபண்டித சிரோன்மணிகள் நிறைந்த நம் தமிழகத்தில் இவ்வுரையைக் காட்டினும் அருமையா யெழுதும் பெரியார் அனந்தமுண்டு என்பதை யான் அறிவேன். ஆயினும் ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகளின் உள்ளமலர் சொரிந்துதவிய அமுதத் திருக்கவிகட்கு தெய்வகிருபையாக உரையெழுதுமாறு எனக்கு வாய்த்த அரிய சந்தர்ப்பத்தை எனது பிறவிக்குரிய பெரும்பயனெனக் கருதி மகிழ்வுற்றெழுதி வெளியிட்டதே காரணமாகுமென மிக்க பணிவுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். கந்தவேளையே யெந்தவேளையும் போற்றி நித்ய செல்வம்படைத்த அருணகிரிப் பெரியாரின் அடிமலர்களை யென்னுளும் அன்புடன் வணங்குவோமாக.

"இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு." —நாயனர்

இங்ஙனம்
அன்பன்
M. வீரவேற் பிள்ளை.

உ

வேலுமயிலுந்துணை

ஸ்ரீ முருகக்கடவுள்மீது

ஆசிரியர் M. வீரவேற் பிள்ளையவர்களால்

இயற்றப்பெற்ற நூல்கள்

படைவீட்டுத் திருப்புகழ்
குன்றக்குடித் திருப்புகழ்
கொடுமளம்பதித் திருப்புகழ்
பெருவயல்த் திருப்புகழ்
கத்தக்காட்டுத் திருப்புகழ்
சோடச சந்தத் திருப்புகழ்
வெற்றிவேல் மாலை
நெஞ்சொடு கிளத்தல்
கொடுமளம்பதி ஆசிரியம்
ஷை சீவாட்சரமாலை
குமாரதரிசனம்
சோடசச்சொன்மாலை
பழனி மஞ்சரி
திருவண்ணாமலை தீபதரிசனம்


பாங்கிரிச் சண்முகமாலை [சரி
பெருவயற்பதி சீவாட்சரமஞ்

இதர நூல்கள்

உலகப்புதுமை அல்லது மாறு
தல்காலம்
திராவிடபூஷணம்

ஷை யாரால் உரை இயற்றிய நூல்கள்

கந்தரனுபூதி
கந்தர் சஷ்டிகவசம்
கந்தர் அலங்காரம்



உ

வேலுமயிலுந் துணை

இவ்வுரையின்கண்

எடுத்தாளப்பெற்ற உதாரண நூற்கள்

அருணாசலப்புராணம்
தணிகைப்புராணம்
கந்தப்புராணம்
காவிரிப்புராணம்
சேக்கிழார்புராணம்
காஞ்சிப்புராணம்
திருச்செந்தூர்ப்புராணம்
திருவிளையாடற்புராணம்
திருமந்திரம்
திருச்சுழியல் தேவாரம்
திருநாவுக்கரசு சுவாமிகள்
திருமுருகாற்றுப்படை
திருப்புகழ்
திருஅருட்பா
திருப்போரூர்சந்நிதிமுறை
திருஞானசம்பந்த சுவாமிகள்
திருக்குறள்
அபியுக்தர்வாக்கு
கௌமார நூல்
தாயுமானவர்
பத்திரகிரியார்
நைடதம்
ஔவைக்குறள்
பட்டினத்தடிகள்
சிந்தாந்தபோதம்
சுப்பிரமணிய பராக்கிரமம்
கைவல்லிய நவநீதம்
மாணிக்கவாசக சுவாமிகள்
நாலடியார்
வேல்வகுப்பு
இறையனாரகப்பொருள்
தொல்காப்பியம்
மூதுரை
ஆசாரக்கோவை
கந்தரலங்காரம்
முருகாந்தாதி

சித்தியார்
பகவத்கிதை
தத்துவராயர்பாடுதுறை
மயில் வகுப்பு
தம்பிரான்தோழர்
வில்லிபாரதம்
சிந்தாமணி
குமாரதரிசனம்
கந்தரனுபூதி
பிரமானுபூதி விளக்கம்
விநாயகரகவல்
மகாராஜா துறவு
சிவஞான வள்ளலார்

நாஞசிவவாதக்கட்டளை
அத்துவிதவுண்மை
கபிலரகவல்
உபநிடதம்
ஞானவாசிட்டம்
சிவானந்தலகரி
மனுநீதி காதல்
பதிபசுபாசவிளக்கம்
தனிப்பாடல்
ஞானரகசியம்
முண்டகோபநிஷத்து
கடோபநிஷத்து
தைத்திரிய உபநிஷத்து

உ
வேலுமயிலுந் துணை

கந்தரந்தாதி
மூலமும் - விருத்தியுரையும்

விநாயகர் வணக்கம்

வாரணத் தானை யயனைவிண் ணோரை மலர்க்கரத்து
வாரணத் தானை மகத்துவென் றோன்மைந் தனைத்துவச
வாரணத் தானைத் துணைநயந் தானை வயலருணை
வாரணத் தானைத் திரைகோண்ட யானையை வாழ்த்துவனே.

(பதவுரை.) *வாரணத்தானை* - அயிராவதத்தையுடைய இந்திரனையும், *அயனை* - பிரமாவையும், *விண்ணோரை* - தேவர்களையும், *மலர்க்கரத்து* - தாமரை மலர்போன்ற கையில், *வாரணத்தானை* - சங்கையுடைய விஷ்ணுவையும், *மகத்து* - (தக்கனது) வேள்வியில், *வென்றோன்* - (வீரபத்திர முகூர்த்தங்கொண்டு) செயித்தவனாகிய பரமசிவனது, *மைந்தனை* - புதல்வனும், *துவச வாரணத்தானை* - கோழிக்கொடியையுடைய குமாரக்கடவுளை, *துணைநயந்தானை* - தம்பியாகவிரும்பியவனும், *வயல்சூழ்* - பழனஞ்சூழ்ந்த, *அருணை* - அருணாசலத்தில், *வாரணத்தானை* - கயமுகாசுரனை, *திரைகொண்ட* - வெற்றிகொண்ட, *யானையை* - யானைமுகனுமாகிய கணபதியை, *வாழ்த்துவன்* - (யான்) வணங்குகிறேன்.

(கருத்துரை) பூர்வம் சிவத்துரோகமாகச் செய்துள்ள தக்கனது வேள்வியில் யாகத்தலைமைபூண்ட விஷ்ணுவாதிமுதலிய தேவர்களை, வீரபத்திரமூர்த்தங்கொண்டு வென்றவராகிய சிவபிரானுக்குப் புதல்வனும், சேவற்கொடியையுடைய சுப்பிரமணியக்கடவுளினது சோதரனும், கஜமுகாசுரனை அழித்தவனுமாகிய அருணையம்பதியிற் கோயில் கொண்டருளிய யானை முகத்தையுடைய கணபதியை வணங்குகின்றேன் என்பதாகும்.

(விரிவுரை.) நினைக்க முத்தியளிப்பதாகிய அருணாசலம் என்னும், மகாக்ஷேத்திரமே இந்நூலாசிரியராகிய அருணகிரி சுவாமிகளுக்கு செனனபூமி யாதலின், அங்குள்ள விநாயகமூர்த்தியை வணங்கி முருகன் தோத்திரமாகிய அந்தாதியை ஆரம்பிக்கின்றார் என்க. "இரவிகள் சந்திரர் வயிரவர் விஞ்சைய ரிமையவ ரெண்டிசையோ, ருரக ரருந்தவர் முனிவரர் பங்கய ருவண நெடுங்கோடியோர், பரவி நெருங்கவி லுலக நிறைந்தவர் பணியு மிடங்கிடையா(து) அரகரவென்பது கடலின் முழங்கிய தருணை வளம்பதியே" என்பது அருணாசலமென்னும் தலத்தின் புராண மகத்துவமாகும்.

வாரணம் என்பது ஐராவதமாகிய வெள்ளை யானையையும், விஷ்ணுவின் சங்கத்தையும், சேவற் கொடியையும், யானைமுகத்தையுடைய அசுரனையும் இங்கு குறிப்பதாகும். பல பொரு ளொரு சொல்லாக விளங்கலாயிற்று. மகத்துவென்றோன் என்பது தக்கன் வேள்வியை அழித்த வீரபத்திரக் கடவுளைக் குறிக்கின்றன. உமாதேவியாரை தமக்குப் புத்திரியாகவும், சிவமூர்த்தியை மருமகனாகவும் வரபலத்தாற் பெற்றுள்ள பிரமன் மானச புத்திரர்களி லொருவனான தக்கன் என்பான் மகா கர்வம்படைத்து வினைவலியாற் கெடுமதி கொண்டு சிவத்துரோகம் புரியவெண்ணி விஷ்ணுவாதி தேவர்களை

யாகத்தலைவராக்கி ஒரு வேள்விசெய்யத் தேவர், இருடியர் முதலி யோர்க்குத் திருமுகம் அனுப்பினன். யாகத்திற்கு வந்த இருடி களில் ததீசி முனிவர் சிவமூர்த்திக்கு அவி கொடுக்கும்படி பலமுறை கூறியுங் கேளாது யாகந் தொடங்கினன். இந்தக் காட்சியைக்காண உமாதேவியாகிய தாக்ஷாயணி வந்தனள். தக்கன் உபசரியாது இருக்க உமாதேவியார் இது சுடுகாடாகவெனச் சபித்து நீங்கிச் சிவமூர்த் தியையடைந்து நடந்தவைகூறி, யாகமழிய வேண்டினள். சிவமூர்த்தி தமது நெற்றிக்கண்ணினின்றும் வீரபத்திரரைச் சிருட்டிக்க, உமா தேவியார் மகாகாளியைச் சிருட்டித்து தக்கன் யாகத்தை அழித்து வருகவென அனுப்பினர். அக்கட்டளை யேற்ற தேவதேவிக ளிரு வரும் பூதகணங்களுடன் வேள்விச்சாலையடைந்து, அதை அழித்த னர். இவ்வேள்வியில் இந்திரன் குயிலாகிப் பறந்தோடினன். அக்கினி நா அறுப்புண்டான். பூஷா என்னுஞ் சூரியன் பல் இழந்தான். சந்திரன் வீரபத்திரர் காலால் தேய்ப்புண்டனன். இதுநிற்க காளி யொருபுறத்து இருந்து சரஸ்வதி, லட்சுமி, இந்திராணி முதலியவர் களை உறுப்பழித்தனள். இதனால் யஞ்ஞ புருஷன் பயந்து மானுருக் கொண்டு ஓட ஒரு பூதம் மானின் தலையைத் திருகியது. இவ்வகை வெற்றிபெற்று வீரபத்திரரென்னுந் திருநாமம் அடைந்து வீரமா காளியுடன் அமர்ந்தவர் சிவமூர்த்தியின் அம்சமாகும். "கொண் டாடுதல் புரியாதொரு தக்கன் பெருவேள்வி, செண்டாடுதல் புரிந் தான் திருச் சுழியல்பெருமானே" எனத் தம்பிரான் தோழரும், "தாங்கிய சீர்த் தலையான வானோர்செய்த தக்கன்றன் பெருவேள்வி தகர்த்தநாளோ" எனத் திருநாவுக்கரசரும் செப்பியிருப்பது வீரபத் திரரைச் சிவமூர்த்தி என்பதாக குறிக்கின்றன காண்க. ஆதலின் நமது சுவாமிகள் இதுபற்றி, வாரணத்தானை யயனை விண்ணோரை, மலர்க்காத்து வாரணத்தானை மகத்து வென்றோன் மைந்தன் என சிவபிரானுடைய லீலையெனக்கொண்டு அவர் மைந்தன் கணபதி

யெனச் சுட்டிச் சொன்னார் என்க. சேவற்கொடியையுடைய முருகனைத் துணைவனாக வுடையவனை என்பதுபற்றி, துவச வாரணத் தானைத் துணைவயந்தானை என்றார். நீர்வளமிகுந்த கழனிகளை யுடைய மருதநிலம் என்பதுகொண்டு வயலருணை எனக் குறித்தார். மதங்கபுரம் என்னும் பட்டணத்தை யாட்சிபுரிந்து தேவர்களுக்குக் கொடுமைசெய்து வந்தவனாகிய கசமுகாசுரனை (யானை முகத்தை யுடையவனை) விநாயகக் கடவுள் தமது கோடாயுதத்தாற் சங்கரித்தமையையும், அவன் பெருச்சாளிரூபமாகவந்து ஆத்மஞானமடைந்து அக்கடவுளுக்கு வாகனமாக அமர்ந்திருத்தலையும்விளக்கி, வாரணத் தானைத் திரைகொண்ட யானையை வாழ்த்துவனே என்றார். அருணாசலம் என்னுந் திருத்தலத்தில் அருணகிரிநாதர் அவதரித்து முருகவேளையே பாடுகிறதென்னும் வைராக்கியகுண சீலம்பெற்று பூர்வபுண்ணிய பரிபாகத்தால் அருட்செல்வம் படைத்து அறுமுக பரம்பொருளையே குருநாதனாகக்கொண்டு பேரானந்தநிலை யெய்தி யுள்ளா ராதலின் அத்தலத்தின்கண் எழுந்தருளியுள்ள விநாயகப் பெருமானைப் பிரார்த்தனைசெய்து கந்தாந்தாதியாகிய இந்நூலை ஆரம்பித்துள்ளா ரென்பது புலனாகின்றன. சிவபிரானுடைய கோபாக்கினியினிடமாகிய நுதல் விழியிலிருந்து வீரபத்திரக்கடவுள் வடிவம் தோன்றியுள்ளதென்பது கண்டு இங்குதாரணங் காண்க.

"உண்ணிலாவு வஞ்சிசெல்ல வொருவனாவி யுய்யுமோ
தண்ணிலா முடிக்குனின்று தழலைமொண்டி றைக்கையா
லண்ணல் வெம்பி முனிவுகொள்ளு மளவினெற்றி விழிதனில்
விண்ணடுங்க வண்ணடுங்க வீரன்வந்து தோன்றினான்."

—அருணாசலப்புராணம்

இதுவுமது

உண்ணு முலையுமை மைந்தா சரணம் பரருயிர்சேர்
உண்ணு முலையுமை மைந்தா சரண மருணை வெற்பாள்
உண்ணு முலையுமை மைந்தா சரணந் தனமு மொப்பில்
உண்ணு முலையுமை மைந்தா சரணஞ் சரணுனக்கே.

(ப-ரை.) உண் - (கன்றுகள்) உண்ணும், ஆ - பசுக்களையுடைய, முலை - முல்லைநிலத்திற்கு, உ - இறைவனாகிய விஷ்ணுவினது, மை - மேகநிறத்தையும், மைந்து - வலிமையையும், ஆசு - (உவர்ப்பாகிய) குற்றத்தையுமுடையதாய், அரண் - காவலாயிருக்கிற, அம்பரர் - சமுத்திரத்திலிருந்த அசுரரது, உயிர்சேர் - ஆவியைமாய்த்து, உள் - தேவர்கள்மனத்திருந்த, நாம் - அச்சத்தை, உலையும் - கெடுத்தருளும், ஐ - சுவாமியே! மை - ஆட்டுவாகனத்தை, தா - ஏறும், சர் - (உஷ்ணத்தையுடைய) அக்கினி, அண் - சேர்ந்திருக்கும், நம் - நாமடைக்கலம் புகுதற்கிடமாகிய, அருணை வெற்பாள் - அருணகிரியில் வாழும் அம்மையாகிய, உண் - மிகுதியாகிய, ஆம் - பெருகும், முலையும் - கற்புடைமைக்கும், ஐ - அழகிய, மை - அஞ்சனந் தீட்டிய, தா - குழையை யெட்டுகின்ற, சர - அம்புபோன்ற கண்ணினது, நந்தனமும் - கிருபைக்கும், ஒப்பில் - இணையில்லாத, உண்ணுமுலையுமை - உண்ணுமுலையென்னும் பெயரையுடைய பார்வதியினது, மைந்தா - புதல்வனே! சரணஞ் சரணுனக்கு - உன்னிடத்தே யான் சரணம் புகுந்தேன் சரணம் புகுந்தேன்.

(க-ரை.) விஷ்ணுவின் கார்வண்ணம்போன்ற தன்மையினையுடையதும், வன்மைபொருந்தி உவர்ப்பையுடையதாகி பூவுலகைக் காக்கின்ற அரண்போலுமுற்ற மகா சமுத்திரத்தில் மறைந்திருந்த அசுரர்களை அழித்து தேவர்களின் அச்சத்தை நீக்கியருளியவனே,

அக்கினிவடிவமாகிய அருணையம்பதியில் எழுந்தருளியுள்ள ஒப்பற்ற முதல்வியும் கிருபைக்கிருப்பிடமாகிய நயனங்களையுமுடைய மகா தேவியாகிய உண்ணுமுலையம்மையாரின் அருமைப்புத்திரனே, நினது சரணமலர்களை நமஸ்கரிக்கின்றேன் எ-று.

(வி-ரை.) பசுக்களைப் பரிபாலிப்பதற்கு முல்லைநிலமே இசைந்துள்ளதாதலின் அந்நிலத்திற்குரிய கோபாலனாகிய கரியமாலின் மேனியைக் கடலுக்கு உவமைகூறினர். கள்வர்கள் காரிருளைத் துணைகொண்டு தொழில் புரிவதுபோன்று அசுரர்கள் மாயம் கருங்கடலைப்பற்றிய தாதல்கண்டு அவர்களை அழித்து தேவர்களின் பயங்கரத்தை நீக்கியதன்மையை விளம்பினர். அருணைவெற்பு என்பது முதல்யுகமாகிய கிருதயுகத்தில் செஞ்சோதிவடிவமுடைய அக்கினி மலையாகவும், திரேதாயுகத்தில் மாணிக்கமலையாகவும், துவாபரயுகத்தில் மிகுந்த பிரகாசமுடைய பொன்மலையாகவும், கலியுகத்தில் கன்மலையாகவும் திருவுருவாகிய அருணாசலமென்னும் மலையானது சிவலிங்கவடிவமாக விளங்குகின்ற தாதலின் அவ்வித மாண்பு தெளிவுற விளங்கும்வண்ணம் உமாதேவியாகிய உண்ணுமுலையம்மையை அருணை வெற்பாள் எனப் புகன்றுள்ளாரென்க. அவள் மைந்தனே இந்நூல் இனிது முடிவுபெறும் நிமித்தம் நின்னை நமஸ்கரிக்கின்றேன் என்பதாகும்.

"செங்கனல் முதல்யுகந் திரேதை மாமணி
பொங்கிய துவாபரம் பொலிந்த பொன்னிறந்
தங்கிய கலியுகந் தன்னி லேசிலை
யங்கமா மதன்பெய ரருண பூதரம்."

என்பது புராணக் கூற்றாகும். ஆதலின் அருணகிரி சுவாமிகள் இவ்விரண்டு பாட்டாலும் விநாயகர் வணக்கத்தைப் பூர்த்திசெய்துள்ளாரென்க.

நூல்

திருவா வினன்குடி பங்காள ரெண்முதுச் சீருரைச
திருவா வினன்குடி வானூர் பரங்குன்று சீரலைவாய்
திருவா வினன்குடி யேரகங் குன்றுதோ ரூடல்சென்ற
திருவா வினன்குடி கொண்டதண் கார்வரை செப்புமினே. (1)

(ப-ரை.) திரு - மகாலக்ஷ்மிக்கு, ஆவி - உயிராகிய (திருமாலும்) நன்குடி - நற்தேவியை, பங்காளர் - பாகத்திலுடைய பரமசிவனும், எண் - மதிக்கத்தக்க, முது - பழமையாகிய, சீர் - சிறப்புப்பொருந்திய, உரை - வேதாகமப் பொருளைச்சொல்லிய, சதிர் - சதிர்ப்பாட்டையுடைய, உலாவினன் - இளையோனாகிய (கந்தசுவாமிக்கு) குடி - உறைவிடமாகிய, வான் - ஆகாசத்தை, ஆர் - அளாவிய, பரங்குன்று - திருப்பரங்குன்றையும், சீரலைவாய் - திருச்செந்திற்பதியையும், திரு - செல்வநிறைந்த, ஆவினன்குடி - பழனியையும், ஏரகம் - சுவாமிமலையும், குன்றுதோருடல் - (அக்கடவுள்) திருவிளையாட்டியற்றும் பல குன்றங்களையும், சென்று - நடந்து, அதிர் - முழங்கும், உவா - யானைகளின், இனன் - கூட்டங்கள், குடிகொண்ட - நீங்காதுறைகின்றதும், தண்கார் - குளிர்ந்த மேகந் தவழ்வதுமாகிய, வரை - பழமுதிர்சோலையையும், செப்புமின் - துதிசெய்யுங்கள்.

(க-ரை.) லெட்சுமி நாராயணனும், உமாபதியாகிய சிவபிரானும் போற்றத்தகுந்த மகத்துவமுடைய முருகப்பெருமான் கோயில் கொண்டருளிய ஆறு படை வீடுகளாகிய திருப்பரங்குன்றம், திருசீரலைவாய் (செந்திலம்பதி) திருவாவினன்குடி (பழனி) திருவேரகம் (சுவாமிமலை) குன்றுதோருடல், பழமுதிர்சோலை, இந்தப் புண்ணிய க்ஷேத்திரங்கள்தோறுஞ் சென்று (அன்பர்களே) அவரை வணங்கக்கடவீர்கள் எ-று.

(வி-ரை.) திருமால் தாருகன் என்னும் அசுரனுடன் போரிட்ட தில் பஞ்சாயுதங்களையும் பறிகொடுத்து முருகவேளை உபாசித்து மறுபடி அவ்வாயுதங்களை யடைந்தமையாலும், சிவபிரான் அவரைக் குருநாதனுகக்கொண்டு பிரணவோபதேசம் பெற்றமையாலும் இவ் விருவர்களும் கந்தப் பெருமானைப் போற்றிப் புகழ்தற்குரியவராகு மென்க.

"ஆர்ங்கதிர் வேணிய னுக்கி யளித்தெதி
ரீர்ங்கவுண் மாமுகன் மார்பிடு மாழி
சார்ங்கமு மற்றவுஞ் சாமியளித்தான்
பீர்ங்குரு வீயுற ழாடையன் பெற்றான்."

"எதிருறுங் குமரனை யிருந்தவி சேற்றியங்
கதிர்கழல் வந்தனை யதனொடுங் தாழ்வயிற்
சதுர்பட வைகுபு தாவரும் பிரணவ
முதுபொருட் செறிவெலா மொழிதரக் கேட்டனன்."

—தணிகைப்புராணம்

என்பதுகாண்க. ஸ்ரீ சுப்பிரமணிய படைவீட்டுத் தலங்களுள் திருப் பரங்குன்றம் தெய்வயானை யம்மையார் கலியாணம் நடந்தயிட மெனவும், திருச்செந்தில் என்பது வீரவாகுதேவரை சூரபன்மனிடம் தூதுவிடுத்தபோதும் வீரமாமயேந்திரபுரிசென்று சூரசங்காரமுடித்து வந்தபோதும் கோயில்கொண்டருளி அமரர்கள் ஆனந்தங்கொள்ளும் விதமாக காட்சியளித்த தலமெனவும், திருவாவினன்குடி (பழனி) மும்மூர்த்திகட்கும் முத்தொழிலையளித்தும் இன்னும் பற்பல திருவிளையாடற்புரிந்த க்ஷேத்ரமெனவும், திருவேரகம் (சுவாமிமலை) என்பது தந்தையாராகிய சிவபிரானுக்கு தாரக குருநாதனுக வமர்ந் தருளிய புனிதத்தலமெனவும், குன்றுதோறாடல், பழமுதிர்சோலை

என்னும் தலங்கள் முருகப்பெருமானது எண்ணிறந்த திருவிளையாடற் பிரபாவங்களையுடையவைகளெனவும் பத்திநூற்களாகிய ஆகமபுராணங்கள் விரித்துரைக்கின்றனவாகும். உலகமெங்கினுமுள்ள மலைகளையே தமக்குக் கோயிலாகக்கொண்டருளிய நம்பெருமானுர் குறிஞ்சிநிலத் தெய்வமென அன்பர்கள் கொண்டாடுதற்குரியரென்பதற் கிவையே உதாரணமாகும். உன்னதம் பெற்றுள்ள மலைகளும் அருவியூற்றுகளும் அழகிய பூஞ்சோலைகளும் இயற்கையின் தோற்றமாதலின் அங்கு அவனது ஆலயங்கள் மலிந்து காண்கின்றன. "துன்னு கயிலாயகிரி கந்தமலை மேருகிரி தோகைமலை சயிலமலைவாழ், சோலைமலை மேவிய விராலிமலை மன்னிய சுவாமிமலையுஞ் சிறந்த, சென்னிமலை வேளூர் கடம்பவன மேலைவயல் திருவருணை யின்கோபுரம், திருவாவினன்குடி பரங்கிரி திருத்தணிகை சிவாசலந் திருவேரகம், இன்னிலமதிக்குந் திருச்செந்தூர் முதலான எண்ணப்படாதகோடி, எத்தலமும் நீகருணை வைத்து விளையாடல் விதம் எத்தனையெனச் சொல்லுவேன்'' என்பது கௌமார நூற்களின் றுணிபாகும். கருணையங்கடலாகிய முருகப் பெருமானை பரிசுத்த தலங்கள்தோறுஞ் சென்று உள்ளன்புடன் வணங்கி வழிபாடு புரிவது நன்மை பயக்குமென்பதுகருதி அருணகிரி சுவாமிகள் புகன்றூர் என்க. "மூர்த்தி தலந் தீர்த்த முறையாய்ப் பணிந்தவர்க்கு, வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே." என்பது தாயுமானவர் வாக்கியம்.

"வேல்கெழு தடக்கைச் சால்பெருஞ் செல்வ
குன்றங் கொன்ற குன்றுக் கொற்றத்து
விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ
பலர்புகழ் நன்மொழிப் புலவ ரேறே
யரும்பெறன் மரபிற் பெரும்பெயர் முருக."

—திருமுருகாற்றுப்படை

சேப்புங் கவசங் கரபா லகதேய்வ வாவியம்பு
சேப்புங் கவசங் கரிமரு காவேனச் சின்னமுன்னே
சேப்புங் கவசம் பேறுவார்க ணுந்தேய்வ யானைதனச்
சேப்புங் கவசம் புனைபுயன் பாதமேன் சேன்னியதே. (2)

(ப-ரை.) செ - ரிஷபத்தையுடைய, புங்கவ - தேவாகிய, சங்கர பாலக - சங்கரன்பாலனே! தெய்வ - தெய்வீகமாகிய, வாவி - சரவணப் பொய்கையின், அம்பு - ஜலத்தில், செ - உற்பவித்த, புங்கவ - உயர்ந் தோனே, சங்கு - சங்கையுடைய, அரி - விஷ்ணுவுக்கு, மருகா - மருகனே, என - என்று, சின்னம் - திருச்சின்னமானது, முன்னே - முதலில்தானே, செப்பு - சொல்லியார்க்கின்ற, உங்கு - உவ்விடத் திலேயே (கேட்டு) அவசம்பெறுவார் - மயக்கம் அடையும் (பவனி) மாதாது, கணும் - விழிப்பார்வையையும், தெய்வயானை-தெய்வயானை யினது, தனச்செப்பும் - கொங்கையாகிய கலசத்தையும், கவசம்புனை - சட்டை யாகவணிந்த, புயன் - தோளையுடையவனாகிய முருகக்கட வுளின், பாதம் - திருவடி, என் சென்னியது - என்றலைமீதுற்றது.

(க-ரை.) சிவசங்கரர் பாலக, சரவணபவ, அரிமுகுந்தன் மருக, வென்று நின் திருநாம வாழியாகிய சின்ன முழங்குகின்றது செவி குளிரக்கேட்டு உள்ளம் அன்புவெள்ளம் பரவப் பரவசங்கொண்டு நோக்குகின்ற பெண்களது விழிமலர்களையும் தேவகுஞ்சரியினது தனபாரமாகிய கலசத்தையும் அணியப்பெற்றவனாகிய முருகப் பெரு மானே நினது பரிபுர சரணகமலங்களானது எனது சென்னிமிசை யுள்ளதாகும் எ-று.

(வி-ரை.) சிவபிரானது நுதல் விழியினின்றுந் தோன்றியுள்ள ஆறு பொறிகளும் அக்கினிபகவானால் விசாலம்பொருந்திய சரவணப் பொய்கையில் விடுத்தமைகாரணமாக சண்முகங்களுடன் தோன்றிய

கடவுளையே சரவணபவன் என வேத சிவாகமங்கள் போற்றுவன வாகும். "அர னருண் முறையினை யறிந்து கங்கைதன், சிரமிசை யேந்தியே சென்றோர் கன்னலிற், சரவணமெனுந் தடந் தன்னிற் சேர்த்தநண், மறையித ழாயிடை மல்குற்றுலென" என்று கந்தப் புராணம் திருவவதாரப் படலம் நவில்கின்றன காண்க. சரவணப் பொய்கை - மலர்கள் நிறைந்துள்ள தாமரைப்பொய்கை என்பதாகும். சரம் - நாணலையும் குறிப்பதாகும். விஷ்ணுவின் புத்திரிகளாகிய சுந்தரி, அமுதவல்லி என்பார். வள்ளி, தெய்வயானை என்னுந் தேவிக ளாதலின் முருகன் திருமால் மருகனெனவாயிற்று. அன்றியும் பார்வதிதேவியார் விஷ்ணுவின் சோதரி என்னுந் தன்மைகொண்டு அவள் பாலனென பொருள்பற்றி வந்த மருகனெனவும் விளங்குவ தாகும். "மதியுண்ட மதியான மதிவதன வல்லியே மதுசூதனன் றங்கையே" என்னும் போற்றுகின்ற தாயுமான சுவாமிகளின் அரிய பொன்மொழி இங்கு வரைதற் குரியதாகும். சின்னம் என்பது முருகக்கடவுளின் பவனியின் போழுதையும் ஊதுகின்ற தாரையை யும் சங்கரன் பாலன் வந்தான், சரவணபவன் வந்தான், சண்முகன் வந்தான், முகுந்தன் மருகன் வந்தான், என்பன போன்ற அவனது திருநாம வாழிகளை நாவினுற் றுதித்து விருது கூறுவதையுங் குறிக் கின்றதாகும். அன்றியும் பரிவாரமாகிய சிங்காரமான மயில்வாகனத் தையும், பாலசூரியன்போன்ற பிரகாசமுடைய வேலாயுதத்தையும் சேவற்கொடியையும் உபய திருத்தேவிமார்களையும் அவனது மெய் யன்பர் குழாமுதலிய அடையாளங்களையும்பற்றிய தெனவும் பொருள்தருகின்றனவாகும். இவ்வித திருக்கோலத்தில் தமது உள்ளங்களைப் பறிகொடுத்து பேரின்ப மயக்கங்கொண்ட பெண்க ளது விழிமலர்களைக் கவர்ந்த கட்டழகனாகிய கந்தப்பெருமான், தெய்வயானையம்மையாரின் தனங்களாகிய கலசம் அணியப்பெறு

கின்ற புயங்களையுடையவனுதலின் அவனது உபயசரணாரவிந்தங்கள் எனது சென்னிமிசை யுள்ளது என்றார். அன்புபாவி முருகன் சிங்காரப்பெருமையைக்கூர்ந்து நோக்குகின்ற பெண்களது கண்கள் கவசமாகவும் தெய்வயானையம்மையின் கொங்கைகள் கலசமாகவும் கொள்ளுதல்போன்று அவன் திருவடிமலர்கள் என்முடியை அலங் கரித்துள்ளது என்பதாகும். அருணகிரியின் தீவிர வைராக்ய ஞானத்தை இவை வெளியிடுகின்றன. "மாமயிலோன் வேல்பட் டழிந்தது வேலையுஞ் சூரனும் வெற்புமவன், கால்பட் டழிந்ததிங் கென்றலைமே லயன் கையெழுத்தே," என நமது சுவாமிகள் கந்த ரலங்காரத்திற் புகலுகின்றதையு மிங்குணர்தற்குரியதாகும். பொன் னும் பணியும்போன்று பற்பல திருநாம மலர்கொண்டு ஞானச்செல் வர்களால் வணங்குதற்குரிய பரம்பொருளின் திருவருட்பெருமை அளவிடற்கரியதாகும்.

"நான்கொண்ட விரதம்நின் அடியலாற் பிறர்தம்மை நாடாமை யாகும் இந்த, நல்விரத மாங்கனியை இன்மையெனு மொருதுட்ட நாய்வந்து கவ்வியந்தோ, தான்கொண்டு போவ தினி யென்செய்வே னென்செய்வேன் தளராமை யென்னு மொருகைத், தடிகொண் டடிக்கவோ வலியிலேன் சிறியனேன் தன்முகம் பார்த்தருளுவாய், வான்கொண்ட தெள்ளமுத வாரியே மிகுகருணை மழையே மழைக்கொண்டலே, வள்ளலே யென்னிருகண் மணியேயென் இன்பமே மயிலேறும் மாணிக் கமே, தான்கொண்ட சென்னையிற் கந்தகோட்டத்துள்வளர் தலமோங்கு கந்தவேளே, தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி சண்முகத் தெய்வமணியே."

—இராமலிங்க சுவாமிகள்

சேன்னிய மோகந் தவிரா முதோகண் டிகிரிவெண்ணெய்ச்
சேன்னிய மோகம் படவூ தெனத்தோனி செய்தபஞ்ச
சேன்னிய மோகந் தரம்புனத் தேன்புணர் தேவைத்தெய்வச்
சேன்னிய மோகம் பணிபணி யேரகத் தேமோழிக்கே. (4)

(ப-ரை.) சென்னி - சிரசின்கண்ணே, அம் - (கங்கா) சலத்தின், ஓகம் - ஆரவாரம், தவிரா - நீங்காத (பரமசிவன்) அமுதோ - உண்ட நஞ்சுதானோ, கண் - விழியானது, திகிரி - சக்கரத்தையேந்தி, வெண் ணெய் - நவநீதமுண்ட, சென்னிய - கீதமிசைக்கின்ற திருமாலே, மோகம்பட - (தேவரும்) மயல்கொள்ளும்படி, ஊது என - ஊதென்று சொல்ல, தொனிசெய்த - முழக்கின, பஞ்சசென்னியமோ - பாஞ்ச சன்னிய மென்னுஞ் சங்கந்தானோ, கந்தரம் - கழுத்தானது புனத் தேன் - (தினைப்புனத்தின்கண்) மதுர பாஷணியாகிய வள்ளிநாய கியை, புணர் - தழுவும், தேவை - குமாரக்கடவுளை, தெய்வச் சென்னி - தெய்வத் தன்மையையுடைய சோழராஜன், அமோகம்- அதிக ஆசையுற்று, பணி - வணங்கிய, பணி - கட்டுவித்த, ஏரக - சுவாமி மலைச்சார்பில் வாழும், தே மொழிக்கு - இனிய மொழியை யுடைய பெண்ணுக்கு.

(க-ரை.) தெய்வீகத்தன்மைவாய்ந்த சோழன் திருப்பணிபுரிந்த திருவேரகமலையில் வாழ்கின்ற தேமொழியிசைந்த சுந்தரிக்கு கண்கள் நஞ்சமோ; அவளது கழுத்து முகுந்தன் திருக்கரத்திலுள்ள சங்கமோ.

(வி-ரை.) தேவர்களின் இன்னல் தீரும்பொருட்டு கங்கை வேணியணுகிய சிவபிரான் அருந்தியுள்ள நஞ்சமுதைக் கண்களுக்கு உவமை கூறினர். சுவாமிகள் கூறியுள்ள திருப்புகழ்பாவில் "ஆலம் வைத்த விழிச்சியர்" எனவும் வருவனகாண்க. இங்கு வள்ளி நாயகி யார் விழிகளுக்கு கூறியுள்ள உவமை அருட்பார்வையை யுணர்த்

துவதாகும். அமுதவிழி - காருண்யமாகிய அமுதம் பொழிகின்ற கண், என்பதுமாகும். இராமலிங்க சுவாமிகள் அருட்பாவில் "கண்ணு ரமுதே கரும்பே, எனவும் போற்றியிருப்பதுகாண்க. குறட்பாவில், "இருநோக் கிவளுண்க ணுள்ள தொருநோக்கு, நோய் நோக்கொன் றந்நோய் மருந்து" என நவின்றுள்ளதுபோன்று நஞ்சு, உயிரை யழிக்கவும் அமுதம், உயிரை யுண்டுபண்ணவும் செய்வனபோன்று கண்களுக்கும் இருவிதபார்வைகளுள்ளதில் ஒன்றுநோய் செய்யும் பார்வையும் மற்றொன்று அந்நோய்க்கு மருந்தாகிய பார்வை யென வும், வள்ளுவர் வாக்கியம் வழுத்துதற்கிசைந்து, ஏனைய மாதர்களைப் போன்று மருட்பார்வையல்லாது வள்ளிநாயகி அருட்பார்வை யுடை யவளென்பதையே நஞ்சமுதம் விளக்குவதாகும். விஷ்ணுமூர்த்தி யின் திருக்கரத்துள்ள பாஞ்சசன்னியமென்னும் சங்கத்தை கழுத் திற்கு உவமை கூறியுள்ளது வள்ளியின் சுந்தரவுருவை மாண்புற வருணித்தலுக்குரியதாகும். புனத்தேன் என்பது அவளது சிறப்புப் பெயராகும். தினைப்புனமாகிய கொல்லையையும் இனியசொல்லையு முடையவளென்பதை விளக்குவதாகும். இன்னும் அவளதுபேரழகும் பெருமைவாய்ந்த குணசீலமும் கண்ணிற்கும் மனத்திற்கும் தெவிட் டாத இனிமை யளிப்பனவுமாகுமென்க.

"கருங் குழன்மேக மீழவண் டொடையற்
 கணத்தினன் மின்னியஞ் சிறைய
சுரும்பினுற் சிலம்பி மலர்மதுத் தாரை
 சொரிதலி னுயங்குடி சாய்ந்த
மருங்குலஞ் சியஞ் சரண்சர ணென்னு
 மருவ வஞ்சலையென நெடுமா
லொருங்கிரு குன்றம் பெயர்த்து நின்றதுபோ
 லொழுகிய துரோம மாவல்லி".

"திருமுகங் கமல மிணைவிழி கமலஞ் செய்ய
வாய் கமல நித்திலங் தாழ்
வருமுலை கமலந் துணைக்கரங் கமலம் வலம்புரி
யுந்தி பொற் கமலம்
பெருகிய வல்குன் மணித் தடங் கமலம்
பிடிநடைத் தாள்களுங் கமல
முருவவட் கவ்வா ருதலி னன்றே யுயர்ந்தது
பூவி னுட் கமலம்."

எனக் கந்தப்புராணம் வள்ளிநாயகியின் மாண்பை அழகுற வருணிக்கின்றன. முன்பாடலில் தெய்வயானையும் இங்கு வள்ளியம் மையையும் அருணகிரிசுவாமிகள் போற்றியுள்ளதானது அவரது பத்தியின் முறைமையை யுணர்த்துகின்றனவாகும் சமஸ்த வுலகங் கட்கும் நாதனுகி எங்கும் நிறைகின்ற பரம்பொருளாகிய கந்தப் பெருமான் இச்சாசத்தியாம் வள்ளிநாயகியைக்கொண்டு சிருட்டி காரணமாக சமஸ்த வுயிர்களிடையும் சிற்றின்பவுணர்ச்சியாகத் திருவிளையாடற்புரிகின்ற தன்மையையே சித்தாந்த நூற்கள் பத்தி வேட்கைகொண்டு சிறப்புற வருணிக்கின்றனவாகும். திருவேரகத் தின் ஆலயமானது தெய்வீகச் சோழன் திருப்பணியாகுமென்க.

"பாட்டுக்கோ அன்பினுக்கோ பத்திக்கோ அன்பர்தங்கள்
நீட்டுக்கெல் லாங்குறுகி நின்ருய் பராபரமே."

—தாயுமானவர்

தேமொழி யத்தம் பெறவோங் தனக்கன்று சேணுலகத்
தேமொழி யத்தம் சினங்காட் டவுணரைச் சேமகரத்
தேமொழி யத்தம் புயமவர் சூடிகை சிந்தவென்ற
தேமொழி யத்தம் பதிஞு லுலகுமங் தித்ததோன்றே. (4)

(ப-ரை.) தேமொழி - இனிய மொழியை யுடையவளாகிய பார்வதியின், அத்தம் பாதியாகிய (பரமசிவன்) பெற - உபதேசம் பெற்றுக்கொள்ள, ஓம் தனக்கு - பிரணவத்திற்கு, அன்று - பூர்வத்தில், சேணுலக - தேவலோகத்தின், தேம் - நன்மையெல்லாம், ஒழிய - அற்றுப்போகும்படி, தம் - தங்கள், சினம் - கோபத்தை, காட்டு - காட்டிய, அவுணரை - அசுரரை, சேமகர - ஆண்சுறாமீனுக்கு, தேம் - இடமாகிய சமுத்திரத்தில், மொழி - கணுக்களையுடைய, அத்தம் - கரங்களும், புயம் - தோள்களும், அவர் - அவர்களுடைய, குடிகை - கிரீடங்களும், சிந்த - சிதற, வென்ற - சங்கரித்து செயித்த, தே - குமாரக்கடவுளானவர், மொழி - உரைத்தருளிய, அத்தம் - பொருள், பதினாலுலகும் - ஈரேழுலோகத்திலும், அந்தித்தது - பொருந்தினின்றது, ஒன்று - ஒரே தன்மையாக.

(க-ரை.) ஹே குமாரமூர்த்தியே, விண்ணவரை வருத்திக் கொடுமைபுரிந்த சூரபன்மனாதியராகிய அசுரர்களைச் சங்கரித்த கடவுளே, நீ அன்று உமாபதியாகிய சிவபிரானுக்கு உபதேசம் புரிந்துள்ள ஏகாக்ஷர பிரணவ ரகசியப் பொருளானது பதினான்கு உலகமெங்கும் பரவிப் பரமகுருநாதனாகிய நினது பிரபாவத்தை விளக்குகின்றது எ-று.

(வி-ரை.) பார்வதி பாகனாகிய சிவபெருமானுக்கு உபதேசம் புரிந்துள்ள பிரணவப்பொருள் ஏகாக்ஷரமான ஓங்காரத்தை யுடையதாதலின் பதினான்கு புவனங்களிலும் அது வியாபித்துள்ளது என்றார். வேதமந்திரங்கட்கெல்லாம் மூலமாகிய ஓங்காரமே சகல லோகங்களுமாகுமென்பதும், இன்னும் அது பரப்பிரஹ்ம ஸ்வரூபமாகவுடையதெனவும், "ஈப்ரகாசேப்பியஸ்ஸ தோமித்யம், தச்சீரோ வித்யோதயதி, முகுர்முகிரிதிவித்யுத்" என்ற வேதவசனப்படி தியானநிலையில் எல்லாப்பிரகாசங்கட்கும் மேலானதாய் விளங்கிச்

சரீரத்தினுள்ளே அடிக்கடி ஓம் என்று பிரகாசிப்பதினால் 'வித்யுத்' என்னும் பெயருடையதெனவும், உள்ளேயிருக்குந் தியானயோக்கிய மான பதார்த்தங்களைத் தீபம்போற் பிரகாசம்செய்விக்கின்ற பிரகாச மெனவும், அது வேறொன்றி னுதவியின்றித் தானே யொளிர்தலாற் "சுயம்ப்ரகாசம்" என்னும் பெயரமைந்து சுயம்பிரமமாய் விளங்குவ தெனவும், "சர்வகாரணோப ஸங்காராத்தார்ய, தாரணாத் ப்ரஹ்ம தூரியம்" எனும் வேதவாக்கியப்பிரகாரம், எல்லாக்காரணங்களையும், அதாவது அகக்காரணங்கள், புறக்காரணங்கள் என்னு மிவையிற்றை மேற்போகவொட்டாது அவையிற்றின் விர்த்திகளைத் நசித்தலாலும் தரிக்கத்தக்கனவெவையோ வவற்றைத் தரித்தலானும் பிரமதூரியம் எனவும், அகர, உகர, மகரங்களாகிய ஜீவாட்சரங்களாகிய ஓம், என்னும் பிரணவமானது சராசரப் பிரபஞ்சங்களையெல்லாம் தன் னுள் அடங்கவைத்துள்ளது எனவும் இன்னுமவைகள் பிரணவத்தி லேயே யொடுங்குகின்றதெனவும், அவ்வித பிரணவத்தின் லட்சிய மாவது என்னையெனின், அ, உ, ம, விந்து, நாதம், சத்தி, இவை யிற்றுடன் சாந்தம் என்னும் ஒன்றுசேர்ந்து எழுவகையாமெனவும், இவ்வேழனுட் சத்தி என்பதே வேலாயுதமெனவும், ஏனைய வாறும் அறுமுகங்களாகவிளங்க சொற்பிரபஞ்சங்களெல்லாம் அதனிடத்தி னின்றுந் தோன்றுகின்றனவென்பதும் மந்திரநூற்களின் வாக்கிய மாகும். ஆதலின் இவைகளெல்லாம் ஓம் என்னும் பிரணவமானது சர்வவியாபகமுள்ள பரவான்ம தத்துவங்களை விளக்கற்குரியதென்பது பற்றி பதினான்குலகமும் பாவியதென்றார் என்க.

"ஓங்காரத் துள்ளே யுதித்த ஐம்பூதங்கள்
ஓங்காரத் துள்ளே யுதித்த சராசரம்
ஓங்கா ரதீதத் துயிர்மூன்றும் உற்றன
ஓங்கார சீவ பரசிவ ரூபமே." —திருமந்திரம்

தேவலோகத்தின் மாட்சியையழித்து வானவரை வருத்திய அசுரர் களை முருகப்பெருமான் சமுத்திரத்தினிடத்தே சங்காரம்புரிந்த காரணம்பற்றியும் விளக்கியுள்ளார். உதாரணம்காண்க.

"போ ருலாவிய சூரனை
வாரி சேறெழ வேல்விடு
பூவை சேவக மாமயின்—மிசையோனே."
—திருப்புகழ்

தித்தவித் தார மனித்தரைத் தேவர் வணங்கமுன்போ
தித்தவித் தாரகை மைந்தர்சேந் தூர்க்கந்தர் சிந்துரவா
தித்தவித் தார முடையா ரருள்வெள்ளந் தேக்கியன்பு
தித்தவித் தாரந் தனிவீ டுறத்துக்கச் செவ்வனலே. (5)

(ப-ரை.) தித்தவித்தாரம் - தித்தவென்னுந் தாள விரிவினால், மன் - நிலைபெற்ற, நித்தரை - நடனமிடும் பரமசிவனுக்கு, தேவர் அமரர்கள், வணங்க - வந்திக்கும்படியாக, முன் - முற்காலத்தில், போதித்த - உபதேசித்தவராகிய, வி - விசேஷமான, தாரகை - கார்த் திகைப்பெண்களின், மைந்தர் - புதல்வரும், செந்தூர்க்கந்தர் - செந் திற்பதிவாழ் கந்தவேளும், சிந்தூரம் - திலகத்தை, ஆதித்த - சூரிய னைப்போலுடைய, வி - நல்ல, தாருடையார் (வள்ளி தெய்வயானை யென்னுந்) தேவிகளையுடையவருமாகிய குமாரக்கடவுள், அருள் வெள்ளம் - தமது கிருபாநதியை, தேக்கி - என்னுள்ளத்துநிறைத்து, அன்பு - பத்தியை, உதித்து - தோற்றுவித்து, அவித்தார் - தணித்தார், அம் - அழகிய, தனி - ஒப்பற்ற, வீடு - மோட்சம், உற - அடையும் படி, துக்கம் - இடும்பையை (விளைக்கின்ற) செ - செனனமாகிய, அனல் - அக்கினியை.

(க-ரை.) சிற்றம்பலத்தில் நடனமிடுகின்றவராகிய சிவபிரா னுக்குப் பிரணவப்பொருளைப் போதித்த குருநாதரும், கார்த்திகைப்

பெண்களின் அன்பிற்குரிய பாலகரும், சூரியப்ரகாசம்போன்று வள்ளி தெய்வயானை என்னுந் தேவியர்களுடன் திருச்செந்தூரில் எழுந்தருளியிருக்கும் தெய்வமுமாகிய கந்தப்பெருமான் எனதுள்ளம் கருணைவெள்ளம் பொங்கித் ததும்பும்படியாகக் கடாட்சித்து பிறவாமையென்னும் மோட்சநிலையை அளித்தார் எ-று.

(வி-ரை.) கருணையங்கடலாகிய கந்தக்கடவுள் கடாட்சம்புரிந்து தமக்கு பிறவா நெறியாகிய முத்தி நிலையை அளித்தமைபற்றி வியந்து கூறினர். பிறவாமையென்பது என்றைக்கு மிறவாமையாகிய சாசுவதமான பேரின்ப நிலையாமென்க. முருகன் திருவடிமலர்களை நமது சுவாமிகள் மெய்யன்புடன் தஞ்சம்புகுந்த காரணமாக அவரது உள்ள கமலம் அருள்வெள்ளம் பொங்கிப் பரமானந்தமயமாய் விளங்கின ரென்பதையும் விளக்குவனவாகும். "அறவாழி யந்தணன் றாள்சேர்ந் தார்க்கல்லாற், பிறவாழி நீந்தலரிது" என்னுங் குறட்பா அருணகிரியின் பேராற்றலை யுணர்த்துகின்றன. சிற்றம்பலக்கூத்தாகிய சிவபிரானுக்கு உபதேசம் புரிந்தவனென்பதுபற்றி "தித்தவித்தாரமன் நித்தரைத் தேவர்வணங்க முன்போதித்த, என்னும் பதங்களுரையாடுகின்றன. தித்தவித்தாரம் தானசையாகும், தாரகைமைந்தர் என்பது கார்த்திகை மாதர்களிடம் அமுதமுண்டு வளர்ந்த மைந்தன் எனப் பொருளாகும். அதுபற்றி கார்த்திகேயன் என்ற திருநாமமுண்டு. "முதல்வ பார்ப்பதி புதல்வ கார்த்திகை முலைகள் தேக்கிட வுண்ட வாழ்வே" என்னுந் திருப்புகழ் வாக்கியம் இதைத் தழுவுகின்றதாகும். சிவந்த உதய சூரியன்போன்ற பிரகாசமுள்ள தேவிமார்களையுடையவ ரென்பதுபற்றி, சிந்தூரவாதித்த வித்தாரமுடையார் என்றார். முருகக் கடவுளின் கிருபையாகிய வெள்ளம் தமதுள்ளத்தை நிரம்பச்செய்து அவரது அன்பிற்குரியவனாகும்படி ஆட்கொண்டருளியதால் இனி செனன மரணமாகிய துக்கம் தம்மை யணுகாது முத்தியின்பம் பெற

தற்குரியவனுனே னென்பதுகொண்டு, அருள்வெள்ளம் தேக்கி அன்புதித்த வித்தாரந் தனிவீடுறத் துக்கச்செவ்வனலே என நவின்றுள்ளா ரென்க மனத்தின்கணுள்ள அஞ்ஞான விருள்நீங்கி சன்மார்க்க நிலை கொண்டு திருவருள் வெள்ளம் பொங்கிவழியும் பரமானந்த வுணர்ச்சி பெறுந்தன்மையை ஈதுணர்த்துவதாகும். அஞ்ஞானமென்பது நிலையில்லாவுடல் கொண்டு நிலையில்லா மூவாசையை நிலையென்று நம்பி மயங்குகின்ற மனத்தின்றன்மையதாகும்.

"தெருளத் தெருள வன்பர் நெஞ்சந்
தித்தித் துருகத் தெவிட்டாத
அருளைப் பொழியுங் குணமுகிலே
அறிவானந்தத் தாரமுதே." '—தாயுமானவர்

"தெளியத் தெளியத் தெளிந்தசிவா னந்தத்தேன்
பொழியப் பொழியமனம் பூண்டிருப்ப தெக்காலம்."
—பத்திரகிரியார்

சேவ்வந்தி நீலப் புயமுரு காபத்தர் சித்தமெய்யிற்
சேவ்வந்தி நீலத்தை யுற்றருள் வாய்திங்கட் சேய்புனைந்த
சேவ்வந்தி நீலத் தொருபாகர் போன்ற தினிச்சிந்தியார்
சேவ்வந்தி நீலத்தி னீடுமுற் றுற திமிரமுமே. (6)

(ப-ரை) செவ்வந்தி - செவ்வந்தி என்னும் பூமாலையையும், நீலம் - கருங்குவளை மாலையையும் (புனைந்திடும்) புயம் - புயங்களையுடைய, முருகா - முருகக்கடவுளே, பத்தர் - அன்பரது, சித்த மெய்யில் - இருதயவுண்மை நிலையில், செவ்வு - செம்மையாக, அந்தி - பொருந்தியிருக்கின்ற, நீ - நீலத்தையுற்று கிருபைகூர்ந்து, அருள்வாய் - (அம்மாலையை) எனக்குத் தந்தருளவேண்டும், திங்கள் சேய் -

குழவித்திங்களை, புனைந்த - அணிந்த, செவ்வந்தி - சிவந்த மாலைக் காலமானது, நீலத்து ஒருபாகர் - நீல நிறத்தையுடைய பார்வதிபங் கரை, போன்றது - தோன்றி விளங்குகின்றது, இனி - இனிமேல், சிந்தியார் - (உன்னை) தியானியாதவர்கள் (அடையும்) செ - செனன மாகிய, வந்தி - வருத்தத்தை (விளைக்கும்) நீலத்தின் - அஞ்ஞான விருளைப்போல, நீடும் - நீடித்து நிற்கும், முற்றாத - தொலையாத, திமிரமும் - இருட்டும்.

(க-ரை.) ஹே முருகா நறுமணங்கமழும் செவ்வந்தி மலர்களை யும், நீலோத்பலமென்னும் புஷ்பங்களையும் திருப்புயங்களில் மாலை யாக அலங்கரித்துள்ள பெருமானே, அந்திவண்ணனாகிய உமாபதியின் புத்திரசிகாமணியே, பத்திமான்களாகிய மெய்யன்பாது சித்தமிசை குடிகொண்ட தெய்வமே, அடியேனுக்கு நீ அருள்புரியவேண்டும், என்பதாகும்.

(வி-ரை.) செவ் - அந்தி - செவ்வந்தி எனவாயிற்று, செந்நிறத்தை யுடையமலர், அல்லது சாமந்திப்புஷ்பம், எனவுமாகும். சிவந்த மாலைக்காலமாகிய அந்திவேளையில் மலர்தலையுடைய அல்லிமலரென் பாருமுண்டு. நீலம் - நீலோர்ப்பலம், கருங்குவளை மலரையுங் குறிப்ப தாகும். இவ்வித சுகந்த மலர்களை தமது புயாசலங்களில் அணிந் துள்ளாரென்பதுபற்றி, செவ்வந்தி நீலப்புய முருகா என்றார். சன் மார்க்க நிலையெய்திய அன்பாது இருதயமலரிற் செவ்விதாகப் பொருந்துகின்றவனென்பதுகொண்டு, பத்தர் சித்த மெய்யில் செவ்வு அந்தி என்றார். அந்தி - பொருந்தல், அன்பாது நெஞ்சமாகிய தாமரைமலரிடத்து வருபவனென்பது தழுவி, மலர்மிசை யேகினான் மாணடிசேர்ந்தார், நிலமிசை நீடுவாழ்வார், என நாயனார் குறள் வாக்கியமும் நவில்வது காண்க. பார்வதிதேவியாரை வாமபாகத்திற் கொண்ட செஞ்சோதி மேனியராகிய சிவபிரானுக்கு, மாலைக்கால

மாகிய செவ்வானமும் சூரியனும் சேர்ந்த அந்திவேளையையும் இளம் பிறையையும் உவமையாக்கி திங்கட்சேய் புனைந்த செவ்வந்தி நீலத் தொருபாகர் எனப்புகன்றார். நீல நிறம் பார்வதியின் வடிவைக் குறிப் பனவாகும், அந்தியின் சந்திப்பாகிய இருள்வடிவுமாகும் இன்னும் பிரமத்தையும் மாயையும் பற்றியதுமென்க. உன்னைச் சிந்தியாதவர் கள் செனன மரண வாதனையாகிய அஞ்ஞான இருளிற் கிடந்துழல் வார்களென்பது குறித்து, சிந்தியார் செவ்வந்தி நீலத்து நீடுமுற்றாத திமிரமுமே எனப்புகன்றுள்ளார். உதாரணம்காண்க,

கருவி மாமழை கலைமக ளுருவென விளங்கி
இருவி சும்பிடை படர்ந்து சென்றின மணி கொழிக்கும்
பரவை வெண்டிரை மேய்ந்துதண் பனிவரை யுயிர்த்த
வுருவ மோடரித் தடங்கணு ளுருக்கொடு மீண்ட.

—நைடதம்

ஆதலின் முருகா நீ எனக்கு திருவருள் புரியவேண்டுமெனப் பிரார்த்தித்தா ரென்பதை, லத்தையுற்றருள்வாய் என்ற பதங்கள் விளக்குகின்றனவாகும்.

"பரந்த விசும்பிற் பரந்த வொளிகாணில்
பரம்பரமே யாய வொளி."

—ஔவைக்குறள்

திமிரத் திமிரக் கதரங்க கோபசேவ் வேலகைவேல்
திமிரத் திமிரக் கதுலாந் தகவரைத் தேன்பெருகுந்
திமிரத் திமிரத் தனையாவி யாளுமேன் சேவகனே
திமிரத் திமிரக் கனலாய சந்தன சீதளமே. (7)

(ப-ரை.) திமிர - இருள்நிறத்ததும், திமி - திமிங்கலமீனை, ரக்க - இரட்சிப்பதுமாகிய, தரங்கம் - சமுத்திரத்தை, கோப - கோபித்த வனே, செவ் - சிவந்த, வேல - வேலாயுதத்தை யுடையானே, கை

வேல் - கையின் வேலாயுதமும், திமிர - திமிராகும்படி, திமி - குன்று கின்ற, பக்ககுலாந்தக - அசுரர்குலத்துக்கு யமனே, வரைத்தேன் பெருகு - மலையினின்றுவீழுந் தேனூற்பெருகிய, உந்திமிர் - கான் யாற்றையுடைய புனத்தில்வாழும் வள்ளிநாயகி, அத்திமிர் - அயிரா வதத்தால் வளர்க்கப்பட்ட தெய்வயானைநாயகி, அத்தனை - அவ்வளவு, ஆவி - (என்) பிராணனை, ஆளும் - ஆண்டுகொள்ளுங்கள், என் - என்றிகிதம் பேசும், சேவகனே - வீரனே, திமிரத்திமிர - பூசப்பூச, அனலாய - அக்கினிபோலிருக்கின்றன, சந்தனசீதளம் - (யான்திமிர்ந் திருக்கின்ற) சந்தனமுதலிய குளிர்ந்த வஸ்துக்களும் (ஆதலால், வந்து தழுவியருள வேண்டும்).

(க-ரை.) ஹே கந்த, மகராவாரிதியை சினந்த வேலாயுதத்தை யுடைய கடவுளே, அசுரர்குல காலனே, வள்ளி, தெய்வானை யென் னும் உபயதேவிமார்களின் காதலனாகிய மனோரஞ்சிதனே, நீ அவர் களுக்குரிய இன்பநாயகனாக யிருப்பதுபோன்று என்னையும் ஆட் கொண்டருளல் வேண்டும் என்பதாகும்.

(வி-ரை.) இப்பாடல் அறிவானந்த ஐக்கிய நிலையையுணர்த்துவ தாகும். வள்ளி தெய்வயானைக்கு இனியவனாதல்போன்று என்னையுந் தழுவி யாட்கொள்ள வேண்டுமென்று புகன்றதானது பேரின்ப நிலை யில் நமது சுவாமிகளுக்குள்ள காதல் வேட்கையை வெளியிடுவதா கும். "ஆயுங்கலையுஞ் சுருதியும் காண்டற்கரியவுனைத் தோயும்படிக் குக் கருணைசெய்வாய் சுகவான்பொருளே" எனவும், வைத்திடும் காலைப்பிடித்துக் கண்ணின். மார்பில் வைத்தணைத்துக்கொண்டு கை யால் வளைத்துக் கட்டிச், சித்தமிசைப் புகவிருத்திப் பிடித்துக் கொண்டு தியக்கமற வின்பசுகஞ் சேர்வதென்றோ. எனவும் தாயுமான வர் புகன்றுள்ளார். அன்றியும் "கூடிப் பிரிந்துவிட்ட கொம்ப னையைக் காணமல், தேடித்தவிப்பவன்போல். சிந்தைவைப்பதெக்கா

லம் எனப் பத்திரகிரியார் புகன்றதையும். இங்குணர்த்துவதாகும், இச்சா, கிரியாசத்திகளை பரம்பொருள் பிரிவற்றமர்ந்ததுபோன்று தனது ஆன்மாவையும் ஆட்கொள்ள வேண்டுமென்னும் பொருள் விளங்குகின்றனவாகும், உதாரணமாக பட்டினத்தடிகள்,''

"பூதமுங் கரணம் பொறிகளைம்புலனும் பொருந்திய குணங்களோர் மூன்றும், நாதமுங் கடந்த வெளியிலே நீயும் நானுமாய் நிற்குநா ளுளதோ, வாதமுஞ்சமய பேதமுங்கடந்த மனோலய வின்பசாகரமே, யேதுமொன் றறியேன் யாதுநின் செயலோ யிறைவனே யேகநாயகனே."

எனவும் போற்றுவதற்கிணங்க அருணகிரிநாத சுவாமிகளும் ஜீவேஸ்வர ஐக்கிய நிலையைச் சிந்தித்துச் சொன்னாரென்க. அதாவது அறிவறியாமைகளற்று அறிவுருவாகிநின்று ஆனந்தரூபமடைந்து, நினைவொடுங்கு மெல்லையையுங் குறிக்கின்றதாகும். "அறிவினறியாமையற்றறிவாய்நின்று, பிரிவறவானந்தமயம்பெற்று." எனும் ஞானச் செல்வர்களின் வாக்கியங்காண்க திமிரம் - அஞ்ஞானமாகிய இருளைக் குறிப்பதாகும். நிலையில்லாதவற்றை நிலையுளதென்றெண்ணி மனமயக்கங்கொள்வதே அஞ்ஞானமெனப்படும். "நில்லாதவற்றை நிலையினவென்றுணரும் புல்லறிவாண்மை'' என்னும் குறட்பா யிங்குணரத்தக்கதாகும். அஞ்ஞானந்தகாரம்நீங்கி மெஞ்ஞான வுணர்ச்சி கொண்டு பிரமானுபூதிப்பேற்றை யடையவேண்டிய நெறியைப் பற்றியதாகும்.

"வடிவிலா வடிவாய் மனநினை வணுகா
மார்க்கமாய் நீக்கருஞ் சுகமாய்
முடிவிலா வீட்டின் வாழ்க்கைவேண் டினர்க்குன்
மோனமல் லால்வழி யுண்டோ

படியிரு ளகலச் சின்மயம் பூத்த
பசுங்கொம்பை யடக்கியோர் கல்லா
லடியிலேயிருந்த வானந்த வரசே
யன்பரைப் பருகுமா ரமுதே."
—எனப்பெரியார் பொன்மொழி

யுரைப்பதற்கிணங்க அருணகிரியார் பரம இன்பநிலையை வேண்டி ஞரென்க. "புணர்ச்சியுள் ஆயிழைமேல் அன்புபோல, உணர்ச்சியுள் ஆங்கே ஒடுங்கவல்லாருக், குணர்ச்சியில்லாது குலாவி உலாவி, அணைத் தலும் இன்பம் அதுவிதுவாமே," எனத் திருமந்திரத்தார் கூறியிருப் பதுகாண்க.

சீதனங் கோடு புயங்கைகோண் டார்தந் திருமருக
சீதனங் கோடு முடியாளர் சேய்தனக் கேதுளதோ
சீதனங் கோடு னிதருமேன் பார்தோழுந் தேவிபேறுஞ்
சீதனங் கோடு கோடிவேன் மயூரஞ் சிலையரசே. (8)

(ப-ரை.) சீ - மகாலக்ஷ்மியினது, தனம் - கொங்கையையும், கோடு - சங்கத்தையும், புயம் - திருத்தோளிலும், கை - திருக்கரத்தி லும், கொண்டார்தம் - தரித்த விஷ்ணுவினது, திருமருக - சிறந்த மருமகனும், சீதன் - சந்திரனை, அம் - அழகிய, கோடு - கோணல் வடிவாகத் (தரித்த) முடியாளர் - பரமசிவன், சேய்தனக்கு - மைந்தனு மாகிய குமாரக்கடவுளுக்கு, ஏதுளதோ - உள்ளதென்னெனில், சீ - இகழத்தக்க, தனம் - திரவியம், கோள் - குற்றத்தையும், துனி - துன்பத்தையும், தரு — கொடுக்கத்தக்கது, என்பார், - என்று நீக்கிய அன்பர்கள், தொழும் - வணங்குகின்ற, தேவி - வள்ளிநாயகியால், பெறும் சீதனம் - கிடைத்த வரிசையாகிய, கோடு - கொம்பினோடு,

கொடி - கோழிக்கொடியும், வேல் - வேலாயுதமும், மயூரம் - மயில் வாகனமும், சிலை - குறிஞ்சி நிலமாகிய மலைகளின், அரசு - ஆளுகையுமாம்.

(க-ரை.) மகாலட்சுமி நாயகனாகிய விஷ்ணுவினது அருமை மருமகனும், சந்திரசேகரனான சிவபிரானது புத்திரரத்தினமுமாகிய முருகவேளுக்கு, குறவர்மகளாகிய வள்ளிநாயகியை மணமாலை சூட்டிய காரணமாக, கொம்பும், கோழிக்கொடியும், மயிலும், வேலும், மலைகளின் ஆட்சியும் சீதனவரிசையாகக் கிடைத்தன வென்பதாகும்.

(வி-ரை.) வள்ளிநாயகியார் வேடர்களாகிய மலைக் குறவர்களிடத்து வளர்ந்து பூர்வ நியதியின் காரணமாக கந்தப் பெருமானைக் கடிமணம் புரிந்தமையால் வேடர்களினிருக்கையாகிய மலைகளையும், அவரது ஆயுதமாகிய வேல், இன்னும் அவ்வேடர்கட்கு அகப்படத் தக்கதாகிய முத்தொளிர்கின்ற யானைக்கொம்பும், குறிஞ்சிநிலப் பறவைகளாகிய மயில், கோழியும், இவைகளே சீதனப்பொருளாகு மென்பது அன்பின் பூஷணமாகிய வள்ளி நாயகன் திருவிளையாடற் பெருமையையும், மலைவளங்களில் வசிக்கின்ற குறவர்களின் தன்மையையும் பற்றித் திருவருட் செல்வனாகிய அருணகிரி பத்திகனிந்து நவின்றுள்ள விசித்திரப் பொன்மொழியாகும்.

வேதாகமபுராணங்களில் சுப்பிரமணியக் கடவுளுக்கு மயில்வாகனமும் கோழிக்கொடியும் உள்ளனவாகும். குறிஞ்சி வேந்தனாகிய முருகன் மயிலுங் கோழியுந் தமது குறிஞ்சித் திணைப்பறவைகளென்பதனாலோ, அன்றி மயில் மழைகண்டு கூவுதலும், கோழி வெயில் கண்டு கூவுதலுமுடைய வாஞ்சிறப்பினாலோ, அல்லது பற்பல தன்மைகளையுடைய சொற்பிரபஞ்சம் பொருட் பிரபஞ்சங்களுக்கெல்லாம் அதிபதி என்பதை யுணர்த்துதற்கோ; ஆடலினும் அகவலினும் உயர்

வுடைத்தாய அழகிய பறவையென்றோ; பலவன்னங்களையுடைய மயிலையும், தசநாதங்களு மொலித்தபின்னர் ஞானசூரியராகிய தாம் பிரசன்னமாய் ஆணவப் பேரிருளை யோட்டியருளுதலாகிய குறிப்பை யுணர்த்தற்கோ; சூரியன் வருகையைத் தெரிவிக்கும் சேவலையும் முறையே வாகனமாகவுங் கொடியாகவுங் கொண்டருளினர். என லாவதும் அன்றியும், முண்டகோப உபநிஷத்து 3-வது முண்டகம் 1-வது கண்டம் 1-வது வாக்கியத்தில் இரண்டும் அழகான பறவை கள் இரட்டையாகவும், தோழமையுடனும் ஒருதருவினிடத்தே வசிக் கின்றன. அவற்றுள் ஒன்று செய்கைகளின் பயன்களை யனுபவிக் கின்றது. மற்றொன்று பார்க்காமல் பிரகாசிக்கின்றதெனவும் மொழி வதற்கிணங்க பதிப்பொருள், பசுப்பொருள் என்னு மிரண்ட னியல் களை எல்லா முணர்த்தற்கே கொண்டருளின ரென்பதொன்றாகும். பரம்பொருளாகிய கந்தக் கடவுளின் றிருவடிக் கீழுள்ள மயில் ஆணவத்தை அடக்கு மாற்றலையும், திருக்கரத்துள்ள சேவற்கொடி அருண்ஞானமென்னும் பரஞானத்தை மேற்கொள்ளும் வன்மையை யும் குறிக்க நிற்றலான் மயில் ஆணவமெனவும், சேவல் சிவஞான மெனவுங் கூறப்படுமென்பாரும், மயிலால் ஐங்குணத்தையுடைய பிருதிவிதத்துவமும், சேவலா னொலிமயமான நாததத்துவமுங் குறிக் கப்படலாற் பிருதிவிமுத னாதமிறுதியாக உள்ள தத்துவங்கட்கெல் லாந் தலைவரும், அவற்றி னீக்கமின்றி நிற்பவரும் பிரேரிப்பவருந் தாமேயென்பதை விளக்கி யருளுகின்றா ரென்பாரும், மயிலாற் பொருட்பிரபஞ்சமும், சேவலாற் சொற்பிரபஞ்சமும், குறிக்கப் படலா னிருவகைப் பிரபஞ்சமுந் தம்வயப்பட்டன வென்பதைத் தெரித்தபடியா மென்பாருமாகப் பலவாறு புகழ்தற் குரியதாகும். இன்னும் மயில்வாகனத்தை ஓங்காரமாகிய பிரணவபீட மென்பாரு முளர். வேலாயுதம் ஞானசத்தியென்பது வேதாகசியமுமாகும்.

"சத்தியுரு வெனலானும் மத்துணைவே
றிருக்கரத்திற் றுங்கலானுஞ்
சித்துருவின் றெழிலானுஞ் செவ்வேடன்
வனசமலர்க் கரஞ் செம்பாதம்
வித்துரும முகத்தானு மன்னவனே
சத்திமான் விளம்பு மீது
சத்திய முக்காலுமிது சத்தியமே வேதமது
சாற் றுஞ் சாட்சி."

—சித்தாந்தபோதம்

சிலைமத னம்படு மாறெழுஞ் சேய்மயி லுச்சிட்டவேச்
சிலைமத னம்படு சிந்துவை யிந்துவைச் செய்வதேன்யான்
சிலைமத னம்படு காட்டுவர் கேளிருஞ் செங்கழுநீர்ச்
சிலைமத னம்படு தாமரை வாவி திரள்சங்கமே. (9)

(ப-ரை.) சிலை - கருப்புவில்லையுடைய, மதன் - மன்மதனது, அம்பு - புஷ்பபாணம், அடுமாறு எழும் - கொல்லும்படிவருகின்ற, சேய்மயில் - குமாரக்கடவுளின் மயிலினது, உச்சிட்ட - எச்சிலாகிய பாம்பினது, எச்சிலை - எச்சிலாகிய தென்றற்காற்றையும், மதனம்படு - கடையப்பட்ட, சிந்துவை-சமுத்திரத்தையும், இந்துவை - சந்திரனையும், செய்வதேன்யான் - நானென்னசெய்து கடப்பேன், சிலை - ஆர்ப்பரிப்போடு, மதம் - ஆங்காரத்தை, நம்படு - நம்மிடத்திலே, காட்டுவர்- அலர்தூற்றிக் காட்டாநின்றார்கள், கேளிரும் - சுற்றத்தாரனைவரும், செங்கழுநீர் - குவளைமலர் நிறைந்த, சிலை - திருத்தணிகை மலையின் கண், மது - தேனும், அனம் - அன்னப்பட்சியும், படு - உண்டாகிய, தாமரை - தாமரைகளுடைய, வாவி - பொய்கையில் (வாழும்) திரள் - கூட்டமாகிய, சங்கமே - சங்கினங்களே.

(க-ரை.) தணிகாசலத்தின் தாமரைத்தடாகத்தில் வாழ்கின்ற சங்கினங்களே. என்மீது மன்மதன் பூவாளியைப் பிரயோகஞ் செய்கின்றான். சந்திரனும் கடலும் தென்றலும் அவனுக்குத் துணைபுரிகின்றன. சுற்றத்தாரும் என்னைத் தூற்றுகின்றார்கள். நான் எவ்வாறு இவைகளைக் கடப்பேன் என்பதாகும்.

(வி-ரை.) மன்மதனுக்கு தித்திக்கின்ற கரும்பே வில்லாகவும், பூமலர்கள் அம்பாகவும், தென்றற்காற்று இரதமாகவும், சந்திரன் செழுங்குடையாகவும், கடல் முரசமாகவும் மதனநூலார் வருணித்துள்ளார். "தேரிளந் தென்றலாகச், செழுங்குடை மதியமாகத், தூரியங் கடல்களாக" என்னுஞ் செய்யு ளுணர்த்துவதாகும். அருணகிரிநாதர், வாழ்க்கையினாரம்பத்தில் பெண்ணாசையில் மிகவும் மயங்கி யிருந்தனரென்பது அவரது பாடல்களால் விளங்குவதன்றியும் உலகப் பிரசித்தமுமாகும். மன்மதனையும் தென்றலையும் சந்திரனையும் கடலையும்பற்றி நமது சுவாமிகள் சந்தப்பாவொன்றிற் கூறியுள்ளது இங்குகாண்க. "இடருக்கிடாகிய கொடுமைக்கணை மேல்வரு மிறுதிச் சிறுகால்வரு—மதனாலே, யியலைத்தருகானக முயலைத்தரு மேனியி லெரியத்தரு மாமதி—நிலவாலே, தொடரக்கொடுவாகையி லடையக்கரை மேலலை தொலையத்தனிவீசிய—கடலாலே, துணையற்றளி பூமல ரணையிற்றனியே யுயிர் துவளத்தகுமோ துயர்—தொலையாதே, வடபொற்குல மேருவின் முடுகிப் பொருசூரனை மடியப்படையேவிய—வடிவேலா" எனப் போற்றியுள்ளது போன்று தமது மனம் இனியும் மங்கையர் வழியை நாடாது நிக்கிரகமாகும் பொருட்டு திருத்தணிகையிற் கோயில்கொண்டருளிய முருகப்பெருமான்மீதுள்ள அன்பின் காரணமாக அவனது திருவருளையே நினைந்து அம்மலையினிடத்துள்ள தாமரைப்பொய்கையில் ஊர்ந்து விளையாடுகின்ற சங்கினங்களைக் காரணமாகவைத்து மனத்துய்

மையை நாடினரென்பது புலனாகின்றன. "மட்டோர்குழன் மங்கையர் மையல்வலைப், பட்டுசெல்படும் பரிசென் றொழிவேன்'' எனவும் "சிங்காரமடந்தையர் தீநெறிபோய், மங்காமலெனக்கு வரந்தருவாய்" எனவும் கந்தரனுபூதியிலும் சுவாமிகள் புகன்றுள்ளார், ஆதலின் பெண்ணாசையென்பது பெரியார்களையும் வருத்துகின்றது வெள்ளிடைமலையாகும். அவ்வித மனோவிகாரம் நிவர்த்தி பெறுவதி னிமித்தமாக முருகன் திருவருளைநாடி சங்கினங்களைக் காரணமாக்கி நவின்றாரென்க.

"வஞ்ச மேகுடி கொண்டு விளங்கிய
மங்கை யர்க்கு மயலுழந் தேயவர்
நஞ்ச மேவுநய னத்திற் சிக்கிய
நாயி னேனுனை நாடுவ தென்றுகாண்
கஞ்ச மேவும் அயன்புகழ் சோதியே
கடப்ப மாமலர்க் கந்த சுகந்தனே
தஞ்ச மேயென வந்தவர் தம்மையாள்
தணிகை மாமலைச் சற்குரு நாதனே."—திருஅருட்பா

"சீறும் வினையது பெண்ணுரு வாகித் திரண்டுருண்டு
கூறு முலையு மிறைச்சியு மாகிக் கொடுமையினாற்
பீறு மலமு முதிரமுஞ் சாயும் பெருங்குழிவிட்
டேறுங் கரைகண்டிலே னிறைவா கச்சி யேகம்பனே."
—பட்டினத்தடிகள்

"மாதர்யம னவர்தம்மை விழியே வன்பாசம்
பீதிதரு மல்குல் பெருநரகம்—ஓதிலதில்
வீழ்ந்தோர்க்கு மேற விதியில்லை போரூரைத்
தாழ்ந்தோர்க்கு மில்லை தவறு."-திருப்போரூர்ச்சந்நிதிமுறை

இன்னும் சுந்தரமூர்த்தி சுவாமிகள், திருநாவுக்கரசர் முதலிய பெரியார்களும் மங்கையர் மையல்வலையிற் சிக்கி வருந்தியுள்ளார்களென்பதும் தக்க ஆதாரங்கள் வாயிலாக அறியக்கிடக்கின்றன. இருவினை சம்பந்தத்தால் தேகமும், தேகசம்பந்தத்தால் ஊழ்வினையும், ஊழ்வினையால் பல்வகை யிடுக்கணும் முறையே தோன்றுமாப்போல் மாதராசையுமுள்ளதாதலின் அம்மயக்கம் ஞானச் செல்வர்களாகிய பெரியார்களையும் ஒருவாறு பீடிக்கும்போது தமது மனத்தின் அறியாமையாமென்பதையுணர்ந்து அது நிவர்த்தி முறையைநாடி இறைவனை இறைஞ்சுகின்றது மியல்பேயாம். தேனும் அன்னப் பட்சியும் தாமரைப்பொய்கையின் சிறப்பிற்குரியனவாகும். சுற்றத்தார் தூற்றுதலென்பது பழிச்சொல்லைக் குறிக்கின்றது.

திரளக் கரக்கரை வேண்கண்ட வேலன் றிசைமுகன்மால்
திரளக் கரக்கரை யான்பாட நாடுதல் செய்யசங்க
திரளக் கரக்கரை காண்பான்கைந் நீத்திசை வார்பனிக்க
திரளக் கரக்கரை வானீட்டு மைந்தர்புந் திக்கோக்குமே. **(10)**

(ப-ரை.) திர - உறுதியான, லக்க - லட்சமான, ரக்கரை - அசுரர்களை, வெண்கண்ட - புறங்காட்டச்செய்த, வேலன் - வேலாயுதனை, திசைமுகன் - பிரம்மாவுக்கும், மால் - மாயோனுக்கும், திரன் - அனேக, அக்கர் - கண்களையுடைய இந்திரனுக்கும், அக்கர் - உருத்திராட்சமாலையையுடைய பரமசிவனுக்கும், ஐ - சுவாமியாகிய குமாரக்கடவுளை, யான்பாட நாடுதல் - நான்பாடும்படி கருதுகின்றது, செய்ய - அழகிய, சங்கு - சங்குகள், அதிர் - முழங்கும், அளக்கர் - சமுத்திரத்தை, அக்கரைகாண்பான் - கரைகாணும்படி, கைநீத்திசை வார் - கையினல் நீந்திப்போவாரது, (புத்திக்கும்) பனிக்கதிர் - தண்கதிரையுடைய சந்திரனை, அள - பிடித்துக்கொள்ளும்படி,

காக்கரை - கையளவை, வான்நீட்டுமைந்தர் - ஆகாசத்திலே நீட்டுஞ் சிறுவர்களது, புந்திக்கு - புத்திக்கும், ஒக்கும் - ஒப்பாகும்.

(க-ரை.) ஹே முருகா, பகைவர்களாகிய அசுரர்களைச் சங்கரித்த வெற்றி வேலாயுதா, ஆயிரங்கண்ணனாகிய இந்திரனுக்கும், மும்மூர்த்திகட்கும் சுவாமியாகிய குமாரமூர்த்தியே, சிறியேனாகிய யான் நின்னைப் பாடவேண்டுமென நினைப்பதானது, ஒருவன் மகா சமுத்திரத்தை நீந்திக்கடக்கவும், சந்திரனைக் காத்தைநீட்டிப் பிடிக்கவும் கருதுதல்போன்று நினது அரும்பெருங் கிருபா விசேடங்களை அளவிடமுடியாதவனா யிருக்கின்றேன் என்பதாகும்.

(வி-ரை.) பரம்பொருளாகிய சிவ சண்முகக்கடவுளின் பிரபாவங்களை யளவிடமுடியாதவனாகிய நான் பாடக் கருதுவதானது எல்லையில்லாத சமுத்திரத்தை நீந்தவும் சந்திரனைக் கைப்பற்றவும் ஒருவன் நினைப்பதுபோன்றதாகுமென்றார். யாவராலு மறியமுடியாதவர், சர்வவியாபகர் என்பதை விளக்கினார். அந்தப் பரம்பொருளை நாராயண உபநிஷத்து 12-வது வாக்கியம் "எங்கும் அவாது கண்கள், எங்கும் அவாது முகம். எங்கும் அவாது கை, எங்கும் அவாது கால், எனப் போற்றுவது போன்று கந்தப்புராணமும், "எங்கணும்பணி வதனங்க ளெங்கணும்விழிக, ளெங்கணுந் திருக்கேள்விக ளெங்கணுங்காங்க, ளெங்கணுந் திருக்கழலடி யெங்கணும்வடிவ மெங்கணுஞ் செறிந்தருள்செயு மறுமுகத்திறைக்கே" என வுணர்த்தின்றன காண்க. பிரமேந்திராதி தேவர்களும் வணங்கற்குரிய சிவபெருமானுக்கு முபதேச முணர்த்திய காரணம்பற்றி யாவருக்கு மேலான சுவாமியாகிய குமாரப் பெருமானே என்றார். அண்ட பிண்ட சராசரங்களெங்கும் நிறைந்த பரிபூரணத்தன்மையுடைய அம் முத்தொழிற்குரிய மும்மூர்த்திகட்கும் மூலகாரண வஸ்துவென்பதையும் வெளியிடுவதாகும். "சுவேதாச்வதா உபநிஷத்தில்" யார்

உலகத்தைப் படைத்தவரோ, அவர் ஞானஸ்வரூபி, அழிவற்றவர், யாவற்றிற்கும் தலைவராகிய நன்றாகவிருப்பவர், எல்லாவிடத்திற்கும் போகிறவர், யார் இவ்வுலகத்தை எப்பொழுதும் நியமத்தில் வைத்திருக்கிறாரோ, அவர் தவிர இவ்வுலகத்திற்கு வேறுகாரணமில்லை. நான் முமுக்ஷுவாகி ஆத்துமபுத்திப் பிரகாசனாகிய அப்பரமேசுரனைச் சரணடைகின்றேன் எனவுங் கூறுவது இங்குணரத்தக்கதாகும்.

"ஊரி லான்குணங் குறியிலான் செயலிலா னுரைக்கும்
பேரி லானொரு முன்னிலான் பின்னிலான் பிறிதோர்
சாரி லான்வரல் போக்கிலான் மேலிலான் றனக்கு
நேரி லான்குகக் கடவுளா யென்னுளே நின்றான்."

—சுப்பிரமணிய பராக்கிரமம்

திக்கத் திக்கோடி படிபுடைச் சூதத் தெறிபடபத்
திக்கத் திக்கோடு கடடக் கடறடி சேப்படைச்சத்
திக்கத் திக்கோடு துறைத்திறத் தற்ற குறக்குறச்சத்
திக்கத் திக்கோடு பறித்துக் கோடாதி சிறைபிறப்பே. (11)

(ப-ரை.) திக்க - திகைக்கும்படி, திக்கோடு - திசைதோறும் படர்ந்த, படி - பூமியின்கண், புடை - நீக்கியருள்வாய், சூத - மாமரமாய் நின்ற சூரனை, தெறி - தெறித்த, படபத்தி - ஆயிரம் பணா மகுடத்தையுடைய ஆதிசேடனது, கத்து - தலையிலே, இக்கோடு - இந்தச்சங்குகள், ஊகள - ஊரும்படியாழ்ந்த, தடக்கடல் - பெரிய சமுத்திரத்தின்கண்ணே, தடி - கொன்ற, சேப்படைச்சத்தி - சிவந்த வேற்படையையுடையவனே, கத்தி - கதறி, கோடு - மாறுபட்ட, துறைத்திறத்து - பரசமயவழியில், அற்ற - மறைந்து நிற்பவனே, குற - குறச்சாதியிற் பிறந்த, குறச்சத்திக்கு - வள்ளி நாயகிக்கு, அத்திக்கோடு - ஆனைக்கொம்பை, பறித்து - பிடுங்கி, கொடு - கொடுத்த, ஆதி - முதல்வனே, சிறை - பஞ்சேந்திரியங்களால் கட்டுண்டிருக்கிற, பிறப்பு - (எனது) ஜெனனத்தை.

(க-ரை,) ஹே சிவசண்முகா, மகாவாரிதியி னடுவில் மாயா மாமர வடிவாயெழுந்த சூரபன்மனை யழித்த வெற்றி வேலாயுதக் கடவுளே, பரசமயவாதங்கட்கு எட்டாத பெரியோனே, மலைச்சார லாகிய பூஞ்சோலையில் யானைக்கொம்பை முறித்துக் கொடுத்து வள்ளிநாயகியுடன் கொஞ்சிவிளையாடிய குமாரமூர்த்தியே, உலகின் கண் திகைப்பைக் கொடுக்கத்தக்கதாகிய பிறவித் துன்பமானது அடியேனை இனியும் தொடாது நீக்கியருள்வாய் என்பதாகும்.

(வி-ரை.) பிறந்திறந் துழலுகின்ற தன்மையை வெறுத்து பரமானந்தநிலையை யடையவேண்டுமென்னுங் கருத்துற்று முருகப் பெருமானை வேண்டினாரென்க. அஞ்ஞானத்தினின்றும் நீங்கி சுவாமிகள் மெய்யுணர்வடைந்து முத்தியின்பம் பெறுவதற்குரிய பக்குவ நிலையினின்றும் புகன்றாரெனப் பொருளாகின்றன. பிறப்பதற்கு முதற்காரணமான அஞ்ஞானமானது அழிந்தாலொழிய முத்திக்கு வித்தான மெய்யுணர்வு தோன்றாதென்பதுமாகும். "பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னுஞ் செம்பொருள் காண்பதறிவு" என்னும் வள்ளுவர் வாக்கியமும், "பிறந்தலொன்றின்றிப் பிறவாமை வேண்டில், அறுத்துருவ மாற்றியிரு," என்னும் ஔவைக் குறளும் ஈண்டு உதாரணங்களாகின்றன. ஐம்புல நுகர்ச்சிகளை ஒழித்து, நாமரூபமாகிய கற்பனையை மனத்தினின்றும் நீக்கி நின்ற விடத்து விளங்கும் சச்சிதானந்த மெய்யாகிய பொருளைக் காண்பதே மெய் யுணர்வாம் என்பது தத்துவநூற்களின் றுணிபாகும்.

"வாராயென் மகனே தன்னை மறந்தவன் பிறந் திறந்து
தீராத சுழல் காற்றுற்ற செத்தைபோற் சுற்றிச் சுற்றிப்
போராத காலநேமிப் பிரமையிற் றிரிவன் போதம்
ஆராயுந் தன்னைத் தானென் றறியுமவ் வளவுந்தானே."

—கைவல்யநவநீதம்

கடலினிடத்துள்ள சங்கினங்கள் பாதலத்துள்ள ஆதிசேடன் முடிகளில் ஊரும்படியாக வேலாயுதத்தை ஏவி கடலை வற்றச்செய்து மாயா மாமரமாகிய சூரனை அழித்தமைபற்றி, சூதத்தெறிபட பத்திக்கத்திக்கோடு கட்டக் கடறடி சேப்படைச்சத்தி என்றார். "மலைமாவு சிந்த அலைவேலையஞ்ச வடிவேலெறிந்த—அதிதீரா" என்னும் திருப்புகழ் காண்க. சமயவாதங்களுக் கெட்டாதவன் என்றார். "வாத நோயாளர்க்கு மெட்டாத முக்கணுடை மாமருந்துக் கமிர்தமே" என்று தாயுமானவர் நவின்றுள்ளதையு முணர்க. மலைச்சாரலாகிய பூஞ்சோலையில் வள்ளிநாயகியாகிய குறமங்கையின் விருப்பத்திற்கிணங்கி யானையின் கொம்பை முறித்துக்கொடுத்து விளையாடச் செய்த காரணம்பற்றி, குறக்குறச் சத்திக்கத் திக்கோடு பறித்துக் கொடாதி என்ற பதங்கள் விளக்குகின்றன.

சிறைவர வாமையி லேறிச் சிகரி தகரவந்து
சிறைவர வாமையில் கூப்பிடத் தானவர் சேனைகொண்ட
சிறைவர வாமையில் வாங்கிதன் றேங்கழல் யாங்கழலாச்
சிறைவர வாமையி னெஞ்சுட னேநின்று தேங்குவதே. (12)

(ப-ரை.) சிறை - தோகையையும், வர - வரப்பிரசாதத்தையுமுடைய, வாமையில் ஏறி - தாவுமயிலேறி, சிகரி - கிரவுஞ்சகிரி, தகா - பொடியாகும்படி, வந்து - எழுந்தருளி, சிறை - கரையினால், வா - சூழப்பட்டும், ஆமை - ஆமைக்கு, இல் - இருப்பிடமுமாகிய (கடல்) கூப்பிட - இரங்க, தானவர்சேனை - இராக்ஷதசேனைகள், கொண்ட - கொண்டுபோன, சிறைவா - தேவர் சிறைமீளும்படி, ஆம் - தகுந்த, ஐயில்வாங்கிதன் - வேலெடுத்த குமாரக்கடவுளது, தேங்கழல் - இனிய பாததாமரையை, யாம் - நான், கழலா - அணுகாமற் பிரிந்ததனால், சிறு - சிறிய, ஐவர் - பஞ்சேந்திரியங்களின், அவா - ஆசையாகிய, மையில் - இருளில், நெஞ்சு - என் இருதயம்,

உடனேநின்று - அவ்விருளோடு நின்று, தேங்குவது - திகைக்கின்றது.

(க-ரை.) அழகிய நீண்ட தோகையையும், வரப்பிரசாதத்தையுமுடைய மயில்வாகனத்திலமர்ந்தருளி மாயைக்கிருப்பிடமாகிய கிரவுஞ்சகிரி பொடிபடும்படியாகவும் தேவர்களின் சிறை நீங்குந்தன்மையதாக அசுரர்கள் அழியும்பொருட்டும் சமுத்திரமும் ஓலமிடவும் படி வெற்றிவேலாயுதத்தை ஏவியவராகிய கந்தப்பெருமானது உபய சரணாரவிந்தமலர்களை எனது உள்ளமானது மறந்து பஞ்சேந்திரியங்களின் வாயிலாக வளர்கின்ற உலகமயக்கிற்கிடந்து திகைக்கின்றது. (ஆதலின் கிருபைபாவித்து என்னை ஆட்கொள்ளவேண்டும்) என்பதாகும்.

(வி-ரை.) முருகப்பெருமானை நாடாது தமது சிந்தை ஐம்புல வாசைகள்நிரம்பித் திகைப்பையடைகின்றது எனச் சொன்ன வாக்கியம் அஞ்ஞான நிவர்த்திமார்க்கம் தேடுகின்றதன்மையாமென்க. ஐம்பொறிகளின்வாயிலாக விடயவாசனைகள்சென்று மனத்துள் நிறைந்து அவ்வாசைகளில் நம்பிக்கையுற்று மயங்கி நினது பாதமலர்களின் நினைப்பை மறந்தவனுனேன். என் அறியாமையை மன்னித்து ஆட்கொண் டருளவேண்டுமென இறைஞ்சுகின்றதாகும். உதாரணம் காண்க.

"வாயிலோ ரைந்திற் புலனெனும் வேடர்
வந்தெனை யீர்த்து வெங்காமத்
தீயிலே வெதுப்பி யுயிரொடுந் தின்னச்
சிந்தைநைந் துருகி மெய்மறந்து
தாயிலாச் சேய்போ லலைந்தலைப் பட்டேன்
றுயினுங் கருணையா மன்றுள்
நாயகமாகி யொளிவிடு மணியே
நாதனே ஞானவா ரிதியே."

எனத் தாயுமானசுவாமிகள் பொன்மொழி யுணர்த்துவதாகும். காமாதிகளாகிய பகைகளாறினுக்கும் ஐம்புலநுகர்ச்சியே காரணமாகும். மனமானது இவைகளைப்பற்றி நிற்பதினால் சுகதுக்கங்களிற் கிடந்து சுழன்று திரிந்து செனன மரணமாகிய சமுத்திரத்தைத் தாண்டவியலாது திகைப்பை யடைகின்றதென்பதாம். "செய்யுஞ் செய்கையுஞ் சிந்திக்குஞ் சிந்தையும், ஐயநின்னதென் றெண்ணுமறிவின்றி வெய்யகாம வெகுளிமயக்கமாம், பொய்யிலே சுழன்றே னென்ன புன்மையே." என்னும் ஞானவாக்கியமும் இங்கு நவிலத் தகுந்ததாகும்.

தந்தையார் போயினார் தாயரும் போயினார் தாமும் போவார்
கொந்தவேல் கொண்டொரு கூற்றத்தார் பார்க்கின்றார் கொண்டு [போவார்
எந்தநாள் வாழ்வதற் கேமனம் வைத்தியா லேழை நெஞ்சே
அந்தணா ரூர்தொழு துய்யலா மையல்கொண் டஞ்சநெஞ்சே."

—திருஞானசம்பந்தசுவாமிகள்

தேங்கா வனமும் மதகரி வேந்துடன் சேர்ந்தவிண்ணோர்
தேங்கா வனமுனை யவ்வேற் பணியெனுஞ் சேயிடமேல்
தேங்கா வனமுந் தளர்நடை யாயஞ்சல் செண்பகப்பூந்
தேங்கா வனமுங் கழுநீரி லஞ்சியுஞ் சேந்திலுமே. (13)

(ப-ரை.) தேங்கு - நிறைவாகிய, ஆவண - பசுநிரைமேய்த்த திருமாலையும், மும்மத - மும்மதம் பொழியும், கரி - அயிராவதத்தை யுடைய, வேந்துடன் - இந்திரனோடு, சேர்ந்த - கூடிய, விண்ணோர் - தேவர்களையும், தேம் - அத்தேவர்கட்கிடமாகிய (அமராபதியையும்) காவல் - காப்பது, நம் - நமது, முனை - கூர்மையையுடைய, அ வேல் - அவ்வேலாயுதத்தின், பணி - தொழில், எனும் - என்று கட்டளையிட்ட சேயிடம் - குமாரக்கடவுளின் வாசஸ்தலம், மேல் - முன்னேயிருக்

கின்றன, தேங்கா - திகைத்து, அனமும் - அன்னப்பட்சியும், தளர் நடையாய் - தோற்கின்ற நடையையுடையவளே, அஞ்சல் - பயப் படாதே, செண்பக - (அவை) செண்பகவிருட்சத்தால், பூம் - பொலிந்த, தேங்காவனமும் – இனியபூஞ்சோலையும், கழுநீரிலஞ்சி யும் - செங்கழுநீர்மடுவும், செந்திலும் - திருச்செந்தூருமாம்.

(க-ரை.) ஹே அன்னத்தையுந் தோற்கச்செய்யும் நடையை யுடைய நாயகியே, திருமால், இந்திரன் முதலிய தேவர்களையும் சுவர்க்கலோகத்தையும் காக்கின்ற தன்மைவாய்ந்த வேலாயுதத்தை யுடைய முருகப்பெருமான் கோயில்கொண்டருளிய திருச்செந்தி லும், தேன்சொரிகின்ற பூஞ்சோலையும், செங்கழுநீர்ப் பொய்கையும் நமக்கு முன்னே சமீபத்திலிருக்கின்றதாதலின் அஞ்சுதலாக மயங்க வேண்டாம். எ-று.

(வி-ரை.) நீ - தோன்றா எழுவாய், அஞ்சல், பயனிலை, ஏ-அசை இப்பாடல் தலைவன், தலைவியின் வழிநடையைக்குறிக்குங் காரணமாக வைத்து திருச்செந்தூரின் வனச்சிறப்பையும் அங்கு கோயில்கொண் டருளியுள்ள கடவுளின் பிரபாவத்தைப் போற்றியதுமாகும். இலஞ்சி என்பது நீர்வளமிகைசந்த வயல்களையும், மடுவையும், குணத்தையும் பற்றியதென்க. குற்றாலத்தினருகில் இலஞ்சி யென் னும் சுப்பிரமணியத் தலமுமுண்டு. பிரமேந்திராதி முதலிய தேவர் களையும் விண்ணுலகத்தையும் பகைவர்களாகிய அசுரர்களின் துன் பத்தினின்றும் விடுவித்துக் காவல்புரிகின்றது நம் பெருமானார் திருக் கரத்தின்கண்ணுள்ள வேலாயுதமாதலில் அதுபற்றி, தேங்காவனமும் மதகரிவேர்துடன் சேர்ந்தவிண்ணோர், தேங்காவனமுனை யவ்வேற் பணியெனும் சேய், என்றார். "வேதாமுதல் விண்ணவர் சூடுமலர்ப் பாதா குறமின் பதசேகரனே" என்ற கந்தரனுபூதிக்கிணங்க, தேவ தேவனாகிய முருகக்கடவுள் விஷ்ணு பிர்மா முதலிய விண்ணவரைக்

காக்கின்ற கடவுளாமென்க. இலஞ்சி என்னும் தலம் இன்றைக்கும் செண்பகப் பூம்பொழில்களை யுடையனவாகும்.

"குருவே அயனரி யாதியர் போற்றக் குறைதவிர்ப்பான்
வருவேல் பிடித்து மகிழ்வள்ளலே குணமாமலையே
தருவே தணிகைத் தயாநிதியே துன்பச்சாகரமாங்
கருவே ரறுத்திக் கடையனைக் காக்கக் கடனுனக்கே."

—திருஅருட்பா

"உலகங் காக்கு மொன்றுபுரி கொள்கைப்
பலர்புகழ் மூவருந் தலைவராக
வேறுபுறு ஞாலந் தன்னிற் றோன்றித்
தாமரை பயந்த தாவி லூழி
நான்முக வொருவற் சுட்டிக் காண்வரப்
பகலிற் றோன்று மிகலில் காட்சி."

—திருமுருகாற்றுப்படை

சேந்தில கத்தலர் வாணுதல் வேடிச் சிமுகபங்க
சேந்தில கத்தலர் துண்டமேன் னுநின்ற சேயசங்க
சேந்தில கத்தல ராசிதந் தானைச் சிறையிட்டவேற்
சேந்தில கத்தலர் தூற்றிடேங் கேடு திவாகருளே. (14)

(ப-ரை.) செம் - சிவந்த, திலகத்து - பொட்டினால், அலர் - பரந்த, வாள் - ஒளிபொருந்திய, நுதல் - நெற்றியையுடைய, வேடிச்சி - வள்ளிநாயகியினது, முகம் - வதனம், பங்கசெம் - தாமரையாகும், திலகத்து - எள்ளினது, அலர் - பூ, துண்டம் - மூக்காகும், என்னு நின்ற - என்று நலம்புனைந்துரைக்கும், சேய - குமாரக்கடவுளே, சங்க - கூட்டமாகிய, செந்து - சீவராசிகட்கு, இலக - இருப்பிடமான, தலராசிதந்தானை - அண்டங்களைப்படைத்த பிரமனை, சிறை

யிட்டவேல் - சிறைப்படுத்திய வேலாயுதத்தையுடைய, செந்தில்-செந்திற்பதியோனே, அகத்து - அகங்காரத்தினுல், அலர் தூற்றிடும் - அலர்தூற்றுகின்ற, கேள் - சுற்றத்தாரும், துதி - (யாவரும்) துதிக்கத்தக்க, வாகு - (உனது) புயத்தை, அருள் - கிருபைசெய்ய வேண்டும்.

(க-ரை.) குறமங்கையாகிய வள்ளிநாயகியின் அழகிய முகாரவிந்த மலரையும், எள்ளிளம் பூப்போன்ற அவளது நாசியையும், நலம்புனைந்துரைக்கின்ற குமாரசாமியே, சிருட்டி கர்த்தாவாகிய பிரமதேவனைச் சிறையிடுவித்த வேலாயுதக்கடவுளே, செந்திலம் பதித்தெய்வமே, அன்பர்கள் பூமலர்சொரிந்து துதிக்கத்தக்க நினது திருப்புயங்களை அருளல்வேண்டும் என்பதாகும்.

(வி-ரை.) சிந்தூரப் பொட்டினுல் பிரகாசிக்கின்ற நெற்றியையுடைய வள்ளிநாயகியின் அழகிய முகமலர்களைச் செந்தாமரையெனவும், அவளது நாசியை எள்ளினது பூவெனவும் உவமைகூறினுர். இது சாமுத்திரிகா லட்சணத்தின் கூற்றுகும். தலைவன் தலைவியை நலம்புனைந் துரைத்தலென்பது மிதுவாகும். (அகப்பொருள்விளக்கம்) "கலந்துழி மகிழ்தலும் நலம்பாராட்டாலு. மெற்புறவணிதலு மென்னுமிம்மூன்றும், போற்றியதெய்வப் புணர்ச்சியின் விரியே" என வருவனகாண்க. "மலரன்ன கண்ணுண் முகமொத்தியாயிற், பலர்காணத் தோன்றன்மதி" என்னும் நாயனுர் குறட்பாவும் இதைத் தழுவுகின்றன. ஆதலின் முருகப்பெருமான் வள்ளியைப் புகழ்ந்துரைத்தலு மியல்பேயாகும். இவ்வித கருத்தைக்கொண்டு "செந்திலகத்தலர் வாணுதல்வேடிச்சி முகபங்க, செந்திலகத்தவர் தண்ட மென்னுகின்றசேய், என்றூர். படைப்புக் குரியவனுகிய பிரமன்து அகங்காரத்தை யடக்கித் தடுத்தாட்கொள்ளத் திருவுளங் கொண்டு பிரணவப்பொருள் தெரியாமைக்காக சிறையிட்ட காரணம்

பற்றி, சங்கசெந்திலகத் தலாசிதந்தானை சிறைபிட்டவேற் செந்தில என்றார். அன்பர்கள் பூமலர்சொரிந்து துதிக்கும் புயங்களையுடையவ ரென்பது விளங்க, அகத்தலர்தூற்றிடுங் கேள்துதிவாரு அருளே, என்றார். ஒப்பற்ற சுந்தரியாகிய வள்ளியையல்லது பின்னுமொன்றையும் முருகன் துதிப்பவ னல்லவென்பதுபற்றி கந்தானுபூதியிலும், மதிவாணுதல் வள்ளியையல்லது, பின்றுதியாவிர தாசுரர் பூபதியே, என வருவன வாதலானும் கந்தக்கடவுள் குறவள்ளியின் அழகை வருணித்தாரென்க.

"மணியிற் றிகழ்தரு நூல்போன் மடந்தை
யணியிற் றிகழ்வதொன் றுண்டு." —குறட்பா

நமது சுவாமிகள் உலகமயமாகத் திருவிளையாடற் புரிகின்ற பரம்பொருளையும் மாயா சத்தியையும் மெய்யன்பர்களின் மனத் தூய்மையையும்பற்றி விளக்கியருளினர் என்பதாகும்.

திவாகர கன்ன கோடைப்பாரி யென்றுழ றீனவல்லீர்
திவாகர கன்ன புரக்குழை வல்லி செருக்குரவந்
திவாகர கன்ன சுகவா சகதிறல் வேல் கோடேன்புந்
திவாகர கன்ன மறலி யிடாதுயிர்ச் சேவலுக்கே. (15)

(ப-ரை.) திவா - பகலிலே, கரகன்ன - கன்னனைப்போற்கொடுக்குங் கரத்தோனே, கொடைப்பாரி - வள்ளலைப்போற் கொடுக்குங் கொடையோனே, என்று - புல்லரிடஞ்சென்று சொல்லி, உழல் - வருந்தச்செய்யும், தீன - வறுமையாகிய, அல் - இருளை, ஈர் - நீக்கும், திவாகர - ஞானசூரியனே, கன்னபுரக்குழை - கன்னபுரக்குழையென்னும் பணியணிந்த, வல்லி - வள்ளிநாயகி, செருக்கு - களிப்புறத் தழுவும், உர - மார்பையுடையோனே, அந்தி - மாலையின் செவ்வானம் போலும், அர - பரமசிவனது, கன்ன - திருச்செவிக்கு, சுகவாசக - இனிய வசன முபதேசித்தவனே, திறல் - வலிமையையுடைய, வேல்

கொடு - வேலாயுதத்தைக் கொண்டு, என் - எனது, புந்தி - இருதயத்தில், வா - வரக்கடவாய், கர - ஒளித்துநின்று, மறலிகன்னம் இடாது - இயமனுனவன் கொள்ளை கொள்ளாமல், உயிர் - என்னுயிரை, சேவலுக்கு - காப்பாற்றும் பொருட்டாக.

(க-ரை.) ஹே பரசிவகுருநாதா, புல்லர்களைப் புகழ்ந்து போற்றித் திரிந்துழலாது எனது வறுமையாகிய இருளை நீக்குகின்ற ஞான சூரியரே, வள்ளிநாயகியின் இன்ப மணவாளரே, இயமனுனவன் என்னுயிரைக் கொள்ளைகொள்ளாது வெற்றிவேலாயுதத்துடன் தோன்றி (என்னைக்) காத்தருளல்வேண்டும் என்பதாகும்.

(வி-ரை.) கொடை கொடுப்பதில் கன்னனைப் போன்றவன், பாரியைப் (கடையெழுவள்ளல்களி லொருவன்) போன்றவன் என லோபிகளாகிய கீழ்மக்களைப் புகழ்ந்துபாடி வறுமையினுல் மெலியாது ஆத்மஞானச் செல்வத்தை அருளியவனே என்னும் பொருள்பற்றி' திவாகரகன்னகொடைப்பாரி யென்றுழ றீனவல்லீர் திவாகா என்றூர். செல்வத்தை நிலையென்று மயங்கி நல்லவழியிற் செலவுசெய்யாது சேமித்துவைக்கின்ற லோபிகளையே புல்லர் என்பது பொருந்தும் இவர்கள் உலகதத்துவங்களை இன்னதென்றுணராது அகங்கார மமகாரங்களினுல் மயங்கி வீணே கெட்டழிகின்ற பாமரர்களுமாவர். "பிறக்கும்பொழுது கொடுவந்ததில்லை பிறந்துமண்மே, லிறக்கும்பொழுது கொடுபோவதில்லை யிடைநடுவிற், குறிக்குமிச்செல்வம் சிவன்றந்ததென்று கொடுக்கறியா(து) இருக்குங் குலாமருக் கென்சொல்லுவேன் கச்சியேகம்பனே, என்னும் பட்டினத்தடிகள் வாக்கியம் இங்கு குறித்தற் குரியதாகும்.'' கந்தரனுபூதியில் "தூசாமணியுந்துகிலும் புனைவாள் நேசா.'' என்பனபோன்று இங்கு வள்ளிநாயகியின் ஆபரணத்தைக் காரணப்படுத்தி, கன்னபுரக்குழைவல்லி.'' என்றூர் என்க. அவளைத் தழுவுகின்றவர் என்பதுகொண்டு, செருக்குா, என

விளக்கினர். மாலைச் சூரியன்போன்ற பிரகாசத்தையுடைய சிவனுருக் குபதேசம் புரிந்தவனே, என்னுங் குறிப்பாக, அந்திவாகரகன்ன சுகவாசக என்றார். வன்மை பொருந்திய வேற்படையுடன் எனது உள்ளமலரில் பிரகாசங்கொண்டு வரக்கடவை, எமனுக் கிலக்காகாது என்னுயிரைக் காக்கவேண்டுமென்னுங் கருத்தைத்தழுவி, "திறல்வேல் கொண்டென் புந்திவாகர கன்னமறலியிடாதுயிர்ச் சேவலுக்கே" என்னும் பதங்கள் விளங்குவதாகும். செல்வம், வறுமை என்னுமிரண்டிற்கு முரிய சுகதுக்க வாயிலாக வருகின்ற மயக்கவுணர்ச்சிகள் முருகன் திருவருளைப்பெற்ற ஞானச்செல்வர்களை அடையமாட்டாவென்பதை ஈதுணர்த்துவனவாகும்.

"அருட் செல்வம் செல்வத்துட் செல்வம்
பொருட் செல்வம் பூரியார் கண்ணுமுள." —நாயனர்

சேவற் கோடியும் பணிசாங் தகனும் திருக்கரத்துச்
சேவற் கோடியுங் கோடியகண் டாய்தினை சூழ்புனத்துச்
சேவற் கோடியுந் திவளத் தவளுந்தந் திக்களபச்
சேவற் கோடியு முடையாய் பிரியினுஞ் சேரினுமே. (16)

(ப-ரை.) சேவற்கு - இடபவாகனத்தையுடைய பரமசிவனால், ஓடியும்பல் - பல்லுதிர்க்கப்பட்ட, பிசாங்தகனும் - இருட்கூற்றாகிய ஆதித்தனும், திருக்கரத்து - (உனது) அழகிய கையினிடத்திலிருக்கின்ற, கொடியும் - கொடியாகிய, சேவல் - சேவலும், கொடிய கண்டாய் - பொல்லாதவைகளா யிருக்கின்றன, தினைசூழ் புனத்து - தினைநிறைந்த புனத்தை, சேவல் - காப்பவளும், கொடி - நீண்ட, உந்தி - கான்யாற்றின், வளத்தவளும் - வளப்பத்தை யுடையவளுமாகிய (வள்ளியம்மையும்) தந்தி - அயிராவதம் வளர்த்த, களப - சந்தனமணிந்த, சே - சிவந்த, வல் - சொக்கட்டான் காய்போன்ற கொங்கையையும், கொடியும் - கொடிபோன்ற யிடையையுமுடைய

(தெய்வயானையையும்) உடையாய் - இருபாகத்திலும் வைத்திருக்கின்ற கந்தசுவாமியே, பிரியினும் - உன்னைப்பிரிந்த (பகல்காலத்தும்) சேரினும் - உன்னையடைந்த (இராக்) காலத்தும்.

(க-ரை.) ஹே, வள்ளி தெய்வயானை சமேத, இரவு பகலற்ற சுயம்ப்ரகாச நிலையை யான் அடையும்படி கிருபைசெய்யவேண்டும் என்பதாகும்.

(வி-ரை.) நிசாந்தகனுகிய சூரியன் தக்கன் யாகத்தில் பற்களை யிழந்தவன். "விழியினோ டருக்கர்பல்லை வேரறுத்து" என அருணசலப் புராணத்தில் வருவன காண்க. நிசா, இரவு, அந்தகன் - எமன், இரவை அழிக்கின்றவனென்பது பொருள். அந்தச் சூரியனையும், சேவலையும் கொடியவைகளென வெறுத்துக் கூறினர். சூரியன் அஸ்தமனம், மரணத்தையும், கோழிகூவுதல், உதயமாகிய செனனத்தையும் குறிக்கின்ற தன்மையினுலென்க. பிரமம் மாயை - செனனம் - மரணம், நல்வினை - தீவினை, சுகம் - துக்கம், தூலம் - சூக்குமம், ஞானம் - அஞ்ஞானம், ராகம் - துவேஷம், ஆண் - பெண், சுக்கிலம், சுரோணிதம், பேரின்பம், சிற்றின்பம், பகிர்முகம் - அந்தர்முகம், பேதம், அபேதம், ஆசை - நிராசை இன்னு மிவைபோன்ற துவிதபந்தங்கள் சூரியன் உதயத்தையும் அஸ்தமனத்தையும் விளக்குகின்ற அறிகுறிகளாகுமென்பது தத்துவநியமமாகும். (போன நாட் கிரங்குவதே தொழிலா விங்ஙன், பொருந்துநா ளத்தனையும் போக்கினேனென்) "ஞானநாயகனே நின் மோனஞான, நாட்டமுற்று வாழ்ந்திருக்குநா ளெந்நாளோ," எனவும், "நேரேதா னிரவுபகல் கோடாவண்ணம், நித்தம்வா வுங்களேயிங் நிலைக்கேவைத்தார்," எனவும் ஞானப்பெரியார்கள் நவிலுகின்றதற் கிணங்க இரவுபகலற்ற விடமாகிய பரமானந்தநிலை யடைவதற்குரிய தன்மையைநாடிய மொழியாமென்க. "கங்குல்பக லறநின்ற வெல்லையுள தெதுவது

கருத்திற் கிசைந்ததவே,'' என்னும் அருள்வாக்கியமும் இங்கு குறித்தற் குரியதாகும். "இராப்பக லன்றி யிருசுடர்ச் சந்திக்கில், பராபரத்தோ டொன்றனுமாம்,'' என்னும் ஔவைக்குறளும் விளக்கு கின்றனவாகும். வள்ளிநாயகியையும், தெய்வயானையையும் இரு பக்கத்திலு முடையவரென்பது இச்சாசத்தி, கிரியாசத்தியையும் பிரஹ்மத்தையும் குறித்துள்ளனவாகும். அன்றியும் இப்பாடலின் கருத்தானது தலைவன் பிரிவாற்றாமைகொண்டு தலைவி பொழுதுகண் டிரங்கல்போன்று அன்புசிகாமணியாகிய அருணகிரி சுவாமிகள் தமது தலைவனாகிய முருகப்பெருமானை அவ்வித பாவனைகொண்டு புகன்று ரென்பதுமாகும் அன்பர்கட்கீதியல்புமாகும்.

"காலைக்குச் செய்தநன் றென்கொ லெவன்கொல்யான்
மாலைக்குச் செய்த பகை.'' —நாயனர்

சேரிக் குவடு மொழிவிழி யாடனச் செவ்விகுறச்
சேரிக் குவடு விளைத்ததன் றேநன்று தெண்டிரைநீர்
சேரிக் குவடு கடைநாளி னுஞ்சிதை வற்றசெவ்வேள்
சேரிக் குவடு புடைசூழ் புனத்திற் றினைவிளைவே. (17)

(ப·ரை.) சேர் - இசைந்த, இக்கு - கரும்பையும், வடு - மாவடுவையும் (ஒத்த) மொழிவிழியாள் - மொழியையும் விழியையுமுடைய வள்ளி நாயகியின், தனச்செவ்வி - கொங்கையின்தன்மை, குறச் சேரிக்கு - குறவர் குடியிருப்புக்கு, வடு - (காந்தருவ மணம் நடந்த தென்றும்) குற்றமாகிய சொல்லை, விளைத்தது - உண்டாக்கினது, அன்றே - அக்காலத்திற்றானே, நன்று - நன்றாயிருந்தது, தெண்டிரை நீர் - கடலனைத்தும், சேரி - ஒருமித்து, கு - உலகத்தை, அடு - அழிக்கின்ற, கடைநாளினும் - உகாந்தகாலத்தினும், சிதைவு அற்ற - அழிவில்லாத, செவ்வேள் - குமாரக்கடவுளது, சேரி - (தென் சேரி

வட) சேரியாகிய, குவடு - மலையின், புடை - பக்கத்தில், சூழ் - சூழ்ந்த, புனத்தில் - தினைப்புனத்தில், தினை - தினை, விளைவு - விளைவானது.

(க-ரை.) ஹே கலியுகவரத; குன்றுதோறாடுங் கோமளவ, நினது ஆட்சிக்குரிய மலைப்பாங்கருள்ள தினைப்புனத்தின் காவலியாகிய கரும்பினு மினிய மொழியும் மாவடுபோன்ற விழியுமுடைய வள்ளி நாயகியின் இலாவண்யத் தோற்றமானது குறவர் சேரிக்கே ஒரு வசையாயிற்று என்பதாகும்.

(வி-ரை.) வள்ளியின் மொழியினிசைக்கும், விழியினிசைக்கும், கரும்பையும், மாவடுவையும் உவமைகூறினர். கரும்பின் ரசம் போன்ற இனிய மொழியையும், மாம்பிஞ்சு (வடு) போன்ற கண்களையு முடையவளென்பதாகும். அதுபற்றி "சேரிக்கு வடுமொழி விழியாள்" என்றார். அவளது கொங்கைகளானது செவ்விதாகிச் சிறந்துள்ள தன்மையாலே குறச்சேரிக்கு வடுவை விளைவித்துள தென்பதுகொண்டு "தனச் செவ்வி குறச்சேரிக்கு வடு விளைத்தது, என்னும் பதங்கள் விளக்குகின்றன. அன்றியும் முருகன் இருக்கையாகிய மலையின் பாங்களென தினைப்புனம் விளைவையும் அதற்குக் காரணமாகக்கொண்டு "செவ்வேள் சேரிக்கு வடுபுடைசூழ் புனத்திற் றினைவிளைவே என்றார். இவைகளினால் வள்ளிநாயகியின் இலாவண்யமாகிய சுந்தரப் பேரழகை வியந்து நம்பெருமானர் காதலின் பத்தை உலகினுக் குணர்த்தும் பான்மையுற்று பசுந் தினைப்புனத்திற் றிருவிளையாடற்புரிந்தமை காரணமாக தினைப்புனமும் வள்ளியின் சுந்தரவடிவமும் கந்தப்பெருமானது காந்தர்வமணத்திற் கிலக்காகிய தன்மைபற்றி குறச்சேரிக்கு வசைமொழியை விளைத்தது என்றார் என்க.

"அவ்வே லையில்வள்ளி யச்சமொடு மீண்டுதவப்
பொய்வேடங் கொண்டுநின்ற புங்கவன்றன் பாலணுகி
யிவ்வேழங் காத்தருள்க வெங்தைநீர் சொற்றபடி
செய்வே னெனமுயன்று சேர்ந்துதழீ இக் கொண்டனளே."

என்பதனாலுமுணர்க. சமுத்திரங்கள் ஒருமித்து உலகத்தை அழிக்கின்ற யுகாந்தகாலத்தும் அழிவில்லாதவன் செவ்வேள், என்னும் பொருள்பற்றி "தெண்டிரைநீர் சேரிக் குவடு கடைநாளினுஞ் சிதைவற்ற செவ்வேள் என்றார். "நித்தியமாய் நிர்மலமாய் நிட்களமாய் நிராமயமாய் நிறைவாய் நீங்காச், சுத்தமுமாய் தூரமுமாய்ச் சமீபமுமாய்த் துரியநிறைச் சார்ந்த சுடராயெல்லாம், வைத்திருந்த தாரகமாயானந்தமயமாகி மனவாக்கெட்டாச், சித்துருவாய்நின்ற சுகாரம்பப் பெருவெளியாகிய பரம்பொருளைக் குறிக்கின்றனவாகும்."

"ஒருநாமம் ஓருருவம் ஒன்றுமில்லார்க் காயிரம்
திருநாமம் பாடிநாம் தெள்ளேணங் கொட்டாமோ."

—மாணிக்கவாசகர்

தினை வேத்தி யன்புசெய் வேந்தன் பதாம்புயத் திற்பத்தியுந்
தினை வேத்தி யமுகந் தேற்றினர் மாற்றினர் பாற்றினந்தீத்
தினை வேத் தியர்நெறி செல்லாத விந்தியத் தித்தியினத்
தினைவேத்தி யங்குயிர் கூற்றுரி லூசிடுஞ் சீயுடம்பே. (18)

(ப-ரை.) தினை - தினைப்புனத்துக்கு, எத்தி - இறைவியாகிய வள்ளிநாயகி, அன்புசெய் - இச்சைகொள்ளும், வேந்தன் - குமாரக் கடவுளது, பதாம்புயத்தில் - திருவடித்தாமரையில், பத்தி - அன்பையும், புந்தி - அறிவையும், நைவேத்தியம் - நைவேத்தியமாக, உகந்து - விரும்பி, எற்றினர் - (சமர்ப்பித்து)வணங்கின அடியார்கள், மாற்றினர், (உண்மையாய்) ஒழித்துவிட்டார்கள், பாற்றினம் - பருந்துக் கூட்டங்

களும், தீ - நெருப்பும், தின் - பட்சிக்கத்தக்கதும், ஐ - அழகிய, வேத்தியர் - அறிஞர், நெறி - (விதித்த) நல்வழியில், செல்லாத - ஒழுகாததும், இந்திய - பஞ்சேந்திரியவசத்ததும், தித்தி இனத்தின் - உணவு வகைகளினால், நைவு - கழிவாகிய (மலசலாதிகளை), ஏத்து - ஏந்திக்கொண்டதும், இயங்கு உயிர் - (உண்ணின்று) இயங்கும் பிராணனை, கூற்று - யமனானவன், ஆரில் - உண்டுவிட்டால், ஊசிடும் - நாறிப் போகத்தக்கதுமாகிய, சீ - யிகழ்ச்சிக்கிடமான, உடம்பு - தேகத்தை.

(க-ரை.) ஹே வள்ளிநாயக, நினது சரணகமலங்களில் அன்பையும் அறிவையும் காணிக்கையாகவைத்த அடியார்கள் பிறவிக்கடலைக் கடந்ததுபோன்று என்னையும் பத்திக்குரியவனாகச்செய்து முத்தி பதம் அருளல்வேண்டும் என்பதாகும்.

(வி-ரை.) "தினைவேத்தி யன்புசெய் வேந்தன்" என்பது தினைப்புனச் செல்வியாகிய வள்ளிநாயகியின் றலைவனாகிய குமார மூர்த்தியைக் குறிக்கின்றன. 'அவன் பாத பங்கயமலரில் அன்பையும் அறிவையும் அடியார்கள் நைவேத்யமாக சமர்ப்பித்து வணங்கினர், என்பதுபற்றி, பதாம்புயத்திற் பத்தி புந்தி நைவேத்திய முகந் தேற்றினர், என்னும் பதங்கள் விளக்குகின்றன. "ஆலயமேகாயம் அறிவே சிவலிங்கம் மாலயனுங் காணாத வள்ளலுக்கு - சீலமுறு, அன்பே அபிஷேகம் அன்பே நைவேத்தியம், அன்பே நல்லர்ச்சனையுமாம்" என்னும் வள்ளலார் வாக்கின்பிரகாரம் சன்மார்க்க லட்சியமாகிய அன்பையும் அறிவையும் அவன் பாதபங்கயங்களில் சமர்ப்பித்தவர்களென்பதுமாகும். அவ்வித ஞானப் பெரியார்கள் பருந்துகளும் அக்கினியும் உண்ணத்தகுந்ததும், பஞ்சேந்திரியங்களின் வசத்திற் சிக்கி அறுசுவை யுணவுகளருந்தி மலசலாதிகளை கழியச்செய்தும், கூற்றுவ னுயிர் கவர்ந்தானேல் நாற்றமெடுக்குந் தன்மையதாகிய தேகமானது மறுபடியும் தோன்றுவண்ணம் பிறவிப்பிணியை மாற்றி

ளுர்களென்பதுபற்றி, "மாற்றினர் பாற்றினங் தீத்தினை வேத்தியர் நெறி செல்லாத விங்கியத் தித்தி யினத்தினை வேத்தியங்குயிர் கூற் ருரி லூசிடுஞ் சீயுடம்பே" எனப்புகன்றார். இப்பாடல் நிலையற்ற வுடலை வெறுத்து முருகப்பெருமானைத் தஞ்சமடைந்து பேரின்ப நிலை யடையவேண்டுமென்பதை விளக்குவதாகும்.

"யாக்கையை யாப்புடைத்தாப் பெற்றவர் தாம்பெற்ற
யாக்கை யாலாய பயன்கொள்க—யாக்கை
மலையாடு மஞ்சுபோற் றோன்றிமற் றாங்கே
நிலையாது நீத்து விடும்." —நாலடியார்

'நாச்செற்று விக்குண்மேல் வாராமு னல்வினை
மேற்சென்று செய்யப் படும்." —திருக்குறள்

"மேலுமிருக்க விரும்பினையே வெள்விடையோன்
சீலமறிந் திலையே சிந்தையே—கால்கைக்கு
கொட்டையிட்டு மெத்தையிட்டுக் குத்திமெத்தப் பட்டவுடல்
கட்டையிட்டுச் சுட்டுவிடக் கண்டு." —பட்டினத்தார்

சீயனம் போதி யெனவாய் புதைத்துச் சேவிதரத்தோல்
சீயனம் போதி யமலையிற் றாதை சிறுமுனிவன்
சீயனம் போதி கடைந்தான் மருகன்சேப் பத்திகைத்தார்
சீயனம் போதி லரனு திருக்கேன் சேயக்கற்றதே. (19)

(ப-ரை.) சீயன் - பார்வதி பாகரான சிவன், நம் - நம்மை, போதி - உபதேசி, என - என்று வாய்புதைத்து - வாய்மூடி, செவி தா - கேட்கவும், தோல் - யானையும், சீய - சிங்கமும், நம்பு - தஞ்ச மாயுறைகின்றதும், ஓதிய - கல்விக்கு உறைவிடமுமான, மலையின் தாதை - பொதியமலைக்கு முதல்வரான, சிறுமுனிவன் - அகத்திய

முனிக்கு, சீயன் - பாட்டனாகிய, அம்போதி கடைந்தான் - பாற் கடலைக்கடைந்த விஷ்ணுவினது, மருகன் - மருமகனான குமாரக் கடவுள், செப்ப் - உபதேசிக்க, திகைத்தார் - (பிரணவப் பொருள் தெரியாமல்) தியக்கமுற்றிருந்தார், சீ - இகழத்தக்க, அனம்போதில் - அன்னவாகனத்தின்மேற் செல்லும், அரன் - பிரமன், ஆதி - முதன் மையாகிய, ருக்கு - வேதத்தை, என் - என்ன, செய - செய்யும்படி, கற்றது - கற்றுக்கொண்டது.

(க-ரை.) ஹே சுவாமிநாத, பிரணவத்தின் பொருள் தெரியாது மயங்கிய பிரமதேவனும் திகைக்கும்படி பார்வதி நாயகனாகிய சிவ பிரான் சிஷ்யபாகமாக வுன்னைப் பணிந்து வாய்பொத்தி செவி சாய்த்துக் கேட்குந்தன்மையில் அவருக்கு உபதேச குருநாதனாக வமர்ந்தருளிய ஞானமூர்த்தியே, அந்தப் பிரமன் முதன்மையாகிய வேதத்தை எதற்காகக் கற்றுக்கொண்டான்; என்பதாகும்.

(வி-ரை.) சீயன் - ஸ்ரீயன், எனவாகும். ஸ்ரீ பார்வதியைக் குறிக்கின்றதாதலின் அவளைப் பாகமாக வுடையவ னென்பது பொருள். நம்போதி என்னும் வாக்கியம் பரமாத்ம ஸ்வரூப ரகசிய மாகிய நமது எதார்த்த நிலையை யுணர்த்துக எனப் பொருளா கின்றன. வாய் பொத்திச் செவிகொடுத்தலென்பது, குமார மூர்த்தி யைக் குருவாகக்கொண்டு சிவபெருமான் சிஷ்யபாகமாகிப் பணி வுடன் கேட்டாரென்க. "எதிருறுங் குமரனை யிருந்தவி சேற்றி யங், கதிர்கழல் வந்தனை யதனொடுந் தாழ்வயிற், சதுர்பட வைகுபு தாவரும் பிரணவ, முதுபொருட் செறிவெலா மொழிதரக் கேட்ட னன்" என்பதனாலுமுணர்க. பொதிகை முனியாகிய அகத்தியனுக் குப் பாட்டன் என்று விஷ்ணுவைச் சொல்லுவ தென்னையெனின், பிரமதேவன், உருப்பசியின் நடனத்தைக்கண்டு தன் வீரியத்தைவிட அதிலிருந்து அகத்தியர் பிறந்தனரென்பது காவிரிப் புராணத்தின்

கூற்றுகும். ஆதலின் பிரமதேவன் ருதையாகிய விஷ்ணு குறுமுனிக்குப் பாட்டனுமென்க. முருகனை மால்மருகனென்பது தங்கையாகிய உமாதேவியின் புத்திரனென்பதுபற்றியதென்க. "மதியுண்ட மதியான மதிவதனவல்லியே மதுசூதனன் தங்கையே" என முன்னூலர் மொழிவன காண்க. அம்போதி கடைந்தான் என்பது பாற்கடல் கடைந்தமையைக் குறிப்பதாகும். பிரணவப்பொருள் தெரியாமல் திகைத்தானென்பது திசைமுகனுகிய பிரமனைக்குறிப்பதாகும். கைலாயத்தில் சிவதரிசனத்துக்கு செல்லுங்கால் முருகப்பெருமானை மதியாது கர்வங்கொண்ட பிரமனை பிரணவப்பொருள் கேட்கவும் சொல்லவறியாது திகைத்ததின்காரணமாக அவனைச் சிறையிடுவித்தமையும், பின்பு சிவனுர் விருப்பத்திற்கிணங்க விடுவித்தருளிய தன்மையும் கந்தப்புராணத்தில் உரைப்பனகாண்க. அவ்வித நிலைமையுள்ள பிரமன் எதின்காரணமாக முதன்மையாகிய வேதத்தை உணர்ந்தான் என்று இகழ்ந்து கூறினுர். சீ - இகழ்ச்சிக்குறிப்பு.

"நன்சிறை யெகின மேன நாடுவா னருளே நல்கத்
தன்சிறை நின்றோர் தம்மைச் சண்முகக் கடவு ளோக்கி
முன்சிறை யொன்றிற் செங்கேழ் முண்டகத் தயனை வைத்த
வன்சிறை நீக்கி நம்முன் வல்லைதந் திடுதி ரென்றுன்."
—கந்தப்புராணம் - அயனைச் சிறைநீக்கு படலம்

சேயதுங்க பத்திரி போற்றும் பகீர திகர சேவ்வேற்
சேயதுங்க பத்திரி சூடுங் குறத்தி திறத்த தண்டஞ்
சேயதுங்க பத்திரி புத்திரி பாதத்தர் சேல்வ தேன்பாற்
சேயதுங்க பத்திரி யத்திரி யாதிரேன் சிந்தையிலே. (20)

(ப-ரை.) செய - சிறந்த, துங்கபத்திரி போற்றும் - துங்கபத்திரி என்னும் நதிவணங்குகின்ற, பகீரதிகர - கங்காதேவியின் கையி

விருப்பவனே, செவ்வேல் - சிவந்த வேலாயுதத்தையுடைய, செய - செயம்பொருந்திய குமாரக்கடவுளே, துங்கபத்திரி - சுரப் புன்னையிலையை, சூடும் - புனைகின்ற, குறத்தி திறத்த - வள்ளிபங்காளனே, தண்டம் - தண்டாயுதமும், செய - வெற்றியும், துங்க - பெருமையும், பத்தி - ஒழுக்கமுமுடைய, ரிபு - மாறுபட்ட (காலன்) திரி - கெடும் படி (உதைத்த) பாதத்தர் - திருவடியையுடைய சிவபிரான், செல்வ - புதல்வனே, தென்பால் - தென்திசையில், செய் - போகச் செய்வதாகிய, அதுங்கு - யாவருமொதுங்கும், அ பத்து - தீ நெறியினால், இரிய - எனது சிந்தை முறிந்தோட, திரியாது - உழலாமல், என் சிந்தையில் - என் மனத்தின்கண்ணே, இரு - நீ தங்கி யருளல் வேண்டும்.

(க-ரை.) ஹே கங்கை மைந்த, வெற்றி வேலாயுத, சிவகுமார அடியேன் தீயநெறியிற் சென்று இயமனுக் காளாகாது எனது சிந்தை மலரில் நீ தங்கியருளல்வேண்டும் என்பதாகும்.

(வி-ரை.) மனம் நல்லவழியிற் செல்லுவது சன்மார்க்கமும் தீய வழியை நாடுகின்றது துன்மார்க்கமு மாகுமென்பது நீதி நூற்களின் கூற்று. மனச்சாட்சி யுணரத்தகுந்தது மாகும். அவ்வித மனச்சாட்சியி னீதிக்கு மாறுபாடான காரியங்களைச் செய்வதின்பயனே எம தண்டனை யென்பது வெள்ளிடை. "தன்னெஞ்சறிவது பொய்யற்க பொய்த்தபின் தன்னெஞ்சே தன்னைச் சுடும்" என்னும் நாயனார் குறட்பாவு மிதற்கு உதாரணமாகும். இந்திரியங்களின் சேட்டைகளினால் மனம் காமம் வெகுளி மயக்கங்களிற் றிரிந்துழன்று முடிவில் எமனுக் கிலக்காகாது நன்னெறியை யனுட்டிக்குந் தன்மையதாக நீ எனது மனத்தில் இருக்கவேண்டும் என்பதாக நமது சுவாமிகள் முருகப்பெருமானைப் போற்றினரென்க. "அவனருளாலே அவன்றாள் வணங்குதலென்னுந் தன்மையை யிது விளக்குவனவாகும்.

சன்மார்க்கசீலர்களை எமன் அணுகானென்பது திண்ணமாம். "வஞ்ச நமன் வாதனைக்கும் வன்பிறவி வேதனைக்கும் அஞ்சி யுனையடைந்தே னையா பராபரமே." எனவும், "மார்க்கண்டர்க்காக மறலிபட்ட பாட்டையுன்னிப் பார்க்கினன்பர்க்கென்ன பயங்காண் பராபரமே" எனவும் விளங்குகின்ற தாயுமானசுவாமிகள் வாக்கியமும் இங்கு வரைதற் குரியனவாகும். துங்கப்பத்திரி முதலிய நதிகட்கெல்லாம் கங்கையே பிரதானமாதலின், பெரியாரைச் சிறியார் போற்றல் போன்று, துங்கபத்திரி போற்றுகின்ற கங்கைக்கு மைந்தன் என்றார். சங்கையாகிய சரவணத்திற் றோன்றியவனென்பது கருத்தாகும். செவ்வேற்செய வென்பது வெற்றிவேலாயுதன் எனக் குறிப்பன வாகும். மலைவனங்களிலுள்ள சுரபுன்னையிலையை முடியில் சூடிக் கொள்வது குறிஞ்சிநிலப் பெண்களின் கொள்கையாதல்பற்றி மலைக் குறத்தியாகிய வள்ளிக்கு அதைச் சுட்டிச் சொன்னார். மெய்யன்ப னை மார்க்கண்டனுக்காக காலனைக் காலாலுதைத்த சிவபிரானுக்கு புத்திரனென்பதுபற்றி ரிபுதிரிபாதத்தர் செல்வ என்றார்.

"சொல்லார் மலர்புனை யன்பகத் தோர்க்கருள்
சொல்லு மெலாம்
வல்லாயென் றேத்த வறிந்தேன் இனியென்றன்
வல் வினைகள்
எல்லாம் விடைகொண் டிரியு மென்மேல்
இயமன் தினமும்
செல்லாதுகா ணையனே தணிகாசலச்
சீர ரசே." —இராமலிங்கசுவாமிகள்

சிந்தா குலவ ரிசைப்பேரு முருநஞ் சீரு மேன்றோர்
சிந்தா குலவ ரிடத்தணு காதரு டீ மதலை
சிந்தா குலவரி மாயூர வீர சேக மளப்பச்
சிந்தா குலவரி மருக சூரனைச் செற் றவனே. (21)

(ப-ரை.) சிந்தா - ஒருக்காலும் அழியமாட்டாத, குலவரிசைப் பேரும் - நமது வமிச பாரம்பரை நாமமும், ஊரும் - நமது நகரமும், நம் சீரும் - நமது சிறப்பும், என்று ஓர் - என்றெண்ணுகின்ற, சிந்தாகுலவரிடத்து - வருந்து மனத்தையுடைய அஞ்ஞானிகள்பால், அணுகாதருள் - சேராதிருக்க அனுக்கிரகிக்கவேண்டும், தீ மதலை - அக்கினியிற் பிறந்த கோழியை, சிந்தா - கொடியாகக்கொண்டவனே! குலவு - பிரகாசிக்கின்ற, அரி - பச்சைநிறம்பொருந்திய, மாயூரவீர - மயிலேறுஞ் சேவகனே! செகம் - பூமியை, அளப்ப - அளக்கும்படி, சிந்தாகு - வாமனமாகி, உலவு - உலாவின, அரி - விஷ்ணுவின், மருக - மருகனே, சூரனை - சூரனை, செற்றவனே - செயித்தவனே.

(க-ரை.) ஹே முருகா திருமால்மருகா, சேவற்கொடியாய், மாயூரவாகனு, சூரசங்காரா, நிலையில்லாத பிரபஞ்சவாழ்வை நிலையென்று கருதி வருந்துகின்ற அஞ்ஞானிகளை யான் சேராதிருக்கும்படி அனுக்கிரகம் புரியவேண்டும் என்பதாகும்.

(வி-ரை.) சாசுவத வஸ்துவாகிய நினது கிருபையை நாடித் துதிக்கின்ற தன்மையதாகிய திருவருட் செல்வத்தை விரும்பாது நிலையில்லாத உலகவாழ்க்கையை நம்பி மயங்கி எனது ஊர், எனது வீடு, எனது பொருள், எனது பரம்பரை, எனது புகழ் எனவும் அது காரணம்பற்றியுள்ள சுக துக்கங்களாலும் மனங்கலந்து வருந்துபவர்களாகிய அஞ்ஞானிகளினது நேசம் என்னை அணுகாது காத்தருள வேண்டுமென்பதுபற்றி நமது சுவாமிகள் முருகப்பெருமானை பிரார்த்தித்தா ரென்பதாகும். "சிந்தாகுலவரி சைப்பேருமூருநஞ் சீருமென்றோர் சிந்தாகுலவ ரிடத்தணுகாதருள் என்னும் பதங்கள் குறிக்கின்றன. "உறங்குவதுபோலுஞ் சாக்காடு உறங்கி விழிப்பதுபோலும் பிறப்பு" எனவும், கூத்தாட்டவைக் குழாத்தற்றே பெருஞ்

செல்வம், போக்குமது விளிந்தற்று, எனவும் விளக்குகின்ற வள்ளுவர் வாக்கியம் இங்கு வரைதற் குரியதாகும். "தந்தைதாய் தமர்தார மகவென்னு மிவையெலாஞ் சந்தையிற் கூட்டமிதிலோர், சந்தேக மில்லைமணி மாடமாளிகைமேடை சதுரங்க சேனையுடனே, வந்த தோர் வாழ்வுமோ ரிந்த்ரசா லக்கோலம்," என்னும் பெரியார் பொன் மொழியும் தக்க சான்றாகுமென்க.

"நல்லா ரிணக்கமும் நின்பூசை நேசமும் ஞானமுமே
யல்லாது வேறு நிலையுளதோ அகமும் பொருளும்
இல்லாளுஞ் சுற்றமும் மைந்தரும் வாழ்வும் யெழிலுடம்பும்
எல்லாம் வெளிமயக்கே இறைவா கச்சி யேகம்பனே."

—பட்டினத்தார்

மற்றும் சேவற் கொடியையும் மயிலையுஞ் சிறப்பித்து, தீ மதலை சிந்தாகுல வரிமாயூரவீர எனவும், வாமனனாகிய விஷ்ணுவின் மருக னென்பதை, செக மளப்பச் சிந்தாகுலவரி மருக எனவும், சூரசங் காரன், என்பதற்கு, சூரனைச் செற்றவனே எனவும், பதங்கள் விளக்கு கின்றன. இப்பாடலினால் மாயாதோற்றமாகிய உலகவாழ்வை நம்பி மனதை வீணே சஞ்சலத்திற் குள்ளாக்கி முடிவில் ஏமாந்துவிடாமல் (காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்) உடம்புள்ளபோதே அறி வாராய்ச்சியினாற் றெளிந்து மெய்ப்போதத்தை யடையவேண்டு மெனப் புலனாகின்றன.

"எல்லாஞ் சிவன்செய லென்றறிந் தாலவ னின்னருளே
அல்லாற் புகலிடம் வேறுமுண் டோவறு வேங்கையா
நில்லாயுன் னாற்றமி யேற்குக் கதியுண்டிந் நீணிலத்தில்
பொல்லா மயக்கத்தி லாழ்ந்தாவ தென்ன புகனெஞ்சமே."

—தாயுமானவர்

சேற்றை வரும்பழ னஞ்சோலை யிஞ்சி திகழ் வரைமேற்
சேற்றை வரும்பழ னிக்கந்த தேற்றிடு நூற்றுவரைச்
சேற்றை வரும்பழ நாடாள நாடிகண் சேய்விடுத்த
சேற்றை வரும்பழ மாங்கூடு வேமத்தி னத்தில்வந்தே. (22)

(ப-ரை.) *செற்றை - செற்றையென்னுமீனினம், வரும் - உலாவு கின்ற, பழனம் - வயலும், சோலை - பொழிலும், இஞ்சி - மதிலும், திகழ் - விளங்காநின்ற, வரைமேல் - பருவதத்தின்மேல், செல் - மேகம் தைவரும் - தவழுகின்ற, பழனிக்கந்த - பழனிமலைக்கந்தனே! தேற் றிடு - அபயந்தந்தருள்வாய், நூற்றுவரை - துரியோதனன் முதலிய நூறுபேரையும், செற்று - கொன்று, ஐவரும் - பாண்டவர்கள், பழ நாடு - பழையராச்சியத்தை, ஆள - ஆளும்படி, நாடி - கருதிய கிருஷ்ணமூர்த்தியினது, கண் - விழியாகிய, (ஆதித்தன்) சேய் - மைந்தனாகிய காலன், விடுத்த - அனுப்பிய, செற்றைவரும் - தூதர் கூட்டம்வரும், பழமாம்கூடு - வார்த்திகத்தை யடைகின்ற இவ்வுட லானது, வேம் - பிராணனீங்கித் தகிக்கப்படுகின்ற, அத்தினத்தில் வந்து - அன்னுளிலெழுந்தருளிவந்து.*

(க-ரை.) ஹே பழனியங்கிரிவாசா! காலதூதர்களுக் கிலக்காகிய எனது வுடல் நிலையழியுந்தருணம் நீ எழுந்தருளிவந்து என்னுயிருக் குற்றதுணையாய் அஞ்சேல் என அபயம் அளித்தருளவேண்டும் என்பதாகும்.

(வி-ரை.) என்னையும் எனதுள்ளத்தையும் உன்கையில் ஒப்புவித் தும் கள்ளத்தைச் செய்கின்ற கன்மவயத்தனாய் வருந்துதல் தகுதி யாமோ, வெனப்புகலுகின்ற பெரியார்வாக்கிற்கிணங்க அருணகிரி சுவாமிகள் தமது மனம் தீயநெறிகளையும் விரும்பியிருக்குங் கார ணத்தை முன்னிலைப்படுத்தி அதின்பயனாகக் காருண்யமற்றவரான கொடிய காலர்வந்தால் தமது பிறவிக்கடலைக் கடப்பதற்கு முருகப்

பெருமானது திருவடி மலர்களையே மரக்கலமாகக்கொண்டு அபய மளிக்க வேண்டுமெனப் போற்றியுள்ளாரென்க.

"கள்ளம் பொருந்து மடநெஞ்ச மேகொடுங் காலர்வந்தால்
உள்ளன் பவர்கட்குண் டோவில்லை யேயுல கீன்றவனை
வள்ளம் பொருந்து மலரடி காணமன் ருடுமின்ப
வெள்ளச்செம் பாதப் புணையே யல்லாற்கதி வேறில்லையே."

"உள்ளத்தையுமிங் கெனையுநின் கையினி லொப்புவித்தும்
கள்ளத்தைச் செய்யும் வினையால் வருந்தக் கணக்குமுண்டோ
பள்ளத்தில் வீழும் புனல்போற் படிந்துன் பரமவின்ப
வெள்ளத்தின் மூழ்கினர்க்கேயெளி தாந்தில்லை வித்தகனே."

என்னுந் தத்துவ நூற்கள் அருணகிரியின் போற்றுதலை யுறுதிப் படுத்துகின்றனவாகும். மீன்கள் விளையாடுகின்ற வயல்களும், குளிர்ந்த சோலைகளும் திருமதிலும் சூழ்ந்துள்ளதும், மேகம் தவழுகின்ற தன்மையுடையதுமாகிய பழனிமலையிற் கோயில்கொண்டருளிய கந்தன் என்பதுபற்றி, செற்றைவரும் பழனஞ்சோலை யிஞ்சி திகழ் வரைமேற் செற்றைவரும் பழனிக்கந்த, என்றார். துரியோதனுதிய ராகிய நூற்றுவரையுங்கொன்று பஞ்சபாண்டவர்கள் நாடாள்வதற்கு காரணமாகியிருந்த கிருஷ்ணமூர்த்தியின் வலக்கண்ணாகிய சூரிய னுக்கு மைந்தன் என்கிற காலன்விடுத்த தூதர் எனது உயிரைக் கவர்ந்து யிவ்வுடல் தகனஞ்செய்யப்படுமுன் அபயமளித்துக் காத்தருள வேண்டுமென்பதுபற்றி, நூற்றுவரைச் செற்றைவரும் பழநாடாள நாடிகண் சேய்விடுத்த, செற்றை வரும்பழமாங் கூடுவேமத் தினத்தில் வந்தே" என்றார், சுவாமிகள் தமது திருப்புகழிலும் இதேபொருளாகக் கொண்டு, "இடுகாட்டி லென்னை யெருமூட்டு முன்னே யிருதாட் கடம்பை, யருள்வாயே" எனப்போற்றி யிருப்பதுங்காண்க.

"உப்பிட்ட பாண்டம் உருக்குலைந்து போகுமுன்னே
அப்பிட்ட வேணியருக் காளாவ தெக்காலம்." -பத்திரகிரியார்

தினகர ரக்கர தங்கெடுத் தார்குரு தேசிகர் செந்
தினகர ரக்கர மாறுடையார் தெய்வ வாரணத்தந்
தினகர ரக்கர சத்தியின் றாகிலத் தேவர்நண்ப
தினகர ரக்கர தந்தீர்வ ரீர்வர் செகமெங்குமே. (23)

(ப-ரை.) தினகரர் - பகன் பூடாவென்னு மிரண்டாதித்தர்களுடைய, அக்க - கண்ணையும், ரதம் - பல்லையும், கெடுத்தார் - அழித்த பரமசிவனுக்கு, 'குருதேசிகர் - போதகாசிரியரும், செந்தில்நகரர் - செந்திற்பதியினரும், அக்கரம் ஆறு உடையார் - சடாட்சரப் பொருளானவரும், தெய்வ - தெய்வீகமாகிய, ஆரண - வேதம்பூசித்த, தந்தி - பாம்புபோன்ற பிரகாரத்தையுடைய, நகர் - திருச்செங்கோட்டு மலையையுடையவருமாகிய (கந்தசுவாமி)யினது அர - அரத்தாற் கூர்மையிட்ட, கர - திருக்கையிற்றரித்த, சத்தி - வேலாயுதமானது, இன்றாகில் - இல்லாவிட்டால், அத்தேவர் நண்பதி - அத்தேவர்கள் பொருந்திய பொன்னகரமும் - ந இல்லாமற்போவதுமன்றி, கர - வஞ்சம் நிறைந்த, ரக்கர் - அசுரரும், அதம்தீர்வர் - இறப்புமொழிவார்கள், செகம் எங்கும் ஈர்வர் - உலகமுழுவதையும் நிர்மூலமாக்கியும் விடுவார்கள்.

(க-ரை.) ஹே சிவஞானதேசிக, செந்திலாதிப, சடாட்சரவடிவினரே, திருச்செங்கோடு என்னும் மலையிற் கோயில்கொண்டருளிய முருகப்பெருமானே; நினது திருக்கரத்தேயுள்ள வேலாயுதம் இன்றாகில் வானவர்கள் வசிக்கின்றதாகிய பொன்னுலகத்தையும் மற்றைய சமஸ்த வுலகங்களையும் கொடிய வஞ்சகர்களாகிய அசுரர்கள் நிர்மூலமாக்கியிருப்பார்கள், (வேலாயுதம் தேவர்களைக்காத்தும் பகைவர்களாகிய அசுரர்களைக் கொன்றும் வெற்றியளித்தது) என்பதாகும்.

(வி-ரை.) தக்கன் யாகத்தில் வீரபத்திர மூர்த்தமாகத் திருக்கோலங்கொண்ட சிவபெருமான் ஆதித்தர் பல்லையுங் கண்ணையும் அழித்தமையைப்பற்றி, தினகரர் அக்கரதங்கெடுத்தார் என்றார். அந்தச் சிவபிரானுக்கு பிரணவமுபதேசம் புரிந்தமையையும், சடாட்சரப்பொருளாக உலகம் போற்றக் குரியனென்பதையும், செந்தில், திருச்செங்கோடு என்னுந் தலங்களில் கோயில்கொண்டருளிய கடவுளென்பதுபற்றியும் முருகப்பெருமானை வியந்து போற்றினார். அவர் திருக்கரத்தில் விளங்குகின்ற வேற்படையின் பிரபாவத்தைத் துதிக்குந்தன்மையதாக அவ்வேல் இல்லையாயின் தேவர்கள் வசித்தற்குரிய பொன்னுலகமும் இல்லாமற் போய்விடுவதுமன்றி வஞ்சப்பகைவர்களாகிய அசுரர்கள் இறத்தலின்றி உலகமுழுவதையும் நிர்மூலம் செய்துவிடுவார்களென்பதுபற்றி, காசத்தியின்றாகிலத் தேவர் நண்ப தினகாரக்கர தந்தீர்வரீர்வர் செகமெங்குமே என்றார். ஆதலின் துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனஞ் செய்கின்றதாகிய ஞானசத்தியென்னும் வேலாயுதத்தைப் புகழ்ந்து போற்றியுள்ளாரென்பதை இங்கு விளக்குகின்றனவாகும். "சூர்முதறடித்த சுடரிலைநெடுவேல், அவுணர் நல்வலம் அடங்கக்கவிழினர், மாமுதறடிந்த மறுவில்கொற்றத், தெய்யா நல்லிசைச் செவ்வேற் சேஎய்" எனவும், "குன்றமெறிந்ததுவுங் குன்றப்போர் செய்ததுவும், அன்றங்கமரரிடர் தீர்த்ததுவு—மின்றென்னைக், கைவிடா நின்றதுவுங் கற்பொதும்பிற் காத்ததுவு, மெய்விடா வீரன் கைவேல்" எனவும் திருமுருகாற்றுப்படையில் வருவன காண்க. "வேலாயுதத்தை யுடையவனென்றுங் காரணப்பெயர் கொண்டு கந்தக்கடவுளை வேலாயுதன்" எனவும் உலகம் புகழ்ந்து போற்றுகின்றன. தம்மடியார்கட்கு யாவனொருவன் தீங்கிழைக்கக் கருதுகின்றானோ, அவனையும் அவன் குலத்தையும் வேரறக் களைகின்றது வேலாயுதமே யாகுமென்பதுபற்றி இங்குதாரணம் வருவன காண்க. "துதிக்கு மடியவர்க்கொருவர், கெடுக்கவிடர் நினைக்கினவர்,

குலத்தைமுத லறக்களையு, மெனக்கோர் துணையாகும், திருத்தணியி லுதித்தருளு, மொருத்தன்மலை விருத்தனென, துளத்திலுறை கருத் தன்மயி, னடத்துகுகன்வேலே" என்பது வகுப்புவண்ணமாகும்.

சேகம்புர வார்கிளை யெல்லா மருண்டு திரண்டு கோண்ட
சேகம்புர வாதிங்ஙன் செய்வதேன் ஞேமயல் செய்யவன்பு
சேகம்புர வாச மேனத்துயில் வார்சேப்ப பங்கபங்க
சேகம்புர வாமுரல் சேந்தூர வேன்னத் தேளிதருமே. (24)

(ப-ரை.) செகம் - உலகத்திலும், புர - ஊரிலுமுள்ள, வார் - ஒழுங்கான, கிளையெல்லாம் - சுற்றத்தாரெல்லோரும், மருண்டு - மயங்கி, திரண்டுகொண்டு - கூடிக்கொண்டு, அசெ - ஆட்டினுடைய, கம் - தலையை, புரவாது - காப்பாற்றுமல், இங்ஙன் - இவ்விடத்தில், செய்வது என்ஞே - வெறியாடச்செய்ய நினைப்பதென்ன விபரீதம், மயல் - (கைக்கிளையாக மயங்கிய இம்மாதின்) விரகதாபம், செய்ய - சிவந்த, வன் - வலிய, செகம் - ஆதிசேடனை, புரவாசம் என - ஆதி யான இடமாய்க்கொண்டு, துயில்வார் - திருக்கண்வளர்கின்ற திரு மால், செப்பு – புகழ்கின்ற, அபங்க - பங்கமிலாதவனே, பங்கசெ - தாமரைத் தடாகத்தில், கம்பு - சங்கினங்கள், உரவா - உரக்க, முரல் - சப்திக்கின்ற, செந்தூர - திருச்செந்தூர்ப்பதியோனே! என்ன - என்று சொல்லில், தெளிதரும் - (அக்ஷணமே) தீர்ந்துவிடுவது நிச்ச யம்.

(க-ரை.) உலகத்திலுள்ளவர்கள் மயக்குற்று ஆட்டின் தலையை பெலியிட்டு வெறியாடச்செய்ய நினைக்கின்றது என்னவிபரீதம்! மய லானது விஷ்ணுமூர்த்தியும் புகழுதற்குரிய அழகிய செந்திலாதிபனே என்று அவன் திருநாமவாளிகளை யுச்சரிக்குமளவில் அந்த நிமிஷமே நிவிர்த்தியாகி மனத்தெளிவுண்டாகும் என்பதாகும்.

(வி-ரை.) தலைவனைப் பிரிந்த தலைவியின் மயமாகிய உன்மத்த நோய் நீங்க தேவதைகளுக்கு ஆடு பலியிட்டு வெறியாடற்செய்ய நினைக்கின்ற சுற்றத்தார்களின் விபரீதத்தை இகழ்ந்து உண்மையினை யுணர்ந்து தலைவன் வருகையை யுணர்த்தி தலைவியின் நோயைத் தணிப்பதாகிய தன்மையின் உவமானத்தை எடுத்துக்கூறினர். (இறை யனாரகப்பொருள்) "கற்பினுட்டுறவே கடிவரையின்றே, ஓதல்காவல் பகைதணி வினையே, வேந்தர்க்குற்றுழிப் பொருட்பிணி பாத்தை யென்றான், றாங்கவ்வாறே யவ்வயிற்பிரிவே," (தொல்காப்பியம்) "கற் பெனப்படுவது காரணமொடு புணரக், கொளற்குறிமாபிற் கிழவன் கிழத்தியைக், கொடைக்குறி மாபினோர் கொடுப்பக் கொள்வதுவே." என்னும் பான்மைக்கிணங்க சிற்றின்பக் காதல்போன்று பேரின் பத்தை யளிக்கவல்ல தலைவனாகிய முருகப்பெருமானை யடைய வேண்டுமென்னும் அன்பு வேட்கையுள்ள அடியார்களின் மாண்பை யும் இங்கு விளக்குவனவாகும். பொய்யாகிய உலகவாழ்க்கையை மெய்யென நம்பி மயங்கித்திரியாது ஆன்ம ஞானமடைந்து தலைவனா கிய கந்தப்பெருமானை அவனது திருநாமவாளிகளால் மெய்யன்பு கொண்டு துதிபுரிந்து மாயாப்பிறவியின் மயக்கறுக்கவேண்டும் என்ப தாகும்.

"ஆசையுன்மீ தல்லா லருளறிய வேறொன்றிற்
பாசம்வையே னின்கருணைப் பாங்காற் பராபரமே."
"காதலால் வாடினதுங் கண்டென்னை யெம்மிறைவர்
போதரவா யின்பம் புசிப்பேனோ பைங்கிளியே"

—தாயுமானவர்

அருணகிரியார் கருத்தை நோக்குமளவில் நிலைபுற்ற நிராசையே தலைவியாகவும் பரிசுத்தமனதைத் தோழியாகவும் அறிவானந்தமயமா கிய பரம்பொருளை தலைவனாகவும் சகல கேவலமிலாத நிலையையே

விரும்புகின்ற இன்பமாகவுங்கொண்டு நடித்துப் புகன்றுள்ளாரென்பது புலனாகின்றன.

"அரிதரோ தேற்ற மறிவுடையார் கண்ணும்
பிரிவோ ரிடத்துண்மை யான்." —நாயனார்

"நிலையுறும் நிராசையாம் உயர்குலப் பெண்டிரொடும்
நிகழ்சாந்தமாம் புதல்வனும்
நெறிபெறும் உதாரகுண மென்னுநற் பொருளுமருள்
நீக்கும் அறிவாந் துணைவனும்
மலைவறு நிராங்கார நண்பனுஞ் சுத்தமுறும்
மனமென்னும் நல்லவலும்
வருசகல கேவலமி லாதஇடமும் பெற்று
வாழ்கின்ற வாழ்வருளுவாய்."
—திருவருட்பிரகாசவள்ளலார்

தெளிதரு முத்தமிழ் வேதத்திற் றெய்வப் பலகையின் கீழ்
தெளிதரு முத்தமி ழாநித்தர் சேவித்து நின்ற தென்னாள்
தெளிதரு முத்தமிழ் தேய்நகை வாசகச் செல்வி தினைத்
தெளிதரு முத்தமிழ் செவ்வே ளிருப்பச் செவிகு னித்தே. (25)

(ப-ரை.) தெளிதரு - ஆராயப்படுகின்ற, முத்தமிழ் - (இயல், இசை, நாடகம் எனும்) முத்தமிழிலும், வேதத்தில் - வேதத்திலும், தெய்வப்பலகையின்கீழ் - தெய்வத்தன்மையான சங்கப்பலகையிலும், தெளி - மாசற்ற, தரு - குற்றுவின்கீழும், முத்து - முந்தியிருந்தருளுகின்ற, அமிழாநித்தர் - அழிவில்லாத நித்தியராகிய பரமசிவன், சேவித்து நின்றதென் - பணிந்துநின்ற காரணமென்ன, நாள் - நக்ஷத்திரம் (போல) தெளிதரு - பிரகாசிக்கும், முத்து - முத்தையும்

அமிழ்து - தேவாமுதத்தையும், ஏய் - ஒத்த, நகை - பல்லையும், வாசக - சொல்லையுமுடைய, செல்வி - மங்கையாகிய, தினை - தினையை, தெளி - கொழிக்கின்ற வள்ளிநாயகியார், தருமுத்து - கொடுக்கு முத்தத்தினால், அமிழ் - ஆனந்தத்தி லாழ்ந்தவராகிய, செவ் வேள் - முருகவேளானவர், இருப்ப - எழுந்தருளி யுபதேசிக்க, செவிகுனித்து - செவியைத் தாழ்த்திக்கொண்டு.

(க-ரை.) முத்தமிழிலும், ஒப்பற்ற வேதங்களிலும், சங்கப்பலகை யினும், குற்றாலவிருட்ச நீழலிலும், எழுந்தருள்கின்ற முதற்பொருளா கிய சிவபிரானானவர், தினைப்புனங்காத்த சுந்தரியாகிய வள்ளிநாயகி யின் காதலனான முருகப்பெருமானை வணங்கி உபதேசம் பெற்றதின் காரணம்என்ன என்பதாகும்.

(வி-ரை.) வள்ளிநாயகியின் இயற்கையழகாகிய பிரகாசிக்கின்ற முத்தைப்போன்ற பல்லையும், தேவாமுதம்போன்று இனிமையைத் தருகின்ற சொல்லையும் வியந்து, தெளிதருமுத்தமிழ் தேய்நகை வாச கச்செல்வி என்றார். இங்கு செல்வி என்பது இன்பஞ்சொரிகின்ற அவளது சுந்தரவுருவை வருணித்தலாகும். பார்வையினாற் கண்களுக் கும் மனத்திற்கும் உவகையளிக்கின்ற ஓவியச்சிறப்புமாகும். தினைத் தெளி—தினையைக் கொழிக்கின்றவளெனவாகும், அவளது முத்தத்தி னால் ஆனந்தத்திலாழ்ந்தவராகிய செவ்வேள் என்பது முருகப்பெரு மானைக் குறித்தலாகும். வள்ளிநாயகியாவது இச்சாசத்தி என்க. காமநுகர்ச்சியில்லாத கடவுள் இங்ஙனம் நகையமர்ந்தது உலகத்திலே இல்வாழ்க்கை நிகழ்தற்பொருட்டென்க. அது "தென்பாலுகந்தாடுந் தில்லைச்சிற்றம்பலவன் - பெண்பாலுகந்தான் பெரும்பித்தன்காணேடீ- பெண்பாலுகந்திலனேற் பேதாயிருநிலத்தோர்-விண்பாலியோகெய்தி வீடுவர்காண் சாழலோ" என்னுந் திருவாசகத்தாலுமறிக. முத்தமி ழுக்கும் நான்குவேதங்கட்கும், சங்கப்பலகைக்கும், கல்லாலவிருட்ச நீழலிற்கும், காரணப்பொருளாகிய சிவபிரானென்பதுபற்றி, "தெளி

தரு முத்தமிழ் வேதத்திற் றெய்வப் பலகையின் கீழ், தெளிதரு முத் தமிழாகித்தர் என்றூர். தெளிதரு என்பது அறிவின் பிரகாசத்தை விளக்குகின்ற எனவாகும். முத்தமிழ் - தென்மொழி, வேதம் - வட மொழி, சங்கப்பலகை - இனியதமிழை விளக்குகின்ற தெய்வீகப் பலகை. கல்லால விருட்சம் - தட்சணமூர்த்தி வடிவமாயிருந்து நால் வருக் குபதேசம்புரிந்த குருபீடம் இவைகட்கு மூலகாரணராகிய சிவபிரான் என்பதாகும். "ஓசையொலியெலா மானுய்நீயே" எனவும் "ஓங்காரத் துட்பொருளாய் நின்றுன் கண்டாய்" எனவும் "கந்தருவம் பாட்டிசையிற் காட்டுகின்ற" "பண்ணவன்காண் பண்ணவற்றின் றிறலானுன்காண்" காண்க எனவும், "அன்றாலின் னிழற்கீ, ழறநால் வர்க் கருள்புரிந்து" எனவும் மூவர் தேவாரம் போற்றுகின்றன. அட்சரமாயும், ஒலியாயும், பண்ணுகவும் தோன்றுகின்ற பரமன் தண்டமிழ் மாலைகளை மெய்யன்பர்களிடமிருந் தேற்று தமது திருத் தோள்களிற் புனேகின்றவனென்பதும் ஆகமபுராணங்களின் கூற்றாகு மென்க. தமிழ்ப் பனுவல்சொல்லுகவென, சேக்கிழாருக்கும், சுந்தா மூர்த்தி நாயனுர் முதலிய திருத்தொண்டர்கட்கும் சிவபெருமானுன வர் அடியெடுத்துக் கொடுத்தமைபற்றியும் தக்க ஆதாரங்கள் விளக்கு கின்றன.

"சேக்கி ழான்நமது தொண்டர்சீர் பரவ
நாம்மகிழ்ந் துலகம் என்றுநம்
வாக்கினுல் அடியெடுத் துரைத்திட
வரைந்து நூல்செய்து முடித்தனன்
காக்கும் வேல்வளவ நீ இதைக்கடிது
கேள் எனக் கனக வெளியிலே
ஊக்கமான திருவாக் கெழுந்தது
திருச் சிலம்பொலியும் உடனெழ."

—சேக்கிழார்புராணம்

இவ்வித உதாரணங்களால் முக்கண்ணர் செந்தமிழ்க்கடவுளென்பதை தெற்றென வுணரத்தக்கதாகும். "பாவலனொருவன் செந்தமிட் கிரங்கிப் பரவையா ரூடலைமாற்ற, ஏவலாளாகி யிரவெலா முழன்ற யிறைவனே யேகநாயகனே" என்னும் பட்டினத்தடிகளின் பொன்மொழியும் இங்கு பொருந்தற்குரியதாகும். ஆதலின் சகல கலைகட்கும் மூலகாரணனாகிய சிவமூர்த்தியானவர் கந்தப்பெருமானைப் பணிந்து செவிதாழ்த்தி நின்று உபதேசம்புரியும்படி வினவியது யாதுகாரணமாக என்றார்.

"மூலமீ றிகந்து மூலமேயில்லா மூலகா ரணப்பொருடனக்கு, மூலமா யிருந்து நால்வகைப் பொருட்கு மூலமாகிய வருமறையின், மூலவான் மொழிக்குப் பொருட்செறிவெவர்க்கு மூலமானவன் விரித்தமையான், மூலவேதண்டமெனப்படுங் குறவர் மூலங்தே ரருவுரைப் பறம்பு."

—தணிகைப்புராணம்

முருகப்பெருமான் முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளாகி மும்மூர்த்திகட்கு மூலகாரணன் என்பதுபற்றி வேதாகமங்கள் துதிக்கின்றன. அன்றியும் திருமுருகாற்றுப்படையில் "உலகங் காக்கு மொன்றுபுரி கொள்கைப், பலர்புகழ் மூவருந் தலைவராக, வேமுறு ஞாலந்தன்னிற் றோன்றித், தாமரைப்பயந்த தாவிலூழி, நான்முக வொருவற் சுட்டிக்காண்வரப், பகலிற் றோன்று மிகலில் காட்சி." என வருவனகாண்க. சோதியும் சுடரும்போன்று சிவனே குகன், குகனே சிவன், என்னும் பான்மைக்கிணங்க தமக்குத்தாமே புதல்வராக விளங்கிய சிவபெருமான், தமக்குத்தாமே யொரு குற்றமுமில்லாத ஆசாரியாாகவிருந்து, தாமாகிய தத்துவப்பொருளைத் தாமே யுபதேசிக்கத் தாமே சீட பாவனைகொண்டு வணங்கி உலக காரணமாக திருவிளையாடற் புரிந்தார் என்க.

"நன்முக மிருமூன் றுண்டா னமக்கவை தாமேகந்தன்
றன்முக மாகியுற்ற தாரகப் பிரமமாகி
முன்மொழி கின்றநந்த மூவிரண் டெழுத்துமொன்று
யுன்மக னுமத்தோரா றெழுத்தென வுற்றதன்றே."

—கந்தப்புராணம்

சேவிக்குன்ற வாரண நல்கிசை பூட்டவன் சிந்தையம்பு
சேவிக்குன்ற வாரண மஞ்சலென் றாண்டது நீண்டகன்மச்
சேவிக்குன்ற வாரண வேலாயுதஞ் செற்ற துற்றனகட்
சேவிக்குன்ற வாரண வள்ளிபோற் றாண்மற்றேன் றேடுவதே.

(ப-ரை.) செவிக்கு - என்காதுக்கு, உன் - உனது, தவா - தவிராத, ரண - உரிமையை, நல்கு - கொடுக்கும், இசை - கீர்த்தியை, பூட்ட - அணிய, வன் - வலிய, சிந்தை - (என்) இருதயமாகிய, அம்புசெ - தாமரையிலிருக்கும், வி - பட்சியாகிய ஆன்மா, குன்ற - வருந்துகையில், வாரணம் - நின் கோழிக்கொடி யெழுந்தருளி, அஞ்சல் என்று - பயப்படாதே யென்று, ஆண்டது - அடிமைகொண்டது, நீண்ட கன்ம - பெரிதான முன் செய்வினையாலாகும், செ - சென்னத்துக்கு வித்தாகிய, இக்குன்று - இம்மலைபோன்ற, அவா - ஆசையை, ரண - அமர்புரியும், வேலாயுதம் - அயிலானது, சென்றது - கொன்றுவிட்டது, உற்றன - என்சென்னிமேலே வீற்றிருந்தன, கட்செவி - பாம்புபோன்ற, குன்ற - திருச்செங்கோட்டு மலையையுடைய கந்தசுவாமியே! வாரண - தெய்வயானை, வள்ளி - வள்ளியாகிய நாயகிமாருடைய, பொன்தாள் - பொன்னடிகள், மற்று என்தேடுவது - இனி நான் சம்பாதிக்கவேண்டியது வேறென்னவிருக்கின்றது.

(க-ரை.) ஹே திருச்செங்கோட்டு மலையிற் கோயில்கொண்டருளிய தெய்வமே; நினது பிரபாவத்தை யுணர்த்துகின்ற புகழ் மாலையினால் எனது ஆன்மா சஞ்சலமொழிந்து சாந்தியடைந்ததற்குச் சேவற்

கொடி காரணமாகி முன்னின்றது. வெற்றி வேலாயுதம் பிறவிக்கு வித்தாகிய ஆசையை அறவேயொழித்தது. வள்ளி தெய்வயானை என்னும் உபயநாயகிமார்களின் றிருவடிகளென்னும் ஐஸ்வரியமுங் கிடைக்கப்பெற்றேன். இனி நான் அடையவேண்டியது என்னவிருக்கின்றது என்பதாகும்.

(வி-ரை.) முருகப்பெருமான் தம்மை ஆட்கொண்டருளியதின் காரணமாக அவன் புகழை செவிச்செல்வமாய்க் கொண்டு பரமானந்தமடைந்த தன்மையைக் குறிக்கின்றன. "செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம், செல்வத்து ளெல்லாந்தலை" என்னுந் தமிழ்மறை நவிலுதற்கிணங்க நமது சுவாமிகள் முருகன் புகழையே செவிச்செல்வமாகக் கொண்டு பாவசமாகி அவன் கொடியும் வேலாயுதமும் தம்மை புனிதமாக்கியுள்ளதெனவும், வள்ளி தெய்வயானையம்மையார்களின் திருவடிதரிசனமும் வாய்க்கப்பெற்றே னெனவும் இனி யானடையவேண்டுவது எதுளது எனவும் உள்ளமகிழ்ச்சி கொண்டு ஓதினரென்க. தொன்றுதொட்டுள்ள கன்மவாசனையாகிய பேராசையே பிறவிக்கு வித்தாதலின் அதை அழிக்கவல்லது ஞானம் என்பது விளங்க ஞானசத்தியாகிய வேலாயுதம் மலைபோன்ற ஆசையைக்கொன்றது என்னும் பொருள்பற்றி, நீண்ட கன்மச் செவிக்குன்றவாரண வேலாயுதமுஞ் செற்றதுற்றன என்றார், திருவருட்செல்வத்தை தாம் அடைந்தமைகாரணமாக முருகப்பெருமானையும் அவனது சேவற்கொடி, வேலாயுதம், வள்ளி, தெய்வயானையும் உவகைகொண்டு இருதய பீடத்தில் இசைத்துப்போற்றினர் என்க உதாரணமாக திருப்புகட்பாவிலும் போற்றியுள்ளது இங்கு வருவன காண்க. "கருதியொரு பரமபொரு ளீதுளென்றுஎன், செவியிணையி னருளியுரு வாகிவந்தஎன், கருவினையொ டருமலமு நீறுகண்டுதண்—டருமாமென், கருணைபொழி கமலமுக மாறுமிந்துளங், தொடை

மகுட முடியுமொளிர் நூபுரஞ்சரண், கலகலென மயிலின்மிசை யேறிவந்துகந்—தெனையாள்வாய், திரிபுரமு மதனுடலும் நீறுகண்டவன், தருணமழ விடயனட ராசனெங்கணுந், திகழருண கிரிசொருப ஞுதியந்தமந்—கறியாத, சிவயநம நமசிவய காரணன்சுரந், தமுதமதை யருளியெமை யாளுமெந்தைதன், திருவுருவின் மகிழெனது தாய் பயந்திடும்—புதல்வோனே, குருகுகொடி யுடன்மயிலி லேறிமந்தரம், புவனகிரிசுழலமறை யாயிரங்களும், குமரகுரு வெனவலிய சேடனஞ் சவந்—திடுவோனே, குறமகளி னிடைதுவள பாதசெஞ்சிலம், பொலியவொரு சசிமகளொ டேகலந்துதிண், குருமலையின் மருவு குரு நாதவும்பர்தம்—பெருமாளே.”

தேடிக் கோடும்படை கைக்கூற் றடாதுளஞ் சேவின்மைமீன்
தேடிக் கோடும்படை கோமான் சிறைபட வேறுளபுத்
தேடிக் கோடும்படை யாவெகு நாட்டன் சிறைகளையுந்
தேடிக் கோடும்படை மின்கேள்வ னற்றுணை சிக்கெனவே.

(ப-ரை.) தேடிக்கொள் - இப்பொழுதே சம்பாதித்துக்கொள் வாயாக, தும்பு - பாசத்தை, அடை - பொருந்திய, கை - கையை யுடைய, கூற்று - இயமன், அடாது - அழிக்காதபடி, உளம் - நெஞ்சமே! சே - இடபம், வில் - தனுசு, மை - மேஷம், மீன் - மீனம், தேன் - விருச்சிகமென்னு மிராசிகளையும், திக்கொடும் - திக்குகளையும், படை - சிருட்டித்த, கோமான் - பிரமதேவனை, சிறைபட - சிறைப்படுத்தி, வேறுளபுத்தேள் - மற்றைத் தேவரது, தி - பத்தியில் கொடும்பு - திருகுதலை, அடையா - சேராத, வெகுநாட்டன் - ஆயிரங் கண்ணையுடைய இந்திரனது, சிறை - சிறையை, களை - ஒழித்தவரும், உந்து - நீரிலும் (நெருப்பிலும்) சமணர் செலுத்திய, ஏடு - (ஏடு) களையும், இக்கொடும் - அவர்கள் செய்த கொடுமைகளையும், படு - தாழ்த்தி விட்ட, ஐ - சுவாமியாகிய, மின்கேள்வன் - தெய்வயானை நாயகனது, நல்துணை - நல்ல அனுக்கிரகத்தை, சிக்கெனவே - உறுதியாக.

(க-ரை.) ஹே நெஞ்சமே, காலபாசத்தையுடைய யமன் உன்னை யணுகாதபடி, சிருட்டிகர்த்தாவாகிய பிரமாவை சிறைப்படுத்திய வரும், அசுரர்களிடத்திலிருந்தும் தேவேந்திரனைச் சிறைமீட்டிய வரும், சமணர்பகையை யொழித்து சைவசமயத்தை வளர்த்தவரும், தெய்வயானைக்கு நாயகருமாகிய குமாரசுவாமியினது திருவருளாகிய பரம ஐஸ்வரியத்தை உறுதிகொண்டு சம்பாதித்துக் கெள்வாயாக என்பதாகும்.

(வி-ரை.) மனத்தின்றன்மையானது மூவாசையைப்பற்றி எந்நேரமும் கோடிக்கணக்கான எண்ணங்களைக்கொண்டு காற்றிற்பட்ட பஞ்சுபோன்று அலைந்து திரிவதாகும், "ஒருபொழுதும் வாழ்வதறியார் கருதுப, கோடியுமல்லபல" என நாயனாரும், "உண்பதுநாழி யுடுப்பதுநான்குமுழம், எண்பதுகோடி நினைந்தெண்ணுவன" என ஔவைப்பிராட்டியாரும் புகன்றமைகாண்க. ஆதலின் நிலையில்லாத வாழ்க்கையி னியல்பாகிய சுகதுக்கங்களிற் சிக்குண்டு எதிர்கால மரணத்தை எண்ணாது வீணே கிடந்துழல்கின்ற நெஞ்சத்தை சன்மார்க்கவாயிலாக முருகக்கடவுளைத் தஞ்சமடைந்து அவரது திருவருளைநாடி பிறவிக்கடலைக் கடந்து முத்திச்செல்வத்தை அடைய வேண்டுமென உறுதிப்படுத்தியுள்ளாரென விளங்குகின்றது. அதாவது நெஞ்சொடு கிளத்தினாரென்க. யமன் வருமுன்னர் உடம்புள்ள போதே முருகன் றுணையைநாடுக வென்பதுபற்றி, தேடிக்கொடும்படை கைக்கூற்றடாதுளம், என்றார். மின்கேள்வன் என்பது தெய்வயானை மணாளனை எனக்குறிக்கின்றது. பிரணவத்தின் பொருள் தெரியாமைக்காக பிரமனைச் சிறையிட்டவரென்பதும், சூரபன்மனால் சிறையிடப்பெற்ற வானவர்களை அச்சிறையினின்றும் விடுவித்தவரென்பதையும் நவின்றுள்ளார். சமணர்பகை யொழித்த சம்பந்தரை ஸ்ரீ சுப்பிரமணியமாகக் கொண்டு "உந்தேடிக்கொடும்படை" என்றார்.

"கள்ளம் பொருந்து மடநெஞ்ச மேகொடுங் காலர்வந்தால்
உள்ளன் பவர்கட்குண் டோவில்லை யேயுல கின்றவனை
வள்ளம் பொருந்து மலரடி காணமன் றூடுமின்ப
வெள்ளச்செம் பாதப் புணையே யல்லாற்கதி வேறில்லையே.
—தாயுமானவர்

சிக்குறத் தத்தை வழங்கா திழந்து தியங்குவர்தே
சிக்குறத் தத்தை வடிவே லெனார்சில ரன்பர் சேந்தாள்
சிக்குறத் தத்தை கடிந்தேனல் காக்குஞ் சிறுமிகுறிஞ்
சிக்குறத் தத்தை யனகிலேப் போதுந் திகழ் புயனே. (28)

(ப-ரை.) சீ - இகழ்தற்கிடமாகிய, குறு - குறைவுபடத்தக்க, அத்தத்தை - பொருளை, வழங்காது - நல்வழியிற் செலுத்தாமல், இழந்து - பலவழியாயிழந்து, தியங்குவர் - வருந்துவார்கள், தேசு - (தங்களுடைய) கீர்த்தியும், இங்குற - மங்கிப்போகும்படியாய், தத்து - பொங்கமுற்ற, ஐ - அழகிய, வடிவேல் எனார் சிலர் - கூரிய வேலாயுத மென்று துதியாத சிலபேர்கள், அன்பர் - அவ்வேலைத்துதிக்கும் அடியார்கள், செம் தாள் - உனது செவ்விய திருவடியை, சிக்குற - அகலாது உறையக்கண்டும், தத்தைகடிந்து - கிளியோட்டி, ஏனல் காக்கும் - தினைப்புனங்காக்கும், சிறுமி - சிறுமியாகிய, குறிஞ்சிக்குறத்து - மலைநிலத்துக் குறவரிடம் வளர்ந்த, அ தையல் - அந்த வள்ளிநாயகியினது, அகில் - கொங்கைச்சுவட்டால், எப்போதும் - சதாகாலமும், திகழ்புயனே - பிரகாசிக்கின்ற புயத்தையுடைய குமாரக்கடவுளே!

(க-ரை.) ஹே வள்ளிநாயகியைத் தழுவுகின்ற குமாரமூர்த்தியே, நினது திருவடிமலரில் மெய்யன்பு சாதிக்காமலும், வேலாயுதத்தைத் துதியாமலுமுள்ள லோபிகள் தேடியபொருளை நிலையென்று நம்பி அவைகளைத் துன்மார்க்கத்தில் விரையஞ்செய்து எடுத்த சென்மமும் வீணாகி மயங்கி வருந்துவாருவார்கள் என்பதாகும்.

(வி-ரை.) தேடியபொருள் நிலையற்றதாதலின் அதனை நல்வழியிற் செலவுசெய்ய வேண்டுமென்பதும் சாசுவத பரம்பொருளாகிய முருகக்கடவுளையும் அவனது திருக்கரத்திலிலங்குகின்ற வேலாயுதத்தையும் போற்றிப் புகழவேண்டுமென்பதையும் இப்பாடல் விளக்குகின்றன. மனம் நிராசைகொண்டு பொய்த்தோற்றங்களை விடுத்து மெய்யுணர்வை நாடவேண்டுமென்பதுமாகும். மெய்யான தன்மை விளங்கினால் யார்க்கேனும், பொய்யானதன்மை பொருந்துமோ—வையாவே, மன்னுநிராசையின்னம் வந்ததல்லவுன்னடிமை, யென்னு நிலை யெய்துமாறென். என்னும் பெரியார் வாக்கியமும் இதைத்தழுவுகின்றன. கடலினது அலைபோன்று மனத்தில் எழுகின்ற எண்ணங்களில் தீயவைகளைவிலக்கி நன்மையை நாடி நீதிநூற்களின் பிரகாரம் அநுட்டித்தல்வேண்டும். "மறந்தும் பிறன்கேடுசூழற்க சூழி, னறஞ்சூழுஞ் சூழ்ந்தவன் கேடு" என்றுந் திருக்குறட்பா நவிலும்வண்ணம் நிலையில்லா வுடல்கொண்டு நிலையில்லாச் செல்வமும் பெற்றுள்ள நிலையில் இவைகளை மெய்யென்றுநம்பி மயங்கி கர்வம்படைத்து பிறனுக்குக் கேடு செய்யக்கருதாது சன்மார்க்கத்தையே ஆசாரமாகக் கொண்டு நல்லவழியிற் சம்பாதித்து நல்லவழியிற் செலவிடுவதில் மனத்தூய்மையுண்டாகுமாதலின் அவ்வித பக்குவமுள்ளதன்மையில் முருகன்றிருவருளை நாடவேண்டுமென்பதையும் விளக்குவனவாகும்.

"நன்றி யறிதல் பொறையுடைமை யின்சொல்லோ
டின்னாத வெவ்வுயிர்க்குஞ் செய்யாமை கல்வியோ
டொப்புர வாற்ற வறித லறிவுடைமை
நல்லினத் தாரோடு நட்ட லிவையெட்டுஞ்
சொல்லிய வாசார வித்து." —ஆசாரக்கோவை

தருமம் பொருளுள்ளோர்களே செய்தற்கியலும், மற்றோர்க்குச் செய்ய வியலாதெனலாம். அற்றன்று பொருளிருக்கின் அப்பொருள்

நல்லவழியில் சம்பாதித்ததாக இருக்கவேண்டியதோடு, திரிகரண சுத்தியுடன் நல்வழியிற் செய்யவேண்டும், பொருளில்லையேல் சரீரத் தால் ஆகவேண்டிய தருமங்களைச் செய்யவேண்டும், அப்படிச் செய் வதற்கு இயலாதாயின், தருமம் செய்யவேண்டும் என்ற ஓர் ஆசை மனத்தினிடமாக இருக்கவேண்டும். அப்படிக்கின்றி தீயவழிகளில் காலபேதத்திற்கிணங்கியும் படாடோபத்திற்கேற்றும் செய்யும் தரு மங்கள், சுத்தத்திற்காக ஸ்நானம்செய்து, சேற்றைமேல்பூசிக்கொண் டதுபோலாகும். உலகமயக்கிற்குரிய இன்பம் என்பது இச்சை, ஆசை என்பதாகும். இன்பத்தால் துன்பமும், இச்சையால் லச்சை யும், ஆசையால் மோசமும் அடைவது உலக இயற்கையாம் ஆகை யால் நல்லின்பத்தை யனுபவிப்பதே புருஷார்த்தத்திற்கு லட்சண மாகுமென்க.

"தருமம் பொருள் காமம் வீடெனு நான்கு
முருவத்தா லாய பயன்." —ஔவைக்குறள்

திகழு மலங்கற் கழல்பணி வார்சோற் படிசெய்யவோ
திகழு மலங்கற் பகவூர் செருத்தணி செப்பிவெண்பூ
திகழு மலங்கற் பருளுமேன் னுவமண் சேனையுபா
திகழு மலங்கற் குரைத்தோ னலதில்லை தெய்வங்களே. (29)

(ப-ரை.) திகழும் - விளங்காநின்ற, அலங்கல் - மாலையை யணிந்த, கழல் - தனது திருவடியை, பணிவார் - வணங்குவோர், சொற்படிசெய்ய - திருவாக்கின்படி நடக்க, ஒதி - தமிழ்வேத மென் னுந் தேவாரத்தை மொழிந்தருளினவரும், கழுமலம் - தானவதாரஞ் செய்த சீகாழியையும், கற்பகவூர் - தான் காத்தருளிய கற்பகத்தருவை யுடைய அமராவதியையும், செருத்தணி - தானுறையுந் திருத்தணியை யும், செப்பி - துதி செய்து, வெண்பூதி - திருவெண்ணீறுனது,

கழும் - போக்கடிக்கும், மலம் - மும்மலத்தையும், கற்பு - பரம் பொருளிதேயென்று நம்புங் கற்புடைமையை, அருளுப - கொடுத்தரு ளும், என்ஞ - என்று நினையாத, அமண் - சமணர், சேனை - கூட் டங்களை, உபர்தி - வருத்தமான, கழு - கழுவிலேற்றி, மலங்கற்கு - கலக்கமுற்றழியும்படிக்கு, உரைத்தோன் அலது - வாதுமொழிந்த சம்பந்தப்பிள்ளையுமாகிய குமாரக்கடவுளையன்றி, தெய்வங்கள் இல்லை- பிரத்தியட்சமான தெய்வங்கள் வேறில்லை.

(க-ரை.) சைவசமயந்தழைய சீகாழிப்பதியில்வந்து தோன்றி தேவாரப்பதிகங்களை ஓதி, தலங்கள்தோறுஞ் சென்று புனிதமாக்கியும் பொய்மதத்தைப் பரவச்செய்த சமணர்களைக் கழுவேற்றிவித்தும், மும்மலவாதனையை நிவர்த்திக்கின்றதாகிய திருவெண்ணீற்றின் மகிமையை விளங்கச்செய்தும் கற்பகச்சோலைசூழ்ந்த அமராவதியைக் காத்தருளியும் திருவிளையாடற்புரிந்த சம்பந்தப்பிள்ளையாகிய தணிகா சலத்தில் எழுந்தருளியுள்ள குமாரக்கடவுளையன்றி மற்ருேர் தெய் வத்தை போற்றுகிலேன் என்பதாகும்.

(வி-ரை.) திருஞானசம்பந்தர் முருகக்கடவுள் அவதாரமாகு மென்பதை விளக்கினுர் என்க. சோழநாட்டிலே சீகாழி என்னும் பதியில் பிராமணகுலத்தவரான சிவபாதவிருதயருக்கு அவர்மனைவி பகவதியாரிடம் தோன்றியவர், மூன்றுவயதில் தோணியப்பர் ஆலய சிகரத்தைநோக்கி, "அம்மே யப்பா" வென்றழக்கண்ட தோணியப்பர் பார்வதி தேவியாருடன் தோன்றி திருமுலைப்பாலாகிய ஞானமுதந் கொடுக்கப்பெற்று திருப்பதிகங்கள்பாடி பல அற்புதத் திருவிளையா டற்புரிந்தவர். தேவாரத்தில் இவர் சரித்திரங்காண்க. அமரர்களைக் காத்தருளியதும் திருத்தணியிற் கோயில்கொண்டருளியதும் குமாரக் கடவுளாதலின் அவரே தமக்குத் தெய்வமாகுமென்றும் வைராக்ய குணசீலத்தை இங்கு உறுதிகொண்டு நவின்றுள்ளார் என்க.

"அன்னை யப்பனும் நீயென மகிழ்ந்தே
அகங்குளிர்ந்துநான் ஆதரித்திருந்தேன்
என்னை யிப்படி யிடர்கொள விடுத்தால்
என்செய்கே னிதை யாரொடுபுகல்கேன்
பொன்னை யொத்தநின் னடித்துணை மலரைப்
போற்றுவார்க்குநீ புரிகுவதிதுவோ
உன்னை யெப்படி யாயினு மறவேன்
உனையலாலெனை யுடையவரெவரே."

தேவரேமுத லுலகங்கள் யாவையுஞ் சிருட்டியாதிய செய்யும்
மூவரே யெதிர்வருகினு மதித்திடேன் முருகநின் பெயர்சொல்வோர்
யாவரே னுமென் குடிமுழு தாண்டெனை யளித்தவர் அவரேகாண்
தாவநா டொணுக் கணிகையம் பதியில்வாழ் சண்முகப்பெருமானே.
—திருஅருட்பா

தெய்வ மணம் புணர் தீகால் வெளிசெய்த தேவரைந்த
தெய்வ மணம் புண ராரிக்கு மருக சேச்சை யந்தார்
தெய்வ மணம் புண ருங்குழ லாளைத் தினைப்புனத்தே
தெய்வ மணம் புணர் கந்தனேன் னிருங்க டீதறவே. (30)

(ப-ரை.) தெய்வ - தேவர்களையும், மண் - பூமியையும், அம்பு - சலத்தையும், உணர் - அறிவையும், தீ - நெருப்பையும், கால் - காற்றையும், வெளி - ஆகாசத்தையும், செய்த - படைத்த, தே - பிரமாவானவன், வரைந்த — பொறித்தலிபியை, எய்வ - (குமாரக்கடவுளினது நாமகீர்த்தனமானது) செயிக்குமாதலால், மண் - மாசற்ற, அம் - அழகிய, புள் - கருடவாகனத்தையுடைய, காரரிக்கு - நரசிங்க அவதாரமெடுத்த திருமாலுக்கு, மருக - மருகோனே, சேச்சை அம் தார் - அழகிய வெட்சிமாலையையணிந்த, தெய்வ - கடவுளே, மணம்

புணரும் - வாசனையணிந்த, குழலாளை - கூந்தலையுடைய வள்ளி நாயகியை, தினைப்புனத்தே - தினைப்புனத்திலே, தெய்வமணம்புணர் - காந்தர்வமணமாகப் புணர்ந்த, கந்தன் - குமாரக்கடவுளே! என்னீர் - என்று தோத்திரம்பண்ணுங்கள், உங்கள் - உங்களுடைய, தீது - வினை, அற - ஒழியும்படி.

(க-ரை.) ஹே அரிமருக, வெட்சிபுனைகின்ற வேலாயுதா, பேரழகு படைத்த சுந்தரியாகிய வள்ளிநாயகியைத் தினைப்புனத்திலே காந்தருவ மணம்புரிந்த கந்தப்பெருமானே என்று ஸ்தோத்திரம் புரிவதானது பிரமதேவனால் விதிக்கப்பட்ட லபிதத்தையும் உங்கள் தீவினையையும் ஒழித்துவிடும் என்பதாகும்.

(வி-ரை.) படைப்புத் தொழிலையுடையவனான பிரமன் விதித்த விதியையும் தீவினைச் செயல்களையும் ஒழித்துவிடுமாறு கந்தப்பெருமானது திருநாம கீர்த்தனங்களைத் துதியுங்கள் என்றார். "வேல்பட்டழிந்தது வேலையுஞ் சூரனும் வெற்புமவன், கால்பட் டழிந்ததிங் கென்றலை மேலயன் கையெழுத்தே" யெனவும், "படிக்கின்றிலை பழநித் திருநாமம் படிப்பவர்தாண், முடிக்கின்றிலை முருகாவென்கிலை முசியாமலிட்டு, மிடிக்கின்றிலை பரமானந்த மேற்கொள விம்மிவிம்மி, நடிக்கின்றிலை நெஞ்சமே தஞ்சமேது நமக்கினியே" எனவும், "தெள்ளியவேன விற்கிள்ளையைக் கள்ளச் சிறுமியெனும், வள்ளியை வேட்டவன்றாள் வேட்டிலை" எனவும் நமது சுவாமிகள் கந்தாலங்காரத்தில் நவின்றுள்ள அருள்வாக்கைத் தழுவி இப்பாடலும் விளங்குகின்றன.

"ஆடுவதும் பாடுவதும் ஆனந்த மாகநின்னைத்
தேடுவது நின்னடியார் செய்கை பராபரமே."

—தாயுமானவர்

தீதா வசவ னுபவிக்க மண்ணிலும் விண்ணிலுஞ் செந்
தீதா வசவ னியாயஞ்செய் வேதிய ரேதியங்காத்
தீதா வசவ னிமலர்செல் வாசாக் கிரவசத்த
தீதா வசவன் புறப்பா ரேனுமுத்தி சித்திக்கவே. (31)

(ப-ரை.) தீதா - பொல்லாங்காகிய, வசவு - இகழ்ச்சிச்சொல்லை, அனுபவிக்க - அனுபவித்தற்கிடமாய், மண்ணிலும் - பூலோகத்திலும், விண்ணிலும் - தேவலோகத்திலும் புகழையும் போகத்தையும் (பெற நினைத்து), செந்தீ - சிவந்த அக்கினிபகவான், தாவு - ஏறுகின்ற, அச- ஆட்டை, அநியாயம் செய் - சீவகாருண்யமில்லாமல் வதைத்து யாகஞ்செய்கின்ற, வேதியரே - மறையோரே, தியங்கா - இனி யப் படித் திகைக்காத, தீ - நல்லறிவை, தா - தந்தருள்வாயென்றும், வசவ - இடபவாகனத்தையுடைய, நிமலர் - பரமசிவனது, செல்வா - மைந்தனே, சாக்கிரவசத்து - ஆன்மா சாக்கிரவவத்தையி லறிவோ டிருக்கிறகாலத்திலும், அதீதா-துரியாதீதவவத்தையிற் கருவிகாணங்க ளொடுங்கி, வச - வசமாகும் காலத்திலும், அன்புற பாரென்னும் - உனக்கெங்கள் இடத்தில் அன்புண்டாகிக் கடாக்ஷிக்க வேண்டுமென் றுங் துதியுங்கள், முத்தி - மோட்சமானது, சித்திக்க - உங்களுக்குக் கிடைக்கும்படி.

(க-ரை.) புகழையும் போகத்தையும் விரும்பி காருண்யமில்லாது ஆடுகளை வதைத்து யாகம் செய்கின்ற வேதியர்களே! சாக்கிராவத் தையிலும், துரியாதீதவவத்தையிலும் அன்புசொரூபாகிய முருகப் பெருமானைத் துதித்து மோட்சத்தையடையுங்கள் என்பதாகும்.

(வி-ரை.) யாகம் என்பன ஐந்துவகையாகச் செய்யப்படுவன வாகும். இவைமுறையே பிரமம், தெய்வம், பூதம், பிதுர், மானுஷம், என்பதாகும். இவற்றுள் வேதம் ஓதுதல் பிரமயாகம், ஓமம் வளர்த்தல்

தெய்வயாகம், பலியீதல் பூதயாகம், தர்ப்பணஞ்செய்தல் பிதுர்யாகம், இரப்போர்க்களித்தல் மனுஷயாகம், இவை வேதங்களிலும் புராணங்களிலுங்கூறிய அக்கினிகாரியங்களாகும். இங்கு பலியிடுதலாகிய பூதயாகத்தையே காருண்யமில்லாத தெனவும், புகழையும் போகத்தையும் விரும்பி மறையோர்களால் செய்யப்படுவனவாதலின் அவ்விதயாகம் முத்தியையளிக்க வியலாததெனவும்,சாக்கிரத்திலும் துரியத்திலும் முருகப்பெருமானையே ஸ்துதிபுரிந்துவருவதான து முத்தியின்ப நிலையை யளிக்கும் என நவின்றுள்ளார். "அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்றன், உயிர்செகுத் துண்ணாமைநன்று" என நாயனார் புகன்றுள்ளதை இப்பாடல் தழுவுகின்றனவாகும்.

"மன்னுயிர் யாவையுந் தன்னுயிர்
போற்செய்யு மாதவம்போற்
பின்னொருமாதவ மில்லைகண்
டாயினிப் பேதைநெஞ்சே
மின்னிடை யார்முக நோக்குவை
யோகதிர் வேன்முருகன்
றன்னிரு தாண்முக நோக்குவை
யோவென்ன சங்கடமே.

ஸ்ரீ முருகன் றிருவடிமலரை நாடுகின்றவர்கட்குப் பிறவித்துன்பம் ஒழிந்து பேரின்ப வாழ்வு சித்திக்குமென்பது இங்குபுலனாகின்றன. காருண்யமில்லாத யாகங்கள் முத்திக்கான மார்க்கமில்லை யென்பதுமாகும்.

சித்திக்கத் தத்துவ ருத்திர பாலக சேச்சை குறிஞ்
சித்திக்கத் தத்துவ ரத்தியின் மாவேன்ற சேவகவிச்
சித்திக்கத் தத்துவர் வாய்மொழி மாதர்க் கேனுந் திணைவா
சித்திக்கத் தத்துவ ருத்தப் படாதுநற் சேதனமே. (32

(ப-ரை.) சித்திக்க - அடியேனுக்குக் கிடைக்க அருளவேண்டும், தத்துவ - தத்துவசொரூபியே, ருத்திரபாலக - சிவபிரானது மைந்தனே! செச்சை - வெட்சிமாலையணிந்த, குறிஞ்சிதிக்க - குறிஞ்சிநிலத் திசைக்கு இறைவனே! தத்து - அலைமோதுகின்ற, உவர் - உவர்ப்பை யுடைய, அத்தியல் - சமுத்திரத்தின்கண், மா - மாவுருக்கொண்ட சூரனை, வென்ற - செயித்த, சேவக - வீரனே, இச்சித்து - விரும்பி, இக்கத்து - கரும்பும், அத்துவர் - அந்தச் சிவந்த பவளமும், வாய் - வாயும், மொழி - மொழியுமாகும், மாதர்க்கு - மடவார்க்கு, எனுந் திணை - என்று நலம் புனைந்துரைக்கும் காமநூலை, வாசித்து - ஒழியாமற்படித்து, இக்கத்தத்து - இதற்கினமான வெகுளியினால், வருத்தப் படாது - துன்பமடையாது, நல்சேதனம் - நல்லஞானவறிவு.

(க-ரை.) ஹே தத்துவமயமான பொருளே, சிவபாலகனே, வெட்சிமாலையணிந்த குறிஞ்சிக்கடவுளே, மகாசமுத்திரத்தினிடத்தே மாமரவடிவமா யெழுந்த சூரனை சங்கரித்த வெற்றிவேலாயுதா, மங்கையராசையில் மயங்கி அவர்கள் சொல்லைக் கரும்பென்றும், வாயைப் பவளமென்றும், புகழ்ந்து மதனலீலையில் அடியேன் வீணே கிடந்துழன்று திரியாது ஆத்மஞானச் செல்வத்தை யடைந்து நின்னையே துதிக்குந்தன்மையை அருள்புரிய வேண்டுமென்பதாகும்.

(வி-ரை.) "எண்ணரிய பிறவிதனின் மானுடப்பிறவிதா னரியாதினும் அரிதுஅரிதுகாண், இப்பிறவி தப்பினு லெப்பிறவி வாய்க்குமோ யேதுவருமோ அறிகிலேன்." என்பதற்கிணங்க சமஸ்த பிறவிகளிலும் விசேடமுடையதாகிய மானுடப்பிறவி பெற்றதின்பயனாக மாயா காரியங்களைவிலக்கி பரம்பொருளை யுணரவேண்டுமென்பது உண்மை லட்சியம் ஆதலின், அதுவே தத்துவவிசாரமென்பதுபற்றி விளக்கினார் என்க. உணர்க உணர்வுடையாரென்ற பதங்களையும் இவை தழுவுகின்றன "உடம்பினைப் பெற்றபயனாவ தெல்லாம், உடம்பினி லுத்த

மனைக்காண்'' என்னும் ஔவைப்பிராட்டியார் வாக்கிற்கிணங்க நமது சுவாமிகள் மெய்ப்பொருளை புணரவேண்டுவதுபற்றி அவனருளாலே அவன் ருள்வணங்குதலாகியப் பிரார்த்தனையைக் கொண்டார். பாவையர்களின் மோகத்தில் வீழ்ந்து மயங்காது தமக்கு ஆன்மஞானத்தை அருளவேண்டுவதுபற்றி, "இச்சித்திக்கத்தத்துவர் வாய்மொழி மாதர்க்கெனுங்கிணைவா சித்திக்கத்தத்து வருத்தப்படாது சேதனமே" என்றார்.

"பழுதுண்டு பாவையர் மோக விகாரப் பரவையிடை
விழுகின்ற பாவிக்குந் தன்றாட் புணையை வியந்தளித்தான்
தொழுகின்ற வன்ப ருளங்களிகூரத் துலங்கு மன்றுள்
எழுகின்ற வானந்தக் கூத்தனென் கண்மணி யென்னப்பனே."

எனவும், நவிலுகின்ற வாக்கியத்திற்கிசைந்து அடியார்க் கெளியவனுகிய முருகப்பெருமான் தம்மைச் சரண்புகுந்தவர்கட்கு மோட்சத்தை அளிக்கின்றார் என்பதை இங்கு விளக்குகின்றனவாகும்.

"வஞ்சமேகுடி கொண்டு விளங்கிய
மங்கையர்க்கு மயலுழந் தேயவர்
நஞ்சமேவு நயனத்திற் சிக்கிய
நாயினேனுனை நாடுவ தென்றுகாண்
கஞ்சமேவும் அயன்புகழ் சோதியே
கடப்பமாமலர்க் கந்தசுகந்தனே." —திருஅருட்பா

சேதனந் தந்துறை யென்றுமை சேப்புங் குருந்துறைகார்
சேதனந் தந்துறை யல்லிமன் வாவிச்சேந் தூர்கருத
சேதனந் தந்துறை யென்றறி யார்திற நீங்கிநெஞ்சே
சேதனந் தந்துறை மற்றுமுற் றுடித் திரிகை விட்டே. (33)

(ப-ரை.) சே - அழகிய, தனம் தந்து - திருமுலைப்பாலூட்டி, உறு - பெரும்பேறுயுற்ற, ஐ என்று - ஐயனேயென்று, உமைசெப்பும்- பார்வதியருமையாய் மொழியும், குருந்து-பாலகனாகிய குமாரக்கடவுள், உறை - அமர்ந்தருளிய, காற்சேது - சிவந்தகாலையுடைய, அன்னம் - அன்னங்களும், தந்துறை - நூலோடுகூடிய, அல்லி - ஆம்பல்களும், மன் - அகலாதிருக்கின்ற, வாவி - தடாகங்கள் சூழ்ந்த, செந்தூர் - திருச்செந்தூர்ப்பதியை, கருது - நீ சிந்தைசெய், அசேதனம் - அறிவின்மையான, தம் - தங்கள் தங்கள், துறையென்று - சமயக்கோட்பாடென்று, அறியார்திறநீங்கி - தெளியாமலுழலும் பரசமயவாதிகளின் கூட்டத்தைநீங்கி, நெஞ்சே - மனதே! சேது - சேதுமுதலிய, அனந்தம் துறைமற்றும் - மற்றும் அநேக கடல் நதிகளையும், உற்று ஆடித்திரிகைவிட்டு — போய்ப் போய்த் தானஞ் செய் தலைவதை விடுத்து.

(க-ரை.) ஹே மனமே, நீ பரசமயவாதிகளின் கூட்டத்தை யணுகாமலும், சேதுமுதலிய பற்பல தீர்த்தங்களை நாடித்திரியாமலும், பார்வதிதேவியின் அருமைத்திருமகனாகிய குமாரக்கடவுள் கோயில் கொண்டருளிய செந்திலம்பதியை சந்ததமும் தியானம் செய்வாயாக என்பதாகும்.

(வி-ரை.) உமாதேவியின் அழகிய திருமுலைப்பாலுண்ட ஐயனாகிய குமாரக்கடவுள் என்பதுபற்றி "சேதனம் தந்துறை யென்றுமை செப்புங்குருந்து" என்றார். சிவந்த கால்களையுடைய அன்னப்பட்சிகளுலவுகின்ற மலர்ப்பொய்கைகள் சூழ்ந்த திருச்செந்தூரைக் கருதுவாயாக வென்று பொருள்விளங்கும்படியாக "உறைகாற் சேதனந்தந் துறையல்வி மென்வாவிச் செந்தூர்கருது" என்றார். அசேதனம் - அறிவின்மை, சமயக்கோட்பாடு தெளியாமலுழலும் பரசமயவாதிகளின் கூட்டத்தை நீங்கி என்றும் பொருள் கொள்ளும்படியாக

"துறையென்று அடியார் திறநீங்கி" என்றார், நெஞ்சே என்பது மன திற்கு அறிவுறுத்தலாகும், பலவழிகளிற் பிரிந்துழலாது திருச்செந் தூறிற் கோயில்கொண்டருளிய குமரப்பெருமானை நாடவேண்டு மென்னும் பான்மையை விளக்குவனவாகும்.

திருச்செந்தூர் என்பது தென்சமுத்திரத்தி னருகிலுள்ளதாத லின், இத்தலத்திற்கு திருச்சீரலைவாய் எனவும் பெயராகும். இன் னும் சந்தனுசலமுதலிய பற்பல நாமங்களும் பொருந்துவதாகும். படைவீட்டுத்தலங்கள் ஆறனுள் திருச்செந்தில் இரண்டாவதாக விளங்குகின்றது. ஆறுமுகப்பெருமானது அற்புதத் திருவிளையாடல் அனந்தம் இங்கு நடைபெற்றுள்ளன வென்பது சிவாகமங்களின் றுணிபாகும்.

"பல்பொறி மஞ்ஞை வெல்கொடியகவ
விசும்பாறுக விரைசெலன் முன்னி
யுலகம் புகழ்ந்த வோங்குயர் விழுச்சீ
ரலைவாய்ச் சேறலு நிலைஇய பண்பே
யதா அன்று." —திருமுருகாற்றுப்படை

"செந்திலை யுணர்ந்துணர்ந் துணர்வுறக்
கந்தனை யறிந்தறிந் தறிவினிற்
சென்றுசெரு குந்தடந் தெளிதரத்—தணியாத
சிந்தையு மவிழ்ந்தவிழ்ந் துரையொழித்
தென்செய லழிந்தழிந் தழியமெய்ச்
சிந்தைவர என்றுநின் தெரிசனைப்—படுவேனோ"
—திருப்புகழ்

திரிகையி லாயிர வேல்லாழி மண்விண் டருசிரபாத்
திரிகையி லாயிர வானந்த நாடகி சேரிமகோத்
திரிகையி லாயிர மிக்குமைந் தாசேந்திலா யொருகால்
திரிகையி லாயிரக் கோடிசுற் றேடுநே் திருத்துளமே. (34)

(ப-ரை.) திரிகை இலாய் - மாறுபடாத நித்தியனே, இரவு - இராத்திரியையும், எல் - பகலையும், ஆழி - கடலையும், மண் - பூமியையும், விண் - ஆகாசத்தையும், தரு - மூவரின் முதல்வனுயிருந்து சிருட்டித்தவரும், சிரபாத்திரி - பிரமகபாலத்தைப் பலிக்கலமாகக் கொண்டவரும், கையிலாயி - கைலாசத்தையுடையவரும், ரவு - ஆரவாரத்தையுடைய, ஆனந்தநாடகி - ஆனந்த நடனஞ்செய்கின்ற பரமசிவனுக்கும், சேர் - அவர்பாலிருக்கின்ற, இமகோத்திரி - இமையமலையின், கையில் - இடத்திலுற்பவித்து வளர்ந்த, ஆயி -பார்வதிக்கும், ரமிக்கும் - மகிழ்வைவிளைக்கும், மைந்தா - புதல்வனே ! செந்திலாய் திருச்செந்திற்பதியோனே ! ஒருகால் - ஒருதரம், திரிகையில் - குலாலன் சக்கரஞ்சுற்றி வருவதற்குள், ஆயிரக்கோடிசுற்றும் - ஆயிரங் கோடிதரம் சுற்றிவருவதாகிய, திருத்துளம் - (எனது) மனத்தைத் திருத்தியருளவேண்டும்.

(க-ரை.) ஹே நித்திய சொரூபனே, அகிலாண்டங்களைப் படைத்தும், பிரமகபாலமேந்தியும், கயிலாயத்தை இருக்கையாகக் கொண்டும், பரவெளியில் நிர்த்தனஞ்செய்கின்றவருமாகிய சிவபிரானுக்கும், இமயபர்வத ராசகுமாரியாகிய உமாதேவியாருக்கும் அருமைச்செல்வனே, செந்திலாதிபனே, குலாலன்சக்கரம் ஒருதாம் சுற்றுவதற்குள் எனது மனமானது அனேககோடிதாம் சுற்றுகின்றதாதலின், அவ்வித சலனத்தை நீக்கி நினது பாதபங்கயங்களில் நிலைபெறும்படி திருத்தியருளவேண்டும் என்பதாகும்.

(வி-ரை.) மனத்தின்றன்மையானது கடலினிடத்து ஓயாது வளர்கின்ற அலைபோலவும் காற்றூடிபோலவும் வேகமுடன் சுழன்று கொண்டே கோடிகோடி எண்ணங்களைக் கற்பனை செய்துகொண்டு திரிகின்றது இயல்பாகும், "ஆடியகறங்குபோ லோடியுழல் சிந்தையையடக்கி யொருகண மேனும்யான், காணிலேன்" எனவும், சிந்தையை

யடக்கியே சும்மா விருக்கின்றதிறமரிது எனவும், பெரியார் பொன் மொழி யுணர்த்துகின்றதை இங்கு கவனிக்கத்தக்கதுமாகும். நமது சுவாமிகளும், "சரணகமலாலயத்தை யரைநிமிஷநேரமட்டில் தவ முறை தியானம்வைக்க வறியாத, சடகசடமூடமட்டி, எனவும் தமது திருப்புகழில் மனத்தின்றன்மையை விளக்குவதுபோன்று இங்குஞ் சுட்டிச்சொன்னூர். குயவன் சக்கரம் ஒரு சுற்று சுற்றிவருவதற்குள் மனமானது மிகுவேகத்தில் ஆயிரங்கோடிதரம் சுற்றிவருகின்றதென வும், அதைத்திருத்தி யருளல்வேண்டுமெனுவும் பிரார்த்தித்தார் என்க.

"ஐயமுஞ் சலனமும் நிற்கச் செய்தலும்
வெய்யவெங் கொடுமையும் விகற்ப மேவலும்
பொய்ய துணர்த்தலும் பொருத்த நோக்கலும்
மையல்கொண் டிதலு மனத்தின் றன்மையே" —சித்தியார்

ஐம்புலவிடயங்களைப்பற்றி காமம் வெகுளி மயக்க மூதலியவை களால் சந்தேக விவரீதங்களுக்குட்பட்டு சுகதுக்கங்களிற் கிடந்துழலு கின்ற மனத்தின் அஞ்ஞானத்தை விலக்கி மெஞ்ஞானத்தை யருள வேண்டுமென்னுங் காரணங்கொண்டு முருகப்பெருமானைப் போற்றி யுள்ளாரென்க. மனமிறந்தாலொழிய மாயை நீங்காதென்பதையும் இங்கு குறிப்பதாகும்.

"சினமிறக்கக் கற்றாலுஞ் சித்தியெல்லாம் பெற்றாலும்
மனமிறக்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே."—தாயுமானவர்

"காமம் வெகுளி மயக்க மிவைமூன்ற
னாமம் கெடக்கெடு நோய்." —நாயனூர்

திருத்துள வாரிகல் போதுடன் சேண்மழை தூங்குஞ்சங்க
திருத்துள வாரிதி கண்டுயி லாசெயன் மாண்ட சிந்தை
திருத்துள வாரன்னை சேந்தூரை யன்னள்சேம் மேனியேன்பு
திருத்துள வார்சடை யீசர்மைந் தாவினிச் சேச்சைநல்கே.

(ப-ரை.) திருத்துளவார் - திருத்துழாய்மாலையை யணிந்த விஷ்ணுவினது, இகல் - கரியநிறத்தைப் பகைக்கின்ற, போதுடன் - மாலைக்காலத்தோடு, சேண் - ஆகாசத்தினின்றும், மழைதூங்கும் - மழைபெய்கிறது, சங்கது - சங்கினங்களை, இருத்துள - உடையதாயிடமகன்ற, வாரிதி - சமுத்திரம், கண்துயிலா - ஓயாமல்முயங்குகின்றது, செயல் மாண்டசிந்தை - இந்த விரகதாபத்தினால் மெய்மறந்துகிடக்கின்ற என் மனதை, திருத்து - ஆற்றுதற்கு, உள - உரியவர், ஆர் - யார், அன்னை - தாயும், செந்துரை அன்னள் - பகையாகிய செந்திற்பதியை யொத்திருக்கின்றாள், செம் - சிவந்த, மேனி - திருமேனியில், என்பு - எலும்பையும், உதிருத்துள - உதிரத்தக்க திருநீற்றுப்பொடியையுமுடைய, வார் - நீண்ட, சடை - சடாபாரத்தையுமுடைய, ஈசர் - பரமசிவனது, மைந்தா - புதல்வனே, இனி - இனிமேல் (சகிக்கப்படாதாதலால்) செச்சை – உனது வெட்சிமாலையை; நல்கு - எனக்கு அளித்தருளுவாயாக.

(க-ரை.) நீண்ட சடாமுடியையும், என்புமாலையையுமுடைய சிவபெருமானது அருமைமைந்தனே ! கார்காலத்தையும் மாலைநேரத்தையும்போன்று அஞ்ஞானமாகிய இருள்மூடி சமுத்திரத்தினலை போன்று ஓயாது சலனப்படுந் தன்மையதாகிய எனது மனத்தைத் திருத்துதற்கு நின்னையன்றி வேறுகதியில்லையாதலின் இனிமேல் என்னால் சகிக்கமுடியாததால் நீ வெட்சிமாலையைத் தந்தருளவேண்டும் என்பதாகும்.

(வி-ரை.) என்புமாலையும் சடாமகுடமும், திருநீறுபூசிய மேனியும், சிவபிரானுக்குரியதாதல்பற்றி அவர் மைந்தனென்பதுகண்டு, "செம்மேனியென்பு திருத்துள வார்சடை யீசர்மைந்தா" என்றார். திருஞானசம்பந்தரும் இவ்வித தன்மையைத் தழுவி "விடையார் கொடி யுடையவ் வண்ணல் வீழ்ந்தார் வெளையெலும்பும், உடையார்

நறு மாலைச்சடை யுடையா ரவர்மேய" என தேவாரத்திற் செப்பி யுள்ளதுகாண்க. கார்காலமும் மாலைநேரமும் அந்தகாரமாகிய மன விருளைக் குறிக்கின்றன, கடல் ஓயாது அலைவீசுகின்றதுபோல் மன மும் ஓயாது எண்ணங்களாகிய அலைகளையுடையதென்பது பொருந் தும். மாலைநேரத்தையும் கார்நிறத்தையும் விஷ்ணுவின் வடிவிற்கு உவமை கூறினர். இதுபற்றி, "திருத்துள வாரிகல் போதுடன் சேண்மழை தூங்குஞ்சங்க, திருத்துளவாரி திகண்டுயிலா வென்றார்" என்க. நின்னைச்சரணடைந்த எனது மனம் அந்தகாரம் நீங்கி ஆன்ம போதம் அடையும்படியாக, செச்சைநல்கு என்றார். செச்சை என் பது வெட்சியையும், சந்திரானுதயத்தையும் விளக்குவதாகும். ஞானோ தயமென்பதும் பொருள்தருகின்றது.

"யாவனொருவ னென்னையெல்லா வுயிர்களிடையு மென்னிடையே
மேவவெல்லா வுயிர்களையும் வேறாகாமை மெய்காண்பான்
றேவர்பகைமுன் செயித்தோனே யவன்யாதேனுஞ் செய்தி
மாவவவனு கின்றேனு னதின்யாதேனு மையமுறேல்."[டினு

—பகவத்கீதை

"அஞ்ஞான காரியமனைத்து மறவிட்டு
விஞ்ஞான மானோமென் றுந்தீபற
வெளியாகி நின்றோமென் றுந்தீபற"

—தத்துவராயர்பாடுதுறை

சேச்சைய வாவி கலயில்வல் வாயிடைச் சேடனிற்கச்
சேச்சைய வாவி பருகுஞ் சிகாவல சேங்கை வேந்தீ
சேச்சைய வாவி விடுகேனுஞ் செல்வநின் றருளணுகச்
சேச்சைய வாவி னுயிர்வாழ் வினியலஞ் சீர்ப்பினுமே. (36)

(ப-ரை.) செச்சைய - வெட்சிமாலையையுடையோனே, வாவு - தாவுதலையும், இகல் - பகைமையையும், அயில் - கூர்மைபொருந்திய, வல் - வலிய, வாயிடை - வாயினிடத்தில், சேடன் - பாம்பு, நிற்க - இருக்க, செ - சிவந்த, சைய - மலையின்கண், ஆவி - அதனுயிரை, பருகும் - உண்ணுகின்ற, சிகாவல - மயில்வாகனனே, செம் - சிவந்த, கை - காத்தினிலேந்தி, வெம் - வெவ்விய, தீ - அனற்பொறியை, செச்சைய - ஆட்டுவாகனத்தையுடைய அக்கினிதேவனே! வாவி - சரவணப்பொய்கையில், விடுகெனும் - (பரமசிவன்) கொண்டுபோய் விடுகென அதிலுற்பவித்த, செல்வ - பாலகனே! நின்தாள் - உன்னுடைய திருவடிகளை, அணுகச் செ - நாங்களடையக் கிருபைசெய், அவாவின் - ஐம்புலவாசையால், உயிர்வாழ்வு - உயிரோடுவாழ்வதை இனி அலம் - இனி யுடையேமல்லேம், சீர்ப்பினும் - செல்வமதிகரிக்கினும்.

(க-ரை.) ஹே வெட்சிமாலை யணிகின்ற வேலாயுதா! சேடனுயிரையு முண்ணத்தகுந்த மயிலை வாகனமாகக் கொண்டருளிய பெருமானே! சிவபிரானிடத்தினின்றும் அனற்பொறியாய்த்தோன்றி அக்கினிதேவன் சரவணப்பொய்கையில் விடப்பட்டு வளர்ந்தபாலனே, இனி நிலையில்லாத மூவாசைகளில் மயங்கிவருந்தோமாதலின் நினது திருவடிமலர்களைத் தஞ்சமாக அடையும்படி கிருபைசெய்தருள வேண்டும் என்பதாகும்.

(வி-ரை.) செச்சை - பகைநிரையோட்டுவார்க்கு மாலையெனவாகின்ற வெட்சியைக் குறிக்கின்றதாகும். "வெட்சிபுனையும் வேளே போற்றி" முருகன் வெட்சிமாலையை யுடையவனென்பது நூற்களின் றுணிபு. மயில்வாகனத்தின் பிரபாவத்தை விளக்குவதுபற்றி, "வாவிகலயில்வல் வாயிடைச் சேடனிற்கச், செச்சைய வாவிபருகுஞ் சிகாவல" என்றார். சேடனாகிய சர்ப்பத்தினது உயிரைக்கவர்கின்ற மயில்

வாகனத்தையுடையவ னென்பது பொருள். இதுபற்றி "சேடன் முடிதிண்டாட வாடல்புரிவெஞ்சூரர் திடுக்கிட நடக்கு மயிலாம்" எனவும், ஆதிபகவன்றுயி லனந்தன்மணிசேர், ஆயிரமிருந்தலை களாய் விரிபணங்குருதி, யாகமுழுதுங்குலை யவந்தறையுமே" என்பது மயி லின் வன்மையை யுணர்த்துகின்ற பொன்மொழிகளாகும். சிவபெரு மானது நெற்றி விழிகளினின்றுந் தோன்றிய அனற்பொறியை அக் கினியினுற் சரவண வாவியிலிடப்பெற்று வளர்ந்தபாலகனே என்றார். "அரனருண்முறையினை யறிந்து கங்கைதன், சிரமிசை யேந்தியே சென்றோர் கன்னலிற், சரவண மெனுந்தடந் தன்னிற் சேர்த்தநண், மரையித ழாயிடை மல்குற் றுலென. "கந்தப்புராணமு மிதற் குதாரணமாகும். ஐம்புலவாசையி னுகர்ச்சிகொண்டு உயிர்வாழ்வதை வெறுத்து முருகப்பெருமான் றிருவடிப்பேற்றை யடையவிரும்பி, நின்றாளணுகச் செச்சையவாவி னுயிர்வாழ்வினி யலஞ்சேர்ப் பினுமே" என்றார். "பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தா, ரிறைவ னடிசேராதார்" என்னுங் குறட்பாவின்படி முருகன் றிருவருளாகிய தோணியைப்பற்றிப் பிறவித்துன்பத்தை வெறுத்துக் கூறினர் எனக. ஆதலின் நமது சுவாமிகள் அறிவானந்த நிலையையடைந்தமை காரண மாக முத்தியின்பத்தை நாடினரெனப் புலனுகின்றன.

"வாராயென்மகனே தன்னை மறந்தவன்பிறந்திறந்து
தீராதசுழல்காற்றுற்ற செத்தைபோற்சுற்றிச்சுற்றி
பேராதகாலநேமிப் பிரமையிற்றிரிவன்போத
மாராயுந்தன்னைத்தானென் றறியுமவ்வளவுந்தானே."

—கைவல்யநவநீதம்

சீர்க்கை வனப்பு மலர்வேங்கை யானவன் செஞ்சிலையோர்
சீர்க்கை வனப்பு னிதத்தவ வேடன் றினைவனைக்குஞ்
சீர்க்கை வனப்பு னமதுருக் காட்டிய சேய்தமிழ்நூற்
சீர்க்கை வனப்பு னிமிர்சடை யோன்மகன் சிற்றடிக்கே. (37)

(ப-ரை.) சீர்க்கை - மனந்திருந்துதல், வனப்பு - அழகாகும், மலர் - புஷ்பங்களையுடைய, வேங்கையானவன் - வேங்கைமரமாய் நின்றவனும், செம் சிலையோர் - அழகிய வில்லையுடைய குறவர்கள், சீர் - சந்தேகப்பட்டதன்மையை, கை - கோபித்து, வன - வனத்தில், புனித - பரிசுத்தமான, தவவேடன் - தவவேடங்கொண்டவனும், தினைவளைக்கும் - தினைப்புனத்தைக் காக்கின்ற, சீர்க்கு - சிறந்த வள்ளிநாயகிக்கு, ஐவனப்புனமது - மலை நெல்விளைகின்ற புனத்தின் கண், உரு காட்டியசேய் - தனது நிசரூபத்தைக்காட்டிய குமரனும், தமிழ்நூல் சீர்க்கு - இயற்றமிழ் நூலுக்குரிய முப்பதுசீருக்கும், ஐ - புலவனாகிய தேவனும், வன - கங்கையையும், புல் - அறுகையுமணிந்த, நிமிர் - நீண்ட, சடையோன் - சடாபாரத்தையுடைய பரமசிவனது, மகன் - மைந்தனுமாகிய முருகக்கடவுளினது, சிறு அடிக்கு - சிறிய திருவடித்தாமரைகளை யடைதற்கே.

(க-ரை.) அம்பு வில்லையுடைய மலைக்குறவர்களின் சந்தேகம் நீங்குந்தன்மையில் தினைப்புனத்தில் வேங்கைமரமாய் நின்றவனும், தவவேடங்கொண்டு நடித்துப் பின்பு வள்ளிநாயகிக்கு சுயரூபங் காண்பித்து தடுத்தாட்கொண்டவனும், இயற்றமிழ்ப் புலவனாகிய சிவபிரானுடைய அருமைத்திருமகனும் ஆகிய முருகப்பெருமானது கிண்கிணியணிந்த திருவடிமலர்களை யடைதலே மக்கட்பிறவியெடுத்ததற்கு அழகாகும் என்பதாம்.

(வி-ரை.) முருகப்பெருமான் தினைப்புனத்தில் கட்டழகியாகிய வள்ளிநாயகியுடன் சல்லாபமாக விளையாடற் புரியும்போது வேடர் தலைவனாகிய நம்பியென்பான் பரிசனர்கள்சூழ அங்கு வருவானாயினன். நம்பெருமானார் வேங்கைமரமாகி நின்றார். அதாவது அதர்வணவேதம் விருக்கமாகவும், இருக்கு, யசுர், சாமம், என்னு மூன்று வேதங்களும் மூன்று பெருஞ்சாகைகளாகவும், ஸ்மிருதிகள், புராணங்

கள் இலைகளாகவும், வியாகரணமுதலிய ஆறங்கங்களும் சிறு சாகை களாகவும், வர்ணமும் தர்க்கமுங் காவலாகவும், சிவஞானமே மலராக வும், பராமிர்தமென்னு முத்தியே பழமாகவும் விளங்கினரென்பது சூதகீதையின் வாக்கியமாகும். அப் புதிய மரத்தைக்கண்டு சந்தேக முற்று வேடர்கள் வெட்ட ஆரம்பிக்கும்போது நம்பி அவர்களைத் தடுத்து வள்ளியம்மையாரைநோக்கி "இது வந்தவாறென்" என்றான். அம்மையார் "தந்தாய்! இது வந்தவாறுணரேன், மாயமாக முளைத் திருக்கின்றது" என்றார், நம்பி "இது நங் குமாரத்திக்கு ஓர் துணையா யிருக்கட்டும்" என்று சென்றனன். வேடர்களெல்லாருஞ் சென்ற பின்னர் குகபிரான் முந்திய வுருவத்தைக்கொண்டு பலவாறு வள்ளி யம்மையாரொடு இனியவுரையாடினர். முன்போன்று நம்பி அங்கு வந்தான். கந்தப்பெருமானுடனே நரைமுதிர்ந்த வோர் கிழவடிவங் கொண்டு வேடமன்னனை வாழ்த்தி விபூதிநல்கினர். அவன் அவரை நோக்கி "அடிகாள் இங்கு எழுந்தருளியகாரணம் என்னென்று வினவ, யாங் குமரியாடப்போந்தேம்" என்றார். நன்று நன்றென மகிழ்ந்து தங் குமரிக் குற்றதுணையா யிருக்கவென வைத்துப் போயி னன். பின்பு நம்பெருமானர் பற்பல திருவிளையாடல்கள்செய்து சுயரூபங்காட்டி அம்மையாரை யாட்கொண்டருளியது கந்தப்புரா ணத்தில் வருவனகாண்க.

"அவ்வேலை யில்வள்ளி யச்சமொடு மீண்டுதவப்
பொய்வேடங் கொண்டுநின்ற புங்கவன்றன் பாலணுகி
இவ்வேழங் காத்தருள்க வெந்தைநீர் சொற்றபடி
செய்வே னெனமுயன்று சேர்ந்து தழீஇக் கொண்டனளே."

தமிழ்க் கடவுளும் மெய்யன்புசாதிக்கும் தம்மடியார்களது பாட லுக்கு அடியெடுத்துக்கொடுத்து பாட்டிசைக்கும்படி கிருபைபாலிக் கும் புலவனுகிய தேவனும் கங்கையையும், அறுகையும் சடாமுடிபி

லணிந்துள்ளவருமாகிய சிவபெருமானது மைந்தனுகிய முருகக்கடவுளின் திருவடிமலர்களைச் சிந்திக்கத்தகுந்தவிதமாக மனதைத்திருந்துதல் செய்வதே அழகாகும் என்றார். மனம் திருந்துதல் என்பது "அழுக்கா றவாவெகுளி யின்னாச்சொ னான்கு, மிழுக்கா வியன்ற தறம்" என்னுங் குறட்பாவின்படி, சன்மார்க்கத்தைத் தழுவி மனத்தைத் தூய்மைப்படுத்த வேண்டுமென்பது புலனுகின்றன. அவ்வித பக்குவமுள்ளமனமே திருவருளுதிக்கின்ற நிலையமுமாகும்.

"பண்ணின் றமி ழிசைபாடலின் பழவேய்முழவதிரக்
கண்ணின்னொளி கனகச்சுனை வயிரம்மவைசொரிய
மண்ணின்றன மதவேழங்கண் மணிவாரிக்கொண் டெறியக்
கிண்ணென்றிசை முரலுந்திருக் கேதார மெனீரே."

"ஏழிசையா யிசைப்பயனா யின்னமுதா யென்னுடைய
தோழனுமா யான்செய்யுந் துரிசுகளுக் குடனாகி
மாழையொண்கண் பாவையைத்தந் தாண்டானை மதியிலா
ஏழையேன் பிரிந்திருக்கே னென்னாரு ரிறைவனையே."

—தம்பிரான்தோழர்

மனத்தின்கண் ணுதிக்கின்ற மாயா காரியங்களாகிய அஞ்ஞான யிருளையோட்டி மெஞ்ஞான சாதனத்தைக்கொண்டு முருகப்பெருமானை வழிபட வேண்டுமென்பது இக்குணர்த்துவதாகும்.

"ஊனாறுங் கண்களுக் குட்படா துன்றன
தானஞா னக்கணே யருளொடுந் தருதுநீ
ஞானநாட் டத்தினா னந்திருத் தோற்றமே
மானவாட் செங்கையாம் வாகுவே காண்டியால்.

—திருச்செந்தூர்ப்புராணம்

சிற்றம் பலத்தைய ரன்புநேய் நூற்றிரி சிந்தையிடுஞ்
சிற்றம் பலத்தை வரஞான தீபமிட் டார்க்குப்பரி
சிற்றம் பலத்தை யருளுஞ் சேந்தூரர் பகைக்குலமாஞ்
சிற்றம் பலத்தைப் பதவரந் தோளிலிந் தீவரமே. (38)

(ப-ரை.) சிற்றம்பலத்து - ஞானவெளியாகிய, ஐயர் - சுவாமியும், அன்பு - பக்தியென்றும், நெய் - நெய்யைவார்த்து, நூல் - ஆகம நூலென்னும், திரி - திரியை, சிந்தை - இருதயமாகிய, இடும் - தீப மேற்றுகின்ற, சிவ் - தகழியிலிட்டு, தம்ப - ஆன்மாவுக்குப் பற்றுக் கோடாகிய, வத்தைவா - கிருபை யுண்டாகும்பொருட்டு, ஞான தீபம் - மெஞ்ஞானதீபத்தை, இட்டார்க்கு - ஏற்றின அடியார்களுக்கு, பரிசில் - ஈவாக, தம்பலத்தை - தமது சாயுச்சியமென்னும் பலனே, அருளும் - கிருபைசெய்கின்ற, செந்தூரர் - திருச்செந்தில் நாயகரு மாகிய கந்தசுவாமியினது, பகைகுலம்ஆம் - சத்துருக்களாகிய அசுரர் குலத்தை வேரறுத்த, சிற்று - சிறிய, அம்பல - பாணமல்ல, தைப் பது - என்னிருதயத்தில் தைத்து வருத்துவது, அவர் - அக்கடவுளது, அம் - அழகிய, தோளில் - புயத்திலணிந்த, இந்தீவரம் - நீலோற்பல மாகிய பாணமே.

(க-ரை.) உள்ளமாகிய மனதை தகழியாக்கி, அன்பென்னும் நெய்வார்த்து, தன்ம நூலாகிய திரியிட்டு, ஞானப்பிரகாசமாகிய தீபத்தை ஏற்றுகின்ற மெய்யடியார்களுக்குப் பரிசாக முத்திச்செல் வத்தை யளிக்கின்ற திருச்செந்தூரிற் கோயில்கொண்டருளிய கந்தப் பெருமானது பகைவர்களைவென்ற பாணமல்ல, எனது இருதயத்தில் தைத்துள்ளதானது அவர் அழகிய புயாசலங்களிலணிந்துள்ள நீலோற் பலமாகிய பாணமேயாகும் என்பதாம்.

(வி-ரை.) சிற்றம்பலம் என்பது சிதம்பரம், சிதாகாசம் என்னும் பொருளைக் குறிப்பதாகும். அதாவது சிதம் - (சித்தம்) பாம் - (வெளி,

மோட்சம், கடவுள்) எனவும், சிதாகாசம் என்பது சித்தமாகிய இருதய வெளியையும் நவில்வதாகும். இருதயவெளியில் நடம்புரிந்து உடலை விளங்கச்செய்கின்ற பரமாத்மா வென்பது பொருளாகும். இது போன்று 'பார்க்குமிட மெங்குமொரு நீக்கமறநிறைகின்ற' பரவெளி மயமாயிலங்கி உலகம் யாவையும் விளங்கச் செய்கின்றாரென்பது தத்துவநியமமுமாகும். ஆதலின் சடாட்சர அந்தாதி, "அண்ட பிண்ட மொன்றாய் நின்ற சூத்திரமே." எனப் போற்றுந் தன்மை யிதுவாகும். "சிறைவான் புனற்றில்லைச் சிற்றம்பலத்துமென் சிந்தை யுள்ளும் உறைவான்" என்னுந் திருக்கோவையானு முணர்க, "என்று முன்னை யிதயவெளிக்குளே, தன்றலைத்தன னேயருட்சோதிநீ, நின்றதன்மை நிலைக்கென்னை நேர்மையாம், நன்றுதீதற வைத்தநடு வதே" என்னுந் தாயுமானவர் பொன்மொழியி னேர்மைக்கிணங்க, பக்குவஞானிகள் இருதயவெளியில் அறிவானந்தமயமாகிய ஆன்ம தரிசனத்தை யடையும்படி யருளுகின்ற செந்திற்கடவுள் ஆணவம், காமியம், மாயை என்னும் மும்மலப் பகைவர்களாகிய அசுரர்களைச் சங்கரித்துள்ள ஞானசத்தியாகிய வேலாயுதமிருக்க, அவர் புயத்தி லணிந்துள்ள நீலோர்பலமாகிய மலர் என்னிருதயத்திற் றைத்து வருத்துகின்றதெனச் சொல்வதானது இன்னும் தமது மனம் காமி யத்தையே நாடும்படி விதித்துள்ளாரென்பதை விளக்குவதாகும். நீலோர்பலம் என்பது மன்மதன் கணைகளாகிய பஞ்சபாணங்களி லொன்றாகும். காமியம் - பிறவிக்கு வித்தாகுமென்க. இப்பாடலா னது ஏக வஸ்துவாகிய முருகப்பெருமான் றிருவருட் செல்வத்தைக் குறிக்கின்றதாகும்.

"செம்பொன் மேனிச் செழுஞ்சுட ரேமுழு
வம்ப னேனுனை வாழ்த்து மதியின்றி
இம்பர் வாழ்வினுக் கிச்சைவைத் தேன்மனம்
நம்பி வாவெனி னென்கொல் செய்வதே."

தீவர கந்தரி தாம்பகி ராருற வானசெம்பொன்
தீவர கந்தரி யாநொந்த போதினிற் செச்சையவிந்
தீவர கந்தரி சிந்துரை பாக சிவகரண
தீவர கந்த ரிபுதீ ருனதடி சேமநட்பே. (39)

(ப-ரை.) தீ - தீய்ந்துபோன, வரகு - வரகு என்னுந் தானியத்தில், அந்து - வண்டுகளால், அரி - அரிக்கப்பட்ட பதரையும், தாம்பகிரார் - தாம் பங்கிட்டுக் கொண்டார்கள், உறவான - உறவினராய், செம்பொன் தீவர் - சிவந்த பொன்விளையுந் தீவிலிருப்பவரும், அகம் தரியா - பாவத்தைத்தரித்து மனம் பொறுக்கக்கூடாமல், நொந்த போதினில் - வருந்துங்காலத்தில், செச்சைய - வெட்சிமாலையை யுடையோனே! இந்தீவர - செங்கழுநீர்மாலையை யுடையோனே, கந்தரி - மலைக்குகையிலிருந்த வள்ளிநாயகியையும், சிந்துரை - அயிராவதத்திடம் வளர்ந்த தெய்வயானை நாயகியையும், பாக - இருபக்கத்திலுமுடையவனே! சிவகரண - சிவகாரணம்புரிகின்ற, தீ - புத்தியை, வர - வரமாகக்கொடுக்கின்ற, கந்த - குமாரக்கடவுளே! ரிபு - சத்துருக்களை, தீர் - சம்மாரஞ்செய்யத்தக்க, உனது அடி - உனது திருவடித் தாமரையே, சேமம் நட்பு - பொக்கிஷமும் உயிர்த்துணையுமாம்.

(க-ரை.) ஹே சிவகுமார! வள்ளிகுஞ்சரி சமேத! ஹே வெட்சியையுஞ் செங்கழுநீர் மாலையையும் அணிகின்ற புயாசல! சிவஞானச் செல்வர்களின் தயாபரனே! எனக்கு உறவினரென்பவர்கள் பொன் விளையுந் தீவிலிருப்பவராயினும் வறுமையால் வருந்துங்காலத்தில் அந்துகளரித்துத் தீய்ந்துபோன வரகு தானியத்தைக்கூட எனக்குத் தருவதற்கு மனமிசையார்களாதலின் நினது திருவடிமலர்களே ஆதாரமாகிய பொக்கிஷமும் உறவுமாகுமென்பதாம்.

(வி-ரை.) செல்வம் வந்தபோது புகழ்வதும் வறுமைவந்தவிடத்து இகழ்ச்சிசெய்வதும் உறவினரென்பவர்களி னியல்பாதலின் அவர் களை நான் மதியேன் என்னுந் தன்மைபற்றி நினது திருவடிமலர்களே எனக்காதாரமாகிய பொக்கிஷமும் உறவினர்களுமாகுமென்று புகன்றா ரென்க. அரசர்களில் அரசன் வறுமையுற்றானாயினும் அவர்கட்கும் ஈயிருக்க யிடந்தரேனென்பதுகொண்டு வில்லிபாரதம் இங் குதாரண முணர்த்துகின்றதை யுணர்க.

"நீவெருக்கிலெ னிருந்தமன்னவர் திகைக்கிலென்
பலநினைக்கிலென்
போய்நகைக்கி லெனுரைத்த வுண்மைமொழி
பொய்த்ததென் றமரர் புகலிலென்
வேய்மலர்த் தொலைய லைவரென்னுடன்
வெறுத்துவெஞ்சமர் விளைக்கிலென்
ஈயிருக்குமிட மெனினுமிப்புவியில்
யானவர்க்கரசு மினிகொடேன்." —வில்லிபாரதம்

"பொன்னொடு மணியுண்டானாற் புலையனுங் கிளைநானென்று
தன்னையும் புகழ்ந்துகொண்டு சாதியில்மணமுஞ் செய்வார்
மன்னரா யிருந்தபேர்கள் வகைகெட்டுப் போவாராகிற்
பின்னையு மாரோவென்று பேசுவா ரேசுவாரே."-சிந்தாமணி

ஆதலின் நமது சுவாமிகள் உலக மயக்கமாகிய புகழ்ச்சியையும், இகழ்ச்சியையுங் கருதாது என்னோரமும் முருகப்பெருமானது கிண் கிணியணிந்த சரணகமலங்களைப் பற்றுதலாகிய பேரின்ப நிலையை விரும்பி திருவருட்செல்வம் பெற்றுள்ளாரென்க.

"என்னே ரமுமுன் னிருதாள் சரணம்
பொன்னே முருகா புரியும் பணியை
மன்னே யருள்வாய் வடிவேல் மணியே
தென்னூர் மயில்வா கனசே கரனே." —குமாரதரிசனம்

சேமர விக்கம் படையாகவீசுப தேச முன்னூற்
சேமர விக்கம் பலந்தரு வாய்செரு வாயவெஞ்சூர்ச்
சேமர விக்கம் திரித்தாய் வருத்திய வன்றிறேன்றல்
சேமர விக்கம் புயவாளி விண்டிரை தெண்டிரையே. (40)

(ப-ரை.) சேம - சிவந்த, ரவிக்கு - சூரியனுக்கு, அம்-சலத்தை, படையாக - அசுராதி தடையை விலக்குமாயுதமாக, வீசு - இறைக்கின்ற, உபதேசம் - உபதேசத்தையும், முன்னூல் - முப்புரிநூலையும், சேமர் - காப்போராகிய வேதியர் செலுத்தும், அவிக்கு - அவிர்ப்பாகத்திற்கு, அம் - அழகிய, பலம் - நற்பயனை, தருவாய் - அளிப்போனே! செருவாய் - போரினையுடைய, வெம் சூர் - கொடிய சூரனாகிய, சே - வயிரம்பொருந்திய, மா - மாமரத்தினால், விக்கம் - தேவர்கட்குண்டான விக்கினத்தை, திரித்தாய் - ஒழித்தவனே! வருத்திய - என்னைத் துன்பப்படுத்துகின்றன, அன்றில் - காமசின்னமாகிய அன்றிற்பட்சியும், தென்றல் - அவனது தேராகிய தென்றலும் சே - கழுத்தின் மணியொலியைச் செய்தவினை விடபமும், மாவிக்கு - கருப்புவில்லும், அம்புயவாளி - தாமரைப்பூவாகிய அம்பும், விண்டு - ஆர்ப்பரித்து, இரை-முழங்குகின்ற, தெள்திரை - தெளிந்த திரையையுடைய கடலும், (ஆகிய இவ்வாறும்).

(வி-ரை.) சூரியோதயாஸ்தமன காலங்களில் வேதவிதிப்படி சந்தியாவந்தனம் செய்து ஜலத்தை இரைத்து அவிர்ப்பாகங் கொடுக்கின்ற அந்தணர்களின் சன்மார்க்கத்திற்கு தக்க பயனைத்தருகின்ற முருகப்பெருமானே! மாயா மாமரவுருவாய் நின்ற சூரபன்மனை ஒழித்து வானவர்களை ரட்சித்தமெய்யனே! மன்மதனது சின்னங்களாகிய அன்றிலும், தென்றலும், கரும்பும், அம்புயமும், கடலும், என்மனத்தை வருத்துகின்றன என்பதாகும்.

(வி-ரை.) மாதராசை முத்திக்குத் தடையாக வருத்துகின்றது பற்றி தனது வழிபடுதெய்வமாகிய முருகப்பெருமானிடம் குறையிரந்து மனத்துய்மை நாடினுரென்பதை விளக்குவதாகும். சிற்றின்ப மயக்கம் பொன்னுட்டினும் வந்து வருத்துவதா யிருத்தலால், இவ்வுலகத்திலிருந்துகொண்டு அதனைவென்று முத்தியடைத லருமையாகுமென்று நிச்சயித்து, பிறந்தவுடனே துறந்துசென்று நிடதமலைமீதேறின சுகமுனிவரது செய்தி இவ்வுலக மறிந்ததாதலின் அவ்விதகொடுந்தன்மைவாய்ந்த காமவிகாரங்கள் தம்மை யணுகவொட்டாது பேரின்பவாழ்க்கை நாடியுள்ளாரென்க. மூவாசையிலும் முதன்மையுற்றது மாதராசையாதலின் அது உடலையும் உள்ளத்தையும் வருத்துகின்றது வெள்ளிடை வாக்கியமென்ப துணரத்தக்கதாகும். "வம்படிக்கு மாதருடன் வாழாமல் மன்னுபுளி யம்பழமும் தோடும்போலாவதினி யெக்காலம்" என பத்திரகிரியாரும், "அன்னவிசாரம் அதுவேவிசாரம் அதுவொழிந்தாற், சொன்னவிசாரம் தொலையாவிசாரம் நற்றேகையர்மேற், பன்னவிசாரம் பலகால்விசாரமிப் பாவிநெஞ்சுக், கென்னவிசாரம் வைத்தா யிறைவாகச்சியேகம்பனே." எனப் பட்டினத்தடிகளும் புகன்றுள்ள பொன்மொழிகள் ஈண்டு வரைதற்குரியனவாகும் இதுவன்றி தாயுமானவரும்.

"வையகமாதர் சுகத்தையும் பொன்னையும் மாயைமலம்
மெய்யையு மெய்யென்று நின்னடியார்தம் விவேகத்தையும்
ஐயமில் வீட்டையு மெய்ந்நூலையும் பொய்யதாக வெண்ணும்
பொய்யர்தங் நட்பை விடுவதென்றே பரிபூரணமே."

சூரியன் உதயாஸ்தமனகாலமே சந்தியாவந்தனைக்குரிய சமயமாகுமென்பதும், ஞானத்தை அஞ்ஞானமறைப்பனபோன்று சூரியகிரணம் அசுரமாயையாற் பாதிக்கப்படுகின்றன வென்றும் பிரஹ்மக்ஞானிகளாகிய அந்தணர்களின் சன்மார்க்க நியம கைங்கர்யமாகிய

ஜலானுசந்தானம் பண்ணுவதினிமித்தமாக அசுரமாயம் ஒழிந்து கதிரோன் களங்கமற்று விளங்குகின்றானெனவும், ஸ்மிருதிகள் நவிலுகின்றன. ஆதலின் அவ்வித அந்தணர்களது மனத்தூய்மையாகிய திருவருளை முருகப்பெருமானே அளித்துள்ளாரென்பதை, "சேமவிக்கம் படையாகவீசுப தேசமுன்னூற், சேமவிக்கம் பலந்தருவாய்" என்றார். தேவர்களைத் துன்புறுத்திய சூரன், கடலினடுவே மாமரவடிவாகி உலகங்களை நடுங்கச்செய்தமையை சம்மாரஞ்செய்து ஒழித்தமையால் "செருவாயவெஞ்சூர் சேமவிக்கம் தரித்தாய்." என நவின்றார். அன்றிலும், தென்றலும், கரும்பும், அம்புயமும், கடலும், காமனுடைய சின்னங்களாதலின் தம்மனத்தை மாதராசை வருத்துகின்றதென்பதை யுணர்த்தும் பான்மையை "வருத்தியவன்றி தென்றல், சேமவிக்கம்புயவாளி விண்டிரை தெண்டிரையே" என்றார்.

"வேல்கொண்டகையும் விறல்கொண்ட தோளும் விளங்குமயில்
மேல்கொண்டவீறு மலர்முகமாறும் விரைக்கமலக்
கால்கொண்டவீரக் கழலுங்கண்டா லன்றி காமனெய்யுங்
கோல்கொண்ட வன்மை யறுமோ தணிகைக் குருபரனே."

—திருஅருட்பிரகாசவள்ளலார்

தெண்டன் புரந்தர வக்குன்றில் வாழ்கந்த சிந்துவிலுத்
தெண்டன் புரந்தர லோகஞ் செருதுசேற் றேய்களைவாய்
தெண்டன் புரந்தர நற்கேள் சிறுவ ரழச்சேய் தெம்மைத்
தெண்டன் புரந்தர வின்படி நூக்கிய தீநரகே. (41)

(ப-ரை.) தெண்டன் - வணங்குகின்றேன், புரந்து - குறைவறக் காப்பாற்றி, அரவக்குன்றில் - திருச்செங்கோட்டு மலையில், வாழ் - வாழாநின்ற, கந்த - குமாரக்கடவுளே! சிந்துவில் - சமுத்திரத்தின் கண், உத்தெண்டன் - வலிமையுடைய சூரனை, புரந்தரலோகம் -

இந்திரலோகத்தை, செறுது - அழிக்காதபடி, செற்றோய் - வதைத்தவனே! களைவாய் - ஒழித்தருளவேண்டும், தெண்டன் - தெண்டாயுதத்தையுடைய காலன், புரந்தர - தொன்றுதொட்டுவருகின்ற, அம்- அழுகிய, நல்கேள் - நற்சுற்றத்தாரும், சிறுவர் - பிள்ளைகளும், அழச் செய்து - சூழ்ந்து முறையிடும்படி, எம்மை - எம் முயிரைப் பிரித்து, தெள் - தெளிந்த, தன்புரம் - தனது லோகத்திற் கொண்டுபோய், தரவின்படி - தனது கட்டளையின்படி, நூக்கிய தீ நரகு — தள்ளுதற் கிடமாகிய கொடிய நராக்கினையை.

(க-ரை.) திருச்செங்கோடு என்னும் மலையிற் கோயில்கொண்டருளிய கடவுளே! அசுரர்களை ஒழித்துப் பொன்னுலகை நன்னிலையில் வைத்தருளிய புங்கவனே! ஹே முருகப்பெருமானே! தொன்றுதொட்டு வருகின்ற மாயா விகாரங்களென்னும், எனது சுற்றத்தார் என்னைச் சூழ்ந்து அலறி அழுந்தன்மையதாக இயமன் எனதுயிரைப் பற்றி தனது லோகத்திற் கொண்டுபோய்த் தண்டிக்காவண்ணம் நீ பாதுகாத்தருளவேண்டும் என்பதாம்.

(வி-ரை.) முருகக்கடவுள் சரணமலர்களில் தாம் தஞ்சம் புகுந்தமையால் பிரபஞ்சமயக்கில் வீழ்ந்து காலபாசத்தில் இனியுழன்று வருந்தாது தம்மைக் காத்தருளவேண்டும் என பிரார்த்தித்தாரென்க. சுற்றத்தார்களென்பது மெய்யற்ற சந்தைக்கூட்டமாதலின் அவர்கள் அலறியழுவது பந்தமயக்கமாகுமெனவும் அவ்விதமாகிய பிறவிக்கடலில் இனியும் வீழாது நினது சரண பங்கயங்களையளித்துக் காக்க வேண்டுமென்றார். இதுபற்றி நமது சுவாமிகள் கந்தானுபூதியில் "வளைபட்டகைமா தொடுமக்களெனுந், தளைபட்டழியத் தகுமோ தகுமோ" எனவும், "சாகாதெனையே சரணங்களிலே, காகாநமனார் கலகஞ்செயுநாள், வாகா! முருகா! மயில்வாகனனே! யோகா! சிவஞானொபதேசிகனே" எனவும் போற்றியுள்ளன காண்க. திரு

நாவுக்கரசு சுவாமிகளு மிவைபற்றி "தந்தையார் தாயாருடன் பிறந்தார் தாரமார் புத்திரரார் தாந்தாமாரே, வந்தவா றெங்ஙனே போமாறேதோ மாயமா மிதற்கேது மகிழவேண்டாம்" எனவும், "எத்தாயர் எத்தந்தை யெச்சுற்றத்தார் எம்மாடுசும்மாடா மேவர்நல்லார், செத்தால்வந்துதவுவா ரொருவரில்லைச் சிறுவிறகாற் றீமூட்டிச் செல்லாநிற்பர்" எனவும் நவின்றுள்ளதும் இங்கு விளக்கற்குறியதாகும். "தந்தைதாய் தமர்தார மவையென்னு மிவையெலாஞ் சந்தையிற் கூட்டமிதிலோர் சந்தேகமில்லை" ஆதலின் இவ்வித மாயாபந்தங்களற்ற தன்மையுள்ள மனத்தூய்மையே சனனமரண சாகரத்தைத் தாண்டச்செய்யுமென்பது தத்துவநூற்களின் சாரமாகும். அருணகிரிநாத சுவாமிகள் மரணத்துக்குரிய துக்கத்தையே எமவாதனை என்பதுகொண்டு முருகன் றிருவருட் செல்வத்தை விரும்பிப்போற்றினர்.

"அந்த கனுமெனைய டர்ந்து வருகையினி
லஞ்சலெனை வலிய—மயில்மேல் நீ
அந்த மறலியொடு கந்த மனிதனம
தன்பனெனை மொழிய—வருவாயே"
—எனவும் திருப்புகழில்

சுவாமிகள் நவின்றுள்ளதும் இங்குரைத்தற்குரியதாகும்.

தீனங் தினத்து தரச்செல்வர் பாற்சென் றெனக்கென்பதோர்
தீனங் தினத்து முதரான லஞ்சுடச் சேர்ந்துசுடுந்
தீனங் தினத்து ணிகளைசெங் கோட்டினன் சேந்திலங்கீர்
தீனங் தினத்து தவத்துப் பிரசதஞ் செய்யவற்றே. (42)

(ப-ரை.) தீ - புத்தி, கந்து - கெட்ட, இனத்து - கூட்டத்தாருக்குள், உதா - உதாரத்துவம் பேசும், செல்வர்பால் - ஐசுவரியவான்களிடம், சென்று - போய், எனக்கென்பது - எனக்குதவி செய்க

வென்றிரக்கும்படி செய்கின்றதாகிய, ஓர் - ஒப்பற்ற, தீனம் - வறுமை நோயானது, தினத்தும் - நாடோறும், உதரானலம் - வயிற்றுப்பசி யாக்கினி, சுட - தகிக்கும்போது, சேர்ந்து - (அதனுடன்) சேர்ந்து, சுடும் - தகிக்கின்றது, தீ - இக்கொடிதான, நம் - நமது, தினத்துனி- நித்திய துன்பத்தை, களை - நீக்குகின்ற, செங்கோட்டினன் - திருச் செங்கோட்டு முருகக்கடவுளது, செந்தில் - திருச்செந்திற்பதியின், அம் - அழகிய, நீர் - சலமானது, தீன் - இனிய, நந்தின் - சங்கி னிறம்போல, அத்து - சிவப்பை, உதவ - கொடுக்கின்ற, துப்பு - பவ ளம்போன்ற அதரத்தில், இரசதம் - வெண்மை நிறத்தை, செய்ய வற்றே - செய்யவல்லதோ !

(க-ரை.) நிலையற்ற செல்வத்தை நம்பி உதாரத்துவம் பேசுகின்ற புத்திகெட்ட லோபிகளாகிய ஐசுவரியவான்களிடம் சென்று இரக் கும்படி செய்கின்றதாகிய வறுமைநோயும், வயிற்றுப்பசியாகிய உதராக்கினியும்சேர்ந்து தகிக்கின்ற கொடுமைவாய்ந்த நித்திய துன் பத்தை நீக்குகின்ற திருச்செங்கோட்டில் கோயில்கொண்டருளிய முருகக்கடவுளது செந்திலம்பதியிலுள்ள தீர்த்தமானது பவளம் போன்று சிவந்த அதரத்தை சங்கநிறம்போன்று வெண்மையதாக்க வல்லதாகுமோ என்பதாம்.

(வி-ரை.) தம்மைச் சரண்புகுந்த அடியார்கட்கு உலகவாழ்க்கை யில் வறுமைப்பிணியை நீக்கி நித்யசெல்வத்தை யருள்கின்ற பரம ஐஸ்வரியமூர்த்தி முருகப்பெருமானே யாகுமென்பதை ஈதுணர்த்து கின்றனவாகும்.

செய்யசேந் தாமரை யில்லாத மாதுடன் சேந்தினைசூழ்
செய்யசேந் தாமரை மானூர் சிலம்பிற் கலந்துறையுஞ்
செய்யசேந் தாமரை யென்னுங் குமார சிறுசதங்கைச்
செய்யசேந் தாமரை சேர்வதேன் றேவினை சேய்தோலைத்தே.

(ப-ரை.) செய்ய - தினைவிளை நிலத்தையுடைய, செம் - ஒழுங்கான, தாமரை - சிறுகுடியென்னு நகரத்தாருக்கு, இல்லாது - தெரியாமல், அ மாதுடன் - அப்புனங்காத்திருந்த வள்ளியம்மையை, செம் தினை சூழ்செய் - செந்தினைக் கொல்லைப்பயிரைச் சூழ்ந்துகொண்டிருந்த, அ செம் - காட்டாடும், தா - தாவுகின்ற, மரை - கடம்பையும், மான் - மானும், ஆர் - நிறைந்த, சிலம்பில் - மலையின்கண்ணே, கலந்துறையும் செய்ய - காந்தருவமணம் புணர்ந்துறையுங் குமாரக்கடளே, செம் - அழகிய, தாமர் - கொன்றை மாலையையுடைய பரமசிவன், ஐ என்னுங்குமார - ஐயனேயென்று சொல்லப்பட்ட குமாரக்கடவுளே, சிறு - சிறிய, சதங்கை - சதங்கையணிந்த, செய்ய - அழகிய, செம்தாமரை - உனது சிவந்த திருவடித்தாமரையை, சேர்வது என்று - யானடையுங் காலமென்றைக்கு, வினை - இருவினைகளையும், சேய் - தூரத்தில், தொலைத்து - ஒழித்துவிட்டே.

(க-ரை.) குறவர் சேரிக்குந் தெரியாமல் அழகிய பூஞ்சோலை மலையின்கண், கட்டழகு நிறைந்த சுந்தரியாகிய வள்ளிநாயகியை காந்தருவ மணம்புரிந்த லீலாவினோதனே, சிவபெருமான் ஐயனே யென்று துதிக்குந்தன்மையில் அவருக்கு வேதரகசியங்களை விளக்கியருளிய கந்தப்பெருமானே, உனது அடியவனாகிய யான் இருவினைப் பற்றொழிந்து நின்றிருவடிமலர்களை எப்போது அடைவேன் என்பதாகும்.

(வி-ரை.) இருவினைப்பற்று என்பது நல்வினை தீவினைகளாகும். இவை நீங்கினால் பந்தமறுபட்டு பிறவியையொழித்து முருகப்பெருமான் திருவடிமலராகிய முத்தியின்பமடைவதென்பதாகும். மனம் ஒழியும்வரை பந்தமும் ஒழியாதாதலின் மனமிறந்த சச்சிதானந்த நிலையை விரும்பினரென்க. "ஆசா நிகளந் துகளாயினபின் பேசா வனுபூதி பிறந்ததுவே," எனக் கந்தரனுபூதியிலும், "வினைப்போகமே

யொருதேகங் கண்டாய்" எனப் பட்டினத்தடிகளும், "கருவிகளோ டெங்கும் கருத்தினையறிவித் திருவினைதன்னை யறுத்திருள்கடிந்து" என விநாயகரகவலிலுஞ் செப்பியுள்ளது காண்க.

"முன்வினையாஞ் சஞ்சிதத்தின் முடிச்சை யவிழ்த்தனமே
பின்வினையாகா மியத்தைப் பிடித்துப் பிசைந்தனமே,
வீடுபந்த மென்றிடுதன் மித்தையே யாதலினு
வீடுவினை யிரண்டு மெங்கே யுளதாகும்."
—பிரமானுபூதிவிளக்கம்

இவ்வித உதாரணங்களால் பிறப்பிறப்பற்ற பேரின்பநிலையை நாடி சுவாமிகள் நவின்றுள்ளாரென்க.

சேதாம் பலதுறை வேறும் பணிகங்கை செல்வ நந்தன்
சேதாம் பலதுறை யாதசிற் றுயன் றிருமருக
சேதாம் பலதுறை செவ்வாய்க் குறத்தி திறத்த முத்திச்
சேதாம் பலதுறை யீதேன் றெனக்குப தேசநல்கே. (44)

(ப-ரை.) சேதாம் - சேதுவென்னுந் தீர்த்தமுதலாகிய, பல துறைவேறும் - மற்றைய பல தீர்த்தங்களும், பணி - வழிபடத்தக்க, கங்கை - பகீரதியின், செல்வ - மைந்தனே! நந்தன் சே - நந்தகோபன் பாலகனாகிய, தாம் அலது - நவனீதக் கள்வராய் கட்டுண்ட கயிற்றாலன்றி, உறையாத - மற்றொன்றாலுங் கட்டுண்ணப்படாத, சிறு ஆயன் - சிற்றிடையனான கிருஷ்ணமூர்த்தியினது, திருமருக - சிறந்த மருகோனே! சேதாம்பலது - சிவந்த வாம்பற்பூநிறத்தைப் போலும், உறை - உற்ற, செவ்வாய் - சிவந்தவாயையுடைய, குறத்தி திறத்த - வள்ளிநாயகியின் மணாளனே! முத்திசே - எனக்கும் முத்திக்குமிருக்கிற தூரத்தை, தாம் - கடப்பதாகிய, பலதுறை ஈது என்று - நற்பலனைத்தரும் வழியிதுவென்று, எனக்கு - அடியேனுக்கு, உபதேசநல்கு - உபதேசமருளவேண்டும்.

(க-ரை.) ஹே கங்கைமைந்த! கண்ணபிரான்றிருமருக! வள்ளி நாயகியின் மனோகா! நினது அடியவனுகிய எனக்கு முத்திமார்க்கம் ஈதென்பதை உபதேசம்புரிய வேண்டும் என்பதாம்.

(வி-ரை.) மனத்தூய்மையடைந்து முருகன் றிருவருட்பிரகாச மாகிய ஞானச்செல்வம்பெற்ற அருணகிரிசுவாமிகள், முத்திநிலை ஈதென்று உபதேசிக்குமாறு பிரார்த்தித்தாரென்பதை விளக்குகின்றன வாகும். இரும்பைக் காந்தமிழுக்கின்றவாறுபோன்று எதிரிட்டறியு மென்னைக் கவர்ந்து மறுபடியும் வெளிப்படாவண்ணம் அருள்புரிய வேண்டுமென்பதாம். அதுவே பிறவாமையாகிய முத்தியின்பம் என்பதாம்.

> "பவமதை யினிமை யெனவெளி விடயம்
> பற்றிநின் றுழன்ற வர்தாமே
> பவமதை யினிமை யலவெணி விடயம்
> பற்றறுத் தருட்குரு வடைந்து
> பவமதை யறுக்கு நெறியுணர்ந் தருளிற்
> பரவின்ப மடைந்த வர்தாமும்
> பவமதை யினிமை யெனவெணி னலவோ
> பற்றுவ விடயவின் புரையாய்."—மஹாராஜா துறவு

தேசம் புகல வயிலே யெனச்சிறை புக்கோருகந்
தேசம் புகல வணவாரி சேற்றவ னீசற்குப
தேசம் புகல திகவாச கன்சிறி தோர்கிலன்மாந்
தேசம் புகல கமுதவி மானைச் செருச் செய்வதே. (45)

(ப-ரை.) தேசம் - எனக்கு உறைவிடமும், புகல் - அடைக்கல ஸ்தானமும், அயிலே யென - வேலாயுதமேயென்று சொல்லும்படி

செய்து, சிறைபுக்கு - சிறையிற்பட்டு, ஒருகம் - ஐந்து தலையி லொன்றை, தேசம்பு - இழந்தபிரம்மா, கல - மரக்கலங்களை யுடைய தும், வண - அழகையுடையதுமான, வாரிசெற்றவன் - வருண னேவிய கடலை (யுக்கிரபாண்டியனாகி) வற்றச்செய்தோனாகிய, ஈசற்கு - பரமசிவனுக்கு, உபதேசம் புகல் - உபதேசம்செய்த, அதிக - மிகுதியான, வாசகன் - மொழியையுடைய குமாரக்கடவுளானவன், சிறிது – சற்றும், ஓர்கிலன் - அறிந்தானில்லன், மா - மாம்பூவாகிய, தேசு – ஒளிதங்கிய, அம்பு - பாணமானது, கலகம் உதவி - கலகம் செய்து, மானே - மானினது விழியையுடைய இம்மங்கையுடன், செருசெய்வது - போர்செய்கின்றதாம்.

(க-ரை.) ஐந்துசிரங்களி லொன்றையிழந்த பிரம்மாவைச் சிறை யிட்டு வேலாயுதத்தையே தஞ்சமென்று துதிக்கும்படி செய்தவரும், கடலை வற்றச்செய்தவரும்,சிவபிரானுக்குப் பிரணவோபதேசம் செய்த வருமாகிய கந்தக்கடவுள் மன்மதனுடைய மாமலர்வாளி இம்மங்கை மீதுதைத்துப் போர்செய்வதைச் சற்றும் நினைத்தாரல்லர் என்ப தாகும்.

(வி-ரை.) காதல்கொண்ட தலைவி, தமது தலைவனைநோக்குவது போன்று முருகப்பெருமானைத் தலைவனாகக்கொண்ட இவ்வாசிரியரும் அன்பின்பரிபாகத்தால் ஆத்மானந்தத்தில் வேட்கைகொண்டு வருந்தி னார் என்க. இங்கு பரமாத்மா தலைவனாகவும் சீவாத்மா தலைவியாக வுங்கொண்ட உவமையுமாகும். பரம்பொருளை நாடுகின்ற அடியார் கள் தங்களைப் பெண்மையாகப் பாவித்துப்போற்றுவது மியல்பே யாகும். காதல் என்பது சிற்றின்பத்திற்கும் பேரின்பத்திற்கும் பொது வான அன்பின் முதிர்ச்சியே யாகுமென்க. முருகப்பெருமானை யுன்னி யுள்ளமுருகுகின்ற செயலை யுணர்த்துவதுமாகும்.

ஓகோ வுனைப்பிரிந்தா ருள்ளங் கனலில்வைத்த
பாகோ மெழுகோ பகராய் பராபரமே.
உள்ளங் குழைய வுடல்குழைய வுள்ளிருந்த
கள்ளங் குழைய வென்று காண்பேன் பராபரமே.
—தாயுமானவர்

சேருக்கும் பராக வயிராவ தத்தேய்வ யானைமணஞ்
சேருக்கும் பராக தனந்தோய் கடம்ப சேகமதநூல்
சேருக்கும் பராக மனிரு பனந்தந் தேளிவியம்பு
சேருக்கும் பராகம் விடுங்கடை நாளுந் திடம்பேறவே. **(46)**

(ப-ரை.) செரு - போரினையும், கும்ப - மத்தகத்தையும், ராக - கோபத்தையுமுடைய, அயிராவத - அயிராவதத்தினிடம் வளர்ந்த, தெய்வயானை - தெய்வயானை யென்னும் நாயகியினது, மணம் - வாசனையையும், செருக்கும் - இறுமாப்பையும், பராக - மலர்த்தாதுக் களையுமுடைய, தனம் - கொங்கையில், தோய் - முழுகுகின்ற, கடம்ப - வெட்சிமாலையை யுடையவனே! செக - உலகத்திலுள்ள, மதநூல் - சமய சாஸ்திரங் களின், செருக்கும் - மயக்கத்தையும், பர ஆகமம் - இதரவேதாகமங்களையும், நிருபன் - நிருமித்ததேவனே! அந்தம் - முடிவானபொருளை, தெளிவி - இஃதென்றெனக்கு விளக்கியருளவேண்டும், அம்பு செர் - தாமரையில் வாசஞ்செய்கின்ற பிரமாக்களெல்லாம், உக்கு - இறந்து, உம்பர் ஆகம்விடும் - தேவர்களெல்லாமழிகின்ற, கடைநாளும் - இறுதிகாலத்தினும், திடம்பெற - அடியேன் நித்தியத்துவம் அடையும்பொருட்டு.

(க-ரை.) போருக்கிசைந்த வீரத்தையும், மத்தகத்தையுமுடைய அயிராவதத்தினிடமாக வளர்ந்த தெய்வயானைக்கு மணவாளனே! வாசனைநிறைந்த கடப்பமாலையையுடைய பெருமானே! சமயசாஸ்

திரங்கட்கு மூலமாகிய கடவுளே! பிரமேந்திராதி தேவர்கள் அழி கின்ற இறுதிகாலத்தினும் அடியேன் நித்தியவாழ்வு பெறும்படியான முடிவானபொருளை விளக்கியருளல் வேண்டும் என்பதாம்.

(வி-ரை.) அயிராவதம் - நாலு கொம்புகளையுடைய வெள்ளை யானையாகும். அம்மையாரை இவ்வானை வளர்த்தமைபற்றி குஞ்சரி எனவும், தெய்வயானையெனவும் பெயராயிற்று கடைநாளுந் திடம் பெறவே என்னும் பதங்கள் தேவர்களுமழிகின்ற இறுதிக்காலத்தைக் குறிக்கின்றதாதலின் நித்யத்துவமாகிய என்றும் அழியாத வாழ்க் கையை விரும்பினர். அதாவது பரத்தோடுகலத்த லாகுமென்க. ஞான னந்தமயமாக நிற்பதென்பதை விளக்குவனவாகும்.

"வானைப் போல வளைந்துகொண் டானந்தத்
தேனைத் தந்தெனைச் சேர்ந்துக லந்தமெய்ஞ்
ஞானத் தெய்வத்தை நாடுவ னொனெனும்
ஈனப் பாழ்கெட வென்று மிருப்பனே."

—என் னும் உதாரணங்காண்க

திடம்படு கத்துங் கெடீர்கன்ம லோகச் சிலுகு மச்சோ
திடம்படு கத்துந் திரித்தம்பு வாலியு ரத்தும் பத்துத்
திடம்படு கத்துந் தெறித்தான் மருக திருக மும்ம
திடம்படு கத்துங் கனகங் குனித்தவன் சேயனுமே. (47)

(ப-ரை.) திடம் - உறுதிநிலை, படு - அழிகின்ற, உகத்தும் - யுகாந்தகத்திலும், கெடீர் - நிலைகெடாது நித்தியராயிருப்பீர்கள், கன்ம - பூர்வவினையால், லோக - உலகத்தின்கண் உண்டாகிய, சிலு கும் - ஈஷணத்திரயங்களையும், அசோதிடம் படுகத்தும் - அக்கல்விச் செருக்கைத்தரும் கணிதநூலைப் பிதற்றுதலையும், திரித்து - மாற்றுதல் செய்து, அம்பு - முன்இராமபாணத்தை, வாலி - வாலியினுடைய,

உரத்தும் - மார்பிலும், பத்து - பத்தென்கிற, திடம்படு - வலிமை பொருந்திய, கத்தும் - இராவணனுடைய தலைகளிலும், தெறித்தான் - செலுத்திய ஸ்ரீராமருடைய, மருக - மருகோனே! திருகு - மாறு பட்ட, மும்மதிள் - முப்புரங்களும், தம்படு - தோற்றியவிடத்தி லேயே, உக - நீறுகிவிழ, துங்க - உயர்ந்த, நகும் - மகமேருவை, குனித்தவன் - வில்லாகவளைத்த பரமசிவனது, சேய் எனும் - மைந்த ஞகிய குமாரக் கடவுளேயென்று துதியுங்கள்.

(க-ரை.) ஹே சுற்றங்களே! நீங்கள் ஈஷணத்திரயங்களாகிய புத்திரர், தாரம், பொன் இவைகளிலுள்ள பற்றுதலையும், கல்விச் செருக்கைத்தரும் கணிதநூலைப் பிதற்றுதலையும் ஒழியுங்கள், மெய் யன்புடன் ஹே முகுந்தன்மருகா! ஹே சிவகுமார! என்று மனமார, வாயார, வாழ்த்துவீர்களாக! யுகமுடிவுகாலத்தினு மழியாத நித்திய வாழ்வைப் பெறுவீர்களென்பதாகும்.

(வி-ரை.) நம்மையாட்கொண் டருள்புரியும், முருகப்பெருமானை பக்தியினுல் அழுதும், அலறியும், எலும்பும் உருகும்படி மெய்யன்பு கொண்டு அவனது பரிசுத்த திருநாமங்களை போற்றுகின்றவர்கட்கு அருள்ஞானம் வாய்க்கப்பெற்று செனனமரண வாதனையற்று சுகா னந்தவாழ்வை யடைவார்களென்பதை விளக்குவதாகும்.

"அன்பா லழுது மலறியு மாள்வானை
யென்புருகி யுள்ளே நினை." —ஔவைக்குறள்

சேயவன் புந்தி வனவாச மாதுடன் சேர்ந்த சேந்திற்
சேயவன் புந்தி கனிசா சராந்தக சேந்த வென்னிற்
சேயவன் புந்தி பனிப்பானு வெள்ளிபொன் சேங்கதிரோன்
சேயவன் புந்தி தமோற வேதருஞ் சேதமின்றே. (48)

(ப-ரை.) சேய் - அழகினையுடைய, அன்பு - இச்சையோடு, உந்தி – கான்யாற்றின், வன - காட்டில், வாச - வாசஞ்செய்த, மாதுடன் - வள்ளிநாயகியுடன், சேர்ந்த – கூடியிருந்த, செந்தில் - திருச்செந்தூரில் வாழாநின்ற, சேய - குமாரக்கடவுளே! வன்பு - வலிமையில், உந்து - உயர்ந்த, இகல் - மாறுபாட்டையுடைய, நிசாசர அந்தக - அசுரர்குலத்துக்கு இயமனே! சேந்த - கந்தனே! என்னில் - என்று துதிப்பீராகில், சேயவன் - செவ்வாய், புந்தி - புதன், பனிப்பானு - சந்திரன், வெள்ளி - சுக்கிரன், பொன் - வியாழன், செங்கதிரோன் - ஆதித்தன், சேயவன் - அவ்வாதித்தன் மைந்தன் சனியாகிய இக்கிரகங்களின் வக்கிரோதயத்தால், புந்திதடுமாறவே தரும் - புத்தியை சலனப்படுத்துகின்ற, சேதம் இன்று - கேடு இல்லை.

(க-ரை.) ஹே வள்ளிநாயக! ஹே செந்திலாதிப! ஹே சூர சங்கார! ஹே கந்தப்பெருமானே, என்று உள்ளங்கனிந்து போற்றுவீராயின், ஹே மாந்தர்களே! உங்கட்கு நவக்கிரகங்களின் குற்றச் செயல்களை நீக்கி என்றென்றும் மங்களகரமான வாழ்க்கையாகிய இகபரசாதனந் தந்தருளுவார் என்பதாம்.

(வி-ரை.) செந்திற் கடவுளாகிய ஸ்ரீ சண்முகப்பெருமானை மெய்யன்புடன் ஆராதிக்கின்ற அடியார்கட்கு நவக்கிரகங்களின் தோஷங்களணுகாது என்றார். முருகத் தியானத்தால் சஞ்சலங்கள் ஒழிந்து மனத்தூய்மைபெற்று நன்மை யடைவார்களென்பதை விளக்குவதாகும், உதாரணங்காண்க.

"நாளென் செயும் வினைதா னென்செயும் நமைநாடிவந்த
கோளென் செயுங் கொடுங்கூற் றென்செயுங் குமரேசனிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந் தண்டையுஞ் சண்முகமுந்
தோளுங் கடம்பு மெனக்கு முன்னேவந்து தோன்றிடினே."

—கந்தரலங்காரம்

சேதக மோன்று மனுதியுந் தாதையுந் தேடரியார்
சேதக மோன்றுஞ் சதங்கையுங் கிண்கிணி செச்சையந்தாள்
சேதக மோன்றும் வகைபணி யாயினித் தீயவினைச்
சேதக மோன்று மறியா துழலுயிர்ச் சித்திரமே. (49)

(ப-ரை.) சேதம் ஒன்று - ஒருதலை பின்னமான, மன் - நிலை பெற்ற, ஆதியும் - பிரமாவும், தாதையும் - அப்பிரமாவின் தாதையாகிய மகாவிஷ்ணுவும், தேட அரியார் - தேடுதற்கரிதான பரமசிவனது, சே - மைந்தனே, தகமொன்றும் - தகுதியாய் முழங்குகின்ற, சதங்கை - சதங்கையையும், அம் - அழகிய, கிண்கிணி - கிண்கிணியையும், செச்சை - வெட்சிமாலையையுமுடைய, அம் - சிரேஷ்டமாகிய, தாள் - திருவடித்தாமரையில், சேது - சிவந்த, அகம் - என் இருதயமானது, ஒன்றும்வகை - கூடும்வண்ணம், பணியாய் — அருள்செய்ய வேண்டும், இனி - இனிமேல், தீய - கொடிய, வினை - இருவினையாகிய, சேதகம் - சேற்றினுள்ளே, ஒன்றும் அறியாது - ஒருநெறியுமறியாமல், உழல் - கிடந்துழல்கின்ற, உயிர் - ஆவியின்வாழ்க்கை, சித்திரம் - பொய்யாயிருக்கின்றது.

(க-ரை.) ஹே முருகா! நாரணனும் நான்முகனும் அடிமுடி தேடியறியமுடியாத சிவபிரானது மைந்தனே! எனது மனம் மாயா விபரீதமாகிய இருவினைச் சேற்றிலழுந்தி இனியு மயங்காது, கிண்கிணி சதங்கை வெட்சிமாலை விளங்குகின்ற நினது திருவடித்தாமரையில் ஒருமையுடன் றுதிபாவும்வண்ணம் நீ திருவருள்புரிந்து ஆட்கொள்ளவேண்டும் என்பதாம்.

(வி-ரை.) "பற்றித்தொடரு மிருவினைப் புண்ணிய பாவமுமே" யென்னும் பொன்மொழிக்கிணங்க தொன்றுதொட்டுப் பிறவியைப் பற்றி வருவனவாகிய நல்வினை தீவினைகள் நிலையில்லாத சுகதுக்கங்

கள் என்னும் மயக்கத்தைத் தருகின்றதாதலின் பொய்யுலகவாழ்க் கையைநம்பி யுழன்று திரியாது விவேகஞானத்தைக்கொண்டு தியான யோகத்தில் மனம் பற்றும்படி அருளவேண்டும் என்றார் என்க. சர்வம் பிரமமயமென்னும் தியானயோகத்திற் சிந்திக்கும்போது அப்பாவரூபமாகிய ஸ்வரூபம் உண்மை அன்று எனவும், அப்பாவனை யானது அந்தஸ்வரூபமாகும்போது ஞானதிருஷ்டியினூற் பார்த்த ஸ்வ ரூபமானது உண்மையான தியானயோகமாகு மென்பதும் கைவல்ய நவநீதத்தின் சாரமாகும்.

"சருவமுத்தியைத் தருகின்ற தியானமுஞ்
சத்திய மன்றென்றால்
சருவமுத்தியுஞ் சத்திய மன்றென்று
சங்கியாதேநீ கேள்
உருவங்கெட்டவன் றியானிக்கும் பொழுதிலவ்
வுருவம்வாத் தவமென்றே
உருவமாகு மப்பொழுது கண்ணுற்கண்ட
வுருவம் வாத்தவமாமே."

என வருவனகாண்க. மனோவிகாரங்களை யொழித்து ஒருமையுடன் முருகன் சரணகமலங்களைச் சிந்திக்கவேண்டு மென்பதை விளக்குவ தாகும். அதுவே பரமாத்ம ஸ்வரூபத்தை நாடுகின்ற உண்மையான தியானயோகமாகுமென்பது நூலின்றுணிபாகும். "ஒருமையுடன் னினது திருவடிமலர் நினைக்கின்ற வுத்தமர்தமுறவு வேண்டும்" என் பது இராமலிங்கசுவாமிகளின் அருள்வாக்கியமாகும்.

சித்திர மிக்கன வில்வாழ் வேனத்தேளி யுந்தவவா
சித்திர மிக்க னேறிக்கழிந் தேற்கினிச் சேச்சை நல்வி
சித்திர மிக்க தனக்குறத் தோகை திறத்த முத்தி
சித்திர மிக்க வருளாய் பிறவிச் சிகையறவே. (50)

(ப-ரை.) சித்திரம் - பொய்யாகிய, இக்கனவு - இப்போது காணுங் கனுப்போலாகும், இல்வாழ்வு-பாசபந்தங்களாற் சிக்கியமனைவாழ்க்கை யானது, எனத்தெளியும் - என்னு நிச்சயத்தைக் கொடுக்கின்ற, தவ வாசி - தபோபலத்தின், திரம் - உறுதியை நாடாமல், இக்கன் - கருப்புவில்லையுடைய மன்மதனது, நெறிக்கு - காமநூல்வழியில், அழிந்தேற்கு - கெட்ட எனக்கு, இனி - இனிமேலாவது, செச்சை — வெட்சிமாலையைப்புனையும், நல் - திவ்யமான, விசித்திர - அழகனே! மிக்க - பெருத்த, தன - கொங்கையையுடைய, குறத்தோகைதிறத்த- குறவர்வளர்த்த வள்ளிக்கு நாயகனே! முத்தி சித்தி — மோட்சப் பேறுனது, ரமிக்க — குறைதீர்ந்து திருப்தியாகும்படி, அருளாய் — நீ கிருபை செய்யவேண்டும், பிறவிசிகை - எனது சனனமரணபந்தங் கள், அற - அறும்பொருட்டு.

(க-ரை.) ஹே வெட்சிமாலையணிந்த முருகா! ஹே வள்ளி மனோகரா! அடியேன் பரமாத்மாவாகிய நினது தியானத்தை நாடாது, சொப்பனவாழ்க்கையாகிய சிற்றின்பப் படுகுழியில் வீழ்ந்து அயர்ந்துள்ளேன். எனக்கு இனியாகிலும் சனனமரண வாதனையா கிய பந்தங்களறும்பொருட்டு முத்திநிலையைக் கைக்கொள்ளுந் தன்மையை அனுக்கிரகம் புரியவேண்டும் என்பதாகும்.

(வி—ரை.) சிற்றின்பத்தை வெறுத்து பிறவியற்ற நிலையைத் தருகின்ற பேரின்ப வாழ்க்கையைப் பெறுவதற்கு முருகன் திருவருளை வேண்டினர் என்க.

"யோனிவழி யேபிறந்து யோனிவழியே யுழன்று
யோனிவழியே யொடுங்கு மூமர்காள்—யோனிவழி
வாரா வொருவனையே வந்தித்தால் யோனிவழி
வாரா வகையருளு வான்." —வள்ளலார்

"கசிந்தொழுகும், புண்ணும் குழியிடை தள்ளியப் போதப் பொருள்பறிக்க, வெண்ணு துனைநம்பினே னிறைவாகச்சியே கம்பனே" என்னும் பட்டினத்தடிகள் வாக்கியத்தையுமுணர்க.

சிகைத் தோகை மாமயில் வீரா சிலம்புஞ் சிலம்பம் புரா
சிகைத் தோகை மாமயில் வாங்கிப் பொருது திசைமுகன்வா
சிகைத் தோகை மாமயில் வானில்வைத் தோய்வெஞ் செருமகள்வா
சிகைத் தோகை மாமயில் செவ்விநற் கீரர்சொற் றித்தித்ததே.

(ப-ரை.) சிகை - கொண்டையையும், தோகை - தூவியையுமுடைய, மா - பெரிய, மயில் வீரா – மயிலேறும் வீரனே! சிலம்பும்-கிரவுஞ்சகிரியும், சிலம்பு - முழங்குகின்ற, அம்புராசி – சமுத்திரத்தின்கண், கை - ஒழுங்காக, தோகை துவசத்தையுடைய, மா - மாமரமாய்நின்ற சூரனையும், மய் – இருளுக்கு, இல் – இடமாகிய மாயையையும், வாங்கி - விலக்கி, பொருது – போர்செய்துவென்று, திசைமுகன் – நான்குமுகப் பிரமன், வாசி - பிரணவப்பொருளறியாமல் வாசித்த குற்றத்திற்கு, கைத்து - கோபித்து, ஓகை - மகிழ்ச்சியை, மாமய் - அழகுக்கு, இல் – இருப்பிடமாகிய, வானில் - தேவருலகத்தில், வைத்தோய் - விளைத்தவனே! வெம்செரு - வெவ்விய போரிற்சிறந்த, மகள்வாசி - பாண்டியனது குதிரைமுகத்தையுடைய பெண்ணுக்கு, கைத்தோ – அக்குதிரை முகத்தைத் தீர்த்தவனே! கைமா - அயிராவதம் வளர்த்த, மயில் – தெய்வயானையினது, செவ்வி-கலவிப்புதுமையினும், நற்கீரர் சொல் - நற்கீரர் சொல்லிய திருமுருகாற்றுப்படை, தித்தித்தது - (உனக்கு) இனிமையாயிற்று.

(க-ரை.) ஹே அழகிய மயில்வாகனு! கிரவுஞ்சகிரியையும், அலைமோதுகின்ற சமுத்திரத்தினூடு தோன்றி மாமரவடிவாய் நின்ற

சூரபன்மனையும் அவனது மாயையையும் ஒழித்து தேவலோகத்தை விளங்கும்படி செய்தருளியவனே! பிரணவப்பொருள் தெரியாமைக்காகப் பிரமதேவனைத் தடுத்தாட்கொண்ட சண்முகப்பெருமானே! உக்கிரப் பெருவழுதியாகிய பாண்டியன் குமாரிக்கு சாபகாரணமாய் வாய்த்த குதிரைமுகத்தை மாற்றியருள்புரிந்த வண்ணலே! அம்மையாராகிய தேவகுஞ்சரியின் கலவியின்பத்தைக் காட்டிலும் நக்கீரர் கின்னைவாழ்த்திய செந்தமிழானது தித்திப்பைத்தந்தது என்பதாம்.

(வி-ரை.) பூர்வசென்ம சாபகாரணமாக குதிரைமுகம் வாய்த்த பாண்டியகுமாரி அங்கசுந்தரிக்கு முருகப்பெருமான் சாபவிமோசனம் செய்தருளியதலம், ஈழநாட்டிலுள்ள மாவிட்டபுரமென்க. "புக்குமச் சனனச் சுமைபோயபின் புவிபொது வறக்காக்கு, முக்கிரப்பெரு வழுதி பாலுதித்தன ளொளிவனப் புறுமேனி, மிக்கவங்க சுந்தரியெனும் பெயரொடும் விளங்கினள் பரிபோன்று, தக்கமாமுக மாயினள் வழுதியுஞ் சஞ்சலித்துடன் சார்ந்தான்" என திருச்செந்தூர்ப் புராணத்தில் வருவனகாண்க. மெய்யடியார்கள் துதிக்கின்ற செந்தமிழை இனிமையுடன் முருகப்பெருமான் ஏற்று அவர்கட்கு கருணை பாலிக்கின்ரு ரென்பதுபற்றி "கைமாமயில் செவ்விநக்கீரர்சொற் றித்தித்ததே" என்ருர். இதில் தெய்வயானையின் கலவியின்பத்தைக் காட்டிலும் நக்கீரரின் தமிழாகியயின்பம் தித்திப்பைத் தந்தது என்னும் பொருளாகின்றதை யுணர்க. பட்டினத்தடிகள், "பாவலனொருவன் செந்தமிட்கிரங்கிப் பாவையாருடலை மாற்ற, ஏவலாளாகிய யிரவெலாமுழன்ற யிறைவனே யேகநாயகனே" எனவும் நவின்றுள்ளது காண்க. அருணகிரியாரின் பாமாலைகளாகிய செந்தமிட் சொற்களை வியந்து தாயுமானவரும். "ஐயாவருணகிரி யப்பாவுனைப்போல மெய்யாகவோர்சொல் விளம்பினர்யார்" எனவும் போற்றியுள்ளது இங்கு விளக்கத்தகுந்ததாகும்.

தித்திக்குந் தோந்திக்கு நித்தம் புரியுஞ் சிவன் செவிபத்
தித்திக்குந் தோந்திக் கறமோழி பாலக தேனலைத்துத்
தித்திக்குந் தோந்திக் கிளையாய் விளையுயிர்க் குஞ்சிதைதோல்
தித்திக்குந் தோந்திப் பனவேது செய்வினைத் தீவிலங்கே.(52)

(ப-ரை.) தித்திக்கும் - தித்தியென்னுந் தாளத்துக்கும், தொந்திக்கும் - தொந்தியென்னுந் தாளத்திற்கும் ஏற்க, நித்தம்புரியும் — நடனஞ் செய்கின்ற, சிவன் - பரமசிவனது, செவிபத்தித்திக்கு - இருசெவிகளின் புலனிடத்து, உந்து - நுழையும்படி, ஓம் - பிரணவப்பொருளை, திக்கு அற - மயக்க நீங்க, மொழி — உபதேசித்த, பாலக - பாலகனே! தேன் அலைத்து - பலகாரணைவேத்தியத்தால், தேனொழுகி தித்திக்கும் - இனிப்புற்றிருக்கின்ற, தொந்திக்கு - வயிற்றையுடைய கணபதிக்கு, இளையாய் - இளையோனே! விளை - கருப்பையிலுருவான, உயிர்க்கும் - சீவனுக்கும், சிதை - அழிந்துபோகின்ற, தோல் துதிக்கும் - தோற்பையாகிய உடம்புக்கும், தொந்திப்பன ஏது - சம்மந்தப்பட்டும் பிறப்புண்டாவதற்குக் காரணம், செய் - யான் முன்னியற்றிய, வினை - இருவினையினது, தீ - கொடிய, விலங்கே - தளைதானே.

(க-ரை.) தில்லையம்பலத்திலே தாளப்பிரமாணந் தவாது நடனம் புரிகின்றவராகிய சிவபிரானுடைய திருச்செவியில் மூலமாகிய பிரணவரகசியத்தை உபதேசம்செய்த பாலகுருநாதனே! தொந்தியையுடைய கணபதிக்கு இளைய கோதரனே! உயிரும் தோற்சுமையாகிய உடலும் ஒருங்கே யமைந்து பிறவிக்கடலில் ஊசலாடுதலாகிய சனன மரணங்களென்னும் அலையிற் கிடந்துழல்வதற்கு முன்னை வினைகளென்னும் விலங்காகிய பந்தபாசங்கள்தானே யென்பதாகும்.

(வி-ரை.) மும்மலத்தொகுதிகளாகிய பந்தபாசங்களே பிறவிக்கு வித்தாகுமென்பது தத்துவ நூலின் றுணிபாகும். நல்லனவும் தீயனவுமாகிய செயலுக்கிசைந்த பிறவிகளையெடுத்து சுகதுக்கங்களைக்கொண்டு மயங்குவது வர்த்தமானவுலகில் கண்கூடாகும். நிலையில்லாத வுடலையும் நிலையில்லாத வுலகப்பொருள்களையும் நிலையென்றுநம்பி முடிவில் ஏமாற்றமடையச் செய்வதே மாயையாகும். "குடம்பை தனித்தொழியப் புட்பறந்தற்றே, யுடம்போ டுயிரிடைநட்பு" என்னுந் திருக்குறள் வாக்கியமானது, முட்டைக்கும் பட்சிக்குமுரிய சம்மந்தமே யுடலுக்கு முயிருக்கு முடைத்தாகுமென விளக்குவதுபோன்று ஆசிரியரும் இங்கு நவின்றுள்ளார். அவ்வித நிலையில்லாத வுடம்பு கிடைத்தற்கு முன்னைவினைகளையே தமக்குக் காரணமாக்கிச் சொன்னாரென்க. பவக்கடல் கடக்கும் பக்குவம் வேண்டுமெனப் பிரார்த்தித்தலுமாகும்.

"பந்த மாகும் பவக்கட னீங்கிநாம்
அந்த மாதியு மில்லா வகண்டவா
னந்த வீடுற நல்கிடு ஞானகோ
விந்த யோகி விரைமலர்ப் பாதமே."

—நானசிவவாதக்கட்டளை

தீவிலங் கங்கை தரித்தார் குமார திமிரமுந்நீர்
தீவிலங் கங்கை வருமான் மருக தெரிவற்றவான்
தீவிலங் கங்கை வரவா விரைக்குத் திரிந்துழலும்
தீவிலங் கங்கை யமன் றொடராமற் றிதம்பெறவே. (53)

(ப-ரை.) தீ - (கரத்தில்) அக்கினியையும், விலம் - புயத்தில் வில்வத்தையும், கங்கை - சென்னியிற் கங்கையையும், தரித்தார் - தரித்த பரமசிவனது, குமார - மைந்தனே! திமிர - இருள்நிறமான,

முந்நீர் - சமுத்திரமும், தீ - வறண்டுபோகத்தக்க, வில் - வில்லின், அங்கம் - வித்தையில், கைவரு - வல்லவரான, மால்மருக - திருமால் மருகனே! தெரிவு அற்ற - அறிதற்கரிய, வான் - பெரிய, தீவில் - தீவுகளிலும், அங்கங்கு — மற்றும் பலவிடங்களிலும், ஐவர் - பஞ்சேந்திரியங்களால், அவாவு - இச்சிக்கத்தக்க, இரைக்கு — உணவின் பொருட்டு, திரிந்துழலும் - அலைந்து திரிகின்ற, தீ - புத்தியினது, விலங்கம் - பலத்த தொடர்ச்சியை, கை - ஒழிக்கவேண்டும், யமன் தொடாமல் - இயமன் தொடர்ந்து பற்றாமல், திதம்பெற - உனது திருவடியில் இன்புற்று உறுதிப்படும்பொருட்டு.

(க-ரை.) திருக்கரத்தில் அக்கினியும், புயத்தில் வில்வமும் சடாமுடியிற் கங்கையுந் தரிக்கின்றவராகிய சிவபிரானது மைந்தனே! சமுத்திரத்தையும் வறளும்படி செய்கின்ற சக்திவாய்ந்த சாரங்க மென்னும் வில்லையுடைய விஷ்ணுமூர்த்தியினது மருகோனே! அந்தகனாகிய எமன் என்னை யணுகாதிருக்கும்பொருட்டு ஐம்புல னுகர்ச்சியில் உள்ளம் ஈடுபடாது நினது பாதபங்கயங்களில் அடைக்கலம் புகும்படியான தீவிரபக்தியை அருளல்வேண்டும் என்பதாம்.

(வி-ரை.) வஞ்சனை பொறாமை முதலிய மனத்தீமைகட்கு மூல காரணம் பஞ்சேந்திரியங்களின் இச்சையாதலின் அவையொழிதலே மனமிறந்த பக்குவ நிலையைத்தருவதாகும். அவ்விததன்மையருளும்படி பிரார்த்திப்பதாகும் உதாரணங்காண்க. "வாயிலோரைந்திற் புல னெனும்வேடர் வந்தெனை யீர்த்துவெங்காமத், தீயிலேவெதுப்பி யுயி ரொடுந்தின்னச் சிந்தைநைந் தருகிமெய்மறந்து, தாயிலாச்சேய்போ லலைந்தலைப்பட்டேன் றாயினுங் கருணையாமன்றுள், நாயகமாகியொளி விடுமணியே நாதனே ஞானவாரிதியே" என்பனபோன்று நமது சுவாமிகள் முருகப்பெருமான் றிருவடிமலரையன்றி வேறொரு நாட்ட மின்றிப் பரமானந்த நிலையை விரும்பியுள்ளாரெனக.

"நடக்கினு மோடினு நிற்கினும் வேறொரு நாட்டமின்றிக்
கிடக்கினுஞ் செவ்வி திருக்கினு நல்லருட் கேள்வியிலே
தொடக்குமென் னெஞ்ச மனமற்ற பூரணத் தொட்டிக்குள்
முடக்குவன் யான்பர மானந்த நித்திரை மூடிடுமே." [ளே
—தாயுமானவர்

திதத்தத்தத் தித்தத் திதிதாதை தாததுத் தித்தத்திதா
திதத்தத்தத் தித்த திதித்தித்த தேதுத்து தித்திதத்தா
திதத்தத்தத் தித்தத்தை தாததி தேதுதை தாததத்து
திதத்தத்தத் தித்தித்தி தீதீ திதிதுதி தீதோத்ததே. (54)

(ப-ரை.) *திதத்தத்தத்தித்த - திதத்தத்தத்தித்த என்னுந்தாளப் பிரமாணங்களை, திதி - திருநடனத்தாற் காக்கின்ற, தாதை - சிவபிரானும், தாத - பிரமனும், துத்தி - படப்பொறியினையுடைய, தத்தி - பாம்பின், தா - இடத்தையும், தித - நிலைபெற்றுக்கொண்டு, தத்து - ததும்புகின்ற, அத்தி - சமுத்திரத்தையும் பாயலாகக்கொண்டு, ததி - தயிரானது, தித்தித்ததே - தித்திக்கின்றதென்று, து - உண்டகண்ணனும், துதித்து - துதிசெய்து வணங்குகின்ற, இதத்து - பேரின்ப சொரூபியான, ஆதி - முதல்வனே! தத்தத்து - தந்தத்தையுடைய, அத்தி - அயிராவதத்தால் வளர்க்கப்பட்ட, தத்தை - கிளிபோன்ற தெய்வயானைக்கு, தாத - தொண்டனே! திதே - தீமையே, துதை - நெருங்கிய, தாது - சப்ததாதுகளால் நிறைந்ததும், அதத்து - மரணத்தோடும், உதி - சனனத்தோடும், தத்து - பலதத்துகளோடும், அத்து - இசைவுற்றதுமான, அத்தி - எலும்புகளைமூடிய, தித்தி - பையாகிய இவ்வுடல், தீ - அக்கினியினால், தீ - தகிக்கப்படுகின்ற, திதி - அந்நாளிலே, துதி - உன்னைத்துதிக்கும், தீ - புத்தி, தொத்தது - உனக்கேயடிமையாகவேண்டும்.*

(க-ரை.) தில்லையம்பலத்திலே திதத்தத்தக்தித்தி என்னுந் தாளப்பிரமாணத்துடன் நடனம்புரிகின்ற சிவபிரானும், பிரமதேவனும், பாற்கடலையும் சர்ப்பத்தையும் பாயலாகக்கொண்ட, விஷ்ணுமூர்த்தியுந் துதிக்கின்ற மூலமாகிய பரம்பொருளே! சனன மரணங்கட்குட்பட்டதும் பற்பல தத்துக்களையுடையதும், எலும்பு தோல் முதலிய சப்ததாதுக்களாற் பொதிந்த அருவருப்பையுடையதும், அக்கினியில் வெந்து சாம்பராகக்கூடியதுமான இவ்வுடலைப்பெற்ற தமியேனை நீ கிருபைகூர்ந்து நின்றிருவடிகளைத் துதிக்கும்படிசெய்து ஆட்கொண்டருளவேண்டும் என்பதாம்.

(வி-ரை.) 'அவனருளாலே அவன்றாள்' வணங்குத லென்னும் பான்மைகொண்டு நிலையில்லாத யாக்கையைப்பழித்து நினது திருவடிமலர்களைப் பற்றும்படியான புத்தியையளித்து ஆட்கொண்டருளவேண்டுமென்று பிரார்த்தித்தாரென்க. "நாச்செற்றுவி க்குண்மேல் வாராமு னல்வினை, மேற்சென்று செய்யப்படும்" என்னுங் குறள் வாக்கின்பிரகாரம் மரணம் வருமுன்னடியே நின்றிருவடிமலரைச் சிந்திக்கும்படி அருளல் வேண்டுமென்றார்.

"நார்த்தொடுத் தீர்க்கிலெ னன்றாய்ந் தடக்கிலென்
பார்த்துழிப் பெய்யிலென் பல்லோர்—பழிக்கிலென்
றோற்பையு ணின்று தொழிலறச் செய்தூட்டுங்
கூத்தன் புறப்பட்டக் கால்." —நாலடியார்

தீதோ மரணந் தவிரும் பிறப்பறுந் தீயகற்புந்
தீதோ மரணம் பரமீது தானவர் சேனை முற்றுந்
தீதோ மரணந் தனபூசு ரர்திரண் டேத்தியமுத்
தீதோ மரண மலையாளி யேன்றுரை தேன்னுறவே. (55)

(ப-ரை.) தீதோ - தீங்குமாத்திரமோ, மரணம் - இறப்பும், தவிரும் - ஒழியும், பிறப்பு - சனனமும், அறும் - நீங்குமாதலால், தீய - கொடியதொழிலே, கல் - கற்கின்ற, புந்தீ - மனமே! தோம் - குற்றத்திற்கு, அரண் - இடமாகிய, அம்பாமீது - சமுத்திரத்திலே, தானவர் - அசுரருடைய, சேனைமுற்றும் - சேனையனைத்தையும், தீ - தகித்த, தோமர - கைவேலையுடையோனே! ணந்தன - கிருபையாளனே! பூசுரர் - வேதியர்கள், திரண்டு - கூட்டமாகக்கூடி, ஏத்திய - வணங்கத்தக்க, முத்து - சரவணமுத்தையனே! ஈது - இந்த, ஓமரண - மறையோர்செய் வேள்வியின் அவிர்ப்பாகத்திற்குரியவனே! மலையாளி - குறிஞ்சிநிலத்தை யாள்பவனே! என்றுரை - என்று துதிசெய், தென் உற - அழகுபெறும்படியாக.

(க-ரை.) ஹே மனமே! நீ துன்மார்க்கத்திற் செல்லாதே, சூர சங்காரஞ்செய்த வேலாயுதா! கிருபாநிதியே! பரிசுத்தவான்களாகிய அந்தணர்கள் சிந்திக்கின்ற சடாட்சர மந்திரசொரூபனே! யாகங்களை ரட்சிக்கின்ற தலைவனே! மலைவளங்களையே கோயிலாகக்கொண்டு திருவிளையாடற் புரிகின்ற முருகப்பெருமானே! என்று அவரை மெய்யன்புடன் வணங்குவையாகில் தீமையும் செனன மரணங்களும் ஒழிந்து நித்தியானந்த வாழ்வை யடைவாய் என்பதாம்.

(வி-ரை.) தானென்னு மகங்காரம்நிறைந்த விடயச் சேற்றில் அழுந்தி மெய்யைப் பொய்யாகவும், பொய்யை மெய்யாகவும், நம்பிக்கைகொண்ட துன்மார்க்கத்திற் செல்வது மனத்தினியல்பாதலின் அவ்வித சந்தேக விபரீதங்களை நீக்கி சன்மார்க்கத்தை யனுட்டித்து முருகப்பெருமானது புனிதம்பெற்ற திருநாமங்களைத் துதிசெய்து சனன மரணமாகிய துக்கசாகரத்தை நிவர்த்திக்கவேண்டுமென அறிவுறுத்தினரென்க. இவைபோன்று நமது சுவாமிகள் கந்தரனுபூதியிலும் "கிரிவாய் விடுவிக்ரமவே லிறையோன், பரிவாரமெனும்

பதமே வலேயே, புரிவாய்! மனனே! பொறையா மறிவா, லரிவா யடியோ டுமெகந் தையையே'' கந்தரனுபூதியில் நவின்றுள்ளது காண்க. தாயுமானவர் வாக்கையும் இங்கு கவனிக்க.

"ஐய வாதனைப் பழக்கமே மனநினை வதுதான்
வைய மீதினிற் பரம்பரை யாதினு மருவும்
மெய்யி னின்றொளிர் பெரியவர் சார்வுற்று விளங்கிப்
பொய்ய தென்பதை யொருவிமெய் யுணருதல் போதம்."

மனம் நல்லவழியை நாடவேண்டுமென்பதும், காருண்யமூர்த்தி யாகிய முருகப்பெருமானைத் தியானித்து முத்தியின்பம் பெறவேணு மென்பதையும் ஈதுணர்த்துவதாம்.

"பொல்லா மனத்தை யொடுக்கி நிட்டை
பொருந்தி நோக்கல் வாநோக்கும்
இல்லா மாயைதனைத் துணிவா யில்லை
யெனவே காண்குதற்கே."

—அத்துவிதவுண்மை

தென்ன வனங்கனஞ் சூழ்காத் திரிநக சூலகரத்
தென்ன வனங்கனந் தப்பத நீட்டினன் செல்வமுன்பின்
தென்ன வனங்கனன் னீற்றுற் றிருத்திய தென்னவின்னந்
தென்ன வனங்கனங் கைச்சிலைக் கூனையுந் தீர்த்தருளே. **(56)**

(ப-ரை.) தென்னவனம் - தென்னஞ்சோலைகளையும், கனம் - மேகங்கள், சூழ் - கவிந்திரானின்ற, கா - பூஞ்சோலைகளையுமுடைய, திரிநக - திருத்தணி, திருப்பரங்குன்று, திருச்செங்கோடு என்னு மூன்று மலைகளையுடையவனே! சூலகர - கையிற் சூலாயுதத்தை யுடைய, தென்னவன் - தென்றிசைத் தலைவனாகிய யமனது, அங்கம்

நந்த - உருவழியும்படி, பதம் நீட்டினன் - திருப்பாதத்தை நீட்டி யுதைத்த பரமசிவனது, செல்வ - மைந்தனே! முன் - முற்காலத்தில், பின் - பின்னே கூனேயுடைய, தென்னவன் - பாண்டியனது, அங்க - உடலே, நல் நீற்றல் - நன்மையைத்தரும் விபூதியினுல், திருத்தியது என்ன - நிமிர்த்தினதுபோல, இன்னம் - இப்போதும், தென்ன - வனப்புவாய்ந்த, அனங்கன் - மன்மதனது, அம் - அழகிய, கை - கையிற்பிடித்த, சிலே - கருப்புவில்லினது, கூனேயும் - வளேவையும், தீாத்து - நீக்கி, அருள் - மதன் என்மேற் பாணப்பிரயோகம் செய்யாதபடி உன்மாலேயைத் தந்தருளவேண்டும்.

(க-ரை.) ஹே தணிகாசலா! திருப்பரங்குன்றுதிப! திருச்செங்கோட்டு முருக! அந்தகனேயுதைத்த அரனுர்புதல்வா! தென்னவனுகிய பாண்டியன் கூனே நிமிர்த்தியதுபோன்று என்மீது காமக்கணேயாகிய மலர்வாளி தொடுத்தற்குரிய மன்மதனுடைய கருப்புவில்லின் வளேவையும் கெடுத்தருளவேண்டும் என்பதாம்.

(வி-ரை.) திரிநக, என்பது தணிகை, பரங்கிரி, திருச்செங்கோடு என்னும் மூன்று மலேகளேயுங் குறிக்கின்றதாகும். ஞானசம்பந்தராகத்தோன்றி, சமணமதந் தழுவியுள்ள பாண்டியன் சுரநோய்நீக்கி அவன் கூனேயும் நிவர்த்திசெய்து சைவசமயத்திற்சேர்த்து கூன் பாண்டியனென்னும் பெயரையொழித்து நெடுமாற நாயனுர் என்னும் நாமம் பொருந்தச் செய்தமையையும் இங்கு விளக்கினுர் என்க. அதுபற்றி "முன்பின் தென்னவ னங்கனன் நீற்றுற் திருத்திய தென்ன" என்றுர். மனம் சிற்றின்பத்தை நாடாது பேரின்பத்தையே நாடவேண்டுமென்னுந் தன்மைகொண்டு மன்மதன் கருப்புவில்லின் வளேவை நிமிர்க்க வேண்டுமென்பதுபற்றி "தென்னவங்கனங் கைச் சிலேக்கூனேயுந் தீர்த்தருளே" என்றுர் என்க.

"கல்லை யுற்ற கருத்தினர் கார்நிறத்
தல்லை யொத்த குழலின ராசையால்
எல்லை யற்ற மயல் கொள வோவெழில்
தில்லை யிற்றிக ழுந்திருப் பாதனே."

—தாயுமானவர்

தீத்தன் பரவை வெளிநீங்கிச் சேய்தொழச் செல்பதவுத்
தீத்தன் பரவை முறையிட மாங்குறை தீங்குறவே
தீத்தன் பரவை தழைக்கவிண் காவெனச் சென்னியின்மேல்
தீத்தன் பரவயில் வேலத்த னேகுரு சீலத்தனே. **(57)**

(ப-ரை.) *தீத்தன் - கிரணங்களையுடைய சூரியன், பரவு - சஞ்சரிக்கின்ற, ஐ - அழகிய, வெளி – ஆகாசத்தையும், நீங்கி - கடந்து, சேய் - பிள்ளையாகிய பிரமாவும், தொழ - வணங்கும்படி, செல் - சென்று, பதவுத்தீத்தன் - பாதத்தை யூர்த்தாண்டவமாக எடுத்த திருமாலும், பரவை - சமுத்திரமும், முறையிட - அலறுகையில், மா - மாவுருக்கொண்டு நின்ற சூரனுல், குறை - உண்டான குறைபாட்டையும், தீங்கு - தீமையையும், உறவே - முழுதும், தீத்து - அற்றுப் போகும்படியொழித்து, அன்பர் - அடியார்களுடைய, அவை - கூட்டம், தழைக்க - அதிகரிக்கும்படி, விண் - அமராபதியை, கா என - காப்பாற்று என்றுசொல்லி, சென்னியின்மேல் - முடியின்மேல், தீத்தன் - கங்கையைச் சூடிய பரமன், பரவு - துதித்த, ஐயில் - கூரிய, வேல் - வேலாயுதத்தை, அத்தனே - கரத்திலுடைய முருகக்கடவுளே! குருசீலத்தனே - குருவாகிப் பரமனுக்குப் பிரணவப்பொருளை யுபதேசித்த குணக்குன்றமே.*

(க-ரை.) *அரிபிரமேந்திராதி தேவர்கட் கபயமளித்தும், அவர்களதுகுறை தீரும்பொருட்டு அசுரர்களைச் சங்கரிக்கும்படி தூண்டிய*

சிவபிரான் வாக்கியப்பிரகாரம், பூர்த்திசெய்து அன்பர்கூட்டங்களை யும், அமராபதியையும் காத்தருளிய வெற்றிவேலாயுதனே! அந்தச் சிவனுக்கு ஞானசாரியனாகக் குருபீடத்தமர்ந்து பிரணவோபதேசம் புரிந்த பெரியோனே என்பதாம்.

(வி-ரை.) முருகன் மும்மூர்த்திகட்கு மேலான தனிப் பரம் பொருள் என்பதை இங்கு விளக்குவனவாகும். "ஊரிலான் குணங் குறியிலான் செயலிலா னுரைக்கும், பேரிலானொரு முன்னிலான் பின்னிலான் பிரிதோர், சாரிலான்வரல் போக்கிலான் றனக்கு; நேரிலான் குகக்கடவுளா யென்னுளே நின்றான்'' என்னுஞ் செய் யுளினானு முணர்க. நம்பெருமானார் மந்திரரூபமூர்த்தியாதலின், யாககாலத்தே "சுப்பிரமண்யோம்! சுப்பிரமண்யோம்!! சுப்பிரமண் யோம்!!! என மூன்றுமுறை கூவியழைக்கின்ற மந்திரமிவரே யாமென்பது சிவாகமங்களின் றுணிபாகும்.

"எக்கலைக்கும் பூதங்க ளெவற்றினுக்கும்
பிரமனுக்கு மீச னென்னத்
தக்கமுதற் பரப்பிரமஞ் சதாசிவனே
மெனவேதஞ் சாற்று மல்லான்
முக்கனல்சூழ் வேள்வியிற்சுப் பிரமணிய
னேமெனவு முக்காற் கூறு
மிக்கருத்தை யறியானை யெவ்வாறு
விடுவிப்ப தியம்பு மின்னே."

—காஞ்சிப்புராணம்

சீலங் கனமுற்ற பங்கா கரசல தீரக்கநி
சீலங் கனமுற்ற முத்தூர்சேந் தூர சிகண்டியஞ்சு
சீலங் கனமுற்ற வேதனை மேவித் தியங்கினஞ்சீ
சீலங் கனமுற்ற விப்பிறப் பூடினிச் சேர்ப்பதன்றே. (58)

(ப-ரை.) சீலம் - தயாளத்திலும், கன - மகத்துவத்திலும், முற்று - மேற்பட்ட, அ பங்கா - பங்கமில்லாதவனே! கர - கோபத்தையுடைய, சலதி - சமுத்திரத்தின்கண், ரக்க - அசுரக்கூட்டமாகிய, திசி - இருளை, லங்கன - கடிந்தவனே! முற்றம் - முன்றிலின்கண், முத்து - முத்துகள், ஊர் - இரைந்திருக்கின்ற, செந்தூர - திருச்செந்தூரில் வாழ்பவனே! சிகண்டி - மயில்வாகனனே! அம் - அழகிய, சுசீ - பரிசுத்தமானவனே! லங்கனம் - பசியாகிய அக்கினியினால், உற்ற - பொருந்திய, வேதனை - வருத்தத்தை, மேவி - அடைந்து, தியங்கினம் - மயங்குகின்றோம், சீசீ - மிகவு மிகழ்ச்சியான, லங்கனம் - பங்கமாம், முற்ற - முழுதுமாதலால், இப்பிறப்பூடு - இப்படிப்பட்ட சனனத்திலே, இனி - இனிமேலும், சேர்ப்பது - சேரப்பண்ணுவது, அன்று - நன்றல்ல.

(வி-ரை.) ஹே தயாளசம்பன்னனே! மகத்துவம் வாய்ந்த பெரியோனே! சமுத்திரத்தினிடத்தே இருட்கூட்டங்கள் போன்று கிளைத்து மாயஞ்செய்த அசுரர்களைச் சங்கரித்தவனே! திருச்செந்திலாதிபதியே! பரிசுத்தமானவனே! அழகிய மயிலை வாகனமாக வுடையவனே! வயிற்றுப்பசியினால் மயக்கத்தைத் தருகின்ற இப் பிறவியானது இகழ்ச்சிக்குரியதாதலின் இனியு மிவ்வித பிறவியை யடையாதவாறு என்னை ஆட்கொண்டருள வேண்டும் என்பதாம்.

(க-ரை.) உதராக்கினியாகிய பசியினால் வருந்துகின்ற செனனத்தை வெறுத்துப் பிரார்த்தித்தா ரென்பதாம்.

(வி-ரை.) பிறவித்துன்பங்களில் பசியாகிய உதராக்கினியே பிரதானமாகும். "கொடிது கொடிது வறுமை கொடிது" என்னும் ஔவை வாக்கியத்தின் பொருள் பசியையே குறித்தற்குரியதாகும். "அன்னவிசாரம் அதுவேவிசாரம்" என்பதும், "சாணும்வளர்க்க

அடியேன் படுந்துயர் சற்றல்லவே'' என்பதும் பட்டினத்தடிகளின் திருவாக்கியமாகும். இன்னும் உலகின்கண்ணுள்ள எண்ணில்லாக் கோடி யுயிர்களையும் பசிநோய் வருத்துகின்றதென்பது தெள்ளிய சொல்லாகும். இதிகாசபுராணங்களும் இப்பசிக்கொடுமைபற்றி மிகவும் விளக்கியிருக்கின்றன. அதுபற்றியே அருணகிரிநாத சுவாமிகளும் உதராக்கினியினால் வாடுகின்ற சனனம் இகழ்ச்சிக் குரியதே எனக்கொண்டு சீசீ, யென வெறுத்து முருகப்பெருமானைப் போற்றியுள்ளார். "சடகசட மூடமட்டி பவவினையிலேசெனித்த தமியன்மிடியான் மயக்க முறுவேனோ" என்பதும் அவரது திருப்புகழ் வாக்கியமேயாகும்.

"ஒருநா ளுணவை யொழியென்றா லொழியா
யிருநாளைக் கேலென்றா லேலாய்—ஒருநாளும்
என்னோ வறியா விடும்பைகூ ரென்வயிறே
யுன்னோடு வாழ்த லரிது" —மூதுரை

சேர்ப்பது மாலய நீலோற் பலகிரித் தெய்வவள்ளி
சேர்ப்பது மாலய முற்றா ரெனப்பலர் செப்பவெப்புச்
சேர்ப்பது மாலய வத்தைமன் யாக்கை சிதைவதன்முன்
சேர்ப்பது மாலய வாசவன் செப்பிய செப்பதத்தே. (59)

(ப-ரை.) சேர் – நெருங்கியிருக்கின்ற, பதும - தாமரைகளும், ஆல - அசைகின்ற, அம் - சலத்தின்கண், நீலோர்ப்பல - செங்கழுநீர் மலர்கின்ற, கிரி - திருத்தணியில்வாழும், தெய்வ - தெய்வீகமாகிய, வள்ளி - வள்ளியம்மைக்கு, சேர்ப்ப - தலைவனே! துமா - தும்மலினால், லயம் உற்றார் - மரணமடைந்தார், என - என்று, பலர் - பலரும், செப்ப - சொல்ல, வெப்பு - வெதும்புகின்ற, சேர்ப்பது - சிலேத்துமமும், மால் - மயக்கமும், அயவத்தை - பஞ்சாவஸ்தைகளும், மன்-

நிலைபெற்ற, ஆக்கை - இவ்வுடல், சிதைவதன்முன் - அழிவதற்கு முன்னமே, சேர்ப்பது - என்னைச் சேர்த்தருளவேண்டும், மால் - விஷ்ணுவும், அய - பிரம்மாவும், வாசவன் - இந்திரனும், செப்பிய - புகழ்ந்தோதிய, செ - சிவந்த, பதம் - திருவடித்தாமரையில்.

(க-ரை.) ஹே தணிகாசலா! ஹே வள்ளிநாயகா! தும்மலிற் கூட மரணமாகுந் தன்மையதாகிய சரீரமானது, சிலேத்துமநாடியின் சேட்டையினால் அழிந்துவிடுகின்ற முன்னமே, பிரமேந்திராதிகளும் போற்றற்குரியதாகிய நினது சரணபங்கயங்களில் அடியேனைச் சேர்த்து ஆட்கொண்டருளல் வேண்டும் என்பதாம்.

(வி-ரை.) சரீரம் நிலையற்றதாதலின் மரணம் வருமென்கிற நிச்சயத்தினால் எடுத்த சென்மம் வீணாகிவிடாது உடல் அழிந்துபோகு முன்னர் பரமானந்தபோதம் அடைய வேண்டுமென்னுங் காரணமாக முருகன் திருவடிப்பேற்றை தீவிரத்தன்மையுடன் நாடினாரென்க. "ஒன்றே செய்யவும் வேண்டும் ஒன்றும், நன்றேசெய்யவும் வேண்டும் நன்றும், இன்றேசெய்யவும் வேண்டும் இன்னும், நாளைநாளை என்பீராகில், நம்முடை முறைநாளாவதுமறியீர், நமனுடைமுறைநாளாவதுமறியீர்" என்னுங் கபிலர் வாக்கிய முதாரணங்காண்க. அருவமாயும் நித்தியமாயுமுள்ள உயிருக்குத் தோன்றலும் கெடுதலுமில்லாமையால், அத்தோன்றலையுங் கெடுதலையும் உருவமாயும் அநித்யமாயுமுள்ள சரீரம் உடையதாதலின், உயிர், தான் செய்த வினைப்பயனை உடலோடு கூடிநின்றே அனுபவித்தல் வேண்டுமாதலானும் அத்தருணம் சன்மார்க்க ஞானபரிபாகத்தால் வினையை யொழிக்குந் திருவருளைப்பெற்று பிறவிநீக்கம் அடையவேண்டுமென்னும் பான்மையை யுணர்த்துவனவாகும்.

"நேற்றுளா ரின்று மாளா நின்றனர தனைக் கண்டும்
போற்றிலே னின்னை யந்தோ போக்கினேன் வீணேகாலம்
ஆற்றிலே னகண்டானந்த வண்ணலே யளவின் மாயைச்
சேற்றிலே யின்னம் வீழ்ந்து திளைக்கவோ சிறியனேனே."
—தாயுமானவர்

சேப்பத் தமதிலை மாற்றார் கொளுமுன்னஞ் செல்வர்க்கிடச்
செப்பத் தமதிலை யெங்ஙனுய் வார்தெய்வ வேழமுகன்
செப்பத் தமதிலை வாணுத னோக்கினர் சேணில் வெள்ளிச்
செப்பத் தமதிலை வென்றார் குமாரவத் திக்கரசே. (60)

(ப-ரை.) *செப்ப - நடுவுநிலைமையால், தமது — தங்களுடைய, இலை - இல்வாழ்க்கைக்குரிய மனைவியையும், மாற்றார் - பகைவர்கள், கொளுமுன்னம் - கைப்பற்றிக்கொள்ளு முன்னமே, செல்வர்க்கு - ஐசுவரியவான்களுக்கு, இட (வறியோர்க்கு) இட்டுண்ண, செப்பு - சிவந்த, அத்தம் அது - கையானது, இலை - இல்லையாயின், எங்ஙன் - எப்படி, உய்வார் - பிழைப்பார்கள், தெய்வ - தெய்வீகமாகிய, வேழ முகன் - யானைமுகவிநாயகரது, செப்பு - புகழப்பட்ட, அத்தம் - (அவரது) தம்பியே! திலை - சிதம்பர நடேசரான, வாள் - ஒளி பொருந்திய, நுதல் நோக்கினர் - நெற்றிக் கண்ணையுடையவரும், சேணில் - ஆகாசத்தில், வெள்ளி - வெள்ளியும், செப்பு - செம்பும், அத்த - பொன்னுமான, மதிலை - மதிலையுடைய திரிபுரத்தை, வென்றார் - செயித்தவருமாகிய பரமசிவனது, குமார - மைந்தனே! அத் திக்கு - தெய்வயானை நாயகிக்கு, அரசே - தலைவனே!*

(க-ரை.) *யானைமுக விநாயகருக் கிளையவனாகிய கந்தப்பெருமானே! சிரித்துப் புரமெரித்த நெற்றிக் கண்ணையுடைய சிவபிரானது அருமைச்செல்வனே! ஐசுவரியம்படைத்த மாந்தர்கள் அச்*

செல்வம் நிலையில்லாததென்று தெரிந்திருந்தும் வறியோர்க்கிட்டுண்ண மனங்கொள்ளாராயின் எதிர்காலத்தில் தங்கட்குண்டாகும் அந்த வறுமைத் துன்பத்தினின்றும் எவ்விதம் ஈடேறுவார்களென்பதாம்.

(வி-ரை.) "பிறக்கும்பொழுது கொடுவந்ததில்லை பிறந்துமண்மே, லிறக்கும்பொழுது கொடுபோவதில்லை யிடைநடுவிற், குறிக்குமிச் செல்வஞ் சிவன்றந்ததென்று கொடுக்கறியா, திறக்குங் குலாமருக் கென்சொல்லுவேன் கச்சியேகம்பனே." என்னும் பட்டினத்தடிகளது வாக்கின்பிரகாரம், பிறப்பிற்கும் இறப்பிற்கு மத்தியகாலத்தில் அவரவர் வினைக்கீடாக அனுபவிக்கப்படுகின்றதாகிய, செல்வம், வறுமை என்பவைகளில் செல்வம் படைத்த மாந்தர்கள் வறுமையாளருக் குதவவேண்டுமென்பது நீதிசாதனமாகும். அவ்விதமல்லாத அறிவிலிகள் தன்னலமும் கர்வமுங் கொண்டு டம்பவாழ்க்கைநடத்தி மயங்கி மண்ணாய்விடுவதும், அல்லது தனது வினைவசத்தால் அடைந்த ஐசுவரியங்களெல்லாம் இழந்து தரித்திரர்களா யுழன்றுதிரிவதும் புராதனந்தொட்டு வுலகமுள்ளபரியந்தம் வர்த்தமானகாலத்தினும் சாதாரணமாக நடைபெறுவதைப் பிரத்யட்சமா யுணரக்கூடியதாதலின் அவ்வித கருத்தைக்கொண்டே நமது சுவாமிகள் வெளியிட்டாரென்க. மூடாது செல்வச்செருக்கின் றன்மைபற்றி சிந்தாமணியார் செப்புகின்ற வுதாரணமிங்கு காண்க.

"பெருத்திடுஞ் செல்வமாம் பிணிவந் துற்றபோ
திருத்தெரி யாம லொளி மழுங்கிடும்
மருத்துள தோவெனில் வாகடத் தில்லையாம்
தரித்திர மென்னுமோர் மருந்திற் றீருமே."

நிலையில்லாத செல்வம்படைத்த மாந்தர்கள் மறுமையின்பத்தைக் கருதி இம்மையிலேயே நல்லதர்மங்களைச்செய்து மனச்சாந்தியடைய வேண்டுமென்பதை ஈதுணர்த்துவதாகும்.

"வாழ்வாவது மாயம்மிது மண்ணாவது திண்ணம்
பாழ்போவது பிறவிக்கடல் பசிநோய் செய்தபறிதான்
ருழாதறஞ் செய்ம்மின் றடங்கண்ணான் மலரோனுங்
கீழ்மேலுற நின்றான் றிருக் கேதாரமெனீரே."
—தம்பிரான்தோழர்

திக்கர சத்தி தவன்சென்று முன்றி திகுமரர்வந்
திக்கர சத்தி யிடத்தோ யென்செய்வ தேனத்தருநீ
திக்கர சத்தி விதிர்த்திலை யேலெவன் செய்குவரத்
திக்கர சத்தி யலைவாய் வளர்நித் திலக்கொழுந்தே. (61)

(ப-ரை.) திக்கர் - திக்குப்பாலகர்களும், அச - ஆட்டை, நித வன் - நிலைபெற்ற வாகனமாகவுடைய அக்கினியும், சென்றுமுன் - முற்காலத்திற் பரமசிவனிடத்திற்போய், திதிகுமரர் - திதியின் பிள்ளைகளாகிய அசுரர்கள்செய்த, வந்திக்கு - கொடுமைக்கு, அர - சங்கரனே! சத்தி - உமையை, இடத்தோய் - இடதுபாகத்திலுடை யோனே! என்செய்வது - எப்படித் தப்பிப்பிழைப்போம், என - என்று முறையிடுகையில், தரும் - அப்பரமசிவன் உமக்களித்தருளிய, நீதி (அடியார் இடரைநீக்கும்) நெறியையுடைய, கரசத்தி - திருக் கரத்தின் வேலாயுதத்தை, விதிர்த்திலையேல் - நீயெறிந்து அவ்வசுரர் களை யழிக்காவிடில், எவன் செய்குவர் - அத்தேவர்கள் என்ன செய்து பிழைப்பார்கள்? அத்திக்கு - தெய்வயானைக்கு, அரசு - நாயகனே! அத்தி - சமுத்திரத்தின், அலைவாய் - அலைமோதுகின்ற திருச்செந்திற்பதியில், வளர் - வளர்கின்ற, நித்திலக்கொழுந்தே - முத்தின் கொழுந்தொளியானவனே!

(க-ரை.) ஹே தேவகுஞ்சரிநாயக! திருச்செந்தூர் என்னும் பதியிற் கோயில்கொண்டருளிய முத்தையனே! சிவபிரானிடம்

வானவர்கள் முறையிடுதற்காக நீ அவர்கள்மீது காருண்யங்கொண்டு, வேலாயுதத்தை ஏவி பகைவர்களாகிய அசுரர்களை சங்காரஞ் செய்திராவிடில் துன்பக்கடலினின்றும் அந்தத்தேவர்கள் எவ்விதம் கரை ஏறுவர் என்பதாம்.

(வி-ரை.) முருகப்பெருமான் திருக்கரத்தேயுள்ள வேலாயுதமானது அடியார்களின் துன்பங் களைய வல்லதாதலின், அசுரர்களைக் கொன்று வானவர்களை ரட்சித்த காரணத்தை இங்கு விளக்கியுள்ளாரென்க. சிவனே குகனாகவும் சத்தியே வேலாயுதமாகவும் கொண்டு சிருட்டி, திதி, சங்காரமென்னு முத்தொழிலுமியற்றி சமஸ்த வுலகங் களையும் காத்தருள்கின்றா ரென்பதுமாகும்.

"சத்தியுரு வெனலானும் மத்துணைவே
திருக்கரத்திற் றுங்கலானுஞ்
சித்துருவின் றெழிலானுஞ் செவ்வேடன்
வனசமலர்க் கரஞ்செம்பாதம்
வித்துரும முகத்தானு மன்னவனே
சத்திமான் விளம்புமீது
சத்தியமுக் காலுமிது சத்தியமே
வேதமதுஞ் சாற்றுஞ்சாட்சி."

—சித்தாந்தபோதம்

திலமுந் தயில முநிகர வெங்குந் திகழ்தருசேந்
திலமுந் தயில முருகா வேனுதத் திநகையினித்
திலமுந் தயிலமு தத்தா லுருகிய சித்த வென்னே
திலமுந் தயில கலவினை மேவித் தியங்குவதே. (62)

(ப—ரை.) திலமும் - எள்ளும், தயிலமும் - எண்ணெயும், நிகா - ஒப்பாக, எங்கும் - எல்லாவிடங்களிலும், திகழ்தரு - நிறைந்து

விளங்குகின்ற, செந்தில - திருச்செந்திற்பதியோனே! முந்து - ஆயுதவருக்கங்களின் முதன்மையான, அயில - வேலாயுதத்தை யுடையவனே! முருகா - குமாரக்கடவுளே! எனுது - என்று துதித்து ஓலமிடாது, அத்தி - தெய்வயானை யம்மையாரது, நகை - தந்தமாகிய, இன் - இனிய, நித்திலம் — முத்தானது, உந்து - செலுத்துகின்ற, அயில் - நுகரப்பட்ட, அமுதத்தால் - அதர அமுதத் தால், உருகிய - குழைந்த, சித்த - இருதயத்தை யுடையோனே! என் - என்னகாரணம், எதிலம் - (வழியடிமையாகிய யாம்) அயலார் போல, முந்தயில் - முற்சனனத்தினுல் வந்த, அகல - பெரிதான, வினைமேவி - தீவினையுற்று, தியங்குவது - வருந்துகின்றது.

(க-ரை.) எள்ளுக்கு ளெண்ணெய்போன்று எங்கும் பிரகாசமாய் நிறைந்துள்ள பரம்பொருளே! தெய்வயானையம்மையி னின்பநாய கனே! பிரபாவந்தங்கிய வேலாயுதத்தையுடையவனே! முருகப் பெருமானே! செந்திலாதிபதியே! என்று வணங்கித் துதியாது நினது திருவடித்தொண்டனுகிய யான் அன்னியன்போன்று பழ வினையால் மயங்குகின்றது யாது காரணமோ? என்பதாம்.

(வி-ரை.) பரம்பொருள் எங்கும் நிறைந்தவராதலின் எள்ளில் எண்ணெய்போன்றவரென உவமைகூறினுர். உபநிடதம் இங்கு உதாரணம் காட்டுவது காண்க. "யாரில் இந்தப் பிரபஞ்சம் சுழன்று கொண்டிருக்கிறதோ, அவர், காலம், உலகம், உருவமுடையபொருள் கள், இவை எல்லாவற்றையும்விடச் சிறந்தவர், வேறுனவர், அவர் தருமத்திற்கு மூலமானவர், செல்வத்திற்குத் தலைவர், அவர் எல்லா வுயிர்களுக்கும் உள்ளே யிருப்பவர், அழிவற்றவர், உலகத்திற் காதார மானவர், அவர் நன்மையே வடிவாகவுடையவர்" என அவர் பிரபா வத்தை விளக்குவனவாகும். அவரை ஆத்மஞானத்தா லுணர்ந்து பேரின்பநிலையை யடையாமல் அஞ்ஞானமயக்கில் வீழ்ந்தேன் என

வும் அவனடியவனுகிய எனக்குப் பழவினையும் குறுக்கிடுமோ என்னும் ஐயமுற்று நவின்றுள்ள வாக்கியமெனவும் இங்கு புலனுகின்றன. அருணகிரியார் அதிதீவிரபக்குவி யாதலின் மென்மேலும் உன்னத லட்சியத்தைநாடி தன்னைத்தாழ்த்தி முருகன் றிருவருளை வியந்து கூறினர் என்க. "நாயேன்பல நாளும்நினைப் பின்றிமனத் துன்னைப், பேயாய்த் திரிந்தெய்த்தேன்" என்னுஞ் சுந்தரர் வாக்கிய மிங்கு உதாரணமாகும். நமது சுவாமிகளும் கந்தரனுபூதியில் "பாழ்வாழ் வெனும்இப் படுமாயையிலே, வீழ்வாயெனவென்னை விதித்தனையே" எனவும் நவின்றுள்ளது காண்க.

தியங்காப் பொறியுண் டெனுந்தனுத் தீதலு மேதியையூர்
தியங்காப் பொறியுண் டவமிலி யேயென்று செப்பலுஞ்சத்
தியங்காப் பொறியுண் டயன்கைப் படாது திரவேற்புநி
தியங்காப் பொறியுண் டைபண்டு யப்போர் செய்த சேவகனே.

(ப-ரை.) தியங்கா - மயங்காத, பொறியுண்டெனும் - ஐம்பொறிகளையுடைய, தனு - உடல், தீதலும் - வேகின்றதும், மேதியை - எருமைக்கடாவை, ஊர்தி - வாகனமாகவுடைய எமன், அங்கா - (என்னைக்கொண்டுபோய்) வாயைத்திற என்றும், பொறி - யான் செய்த பாவத்திற்காகத் தியை, உண் - தின் என்றும், தவம் இலையே யென்று - நற்றவத்தைச் செய்யாத பாவியே யென்றும், செப்பலும் - சொல்லுதலும், சத்தியம் - உண்மையாதலால், கா - இனியாவது காத்தருளும், பொறி உண்டு - பிரமலிபியடைந்து, அயன்கைப் படாது - பிரமதேவன் சிருட்டிக்குள்ளாகாது பிறப்பொழியும்படி, திர - நிலைபெற்ற, வெற்பு - கிரவுஞ்சகிரியை, நிதியம் - சங்கநிதியும் பதுமநிதியும், கா - கற்பகத்தருவும், பொறியுண்டை - செல்வத் திரளையுமுடைய பொன்னுலகானது, பண்டு - பூர்வத்தில், உய் -

பிழைக்கும்படி, போர்செய்த - போரினைச் செய்துவென்ற, சேவகனே - வீரனே.

(க-ரை.) பற்பல மாயைக் கிருப்பிடமாகிய கிரவுஞ்சகிரியைப் பிளந்தொழித்து விண்ணுலகத்தைக் காத்தருளிய வெற்றிவேலாயுதா! ஐம்புலனுகர்ச்சிக்குரிய இந்த சரீரம் வெந்து சாம்பலாவதுடன் இம்மையிற்செய்த தீவினைச்செயலின் பயனாக எமதண்டனையைப் பெற்று வருந்துவதும் உண்மையாதலின், நினது அடியவனாகிய எனக்கு இனியாகிலும் பிறவாமையாகிய முத்தியின்பத்தை அருள் புரியவேண்டும் என்பதாம்.

(வி-ரை.) பிரபஞ்ச மாய்கையையே கிரவுஞ்சகிரி யெனவும் கொள்ளத்தக்கதாகும். மாயையாகிய அவித்தையே பிறவிக்கு வித்தாதலின் அதையொழித்து முத்தியின்பத்தை யருளுந்தெய்வம் வேலாயுதப்பெருமானே யாதலின், அருணகிரிசுவாமிகள் விடய வாதனை யொழிந்து மனத்தூய்மையடைந்த திருவருட் செல்வம் படைத்து பிறவியை வெறுத்து பேரின்ப நிலையைநாடி போற்றியுள்ளாரென்பது இங்கு கொள்ளத்தக்கதாகும். சுவாமிகளின் பரிபக்குவ நிலைக்கிசைந்து முருகப்பெருமான் சரணகமலங்களையே பற்றிப் புகன்றுள்ள அருள்வாக்காகுமென்க. உதாரணம் வருவனகாண்க. "மற்றுப்பற்றெனக் கின்றிநின்றிருப் பாதமே மனம்பாவித்தேன், பெற்றலும் பிறந்தேனினிப் பிறவாததன்மைவந் தெய்தினேன்" தம்பிரான்தோழர்.

சேவக மன்ன மலர்க் கோமுன்னி சோலத் தெய்வவள்ளி
சேவக மன்ன வதனும் புயகிரி செற்றமுழுச்
சேவக மன்ன திருவாவி னன்குடிச் செல்வகல்விச்
சேவக மன்ன முனிக் கெங்ங ஞணித் திகைப்புற்றதே. (64)

(ப-ரை.) சே - இடபவாகனத்தின், அகம் - மேல், மன்னு - நிலை பெற்றுவருகின்ற, அமலர்க்கு - பரமசிவனுக்கு, ஓம் - பிரணவப் பொருளே, முன் - பூர்வத்தில், நீ சொல் - நீ யுபதேசிக்க, தெய்வ — தெய்வீகமாகிய, வள்ளி - வள்ளிநாயகியினது, சே - சிவந்த, அகம் அன்ன - இருதய தாமரைபோன்ற, வதன அம்புய - முகாரவிந்தனே! கிரி - கிரவுஞ்சகிரியை, செற்ற - பிளந்த, முழுசேவக - ஒப்பற்ற வீரனே! மன்ன - தலைவனே! திருவாவினன்குடி செல்வ - சிறந்த பழனிப்பதி வாழுங் குமாரக்கடவுளே! கல்விச்சேவகம் - வேதமோ திந்திறத்தையும், அன்னம் - அன்னவாகனத்தையுமுடைய, முனி - பிரமா, எங்ஙன் - எவ்விதத்தினாலே, நாணி - வெட்கி, திகைப்புற்றது- அப்பிரணவத்திற்குப் பொருள்தெரியாமல் மயங்கியது.

(க-ரை.) சுந்தரியாகிய வள்ளியம்மையாரின் அன்பில் மலர் கின்ற முகாரவிந்த முடையவனே! கிரவுஞ்சகிரியைக் கூறுபடுத்திய வீரனே! பழனியங்கிரிச்செல்வனே! சாசுவதமாகிய தலைவனே! நீ சிவனாருக்குபதேசித்த, வேதரகசியமாகிய பிரணவப்பொருளே, அந்த வேதங்களுக்குரிய அந்தணனாகிய நான்முகன் சொல்வதற்கிய லாது நினது சந்நிதியில் வெட்கித் திகைப்படைந்தது யாதுகாரணம் என்பதாம்.

(வி-ரை.) பிரமன் பொருள்சொல்ல வியலாது மயங்குவதற் குரியதாகிய பிரணவரகசியத்தை சிவபெருமானுக் குபதேசித்தமை யால் ஒப்பற்ற பரம்பொருள் முருகப்பெருமானே யாமென்பதை இப் பாடல் விளக்குகின்றனவாகும். ஆதலின் அருணகிரியாரின் அன்பின் முதிர்ச்சி இங்கு பிரகாசிக்கின்றன.

"தேவரே முதலுலகங்கள் யாவையுஞ்
சிருட்டியாதிய செய்யும்
மூவரே யெதிர்வருகினு மதித்திடேன்
முருகநின் பெயர்சொல்வோர்

யாவரேனு மென்குடிமுழு தாண்டெனை
யளித்தவர் அவரேகாண்
தாவநா டொணுத் தணிகையம் பதியில்
வாழ்சண்முகப் பெருமானே—திரு அருட்பா

நமது சுவாமிகள், மும்மூர்த்திகட்கு மூலகாரணமாகியவரும், பிரணவப்பொருளாக விளங்குகின்றவருமான முருகப்பெருமானை யன்றி மற்றோர் தெய்வமில்லை யென்னும் பான்மையை யுணர்த்தினு ரென்பதுமாகும்.

"சிவனுர் மனங்குளிர உபதேச மந்திரமிரு
செவிமீதி லும்பகர்செய்—குருநாத
சிவகாம சுந்தரிதன் வரபால கந்தநின
செயலே விரும்பியுளம்—நினையாமல்
அவமாயை கொண்டுலகில் விருதா அலைந்துழலு
மடியேனை அஞ்சலென—வரவேணும்
அறிவா கமும்பெருக இடரான துந் தொலைய
அருள் ஞானஇன்ப மது—புரிவாயே.—திருப்புகழ்

திகைப்படங் கப்புயந் தந்தரு ளானேன் படிங்கணிய
திகைப்படங் கத்தமை யார்சேந்தி லாரேன்ப டென்னனுய
திகைப்படங் கப்புகல் சேயேன்பள் கன்னிகண் ணீர்தரவி
திகைப்படங் கத்தமை யாதேமை யாட்கோளுஞ் சீகரமே.

(ப-ரை.) திகைப்பள் - மயங்குகிருள், தங்க - தழுவி யுயிர்பெற் றிருக்கும்படி, புயம் - தனது புயத்தை, தந்து அருளான் - தந்து கிருபை செய்கிறுனில்லை, என்பள் - என்கின்றுள், திங்கள் - சந்தி ரனை, நியதிகைப்பள் - நித்யமுபாலம்பனஞ்செய்கிருள், தம் - தமது,

கத்து - இப்படிவருந்தி முறையிடுதலை, அமையார் - க்ஷமித்து இரக்ஷிக்கின்றாரில்லை, செந்திலார் - செந்திற்குமரர், என்பள் - என்கிறாள், தென்னன் - கூன்பாண்டியனது, உயதி - (சுர)வருத்தத்தின், கைப்பு - வெப்பம், அடங்க - தணியும்படி, புகல் - (தமிழ் வேதமாகிய தேவாரத்தை) மொழிந்தருளிய, சே என்பள் · சம்பந்தப்பிள்ளையே யென்றுஞ் சொல்லுகிறாள், கன்னி — உனது உயிராகிய பெண்ணானவள், கண்ணீர்தர - கண்ணீர் சோரும்படியாக,(ஆதலால்) விதி - பிரமனது, கைப்படு - கையினாற் சிருட்டிக்கப்படுகின்ற, அங்கத்து - உடற்பைக்குள், அமையாது - இவ்வான்மா அமைக்கப்பட்டு சனனமுறாதபடி, எம் - எம்முடைய, ஐ - குலதெய்வமே! ஆட்கொளும் - அடிமை கொண்டருளவேண்டும், சீகாமே - அழகிய குமாரக் கடவுளே!

(க-ரை.) எம்மை யாட்கொண்டருளிய குலதெய்வமே! என்னுயிராகிய கன்னியானவள் பலகாலும் நின்னையே நினைந்து அரற்றிப் புலம்புகின்றாள். சந்திரனையும்பற்றி நிந்தித்து வருந்துகின்றாள். செந்திலாதிபனே! யென்பள், கூன்பாண்டியனது சுரந்தவிர்த்தருளிய சம்பந்தப்பிள்ளையாரே! என்பள், எனது முறையிடுதலையேற்று அவன் புயத்தைத் தழுவும்படி கட்டளையிட்டானில்லையே என்று கண்ணீர்சோர மயங்குகின்றாள் ஆதலின் இனியுமிவ்விதம் செனனமுற்று வருந்தாவண்ணம், குமாரப்பெருமானே நினது திருவடிப்பேற்றை யருளல்வேண்டும் என்பதாம்.

(வி-ரை.) சீவபாவனை யொழிந்து பரமானந்தபோதத்திற் கலந்து வாழவேண்டுமெனுங் கருத்தைக்கொண்டு இப்பாடல் விளங்குவதெனப் புலனாகின்றன. சீவான்மா பரமான்மாவோடு ஐக்கியமடைதலென்பதுமாகும். அதுவே பிறவியற்ற பேரின்பநிலையுமாம். தமது சீவபாவகத்தைக் கன்னி என உவமைகூறி சுவாமிகள் பிரார்த்

தனைபுரிந்தாரென்க. உதாரணமாக முண்டகோப உபநிஷத்து மூன்ருவது முண்டகம் 4-வது கண்டம் 2-வது வாக்கியத்தில் "ஜீவாத்"மா சரீரத்திலிருந்துகொண்டு தீனத்தன்மையில் மூழ்கியதாகித் துயரப்படுகின்றது. ஆனால், எப்போதும் யாவராலும் தொழப்பட்ட ஈசனையும், அவரது மகிமையையும் பார்க்கின்றதோ அப்போது துயரமற்றதாகிறது. எந்த ப்ரஹ்மஜ்ஞானி இந்த உபாயங்களால் ப்ரஹ்மத்தையடைய முயலுகின்ருரோ, அவருடைய ஆன்மா பரஹ்மமென்னும் வீட்டையடைகின்றது என நவின்றுள்ளதுகாண்க. "பூதமுங் கரணம் புலன்களோ ரைந்தும் பொருந்திய குணங்களா மூன்றும், நாதமுங் கடந்த வெளியிலே நீயும் நானுமாய் நிற்குநாளுளதோ" என நவின்றுள்ள பட்டினத்தடிகள் வாக்கியமு மிங்கு குறித்தற்குரியதாகும்.

"ஞானங்கள் பொறிகள்கூடி வானிந்து கதிரிலாத
நாடண்டி நமசிவாய வரையேறி
நாவின்ப ரசமதான ஆனந்த அருவி பாய
நாதங்க ளொடுகு லாவி விளையாடி
ஊனங்க ளுயிர்கள் மோக நானென்ப தறிவிலாம
லோமங்கி யுருவமாகி யிருவோரும்
ஓரந்த மருவி ஞான மாவிஞ்சை முதுகி னேறி
லோகங்கள் வலமதாட அருள்தாராய்

என நவின்றுள்ள திருப்புகழு மிதையே தழுவுவது காண்க.

சீகர சிந்துர வுத்தவெஞ் சூர செயபுயவ
சீகர சிந்துர வல்லிசிங் கார சிவசுதசு
சீகர சிந்துர கந்தர வாகன் சிறைவிடுஞ்சு
சீகர சிந்துர மால்வினைக் குன்றைச் சிகண்டிகோண்டே.(66)

(ப-ரை.) சீகரம் - அலைகளையுடைய, சிந்து - சமுத்திரத்தின் கண், ரவுத்த - இராவுத்தனான, வெம் - கொடிய, சூர - சூரனை, செய - வென்றவனே! புய - உனது திருப்புயத்தை, வசீகர - வசீகரித்தலில் வாஞ்சையுள்ள, சிந்தூர - திலகத்தையுடைய, வல்லி - வள்ளி நாயகிக்குரிய, சிங்கார - அலங்காரத்தையுடையவனே! சிவசுத - பரமசிவனது மைந்தனே! சுசீ - அக்கினியினது, கர - கையிலிருந்தவனே! சிந்தூர - வெள்ளையானையையும், கந்தர - மேகத்தையும், வாகன் - வாகனமாகக்கொண்ட இந்திரனது, சிறை - சிறையை, விடும் - களைந்த, சுசீகர - பரிசுத்தனே! உர - வலிய, மால் - மயக்கத்தைத்தாநின்ற, வினை - இருவினையாகிய, குன்றை - கன்மமலையை, சிகண்டிகொண்டு - மயில்வாகனரூடாராக யென்முன் எழுந்தருளி, சிந்து - சிதறவடி.

(க-ரை.) பேரலைகளையுடைய சமுத்திரத்தினிடத்தே கொடுங்கோன்மை நிறைந்த சூரனைச் சங்கரித்தபெருமானே! கட்டழகு வாய்ந்த வள்ளிநாயகி தழுவுகின்ற புயாசலங்களையுடைய சிங்காரனே! உமாபதியாகிய சிவபிரானுடைய அருமைச்செல்வனே! பரிசுத்தம் வாய்ந்துள்ள அக்கினியின் கரத்தில் விளங்கிய சோதிசொரூபனே! மேகவாகனனாகிய இந்திரனது சிறையை விடுவித்த கருணையங்கடலே! நீ மயில்வாகனத்தி லெழுந்தருளிவந்து எனது கன்மவினையாகிய மலையைச் சிதறும்படிசெய்து ஆட்கொள்ளவேண்டும் என்பதாம்.

(வி-ரை.) "வினைப் போகமேயொரு தேகங் கண்டாய்" என்னும் வாக்கியப்பிரகாரம் பிறவிக்கு வினையே வித்தாதலின் மலைபோன்ற வினையைப்பொடிபடுத்தி இனிப்பிறவியற்ற முத்திநிலையைத் தாவேண்டுமென்றார். "நல்வினையுந் தீவினையுமுண்டு திரிதருஞ் செய்வினைக்கும் வித்தாமுடம்பு" என்னும் ஔவைக்குறள் வாக்கிய

மும் இதையுணர்த்துவதாகும். ஜீவாத்ம நிலையாகிய பந்த சம்சார சனனமரண துக்கசாகரமாகிய வித்தைக் கருவறுத்து, சூட்சுமமாகிய பரப்பிரமசொரூப நிலையை யடையுமார்க்கத்தை நாடியுள்ளாரென்க.

"உலகெது நாமாரென்ன வுற்றுநின் றுணருமட்டும்
கலகமார் பிறவிமோகங் கங்குல்போன் மூடிநிற்கு
மலகிலா வுலகும்யாமும் அழிவில்சிற் சோதியன்றோ
சலனமில் கண்ணுற் கண்டோர் தத்துவ நிலைமைகண்டோர்."
—ஞானவாசிட்டம்

சிகண்டிதத் தத்த மரவாரி விட்டத் திதிபுத்ரரா
சிகண்டிதத் தத்த நகபூ தரதெய்வ வள்ளிக்கொடிச்
சிகண்டிதத் தத்த மலர்மேற் குவித்திடை செப்புருவஞ்
சிகண்டிதத் தத்த கறபோ பலமென்னுஞ் சேகரனே. (67)

(ப-ரை.) சிகண்டி - மயில் வாகனத்தை, தத்த - சதிபாய்ந்து செல்லும்படி, தமர - முழங்குகின்ற, வாரி - சமுத்திரத்தின்கண், விட்டு - நடத்தி, அ - அந்த, திதி - திதியினுடைய, புத்ராசி - பிள்ளைகளாகிய அசுரக்கூட்டங்களை, கண்டித - சேதித்தவனே! தத்த - தந்தத்தையுடைய, நகபூதர - பாம்புபோன்ற திருச்செங் கோட்டுக்கதிபனே! தெய்வ - தெய்வீகமான, வள்ளிக்கொடிச்சி - குறமாதாகிய வள்ளி நாயகியை, கண்டு - பார்த்து, இதத்து — இத மாக, அத்தம்மலர் - உன்கைகளாகியமலரை, மேல்குவித்து - சென்னி மேற்கூப்பி, இடை - பெண்ணே! உன் இடையானது, செப்பு - சிறப்பித்துச் சொல்லத்தக்க, உரு - வடிவமாகிய, வஞ்சி - வஞ்சிக் கொடியே, கண் - விழி, தித - நிலைபெற்ற, தத்து - ஆபத்துகளெல் லாம், அகல் - நீங்குகின்ற, தபோபலம் - (விரகாக்கினியைத் தணித்த லால் நான்செய்) தவத்தின்பயனே, என்னும் — என்று நலம்புனைந் துரைக்கும், சேகரனே - தலைவனே! என்பதாம்.

(க-ரை.) அசுரர்களுக் குறைவிடமாகிய கார்நிறத்தையுடைய சமுத்திரத்தினிடமாக மயில்வாகனத்தைச் செலுத்தி அவ்வசுரர்களைக் கிளையுடன் அழித்த கந்தப்பெருமானே! திருச்செங்கோட்டு மலையிற் கோயில்கொண்டருளிய குமாரமூர்த்தியே! வஞ்சிக்கொடியாகிய வள்ளிநாயகியின் இலாவண்யத்தைப் புகழ்ந்து கொஞ்சிக் குலாவுகின்ற கோமள சொரூபனே! என்னை ஆண்டருள்வாய் என்பதாம்.

(வி-ரை.) "ஒருநாம மோருருவம் ஒன்றுமில்லார்க்காயிரம் திருநாமம்பாடிநாம் தெள்ளேணங் கொட்டாமோ" என வாதவூரடிகளும், "பாட்டுக்கோ அன்பினுக்கோ பத்திக்கோ அன்பர்தங்கள், நீட்டுக்கெல்லாங்குறுகி நின்றாய்பராபரமே" என தாயுமானவரும் போற்றுதற்குகந்த பரம்பொருளையும், பிரபஞ்ச சிருட்டிகாரணமாகிய இச்சா சத்தியென்னும் வள்ளிநாயகியையும் பற்றி மெய்யன்பரான அருணகிரியார் தமது இருதயமலரிற் பேரின்பத்தேன் சொட்டக் கனிந்துருகித் துதித்தமையை இப்பாடல் விளக்குவதாகும். "தெருளத் தெருள வன்பர்நெஞ்சந், தித்தித்துருகத் தெவிட்டாத, அருளைப் பொழியுங் குணமுகிலே யறிவானந்தத்தாரமுதே" என்னுந் தாயுமானவர் வாக்கையுமுணர்க.

சேகர வாரண வேல்வீர வேடச் சிறுமிபத
சேகர வாரண மேவும் புயாசல தீவினையின்
சேகர வாரண வெற்பாள நாளுந் த்ரியம் பகனார்
சேகர வாரண நின்கையில் வாரணஞ் சீவனென்றே. (68)

(ப-ரை.) சே - (அடியார்களைக்) காத்தலில், காவா - வஞ்சித்தலில்லாத, ரண - யுத்தத்தில் வலிதங்கிய, வேல் - வேலாயுதத்தையுடைய, வீர - வீரனே! வேடச்சிறுமி – குறச்சிறுமியாகிய வள்ளிநாயகியினது, பத - பாதத்தை, சேகர - முடியிற்றரித்தவனே! வாரணம் - தெய்வயானை, மேவும் - தழுவும், புயாசல - மலைபோன்ற

புயத்தையுடையவனே! தீவினையின் — கொடிய வினையின், சேகு — வயிரத்தை, அர - சங்கரிப்பவனே! ஆரண - வேதம் பூசிக்கின்ற, வெற்பாள - திருச்செங்கோட்டுமலைக் கதிபனே! நாளும் - நாடோறும், திரியம்பகனார் — திரிநேத்திரங்களையுடைய பரமசிவனது, சே - இடபமாகிய விஷ்ணுவின், கர - கையிலிருக்கின்ற, வாரணம் - சங்குக்கும், நின் - உனது, கையில் - திருக்கரத்திலிருக்கின்ற, வாரணம்- கொடியாகிய கோழிக்கும், சீவனொன்றே - இரவு நீடியாமல் விடிதலைக்காட்டித் தொனி செய்தலாலும் பிராணனொன்ருகவே யிருக்குமோ.

(க-ரை.) துதிக்கின்ற அடியார்களைக் காக்குங் கடமைகொண்டுள்ள வேலாயுதத்தை யுடையவனே! குறவஞ்சியாகிய வள்ளிநாயகியின் இன்பகரமான பதத்தை யுடையவனே! தேவயானை தழுவுகின்ற புயாசலங்களை யுடையவனே! தீவினைப்பகுதிகளை நீக்குகின்ற மெய்த்தெய்வமே! திருச்செங்கோட்டு மலையில் வாழ்கின்றவனே! சிவபிரானது இடபவாகனமாகிய திருமாலின் கையிலுள்ள சங்கமும், நினது திருக்கரத்தின்கணுள்ள சேவற்கொடியும் சூரியனுதய சின்னங்களாக ஒலிபாவுகின்றதாதலின், இவ்விரண்டிற்கும் உயிர் ஒன்றேயாகுமோ என்பதாம்.

(வி—ரை.) உதயங்கண்டு ஒலிப்பதுபற்றி விஷ்ணுமூர்த்தியினது சங்கிற்கும் நம்பெருமானார் சேவற்கொடிக்கும் உவமை கூறினார். சேவற்கொடி சிவஞானத்தை விளக்குகின்ற சாதனமெனவும், இன்னும் அச்சேவலால் ஒலிமயமாகிய நாதத்துவமும் அதின் காரணமாகிய சொற்பிரபஞ்சமும் விளங்கற்குரியதாகு மெனவும், ஆகமங்கள் நவில்வனவாகும். அஞ்ஞானமாகிய இருளை நீக்கி உலகுயிர்கட்கு மெஞ்ஞானமாகிய சூரியனுதயத்தை விளங்கச்செய்யுந் தன்மையதாக

முருகப்பெருமான் றிருக்கரத்திலமர்ந் துள்ளதென்பதையும் உணரத் தகுந்ததாம்.

சீவன சத்துரு கன்பாற் பிறப்பறத் தேவருய்யச்
சீவன சத்துரு மிக்குமெய் யோன்கையிற் சேர்த்த செவ்வேள்
சீவன சத்துருச் செய்யாண் மருகவெனு திடையே
சீவன சத்துரு வெய்தியெய் தாப்பழி சிந்திப்பதே. (69)

(ப-ரை.) சீவன் - பிராணன், அசத்து - சத்தல்ல ஆகையால் (சீவனும் தனுவு மியைந்திருக்கும்போதே) உருகு-இளகத்தக்க, அன் பால் — பத்தியினால், பிறப்பு - சனனம், அற - (சத்து இன்னதென் றறிந்து) ஒழியும்படி, தேவர் - தேவர்கள், உய்ய - பிழைக்கும்படி யாய், சீவன் - சிவகாரணனான பரமசிவனால், அசத்து - ஆட்டு வாக னத்தையுடைய, உருமிக்கும் - வெப்பத்தைத்தருகின்ற, மெய்யோன்- தேகத்தையுடைய அக்கினியினது, கையில் - கரத்தில், சேர்த்த - சேர்க்கப்பட்ட, செவ்வேள் - குமாரக்கடவுளே! சீ - பிரகாசம் பொருந்திய, வனசத்து - தாமரைத் தவிசையுடைய, உருச்செய் யாள் - சிவந்த திருமேனியையுடைய மகாலட்சுமிக்கு, மருக - மரு கனே, எனாது - என்றுள்ளத்திருத்தித் தியானிக்காமல், இடையே - மத்தியில், சீவன் - சீவனது (சத்தாகிய பரத்தையும் அசத்தாகிய தன்னையுமறிவதுவிட்டு) அசத்து - அசத்தாகிய, உரு — (மலபாண்ட மாகிய) உடலை, எய்தி - அடைந்து, எய்தாப்பழி - அதற்கு எற்கத் தகாத பெரும்பழிகளை, சிந்திப்பது - (என்னிருதயம்) சிந்தித்துக் கொண்டு அவமே காலங்கழிக்கின்றது.

(க-ரை.) ஹே முருகா! உடலில் உயிருள்ளபோதே, சத்து, அசத்து இன்னதென்றுணர்ந்து சனனமரண மறுக்கத்தக்கதாக ஆத்ம ஞானமடைந்து உன்னை அன்பினாலுருகிக் கனிந்து சச்சிதானந்த பரனே! குமாரமூர்த்தியே, மகாலட்சுமி தேவியின் மருகோனே

என்று போற்றிப் புகழ்ந்து துதியாமல், மலபாண்டமாகிய எனது உடலை வளர்க்குந்தொழிலையே மனமானது சிந்தித்துக்கொண்டு வீண் காலங்கழிக்கின்றேன், நீ திருவருள் புரியவேண்டும் என்பதாம்.

(வி-ரை.) "எண்ணரிய பிறவிதனில் மானிடப்பிறவி யாதினும் அரிதரிது, இப்பிறவிதப்பினு லெப்பிறவிவாய்க்குமோ அறிகிலேன்" என்றதனால் சர்வ பிறவிகளிலும் விசேடமுடையதாகிய இந்த மானிடப்பிறவியிலேயே பரம்பொருளை யடையவேண்டி மனத்தின் தீநெறியைத்துறந்து தூநெறியையடையாது வீணே காலங் கழிக்கின்றே னென்பதுபற்றி நவின்றுள்ளார். முருகனது திருநாமங்களை நாவினுற்றுதித்து மெய்யன்புகொண்டு சிந்திப்பது சர்வ சித்தியையுந் தரு மாதலின், உடம்புள்ளபோதே மனத்தை மாசற்ற கொள்கையில்வைத்து கந்தப்பெருமான் கழலிணையைப் பற்றவேண்டு மெனப் புலனுகின்றது.

"மாசற்ற கொள்கை மனத்தி லடைந்தாக்கால்
ஈசனைக் காட்டு முடம்பு." —ஔவை

சிந்துர வித்தக வாரும் புகர்முகத் தேய்வ வெள்ளைச்
சிந்துர வித்தக வல்லிசிங் காரசெந் தூரகுன்றஞ்
சிந்துர வித்தக முத்திக்கு மாய்நின்ற செல்வதுஞ்சா
கிந்துர வித்தக னம்போலு மிங்கிளந் திங்களுமே. (70)

(ப-ரை.) சிந்தூர - திலதந்தீட்டிய, இத்தகவு - இத்தகமைப்பாடு, ஆரும் - நிறைந்திருக்கின்ற, புகர் - புள்ளிபொருந்திய, முக - முகத்தையுடைய, தெய்வ - தெய்வீகமான, வெள்ளைச்சிந்தூர - அயிராவதத்திடம் வளர்ந்த, வித்தக - அற்புதமான, வல்லி – தெய்வயானைக்கு, சிங்கார - இனிமையானவனே! செந்தூர – செந்திற்பதிக்கு நாயகனே! குன்றம் - கிரவுஞ்சகிரியை, சிந்த - பொடிசெய்த, உர -

வல்லவனே! வித்தக - சர்வக்ஞயனே! முத்திக்கும் - மோட்சத்திற்கும், ஆய் - ஆராய்ந்தருள் செய், நின்ற - அடியவர்கட்கெல்லாந் தாய் போலநின்ற, செல்வ – செல்வனே! துஞ்சா - கண்ணுறங்காமல் முழங்குகின்ற, சிந்து - சமுத்திரமும், இங்கு - இவ்விடத்தில் (இடைவிடாமல்) இளம் - இளமைதங்கிய, திங்களும் - குளிர்ந்த சந்திரனும், ரவி - சூரியனுடைய, தகனம்போலும் - காந்தியைப்போலத் தகிக்கின்றது.

(க-ரை.) விளங்குகின்ற சிந்தூர திலகத்தையுடைய அயிராவதமாகிய வெள்ளையானை வளர்த்த தெய்வயானைக்கு மணவாளனே! செந்திற்பதியையுடைய கந்தப்பெருமானே! கிரவுஞ்சகிரியைப் பொடிசெய்த வெற்றி வேலாயுதனே! சர்வக்ஞயுள்ளவனே! முத்திக்கு வித்தகனே! அடியவர்கட்கெல்லாந் தாயாகிய செல்வனே! நின் பிரிவாற்றாமையால் வருந்துகின்ற எனக்குக் கடல்முழக்கமும் சந்திரனும் வெப்பத்தைத் தருகின்றதை ஆராய்ந்தருளவேண்டும் என்பதாம்.

(வி-ரை.) தலைவனைப்பிரிந்த தலைவி அவன் வரவிற்காக வருந்துதல்போன்று மெய்யன்பராகிய இவ்வாசிரியரும் முருகப்பெருமான் மீதுள்ள அதிதீவிர பத்தியின் பாவசத்தால் அவனது திருவருளை நாடிச் சிந்தித்து வருந்தினர் என்க. "காரணனைக்காணுத கண்ணென்ன கண்ணே, கந்தனுருக்காணுத கண்ணென்ன கண்ணே" என்னும் வாக்கியத்தானு முணர்க. நமது சுவாமிகளுக்குப் பூர்வபுண்ணிய பரிபாகத்தால் கந்தப்பெருமான் குருமூர்த்தமாகத் தரிசனந்தந்து மெய்ப்பொருளுணர்த்தியதின் தன்மைகொண்டு மென்மேலும் அம்முருகனது தோற்றத்தை நினைந்துருகிப் போற்றுவதுமாகும்.

"அளித்தஞ்ச வென்றவர் நீப்பிற் றெளித்தசொற்
றேறியார்க் குண்டோ தவறு." —நாயனர்

திங்களு மாசுண மும்புனை வார்செல்வ னென்னையிரு
திங்களு மாசுண மாக்கும் பதாம்புயன் செந்திலன்னாள்
திங்களு மாசுண மன்போல் விழியுஞ் செழுங்கரும்புந்
திங்களு மாசுண நன்றான மாற்றமுந் தீட்டினன்றே. (71)

(ப-ரை.) திங்களும் - சந்திரனையும், மாசுணமும் – அரவத்தையும், புனைவார் – தரித்துக்கொள்ளுகின்ற பரமசிவனது, செல்வன் - புதல்வனும், என் - என்னுடைய, ஐயிரு திங்களும் - பத்துமாதமென்னுங் காலவளவுக் குட்பட்டு தாயின் கர்ப்பத்திலுறும் பிறவித் துன்பத்தையும், மா - மிகவும், சுணமாக்கும் - நீறாகத்தக்க மகத்துவம் பொருந்திய, பதாம்புயன் - திருவடித்தாமரை யுடையவனுமாகிய குமாரக்கடவுளது, செந்தில் - திருச்செந்திற்பதியை, அன்னாள் - ஒத்துவிளங்காநின்ற, (இம்மங்கையினுடைய) திங்கு - தீமைகளை, அளும் - உண்டாக்கும், மாசு - (ஆத்மகோடிகள் செய்யும் பாவங்களாகிய) குற்றத்தை, உள் - ஆராய்கின்ற, நமன்போல் - யமனையொத்த, விழியும் - கண்ணையும், செழும் - செழுமைதங்கிய, கரும்பும் - கன்னலும், திம் - தித்திப்பான, களும் - தேனும், மாசுண - (ஒப்பாகாமையால்) குற்றமுறும்படி செய்கின்ற, நன்றான - மிகவுமினிமையான, மாற்றமும் – மொழியையும், தீட்டின் - எழுத வுன்னாற்கூடுமானால், நன்று - நன்மையாகும்.

(க-ரை.) இளஞ் சந்திரனையும், அரவமாலையையுந் தரித்த சிவபிரானது குமாரனும், தம்மடியவனாகிய எனக்குப் பிறவித் துன்பத்தையொழித்து மகத்துவம் பொருந்திய சரணகமலங்களைத் தரத்தக்கவனுமாகிய கந்தப்பெருமானது திருச்செந்தூரையன்ன இம்மங்கையாது நமனையொத்த விழியையும், கரும்பினுந் தேனினுஞ் சிறந்ததாகிய இனியமொழியையும் உன்னால் சித்திரிக்கக்கூடுமாயின் நன்மையுண்டாம் என்பதாம்.

(வி-ரை.) திருச்செந்திற்பதியை ஒரு பெண்மணியாக உவமை கூறினர். அவள் கண்களானது ஆன்மகோடிகள் செய்துள்ள பாவங்களை நமன்போல ஒழிக்கின்றதாகும் எனத் தெரிதற்குரியதாம். கண்கள் காட்சி அல்லது தரிசனத்தைக் குறிப்பதாகும். பெண்களின் கண்களை நமனுக்குவமைகூறுவது மியல்பேயாகும். "பண்டறியேன் கூற்றென் பதனை யினியறிந்தேன், பெண்டகையாற் பேரமர்க் கட்டு" என்னுந் திருக்குறள் வாக்கியத்தானு முணர்க. கரும்பின் ரசத்தை யுந் தித்திக்கின்ற தேனையும் அப்பெண்ணினது மொழிக் குவமைகூறினர். இவ்விரண்டு சிறப்புகளும் சித்திரத்தில் வரைதற்கியலாதன வாதலின் திருச்செந்தூராகிய தெய்வப்பெண்மணியை நேரிற்கண்டு தரிசித்துப் பேரின்ப மடையவேண்டுமென்பதைக் குறிக்கின்றனவாகும். (அகப்பொருள்விளக்கம்) " மடமானேக்கி வடிவங்கண்டே - விடமுஞ்சிறந்தழி யெய்துவதையம்" என்னும் வாக்கியம் தெய்வப் பெண்ணின் வடிவை யுணர்த்துகின்றதையு முணர்க.

தீட்டப் படாவினி யுன்னலேன் சென்னி கறைப் பிறப்பில்
தீட்டப் படாவிய வரல்லன் யான்றிக்கு நான்மருப்புத்
தீட்டப் படாவி தமுகா சலன்சிறை விட்டவன்ருள்
தீட்டப் படாவி வனேயே நினைவன் றிசாமுகனே. (72)

(ப-ரை.) தீட்டப்படா - எழுதப்படாத, இனி - இனிமேல், உன்னல் - உன்னலே, என் - என்னுடைய, சென்னி - தலையின் விதியை, கறை - உதிரமுதலியவற்ருனிறைந்த, பிறப்பில் - கருவிற் சனித்தலினல், தீட்டப்படு - அசூயையடைகின்ற, ஆவியவர் - உயிர் களை யுடையவரைப்போன்ற, அல்லன் யான் - யான் ஆகேன், திக்கு- எட்டுத் திக்குகளிற்சென்று, கால்மருப்பு - தனது நான்குகொம்புகளை யும், தீட்டு - கூர்மையிடுகின்றதும், அ - அந்த, படா - பட்டமும், வித - சித்திர விதங்களும் பொருந்திய, முகாசலன் - முகத்தையுடைய

மலைபோன்ற அயிராவதத்தி லேறுகின்ற இந்திரனது, சிறை - சிறையை, விட்டவன் - நீக்கியாண்ட குமாரக்கடவுளினுடைய, தாள் - திருவடித்தாமரையை, நீட்ட - அடைய, படா - ஒருகாலு மழிவில்லாத, இவனையே - இப்படிப்பட்ட முருகனையே, நினைவன் - உள்ளத்திலிருத்தித் தியானிப்பேன், (ஆதலால்) திசைமுகனே - பிரமனே!

(க-ரை.) ஹே பிரமனே! நீ கேட்பாயாக, இனி யான் பிற வுயிர்களைப்போன்று கருப்பப்பையிலுழன்று தவிக்கச் செய்வதாயுள்ள உனது படைப்புக்குரியவனுக மாட்டேனென்பதை உணருவாயாக? தேவேந்திரனது சிறையையொழித்து அமராவதியைக் காத்தருளிய முருகப்பெருமானது திருவடித்தாமரைகளைச் சந்ததமுந் தியானிக் கின்றேனுதலின் என் தலைவிதி உன் கரத்திலில்லை என்பதாம்.

(வி-ரை.) ஆதியந்தமில்லாத பரம்பொருளாகிய முருகப்பெரு மான் றிருவடித்தியானத்தின் மகத்துவமானது பிறவித் துன்பத்தை நிவர்த்தித்து பரமானந்த நிலையை யளிக்குமென்பது இங்கு புலனுகின் றன. அகப்பற்று புறப்பற்று நீங்கிய ஆத்மானந்த தியான நிலையா மென்க.

திசாமுக வேதனை யன்பாற் கரன்றிங் கடங்களவ
திசாமுக வேதனை யீறிலு மீறிலர் சீறுமம்போ
திசாமுக வேதனை வென்கண்ட வேலன் றினைப்புனத்தந்
திசாமுக வேதனை நண்ணுதண் கார்வரை சேர்பவரே. (73)

(ப-ரை.) திசாமுக - நான்கு திக்கு முகங்களையுடைய, வேதன் - பிரமனும், ஐயன் - அவனது பிதாவாகிய விஷ்ணுவும், பாற்கரன் - சூரியனும், திங்கள் - சந்திரனும், தங்கள் - தங்கடங்கள், அவதி - ஆயுசுமுடிந்து, சாம் - இறக்கின்ற, உகவேதனை யீறிலும் - யுகாந்தத்

தில் துன்புறுங்காலத்திலும், ஈறிலர் - அழியார்கள், சீறும் - கோபித் தொலிக்கின்ற, அம்போதி — சமுத்திரத்தின்கண் தோன்றி, சாமுக - சாமுகத்தையுடையவனும், வேதனே - தேவர்கட்குத் துன்பத்தை விளைவிக்கின்றவனுமாகிய சூரனை, வென்கண்ட - புறங்காட்டச் செய்த, வேலன் - வேலாயுதத்தையுடைய முருகன் வாசஞ்செய்கின்ற, தினைப்புனம் - தினைப்புனங்களையும், தந்தி — யானைகளின், சாமுக - கூட்டங்களையும், வேதனே - மூங்கில்களையும், நண்ணு - பொருந்தி யிருக்கின்ற, தண் - குளிர்ச்சிபொருந்திய, கார் - மேகங்கள் தவழா நின்ற, வரை - பழமுதிர் சோலைமலையை, சேர்பவர் - அடைந்து இடைவிடாமற் றியானிப்பவர்.

(க-ரை.) சமுத்திரத்தினடுவே பற்பல மாயங்கள் செய்த பகைவர் களாகிய சூரபன்மனுதியரைச் சங்காரம் புரிந்தவராகிய வேலாயுதப் பெருமான் கோயில்கொண்டருளிய பழமுதிர்சோலை என்னுந் தலத்தையணுகி அவரைத் துதிசெய்கின்ற மெய்யன்பர்கள் யுகாந்த காலத்தினுமழியாது நித்யானந்தவாழ்வைப் பெறுவார்களென்பதாம்.

(வி-ரை.) நித்யானந்த வாழ்க்கையென்பது பரத்துடன் கலந் திருத்தலைக் குறிக்கின்றன. அதுவே பிறவியற்ற நிலையாம். முற் பிறப்பிற்செய்துள்ள சிவபுண்ணியமேலீட்டால் தன்னையுந் தலைவ னையு முணர்ந்து நமது சுவாமிகள் மனத்தூய்மைபடைத்த மெய்யன்பி னுல் ஸ்ரீ முருகனைக் குருவாயடைந்தமை காரணமாக திடங்கொண்டு செப்பினுரென்க. பழமுதிர்சோலை என்பது மதுரைக்கு வடக்கே யுள்ள அழகர்மலையைக் குறிப்பதாம்.

"பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தா
ரிறைவ னடிசேரா தார்"

—திருக்குறள்

சேரப் பொருப்பட வித்தே னிறைவன் றிரைசிறையைச்
சேரப் பொருப்பட வல்லவன் சூரைச் சிகரியுடன்
சேரப் பொருப்பட வென்றண்ட ரேத்திய சேவகன்வான்
சேரப் பொருப்பட வேணியிற் சேர்த்தவன் செய்தவமே. (74)

(ப-ரை.) சேர - சேராசனது, பொருப்பு - கொல்லிமலைச் சாரலையும் வெள்ளிமலைச் சாரலையுமுடைய, அடவி - வனத்தில் வாழ்கின்ற, தென் - தேன்மொழியையுடைய வள்ளிநாயகிக்கு, இறைவன்- காதலனே! திரை - அலையானது, சிறையை - கரையை, சேர் - அழியும்படி, அப்பு - மோதுகின்ற, ஓர் - ஒப்பற்ற, உப்பு - உவர்க் கடலை, அட - வற்றும்படி வேல்விட்ட, வல்லவன் - வல்லவனே! சூரை - சூரனை, சிகரியுடன் - கிரவுஞ்சகிரியுடன், சேர - அடியோடு, பொரு - போர்செய்து, பட - அழியும்படி, வென்று - செயித்து, அண்டர் - தேவர்களால், எத்திய - துதிசெய்யப்பட்ட, சேவகன் - வீரனே! வான்சேர் அப்பு - ஆகாயகங்கையை, ஒருப்பட - ஒன்றாக, வேணியில் - சடையின்கண், சேர்த்தவன் - அடக்கித்தரித்த பரமசிவன், செய்தவமே - செய்தவமாகிய மைந்தனே!

(க-ரை.) ஹே வள்ளிநாயகனே, கடலையும் வற்றும்படி வேலாயுதத்தை ஏவிய வல்லவனே? சூரபன்மனையும் மாயைக்குரிய கிரவுஞ்சமலையையும் வென்று வானவர்கள் துதிக்கும்படி, தரிசனந்தந்தருளிய கடவுளே! கங்கைவேணியனாகிய சிவபிரானது தவப்புதல்வனே! என்பதாம்.

(வி-ரை.) தேன்போன்ற மொழியை யுடையவளான ஒப்பற்ற சுந்தரி வள்ளிநாயகியின் காதலனே, என்பதிலும் கொல்லிமலைச் சாரலையும், வெள்ளிமலைச்சாரலையும் வள்ளியின் வாழ்க்கைக்குரிய வனமெனவும் குறித்தார். குமாரக்கடவுள் குறிஞ்சிநிலக் கடவுளாதலானும்

வேடராசனாகிய நம்பியும் மலைகளை யெல்லாம் சார்ந்துவாழ்பவனாதலி னாலும் அவன் புதல்வியாகிய வள்ளி வாசயோக்கியமான மலைச்சாரல் வனம் என்பதுபற்றி வள்ளிமலையையும், கொல்லிமலையையும் சொல் வது பொருத்தமாகுமென்க.

சேய்தவத் தாலஞ்சு சீரேழுத் தோதிலந் தீதலருஞ்
சேய்தவத் தாலஞ்சு கம்பெறச் சேயுறைக் கேற்றுருப்போய்ச்
சேய்தவத் தாலஞ்சு வைக்கனி யீன்றதேன் னேம்வினையே
சேய்தவத் தாலஞ்சு கின்றன மும்மலச் சேம்மல்கோண்டே.

(ப-ரை.) செய்தவத்தால் - அழகிய தவத்தினாலாவது, அஞ்சு சீரெழுத்து - சிறந்த பஞ்சாட்சரத்தை, ஓதிலம்—துதிக்கின்றோமில்லை, தீது - தீமை, அலரும் - விளையும், செய் - நாகபூமி, தவ - அழிந்து போகவும், தாலம் - உலகெல்லாம், சுகம் - நன்மையை, பெற - அடையவும், சேய் உரைக்கு - சம்பந்தப்பிள்ளையாக அவதரித்து திரு வாய்மலர்ந்தருளிய தேவாரத்தினால், ஏற்று உருபோய் - ஆணுரு மாறி, செய்த - சிவந்த, அதாலம் - அப்பெண்ணுருவாகிய பனை, சுவைக்கனி — இனிய பழத்தை, ஈன்றது - தந்தது, என்னேம் - என்று துதிக்கின்றோமில்லை, வினையேசெய்து - தீவினையே புரிந்து, அவத்தால் - வந்த துன்பத்தினால், அஞ்சுகின்றனம் - அச்சமுற்றிருக் கின்றனம், மும்மலச் செம்மல்கொண்டு - மும்மலமாகிய போர்வை யைத் தரித்துக்கொண்டு என்பதாம்.

(க-ரை.) ஹே நெஞ்சமே! சன்மார்க்க சாதனமான பத்தியின் மாண்பை விளக்கி ஆண்பனை பெண்பனையாகமாறி நல்லகனியை அளிக்கவும் இன்னும் பல அற்புதவிளையாடல்களைச் செய்யவும், உல கில் திருஞானசம்பந்தப்பிள்ளையாக அவதரித்து தேவாரத்தை யரு ளிச்செய்த குமாரமூர்த்தியைத் துதியாமலும், பஞ்சாட்சரத்தைச்

செபிக்கும் தவமுயற்சியில்லாமலும் தீவினைவசமுற்று மும்மல மயக்கி லுள்ள அஞ்ஞானவிருளில் வீணே யுழல்கின்றோம் என்பதாம்.

(வி-ரை.) மும்மலம் என்பது ஆணவம், காமியம், மாயை, என்பவைகளாகும். நான், எனது என்னும் அகங்காரத்துடன் உலகை மெய்யென்றுநம்பி மயங்கி துன்மார்க்கமெய்தி சுகதுக்கங்களிற் கிடந்துழன்று எடுத்தசென்மம் வீணேயழிந்து வினைக்குத்தக்க பிறவிகளை மறுபடியும் அடைந்து அழிவதாகும். பிறவித்துன்பத்திற்கு மும்மல வாசனையே மூலகாரணமாகும் ஆதலினால், முருக தியானத்தை மேற்கொண்டு அவன்றிருவருளினால் பிறவியை இனியும் வாராது ஒழிக்க வேண்டுமென்னுங் கருத்தைக்கொண்டு நெஞ்சொடு கிளத்தினரென்க.

"அறியாமை நீங்கி யறிவா யறிவே
யறியாம லாயிரண்டு மற்றுப்—பிறியாதார்
தன்னிழப்பின் ஞான சமாதிக்குச் சாதகரா
மன்னிலிக்கே சீவன்முத்த ராம்"

—ஒழிவிலொடுக்கம்

சேம்மலை வண்டு கடரங்க மாவென்ற திண்படைவேற்
சேம்மலை வண்டு வசவார ணத்தனைச் சேப்பவுன்னிச்
சேம்மலை வண்டு தவந்தமிழ்ப் பாணதேண் டீங்கையில்வாய்
சேம்மலை வண்டு விருப்புறு மோவிது தேர்ந்துரையே. (76)

(ப-ரை.) செம் - சிவந்த நிறத்தையுடைய, மலை - கிரவுஞ்சகிரியையும், வண்டு - சங்கினங்கள், உகள் - உலாவுகின்ற, தரங்கம் - கடலின்கண், மா - மாவடிவாய் நின்ற சூரனை, வென்ற - செயித்த, திண் - திண்ணிய, படைவேல் - வேலாயுதத்தையுடைய, செம்மலை - கடவுளை, வண் - வளப்பமிகுந்த, துவசவாரணத்தனை - கோழிக்கொடியையுடைய குமாரக்கடவுளை, செப்ப - புகழ்ந்துபாட, உன்னி - நினைத்

தும், செம்மலே - மனதைப் புதைத்துவிடாதே, வண்டு – குற்றம், தவு - நீங்கிய, அம் - அழகிய, தமிழ்ப்பாண - தமிழ்ப்பாணனே! தேள் - தெளிந்தும், தீம் - இனிப்புற்றும், கையில் - காத்தில், வாய் - வாய்ப்பினும், செம்மலே - பழமையாகியபூவை, வண்டு - சுரும்பினங்கள், விருப்புறுமோ - இச்சிக்குமோ, இது - இதை, தேர்ந்து - ஆராய்ந்து, உரை - அக்கடவுளைப் பலநாலும் புகழ்ந்துபாடு.

(க-ரை.) ஹே குற்றமில்லாத தமிழ்ப்பாணனே! அன்றலர்ந்த மலர்களையே சுரும்பினங்கள் நாடித் தேனையுண்டு பாடுவதுபோன்று, கிரவுஞ்சகிரியையும், கடலினிடத்தே மாயா மாமரவடிவாய்நின்ற சூரபன்மனையும் ஒழித்த வெற்றிவேலாயுதனுகிய சேவற் கொடியுடைய முருகப்பெருமானை அகமலர்ச்சிகொண்டு பலதரமும் புகழ்ந்து பாடுவாயாக என்பதாம்.

(வி-ரை.) அன்பென்னுந் தேனையுண்டு பரம்பொருளாகிய முருகப்பெருமான் திருப்புகழை சந்ததமும்பாடி மகிழவேண்டுமென்பதை விளக்குவனவாகும். சத்தியம், சாந்தம், நீதி, தருமம், பூததயை, பரோபகாரம், மனசாட்சி முதலிய நற்குணங்களே அன்பின் பெருமையை விளக்குகின்ற சாதனமாகுமென்பது உயர்வுபெற்ற நூற்களின் றுணிபாகும். அவைகளே மெய்யுணர்வை யுண்டுபண்ணுந் தன்மையதென்பதும் அறியத்தக்கதாம்.

"ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு" —திருக்குறள்

தேரை விடப்பணி யேறேறி முப்புரஞ் செற்றபிரான்
தேரை விடப்பணி சூராரி யென்க தெரிவையர்பால்
தேரை விடப்பணி வாய்ப்பமோறு செறிந்தலகைத்
தேரை விடப்பணி தேன்னேடி யென்றுந் திரிபவரே. (77)

(ப-ரை.) தேரை - தேவர்களெல்லாங்கூடிச் செய்த தேரை, விட- அச்சு முறியும்படி, பணி-செய்து, ஏறு-இடபவாகனத்தின்மேல், ஏறி- இவர்ந்து, முப்புரம் - திரிபுரத்தை, செற்ற - நகைத்தெரித்த, பிரான்- பரமசிவனுக்கு, தேர் - பிரணவப்பொருள் தெளியச்செய்த, ஐ - சுவாமியே! விள் - சொல்லத்தக்க, தப்பு - குற்றத்தால், அனி - நெருங்கிய, சூராரி - சூரசங்காரனே! என்க - என்று துதிக்கக்கடவீர் கள், தெரிவையர்பால் - காமவாஞ்சையால் பரத்தையரிடத்தில், தேரை – தேரையானது, விட – விஷத்தையுடைய, பணி - பாம்பி னது, வாய் - வாயில், படுமாறு - அகப்பட்டாற்போலும், செறிந்து - சிக்கிக்கொண்டு, அலகைத்தேரை - பேய்த்தேரென்னுங் கானலை, விடு - ஊறுகின்ற, அப்பு - சலமானது, அணித்து என்று - சமீபமா யிருக்கின்றதென்று, என்றும் ஓடி - எப்போதும் ஓடியோடி, திரிப வரே - அலைந்து திரிகின்றவர்களே.

(க-ரை.) ஹே மாந்தர்களே! பரத்தையர்களிடத்தில் நீங்கள் விரும்புகின்ற இன்பமானது கானற்சலத்துக்கு நிகராகுமாதலின் முடி வில் பாம்பின்வாய்த் தேரைபோலாவீர்களென்பது திண்ணமாகும். இனி அவ்வித நிலையில்லா இன்பத்தை விடக்கடவீர்கள். திரிபுரத்தை சிரித்தெரித்த சிவபிரானுக் குபதேசம்புரிந்த சுவாமிநாதனே! சூர சங்காரனே? அவரைப்போற்றி சாசுவதமாகிய பேரின்பத்தை யனு பவிக்கக்கடவீர்கள் என்பதாம்.

(வி-ரை.) துன்மார்க்கர்களாகிய பரத்தையரின் அனுபவத்தால் உடலிற் பற்பல பிணிகள்சார்ந்து நலிந்து பாம்பின்வாய்த் தேரைபோ லாவதுண்மை யாதலின் கானலிடத்து நீர்போன்றுள்ள அவ்விதம் இன்பம் உண்மையல்லவென்பதை உலகிற்கு விளக்கிக்காட்டி முருகப் பெருமானைப் போற்றிப்பணிந்து என்றும் நிலையுள்ள பேரானந்த வாழ்வை யடையவேண்டுமென நவின்றுள்ளாரென்க. அறம், புகழ்,

கேண்மை, பெருமை, இந்நான்கினையுங் கெடுத்துப் பாவமும் பழியும் பகையு முண்டுபண்ணுவது பரத்தையர் நேசத்தால் விளையுந் தீமை யென்பது நீதிநூற்களின் றுணிபாகும்.

"அறம்புகழ் கேண்மை பெருமையிந் நான்கும்
பிறன்றார நச்சுவார்ச் சேரா—பிறன்றார
நச்சுவார்ச் சேரும் பகைபழி பாவமென்
றச்சத்தோ டிந்நாற் பொருள்." —நாலடியார்

திரிபுரத் தப்புப் பவிதரத் தோன்றி சிலைபிடிப்பத்
திரிபுரத் தப்புத் தலைபட நாண்டொடுஞ் சேவகன்கோத்
திரிபுரத் தப்புத் திரமான் மருக திருக்கையம்போ
திரிபுரத் தப்புத் துறையா யுதவேனச் செப்பு நெஞ்சே. (78)

(ப-ரை.) திரி - நீ யென்றுந் திரிவாயாக, புரத்து - பூராளில், அப்பு - கடல்சூழ்ந்த, புவி - பூவுலகத்தை, தர - பெற்றருளும்படிக்கு, தோன்றி - அவதரித்த உமாதேவி, சிலை - தன துள்பாகமாகிய இடது கரத்தால் மேருவாகிய வில்லை, பிடிப்ப - பிடித்துக்கொள்ளச்செய்து, திரிபுரத்து - முப்புரத்தின்மேல் அப்புத்தலைபட - விஷ்ணுவாகிய பாணத்தைப் பிரயோகஞ் செய்யும்பொருட்டு, நாண் - தனது பாகமாகிய, வலதுகரத்தால் வாசுகியாகிய நாணை, தொடும் - ஏறிட்ட, சேவகன் - பரமசிவனது, கோத்திரி - திருச்செங்கோட்டு மலையை, புரத்து - நகரமாகக் கொண்ட, அ புத்திர - அந்த மைந்தனே, மால் மருக - திருமால்மருகோனே என்றும், திருக்கை - திருக்கையென்னு மீனையுடைய, அம்போதி - சமுத்திரத்தின்கண், ரிபு - அசுரராகிய சத்துருக்களது, ரத்தப்புத்துறை - இறத்தங்களேயே புதியவுறையாகத் தோய்ந்த, ஆயுத என - வேலாயுதத்தை யுடையவனே, என்றும் செப்பு - புகழ்ந்துசொல்லி, நெஞ்சே - மனமே.

(க-ரை.) ஹே நெஞ்சமே! லோகமாதாவாகிய உமாதேவி யாரை வில்லைப் பிடித்துக்கொள்ளச்செய்து விஷ்ணுவாகிய பாணத்தைத் திரிபுரத்தின்மீது பிரயோகம்செய்த சிவபிரானது அருமைமைந்தனே! திருமால் மருகோனே! திருச்செங்கோட்டு மலையிற் கோயில்கொண்டருளிய முருகப்பெருமானே! சமுத்திரத் தின்கண் அசுரர்களைச் சங்காரம்செய்த வெற்றிவேலாயுதனே! எனப் பலகாலும் அவனைப் போற்றிப் புகழ்ந்து துதிசெய்வாயாக என்பதாம்.

(வி-ரை.) காமம், வெகுளி, மயக்கங்களிற் கட்டுண்டு கண்ட வாறு திரிகின்ற மனத்தை ஸ்ரீ முருகன் திருநாமங்களினால் புனித மாகும்படி சாதனைப்படுத்துதல் ஆத்மஞான சித்தியை யளிக்கவல்ல வாகுமெனப் போதித்தாரென்க. மனம் மூவாசையில் வீழ்ந்து துன் மார்க்கத்திற் செல்லாது சன்மார்க்க நிலைபற்றி முருகனைத் துதிசெய வேண்டுமென்பதாயிற்று.

> "வேலு மயிலும் விளங்குஞ் சிறுசதங்கைக்
> காலு மீராறு கனதோளுஞ்—சால
> வருளுதவு மாறுமுகமுமுள போரூர்ப்
> பொருளுமது நெஞ்சே போற்று."
>
> —திருப்போரூர்வெண்பா

சேப்பா ரமுதலை மன்னோ திகனங் குரும்பைமுலை
சேப்பா ரமுதலை கண்கா ணகைமுருந் தீரிருகண்
சேப்பா ரமுதலை வாவியிற் சென்றபி ரான்மருகன்
சேப்பா ரமுதலை வேர்களை வான்வரைச் சீரினுக்கே. (79)

(ப-ரை.) செப்பு - சொல்லானது, ஆர் அமுது - ஆரமுதம் போலும், அல் - இருள் நிறமும், ஐ - அழகும், மன் - நிலைபெற்ற, ஓதி - கூந்தலானது, கனம் - மேகம்போலும், குரும்பை - குரும்பை

யொத்த, மூலே - தனமானது, செப்பு - செப்புப்போலும், ஆர - முத்துகளேயுடைய, முது - பழமையாகிய, அலே - கடல்போலும், கண் - விழியானது, கால் - ஒளிதங்கிய, நகை - பல்லானது, முருந்து - மயிலிறகினடிபோலும், ஈர் இருகண் - நான்கு கண்களேயுடைய, செ - சிவந்த, பாரமுதலே — பெரிய முதலேவாயிற் சிக்கிய யானேயை, வாவியில் - தடாகத்தின்கண், சென்ற - இரட்சிக்கும்படி விரைந்துபோன, பிரான் - திருமாலின், மருகோன் - மருகோனும், செப்பார - மிகவுந் தன்னேப் புகழ்ந்து துதிப்பவர்களது, முதலே - பிறப்பின் மூலத்தை, வேர் களேவான் - நிர்மூலமாக்குவோனுகிய முருகக்கடவுளது, வரைச்சிரினுக்கு - மலேயில்வாழு மங்கை.

(க-ரை.) கஜேந்திரனென்னும் யானேயை முதலேவாயிலிருந்தும் ரட்சித்தவனுகிய முகுந்தனது மருகனும், தம்மைத் தஞ்சமடைந்து துதிக்கின்ற மெய்யடியார்கட்கு, பிறவித்துன்பத்தை யொழிக்க வல்லவனுமான முருகப்பெருமானது மலேயில்வாழ்கின்ற மங்கைக்கு அமுதம்போன்ற மொழியும், மேகம்போன்ற கூந்தலும், குரும்பையை யொத்த தனங்களும், கடலனேய விசாலம்பொருந்திய கண்களும், முத்தைபு மயிலிறகினடியையும்போன்ற நகையையுமுடைய வனப்பு வாய்ந்தவளென்பதாம்.

(வி-ரை.) இங்கு மலேயில்வாழும் பெண்ணென்பது வள்ளிநாயகியைக் குறித்ததெனப் புலனுகின்றன. தெய்வீகமாகிய அம்மையாரது அழகை வருணித்துள்ளாரென்க. மொழியையுங் கூந்தலேயும், தனங்களேயுங் கண்களேயும்பற்றிப் புகழ்ந்துள்ளார். "பாலொடு தேன் கலந்தற்றே பணிமொழி, வாலெயிறூறியநீர்" எனக் குறளாசிரியர் வகுத்துரைத் துள்ளதையு மிங்குதாரணங் காண்க. தம்மைச் சரணடைந்த மெய்யன்பர்கட்கு பிறவித்துன்பத்தை நீக்குகின்றவன் முருகப்பெருமானேயெனவுங் கூறியிருப்பதும் கவனித்தற்குரியதாம்.

"தேனென்று பாகென் றுவமிக்கொணு மொழித் தெய்வவள்ளி
கோனன் றெனக்குப தேசித்த தொன்றுண்டு"

என நமது சுவாமிகள் கந்தரலங்காரத்தில் வள்ளியைச் சிறப்பித்துள் ளது காண்க.

சீராம ராம சிவசங்க ராநுந் திருமுடிக்குச்
சீராம ராம துகரத் துழாயென்பர் தேண்டிரைமேற்
சீராம ராம னிறந்திறக் கத்தோட்ட சேய்கழற்குச்
சீராம ராம னிமையோர் மகுடச் சிகாவிம்பமே. **(80)**

(ப-ரை.) சீ - இலக்குமிக்கு நாயகனுன, ராம - அழகிய, ராம - திருமாலே, சிவசங்கர - பரமசிவனே! நும் - உங்கள், திருமுடிக்கு- அழகிய சென்னிகளுக்கு, சீர் - சிறந்த தன்மையாவது, ஆம் - கங்கா சலத்தோடே, அரா - அரவாபரணமும், மதுகர - தேன்பொருந்திய, துழாய் - திருத்துழாய் மாலேயும், என்பர் - என்று சொல்லுவார்கள், தெள் - தெளிந்த, திரைமேல் - அலேயையுடைய கடலின்கண், சீரா- கவசத்தை, மராம - மாமரமாய்நின்ற சூரனது, நிறம் - மார்பை, திறக்க – பிளக்கும்படி, தொட்ட - தனது மெய்யிற்புனேந்த, சேய் கழற்கு - முருகக்கடவுளது திருவடிக்கு, சீர் ஆம் - சிறப்பாயமைந் திருக்கும், அரா - நெருங்கிய, மன் - நிலேபெற்ற, இமையோர் - தேவர் களுடைய, மகுட - கிரீடமணிந்த, சிகாவிம்பம் - வட்டவடிவாகிய தலேகள்.

(க-ரை.) ஹே சிவபிரானே! ஹே திருமாலே! நுங்கள் முடி களுக்கு கங்கையும் சர்ப்பமும், திருத்துழாய்மாலேயும் அணிகலனுக இலங்குகின்றன; மெய்யிற் கவசந்தரித்து மாயா மாமரவடிவாய் நின்ற சூரபன்மனே கடலினிடத்தே ஒழித்தருளிய வெற்றிவேலாயுத னுகிய முருகப்பெருமான் திருவடிகளுக்கு பிரமேந்திராதி தேவர்களி

னது கிரீடம் புனைந்துள்ள சென்னிகளே சிறந்த மாலைகளாம் என்பதாம்.

(வி-ரை.) மும்மூர்த்திகட்கு மூலகாரணராயிருந்து சிவபிரானுக்கு பிரணவோபதேசம் புரிந்த சாமிநாதனென்னுந் திருநாமம் புனைந்தவராதலானும், அசுரர் கொடுமைகளுக்காற்றாது பயங்கரம் படைத்த பிரமேந்திராதி தேவர்களின் துன்பந்தவிர்த்து அபயமளித்துக் காத்தருளலானும், முருகன் றிருவடித்தாமரைகளே வானவர்கள் சென்னியிற் சூடுகின்ற மலராகுமென்பது ஆகமங்களின் றுணிபாகும்.

> "நாதா! குமரா! நமவென் றரனு
> ரோதா யெனவோ தியதெப் பொருளோ
> வேதா முதல்விண் ணவர்சூ டுமலர்ப்
> பாதா குறமின் பதசே கரனே."

—கந்தரனுபூதி

சிகாவல வன்பரி தப்பாடு செய்யுஞ்சேவ் வேலவிலஞ்
சிகாவல வன்பரி வூரார் மதனித் திலஞ்சலரா
சிகாவல வன்பரி யங்கங் குழல்பெற்ற தேமொழிவஞ்
சிகாவல வன்பரி யானல மன்றிலுந் தென்றலுமே. (81)

(ப-ரை.) சிகாவல — மயில்வாகனனே! அன்பர் - தனக்கன்புள்ள அடியார்கட்கு, இதப்பாடு செய்யும் - இன்னருள்செய்கின்ற, செவ்வேல - அழகிய வேலாயுதத்தை யுடையவனே! இலஞ்சி காவல - இலஞ்சிப்பதியைக் காத்தளிப்பவனே! வன்பரி ஊரார் - என்னை யலர்தூற்று மிவ்வூரினராகிய கொடியவர்களும், மதன் - மன்மதனும், நித்திலம் - முத்துவிளைகின்ற, சலராசி - சமுத்திரமும், கா - சோலையும், அலவன் - சந்திரனும், பரியங்கம் - கட்டிலும், குழல் - புல்லாங்குழலும், பெற்ற - என்னைப்பெற்றவளாகிய, தேமொழி - இனிய

மொழியையுடைய, வஞ்சி - தாயின், காவு - காவலும், அல - இவை யெல்லாம் பெரிதல்ல, வன் - வலிய, பரியானலம் - வடவாமுகாக்கினி போன்று வருத்துகின்ற, அன்றிலும் - காமசின்னமாகிய அன்றிற் பட்சியும், தென்றலும் - தோாகிய தென்றற்காற்றும்.

(க-ரை.) ஹே மயில்வாகனு! அடியா ரிடர் தீர்க்கின்ற வேலா யுதா! அழகிய இலஞ்சிப்பதியை யுடையானே! மன்மதனும், சமுத்திரமும், பூஞ்சோலேயும், சந்திரனும், கட்டிலும், இனிய புல் லாங்குழல் வாத்தியமும், எனக்குத்துன்பம் விளேவிப்பது மட்டுமல்ல, அன்றிற் பட்சியின் ஒலியும், தோாகிய இளந்தென்றலும் வடவா முகாக்கினிபோன்று தகிக்கின்றனவாதலின் என்னே நீ ரட்சிக்க வேண்டுமென்பதாம்.

(வி-ரை.) சரீரதத்துவமானது சிற்றின்ப நுகர்ச்சியைக்கொண்டு சுக்கில சுரோணித வாயிலா யுற்பவித்ததாதலின், யௌவன பருவந் தொட்டு விருத்ததிசைவரை "பிறந்திடத்தை தேடுதே பேதைமட நெஞ்சம்,கறந்திடத்தை நாடுதே கண்" என்னும் வாக்கியத்திற்கிணங்க மனம் காம இச்சையிலுழல்வது மியல்பாதலின் மன்மதனுடைய சின் னங்களேக் காரணமாக சுட்டிச்சொன்ஞர் என்க. காமவிச்சையானது பிறப்பிறப்புக்குரிய தீயநெறியாகையால் அவ்வித வழியை யணுகாது மினது சரணகமலங்களேப் பற்றவேண்டுமென்னுந் தன்மைகொண்டு ஸ்ரீ முருகப்பெருமானேத் துதித்தார் என்க.

"யோனிவழி யேபிறந்து யோனிவழியே யுழன்று
யோனிவழி யேயொடுங்கு மூமர்காள்—யோனிவழி
வாராவொரு வனேயே வந்தித்தால் யோனிவழி
வாரா வகையருளு வான்."

—சிவஞானவள்ளலார்

தேன்றலை யம்பு புனைவார் குமார திமிர முந்நீர்த்
தேன்றலை யம்புய மின்கோ மருக செழுமறைதேர்
தேன்றலை யம்பு சகபூ தரவேரி சிந்திமன்றல்
தேன்றலை யம்பு படுநெறி போயுயிர் தீர்க்கின்றதே. (82)

(ப-ரை.) தென் - வண்டுகளிசைபாடுகின்ற, தலை - சிரசின்கண், அம்பு - கங்கையை, புனைவார் - அணியும் பரமசிவனது, குமார - மைந்தனே! திமிர - இருள் நிறமுடைய, முந்நீர் - கடல்சூழ்ந்த, தென் - அழகிய, தலை - பூதேவிக்கும், அம்புயம் - தாமரைப்பூவில் வாசஞ்செய்கின்ற, மின் - சீதேவிக்கும், கோ - நாயகனாகிய திருமாலினது, மருக - மருகோனே! செழு - செழுமைதங்கிய, மறைதேர் - நான்குவேதங்களுந் துதிக்கின்ற, தென்றலை - தெற்கின்கண்ணதாகிய, அம் - அழகிய, புசக - பாம்புபோன்ற, பூதா - திருச்செங்கோட்டு மலையாதிபனே! எரி - அக்கினியை, சிந்தி - கொட்டிக்கொண்டு, மன்றல் - வாசனைதோய்ந்த, தென்றல் - தென்றற்காற்றானது, ஐ அம்பு - என்தேகத்தில் பஞ்சபாணங்களும், படு - தைத்த, நெறி - புண் வழியே, போய் - நுழைந்து, உயிர் - என்னுயிரை, தீர்க்கின்றது - (வருத்தி) நீக்குகின்றது.

(க-ரை.) ஹே கங்கைவேணியனது திருவளர் செல்வனே! ஸ்ரீ தேவி பூதேவிகளின் நாயகனாகிய செங்கண்மால் மருகோனே! வேதங்கள் போற்றுந் திருச்செங்கோட்டுமலையில் வாழ்கின்ற முருகப் பெருமானே! மன்மதபாணந் தைத்த புண்வழியே இளந்தென்றல் எனதுடலிற்புகுந்து உயிரை நோகச்செய்கின்றது என்பதாம்.

(வி-ரை.) இளந்தென்றல் மன்மதனுக்கு தேராதலின் அதைத் தன்னிடம் செலுத்திப் போரிட்டு வாதிக்கின்றான். அவனை ஒழித்து என்னைக் காக்கவேண்டும் என விளங்குவதாகின்றது.

"தேரிளந் தென்றலாகச் செழுங்குடை மதியமாகத்
தூரியங் கடல்களாகச் சொற்குயின் முழக்கமாக
நாரியர் சேனையாக நரைவண்டு கீதமாகப்
பாரினில் விசயஞ் செய்யும் படைமதன் சரணம் போற்றி."

என மதனூல் நவில்கின்ற வாக்கியம் இங்குணரத்தக்கதாகும்.

தீரா கமல சலிகித போக மெனத் தெளிந்துந்
தீரா கமல மெனக்கரு தாததென் சேயவநூல்
தீரா கமல குகரம் பொறுப்ப னெனத் திருக்கண்
தீரா கமல மரவே கருகச் சிவந்தவனே. (83)

(ப-ரை.) தீரா - நீங்காமல், கமல - விஷ்ணுவினது நாபிக்கமலத்தில், ச - சனித்த பிரம்மா, லிகிதபோகம் என - எழுதிய தலைவிதிப் பிராப்தமென்று, தெளிந்தும் - அறிந்திருந்தும், தீ - என் அறிவானது, ராகம் - இச்சையினால், அலம் என - இனிய பயனுடையோம் அல்லேம் என்று, கருதாது - சிந்தியாதது, என - என்னகாரணம்? சேய் - குமாரக்கடவுளே! அவம் - பயனின்மையான, நூல் - சாஸ்திரங்களை, தீர் - நீங்கிய, ஆகம - பரிசுத்தமான ஆகமமுரைத்தோனே! லகு - (அக்கினியானவன் இப்பொறி) அற்பமானது, காம் - கையில், பொறுப்பன் - தாங்கிக்கொள்வேன், என — என்றுசொல்ல, திருக்கண் - உனது சிறந்த விழியினாலே, தீ — அவ்வக்கினியானது, ராகம்- காந்தியோடுற்ற சிவந்த நிறமெல்லாம், அலமரவே - வருத்தமுற்றே, கருக - கருகும்படி, சிவந்தவனே - சோபித்தவனே!

(க-ரை.) ஹே குமாரப் பெருமானே! பரிசுத்தமான வேதாகமங்களுக்குரிய பரம்பொருளே! அக்கினிதேவனுடைய அகந்தையொழியத்தக்கதாக அவனது கரத்திலமர்ந்து அவன் காந்தியை மங்கும்படிசெய்து வருத்திய அழற்பொறியானவனே! மலரோனுகிய

பிரமன் விதி இத்தன்மையதென்று உலகானுபவ முணர்ச்சியினுல் நான் அறிந்திருந்தும், எனது மனமானது மேலுமேலும் ஆசைநெறியி லூசலாடித் திரியுந்தன்மை யாதுகாரணம், உண்மை யறிகிலேன் என்பதாம்.

(வி-ரை.) பேறு, இளமை, துன்பம், பிணி, மூப்பு, சாக்காடு, இவ்வாறும் விதியையொட்டியே கருவிலமைத்தபடி நடைபெறுவதை யறிவினு லுணர்ந்திருந்துங்கூட மனமானது மறந்து ஆசையையே பற்றி நிற்பது அறியாமையென்னும் அஞ்ஞானமாதலால் அதை இங்கு வெளியிட்டார். "மின்னே நிகர்வாழ்வை விரும்பியயான், என்னே! விதியின் பயனிங்கிதுவோ" எனக் கந்தானுபூதியிலும் நவின்றுள்ளது காண்க. "பேராசையாலே பிரயாசைப் பட்டாலும், வாராது வாராது வருவதுவும் போகாது." என்பது மனுநீதிகாதலாகும், ஆதலின் மனத்தை தீயநெறியாகிய உலகவிச்சையிற் புகவிடாது முருகன் சரணபங்கயங்களிற் செலுத்தவேண்டு மென்பது இங்கு விளங்குகின்றன.

"விதியையும் விதித் தென்னை விதித்திட்ட
மதியையும் விதித் தம்மதி மாயையில்
பதியவைத்த பசுபதி நின்னருட்
கதியை யெப்படிக் கண்டு களிப்பதே."

—தாயுமானவர்

சிவசிவ சங்கர வேலா யுததினை வஞ்சிகுறிஞ்
சிவசிவ சங்கர வாமயில் வீர செகந்திருக்கண்
சிவசிவ சங்கர மாமை யேனுந்திற லோய் பொறைவா
சிவசிவ சங்கர மான்பட்ட வாவோளி சேர்ந்த பின்னே. (84)

(ப-ரை.) சிவ - ஏகவஸ்துவான, சிவ - பரமசிவனிடத்தில், சம் - உற்பவித்த, கர - திருக்கரத்தில், வேலாயுத - வேலாயுதத்தையுடைய முருகோனே! தினை - தினைப்புனத்தையுடைய, வஞ்சி - பெண்ணாகிய, குறிஞ்சி — குறிஞ்சி நிலத்தில், வசி - வாசஞ்செய்கின்ற வள்ளி நாயகியினது, வசமகரவா - பக்கத்தைவிட்டகலாத, மயில்வீர — மயிலேறுஞ் சேவகனே! செகம் - உலகத்தின்கண், திரு - சிறந்த, கண் - விழியினால், சிவ - கோபி, சிவ - கோபி, சங்கர - எல்லாரையுமழிக்கின்ற, மாவை - சூரனுருக்கொண்ட மாமரத்தை, எனும் - என்று வேலாயுதத்தையேவும், திறலோய் - வீரனே! பொறைவாசி - மிகுந்த பொறுமை யென்னும் பாணத்தின், வசிவசம் - கூர்மையினிடத்தில், கப - கோபமுதலிய, மான்பட்ட - மிருகங்கள் விழுந்துவிட்டன, ஒளி - உனது திருவருளாகிய பிரகாசம், சேர்ந்தபின் - என்னிற் கலந்தவுடனே.

(க-ரை.) சோதியும் சுடரும்போன்று சிவபிரானிடத்தினின்றுந் தோன்றிய செல்வனாகிய வேலாயுதக்கடவுளே! குறிஞ்சித் தினைவளக் குறவஞ்சியாகிய வள்ளிநாயகியின் அன்பிற்கினிய நாயகனே! அழகிய மயிலை வாகனமாகக் கொண்டருளிய வீரனே! மாயா மாமர வடிவுகொண்ட சூரனைச்சங்கரித்த கடவுளே! நினது திருவருளாகிய பிரகாசம் எனது இருதயத்தில் நிறைந்து விளங்குகின்ற தன்மைக்கிணங்க பொறுமை என்னும் வாளாயுதத்தால் கோபமுதலிய அகந்தைக் குற்றங்கள் அழிந்தன என்பதாம்.

(வி-ரை.) காமக் குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சர்யம் என்னுந் தீய குணங்கள் மனத்தில் விளைகின்றதற்கு நானெனும் அகந்தையே அஸ்திவாரமாகும். அவ்வித அஞ்ஞானவிருட் கூட்டங்கள் முருகப்பெருமான் திருவருட் பிரகாசத்தினால் ஒழிந்து மனச்சாந்தியை யளிக்கின்றதென்பதை இங்கு விளக்கிக்காட்டினர் என்க.

சன்மார்க்க சாதனத்தினல் ஆன்மஞானங்கிட்டி அருட்செல்வம் பெருகுமென்பதையும் ஈதுணர்த்துவதாகும்.

"கிரிவாய் விடுவிக் ரமமே விறையோன்
பரிவா ரமெனும் பதமே வலையே
புரிவாய்! மனனே! பொறையா மறிவா
லரிவாய்! அடியோ டுமகந் தையையே."

எனவும் நம்சுவாமிகள் கந்தரனுபூதியில் நவின்றுள்ள தன்மையின்படி அறிவுமயமே அவன் சொரூபமாமென்க.

சேந்த மராத்துடர் தானவர் சேனையைத் தெண்டிரைக்கண்
சேந்த மராத்துடன் கொன்றசெவ் வேல திருமுடிமேற்
சேந்த மராத்துட ரச்சூடி மைந்த திளைத் திளைத்தேன்
சேந்த மராத்துட ரின்னரி யென்னுமிச் சேறுபுக்கே. (85)

(ப-ரை.) சேந்த - கந்தனே! மராத்துடர் - கடப்பமாலிகையைப் புனைந்த, தானவர் சேனையை - அசுரர்கூட்டங்களை, தெள் - தெளிந்த, திரை - அலையையுடைய கடலினிடத்து, கண்சேந்து — விழிகள் சிவந்து, அ - அந்த, மராத்துடன் - மாமரமாய் நின்ற சூரனுடன், கொன்ற - வதை செய்த, செவ்வேல - சிவந்த வேலாயுதத்தை யுடையவனே! திருமுடிமேல் - அழகிய சிரசின்கண், சே - இளமையான, இந்து - சந்திரனையும், அம் - கங்காசலத்தையும், அரா - சர்ப்பத்தையும், துள் - துள்ளலை, தா - கொடுக்கும்படி, சூடி - தரித்த பரமசிவனது, மைந்த - புதல்வனே! திளைத்து - மூழ்கி, இளைத்தேன் - மெலிந்து வருந்தினேன், சே - என்னைக் காத்தருள்வாய், தமரா - சுற்றத்தாராக, துடர் - பற்றிய, இல் - மனைவாழ்க்கையும், நாரி - பெண்ணாசையும், என்னும் - என்று சொல்லப்பட்ட, இச்சேறு - இச்சேற்றில், புக்கு - பிரவேசித்து.

(க-ரை.) வாசனையுடைய கடப்பமலர் மாலையணிந்த கந்தப் பெருமானே! அலைகளையுடைய சமுத்திரத்தினிடத்தே தோன்றிய அசுரர்கூட்டங்களை மாமரவடிவாய் நின்ற சூரபன்மனுடன் வதைத் தொழித்த வெற்றிவேலாயுதனே! சடாமுடியிற் கங்கையையுஞ் சர்ப்பத்தையுந் தரித்தவராகிய சிவபிரானது மைந்தனே! சுற்றத்தாராக எனைப்பற்றி நின்று சூழ்ந்துள்ள மனைவி புத்திராதியர்களாசையில் மயங்கி வருந்தி மெலிந்தவனான அடியேனை அச்சேற்றினின்றுங் காத்தருளவேண்டும் என்பதாம்.

(வி-ரை.) ஈடணாத்திரயமான துன்பங்களினின்றும் நீங்கி பேரின்பவடிவமான சற்குரு தரிசனம் பெறவேண்டுமென்னுந் தன்மையை இப்பாடல் விளக்குவதாகும். "தந்தைதாய் தமர்தார மகவென்னு மிவையெலாஞ் சந்தையிற் கூட்டமிதிலோர் சந்தேக மில்லை" எனத் தாயுமானவரும், "எத்தாய ரெத்தந்தை யெச்சுற்றத்தா ரெம்மாடு சும்மாடா மேவர்நல்லோர், செத்தால் வந்துதவுவா ரொருவ ரில்லைச் சிறுவிறகாற் றீமூட்டிச்செல்லா நிற்பர்." என அப்பர் சுவாமிகளும் நவின்றுள்ளார்கள். "வளைபட்டகை மாதொடுமக்களெனுந், தளைபட்டழியத் தகுமோ தகுமோ" என்பது நமது சுவாமிகளின் கந்தரனுபூதியாகும்.

"ஆனவிம் மனைவி மக்க ளர்த்தவீ டனைகண் மூன்றில்
கானவர் வலையிற் பட்டுக் கைதப்பி யோடு மான்போல்
போனவன் வெறுங்கை யோடே போகாத வண்ணஞ்சென்று
ஞானசற் குருவைநாடி நன்றாக வணங்கினனே."

—கைவல்லியநவநீதம்

சேறலைத் தாறலைக் கப்பாலெழுந்து செழுங்கமுகிற்
சேறலைத் தாறலைக் குஞ்செந்தி லாய்சிந்தை தீநெறியிற்
சேறலைத் தாறலைத் தீர்க்குங் குமார திரியவினைச்
சேறலைத் தாறலைக் கத்தகு மோமெய்த் திறங்கண்டுமே. (86)

(ப-ரை.) சேறு - சேற்றை, அலைத்து - உழக்கி, ஆறு - ஆற்றினின்றும், அலைக்கு அப்பால், எழுந்து - அலைகளுக்கு மேலெழும்பி, செழும் — செழுமைதங்கிய, கமுகில் - கமுகமரத்தில், சேல் — சேற்கெண்டையானது, தலை - அக்கமுகின் தலையிலிருக்கின்ற, தாறு - குலைகளை, அலைக்கும் - அலைக்காநின்ற வளப்பத்தையுடைய, செந்திலாய் - திருச்செந்தில் நாயகனே! சிந்தை - என் மனமானது, தீநெறியில் - கொடியமார்க்கத்தில், சேறலை - செல்லுதலையும், தாறு - அளவுபடாத, அலை - அஞ்ஞானவிருளை யடைதலையும், தீர்க்கும் - நீக்கியருளுகின்ற, குமார - குமாரக்கடவுளே! திரிய - மாறுபடும்படி, வினை - இருவினையாகிய, சேறு - சேற்றின்கண், அலைத்து - துன்பப்படுத்தி, ஆறு அலைக்கத்தகுமோ - வழி பறிப்போர்போலென்னுயிரைக் கவரத்தகுமோ, மெய்த்திறம் - உனதருளினுண்மைத் திறத்தை, கண்டும் - கண்டு அதுவே பற்றாயிருக்க எண்ணுகின்ற என்னை.

(க-ரை.) சேற்கெண்டை மீன்கள் ஆற்றின் அலைகளுடன் மேலெழும்பிக் கமுகங்குலைகளை யலைக்கின்ற வளம்பொருந்திய செந்திற்பதியையுடைய கடவுளே! அடியார்கட்கு அஞ்ஞானவிருளை நீக்கி மெஞ்ஞானத்தை யருளுகின்ற குமாரமூர்த்தியே! நினது திருவருட்டிறத்தை வியந்து போற்றுபவனாகிய அடியேன் இருவினையெனுஞ் சேற்றிலழுந்தி மயங்காது காத்தருளவேண்டும் என்பதாம்.

(வி-ரை.) சனன மரணத்திற்கு இருவினைகளே மூலகாரணமாதலின், அவ்வித இருவினைச் செறிவினாலுண்டாகும் இன்பதுன்பங்க

ளான சுகதுக்கங்கள் ஆராய்ச்சியிற் பொய்யாகி திருவடியொன்றே மெய்யாக விளங்குவதினுல் மனம் மாயாபோகங்களை உண்மையென நம்பிவிடாது நினது திருவருட்செல்வத்தை யளித்து மனம் இருவினைவழியிற் செல்லாது காத்தருள வேண்டுமெனப் போற்றினரென்க. முருகத்தியானம் சிவானந்த வாழ்வை யளிக்குமென்பதை விளக்குவனவாகும்.

"பரமனே யெனதிதய மதமேவு
பெருங்களிறு படர்ந்து வாளா
வுரமேவு பிரகற்ப விருத்தியினுற்
றிசைநாலு முழலு மாற்ருல்
திரமாரு நயத்தாலும் பத்தியெனும்
கயிற்ருலுஞ் சிறந்த தாணு
வரமேவு திருத்தாளிற் பிணித்திடு
வேன் சிவானந்த மருவுதற்கே."

—சிவானந்தலகரி

திறம்பா டுவர்தண் புனத்தெய்வ மேயென்பர் சேதத்துமாந்
திறம்பா டுவர்முது நீரெனக் காய்பவர் சேந்தினைமேல்
திறம்பா டுவரிதழ் கண்டுரு காநிற்பர் செப்புறச்சேந்
திறம்பா டுவரி லிவர்வல் லவர்நஞ் செயல்கொள்ளவே. **(87)**

(ப-ரை.) திறம் - நமது வெற்றியை, பாடுவர் - துதிக்கின்ருர், தண் - தண்ணிய, புன - புனத்தில்வாழும், தெய்வமே - தேவதையே! என்பர் - என்று அழைக்கின்ருர், (அவர் யாரெனில்) சேதத்து - கேட்டையுடைய, மாந்திறம் - வலிபொருந்தி மாமரமாய் நின்ற சூரனது கிளையோடு, பாடு - அழிந்தான், உவர் – உவர்ப்பையுடைய, முது - பழமையாகிய, நீர் - கடலின்கண்ணே, என - என்று (தேவர்

சொல்லும்படி) காய்பவர் - கோபித்தவராகும், செம் - சிவந்த, தினை மேல் - தினைப்புனத்தின்கண், திறம்பால் - நீங்காதிருக்கின்றவளாகிய வள்ளிநாயகியே! (உனது) துவர் - பவழம்போன்ற, இதழ்கண்டு அதரத்தைப்பார்த்துக்கொண்டே, உருகா நிற்பர் - மனமுருகி நிற்கின்ருர், செப்புற — ஏதோ வொருவார்த்தை சொல்லுவதற்காகவே, செந்தில் - செந்திற்பதியென்னும், தம்பாடு - தம்மிடத்தில், வரில் - வருவாரானல், இவர் - இப்பேர்ப்பட்டவர், வல்லவர் - சாமர்த்தியரே, நம் - நமது, செயல் - உபசாரச் செய்கையை, கொள்ள - பெற்றுக் கொள்ளுவதற்கு.

(க-ரை.) ஹே அழகிற் குறைவிடமாகிய வள்ளிநாயகியே! கடலினிடத்தே வன்மைதங்கிய மாமர வடிவமாய்நின்ற சூரபன்மன் கிளையொடுமடிந்தான் என்று தேவர்கள் வெற்றியைத் துதிக்கும்படி வதைத்தவர் புனத்தில்வாழுந் தேவதையே! தினைப்புனத்தில் நீங்கா திருக்கின்ற வள்ளிநாயகியே! என, உனது பவழம்போன்ற அதரத்தைப் பார்த்துக்கொண்டே இன்பவெள்ளம்பருக மனமுருகி நின்று சரசமொழி புகல்கின்றவர் தமதிருக்கையாகிய செந்திற்பதிக்கு வருவாரானல் சர்வ வல்லமையுடைய அந்த முருகப்பெருமான் நமது உபசாரமாகிய பிரார்த்தனையை ஏற்று நம்மைக்காத்தருளுவார் என்பதாம்.

(வி-ரை.) இப்பாடல் தினைப்புனத்தின் மாண்பையும், முருகக் கடவுளின் திருவிளையாடலையும், வள்ளிநாயகியின் கட்டழகையும், திருச்செந்திற்பதியின் மகிமையையும்பற்றி விளக்குகின்றனவாகும். நாயகன் நாயகிக்கு கந்தன் பெருமையைப் புகழ்ந்துரைக்கின்ற பொன்மொழியுமாகும். அறிவு வடிவமானவரெனவும், அவ்வறிவு வடிவமானவரை, பிரமதேவனும், வேதங்களும், நாததத்துவமும், நாதாந்தத்தின் முடிவும் யாதொரு மலக்குற்றமுமின்றி யொழிந்த

அறிவும் அறிதற்கியலாது என பரம்பொருளை மேற்கண்டவாறு வருணிப்பது உலகியல்புக் கிசைந்தவாறு பொருந்தச் செய்கின்ற உப சார மொழியாகுமென்க.

"சொல்லாலு மனனாலுந் தொடராத சூக்குமமாய்ப்
பல்லான்ற கேள்வியரு மீதென்று பகிர்வரிதாய்
ஒல்லாத பரஞ்சுடரா யுயர்க்குரியா யுண்மையுமாய்
எல்லாமா யல்லவுமா யிருக்குமந்தப் பரமசிவம்."

—பதிபசுபாசவிளக்கம்

சேயலங் கைவாளை யிறைகோயி லைச்சிவ னாரமுதைச்
சேயலங் கைவாளை முனிகோண்டல் வாளியைத் தேவர்பிரான்
சேயலங் கைவாளை முனைவேலை யன்னவிச் சேயுறையுஞ்
சேயலங் கைவாளை யுகல்சேந்தில் வாழ்பவள் சேல்விழியே.

(ப-ரை.) செயல் - சேற்றிலுண்டாகின்ற, அம் - அழகிய, கை - ஒப்பற்ற, வாள் - ஒளி பொருந்திய, ஐ - சிரேஷ்டமான, இறை - பிரம்மாவின், கோயிலை - ஆலயமாகிய தாமரையையும், சிவனார் - பரமசிவனுண்ட, அமுதை - விஷத்தையும், செய - வெற்றி பொருந்திய, லங்கை - இலங்காபுரியினது, வாளை - பிரகாசத்தினழகை, முனி - கோபித்த, கொண்டல் - மேகநிறத்தையுடைய ஸ்ரீ ராமரது, வாளியை - பாணத்தையும், தேவர்பிரான் - தேவர்கட்குத் தலைவனாகிய இந்திரனது, செயல் - போர்புரிகின்ற, அங்கை - அங்கையிற்பற்றிய, வாளை — வாளாயுதத்தையும், முனை - கூர்மை பொருந்திய, வேலை - வேலாயுதத்தையும், அன்ன - ஒத்துவிளங்காநின்றன, இ சேய் உறையும் - இக் குமாரக்கடவுள் அமர்ந்தருளிய, செய் - வயலையுழுகின்ற, அலம் - கலப்பையை, கை - கோபித்து மோதி, வாளை - வாளைமீன்கள், உகள் - புரளுகின்ற (வளப்பத்தை

யுடைய) செந்தில் - திருச்செந்திற்பதியில், வாழ்பவள் - வாழும் பெண்ணினது, சேல் - சேற்கெண்டைபோன்ற, விழி - கண்களிரண்டும்.

(க-ரை.) சண்முகப்பெருமான் கோயில்கொண்டருளிய திருச்செந்திற்பதியில் வாழ்பவளாகிய மங்கையினது விழிகள் பிரமனிருப்பிடமாகிய தாமரைமலரையும், வெற்றிபொருந்திய இராமபாணத்தையும், சிவபெருமானுண்டதாகிய நஞ்சமுதத்தையும், இந்திரனது கைவாளாயுதமாகிய வச்சிராயுதத்தையும் போன்று விளங்குகின்றன என்பதாம்.

(வி-ரை.) செந்திற்பெருமான் சந்நிதானமானது சன்மார்க்க குணசீலர்களுக்கு தாமரை மலர்போன்று தண்ணருளமுதமாகிய பேரானந்தத் தேனைப்பொழிந்தும் துன்மார்க்கர்களுக்கு அவர்களது தீவினையை யொழிப்பதில் இராவணனைக்கொன்ற இராமபாணம் போலவும், விருத்திராசுரனைக் கொன்ற இந்திரனது வச்சிராயுதம் போன்றும் விளங்கி அவர்களை அஞ்ஞானமாகிய துன்பத்தினின்றுங் காப்பதில் தேவர்களை ரட்சிப்பதற்காக சிவனுருண்ட நஞ்சமுதம் போலும் உடையதாகுமென்க. முருகன் திருவருளையே இங்கு பெண்ணின் கண்ணிற்கு உவமைகூறியுள்ளதாகும். அன்றியும் தெய்வப் பெண்ணின் இலக்கணத்திற்கிசைந்த கண்களுக்கு விசாலம் பொருந்திய தாமரைமலரையும், வேல், வாள், நஞ்சு இவைகளையும் உவமை கூறுவதுமுண்டு.

சேலையி லாருந் தவன்சூல மேறச் சினத்தவன்கண்
சேலையி லாருந் திவனேற் பவையர சிந்திரியச்
சேலையி லாரும் பராபரி புக்குறச் சிக்கெனுமிச்
சேலையி லாருந் திறையிட் டனர்தங்கள் சித்தங்களே. (89)

(ப-ரை.) சேலே - அசோகமரத்தை, இலார் - இல்லிடமாக வுடைய அமணர்கள், உந்து - உயர்ந்த, அ — அந்த, வன் - வலிய, சூலம் - கழுவில், ஏற - ஏறியழியும்படிக்கு, சினத்தவன் - சம்பந்தப் பிள்ளையாக வந்து தேவாரம்பாடிச் செயித்தவன், கண் - விழியானது, சேல் — சேற்கெண்டைக்கும், ஐயில் - வேலுக்கும், ஆர் - ஒப்பாகிய, உந்தி - கான்யாற்றையுடைய, வன உற்பவை - வனத்தி லுற்பவித்த வள்ளிநாயகிக்கு, அரசு - தலைவனான குமாரக்கடவுள், இந்திரியச் சேலே — பஞ்சேந்திரியச் செய்கைகளை, இலார் - நீக்கிய தபோதனர் கட்கும், உம்பர் - தேவர்கட்கும், ஆப - துன்பத்தைவிளைத்த, ரிபு - சத்துருவாகிய சூரனை, குற - குற்றும்படி, சிக்கெனும் - இறுக்கிக் கட்டிய, இச்சேலையில் - பீதாம்பரக் கச்சையில், ஆரும் — மாதர்க ளெல்லாம், திறைகட்டன - கப்பமாகச் சமர்ப்பித்தார்கள், தங்கள் - தங்கடங்கள், சித்தங்கள் - இருதயங்களை.

(க-ரை.) ஞானசம்பந்தராகத்தோன்றி சிவத்துரோகிகளாகிய சமணர்களைக் கழுவிலேற்றியவனும், வனபூஷணியாகிய வள்ளிக்கு நாயகனுமாகிய கந்தப்பெருமான், வானவர்களையும் முனிவர்களையும் வருத்தித் துன்பம் விளைத்தவனான சூரபன்மனை வெல்லும்பொருட்டு திருவரையினிடத்தே அணிந்துள்ள பீதாம்பரத்தாலாகிய கச்சையில் மாதர்களெல்லாம் தங்கள் தங்கள் உள்ளங்களைக் காணிக்கையாக அர்ப் பணஞ்செய்தார்கள் என்பதாம்.

(வி-ரை.) திருவரையின் சிங்காரத்தோற்றத்தை வியந்து கூறிய தாகுமென்க. அன்றியும் சூரனது உபத்திரவத்தினால் தங்கள் தங் கள் நாயகன்மார்களுக் குண்டாகிக்கொண்டிருந்த ஆபத்துகள் நீங்கி தங்கள் மாங்கல்யவாழ்க்கை நீடிக்குமென்பதுபற்றி ஆனந்தங்கொண்டு நம் பெருமானாரின் யுத்த கோலமாகிய திருவரையின் கச்சையினழ கைக்கண்டு உள்ளங்கனிந்தார்களென்க.

சித்தத் தரங்கத்தர் சித்தியெய் தத்திரி கின்றதென்னர்ச்
சித்தத் தரங்கத்தர் சந்ததி யேசெந்தி லாய்சலரா
சித்தத் தரங்கத்த ரக்கரைச் செற்றகந் தாதிங்களிஞ்
சித்தத் தரங்கத்தர் சேயா ரணத்தந் திகிரியையே. **(90)**

(ப-ரை.) சித்த - இருதயமானது, தரங்கத்தர் - நிலைப்படாமலலைபோற் புரளுந்தன்மையை யுடையவர், சித்தி - மோட்சத்தை, எய்த - அடையும்படி, திரிகின்றது - அலைந்து திரிகின்றது, என் - என்னகாரணம்? அர்ச்சித்து - பூசைசெய்தே, அத்தர் - சுவாமியாகிய, அங்கத்தர் - எலும்பை மாலையாகவணிந்த பரமசிவனது, சந்ததியே - மைந்தனே! செந்திலாய் - திருச்செந்திற்பதியோனே! சலராசி - சமுத்திரத்தின்கண், தத்தரம்-தங்கள் தங்கள் வலிமையை, கத்து - ஆர்ப்பரித்துச் சொல்லிய, அரக்கரை - அசுரரை, செற்ற - செயித்த, கந்தா - முருகனே! திங்கள் - சந்திரன், இஞ்சி – மதிலின்கண், தத்து - தவழுகின்ற, அரங்கத்தர் - திருவரங்கநாதருடைய, சேய் - பிள்ளையாகிய (பிரமாவின்) ஆரணம் - வேதம்பூசிக்கின்ற, தந்தி – பாம்புபோன்ற, கிரி - திருச்செங்கோட்டு மலையில்வாழும், ஐ - சுவாமியே.

(க-ரை.) ஹே சிவபிரான் மைந்தனே! திருச்செந்திலாதிபனே! வேதங்கள் துதிக்கின்ற திருச்செங்கோட்டு மலையிற் கோயில்கொண்டருளிய கந்தப்பெருமானே! மனத்தூய்மையற்ற பாமரர்கள் வெளிவேடங்களைக்கொண்டு நடித்து பேரின்ப வீட்டை யடையவேண்டுமென்கிற வீணாசைகொண்டு அலைந்து திரிகின்றது யாது காரணமோ என்பதாம்.

(வி-ரை.) உலகவிச்சையாகிய மாயா காரியங்களைப்பற்றிச் சுழன்று திரிகின்ற நிலையற்ற மனம் திருவருள்பெறுதற் குரியதல்லவென்பதை இப்பாடல் விளக்குகின்றனவாகும். மனத்தூய்மை யில்

லாதவர்கள் செய்கின்ற பூசைகள் பிரயோசனமற்ற வெளிவேடங்க ளாகுமெனப் புலனுகின்றன. நினது சரணகமலங்களை மனவோர்மை யுடன் பற்றத்தக்கதாக மெய்யுணர்வளித்துக் காத்தருளும்படி வேண்டி னரென்க.

"கை யொன்று செய்ய விழியொன்று
நாடக் கருத்தொன் றெண்ணப்
பொய் யொன்று வஞ்சக நாவொன்று
பேசப் புலால் கமழு
மெய் யொன்று சாரச் செவி யொன்று
கேட்க விரும்பு மியான்
செய்கின்ற பூசை யெவ்வாறு கொள்வாய்?
வினை தீர்த்தவனே." —பட்டினத்தடிகள்

மக்கட் பிறப்பு இறைவன் திருவருளைப் பெறுதற்குரியதாதலின் அவம்போக்கிவிடாது சன்மார்க்க சாதனத்தால் மனத்தூய்மை யடைந்து இறைவனை நாடவேண்டும் என்றார்.

திகிரி வலம்புரி மாற்கரி யார்க்குப தேசஞ்சொன்ன
திகிரி வலம்புரி செய்யா ரிலஞ்சிசெந் தூர்கனதந்
திகிரி வலம்புரி வேறும் படைத்தருள் சேய்தணியில்
திகிரி வலம்புரி சூடிய வாநன்று சேடியின்றே. (91)

(ப-ரை.) சேடி - தோழியே! இன்று - இன்றையத்தினம், திகிரி - சக்கராயுதத்தை, வலம் - வலதுகரத்தில், புரி - தரித்த, மாற்கு - விஷ்ணுவுக்கு, அரியார்க்கு – அறிதற்கரிதான பரமசிவ னுக்கு, உபதேசஞ்சொன்ன - ஓங்காரப்பொருளை யுபதேசித்தருளிய, திகிரி - சுவாமி மலையென்னுந் திருவேரகத்தையும், வலம்புரி - சங் கினங்கள், செய் - வயல்களின்கண், ஆர் - நிறைந்திருக்கின்ற, இலஞ்சி - திருவிலஞ்சிப்பதியையும், செந்தூர் - திருச்செந்தூர்ப்

பதியையும், கன - மேகங்கள் தவழா நின்ற, தந்தி - பாம்புபோன்ற, கிரி - திருச்செங்கோட்டு மலையையும், வலம் - திருவலத்தையும், புரிவேறும் - மற்றைத் தலங்களையும், படைத்தருள் - தனக்கு உறைவிடமாகக் கொண்டருளிய, சேய் - குமாரக்கடவுளது, தணியில் - திருத்தணிகையில், திகிரி - மூங்கிலானது, வலம்புரி - நந்தியாவட்டத்தை, சூடியவா - சூடியவிதத்தின்குழி, நன்று - நன்றாகவிருக்கின்றது.

(க-ரை.) சேடியே! சிவனுருபதேசம்பெற்ற தலமாகிய திருவேரகம், சங்கினங்கள் தவழ்கின்ற வயல்களையுடைய திருவிலஞ்சி, திருச்செந்தூர், திருச்செங்கோட்டுமலை, திருவலம் முதலிய பற்பல தலங்களிற் கோயில்கொண்டருளிய முருகப்பெருமானது தணிகாசலத்தில் மூங்கிலின்மீது நந்தியாவட்டத்தைச் சூடியவாறு நன்றாகவிருக்கிறது என்பதாம்.

(வி-ரை.) மனத்தைத் தோழியாகக்கொண்டு முருகப்பெருமான் திருவிளையாடற் பெருமைகளை விளக்குவதாமென்க.

சேடி வணங்கு வளைத்தோ ளெனப்புணர் சேயவட
சேடி வணங்கு திருத்தணி காவல நின்செருக்காற்
சேடி வணங்கு கோடியிடை யாரையேன் சேப்புமலை
சேடி வணங்கு தலைக்களி நீந்தது செல்லநில்லே. (92)

(ப-ரை.) சேடு - அழகியதாகும், இ - இந்த, அணங்கு - மங்கையினது, வளை - வளையலையணிந்த, தோள் என - தோளென்று மிகவுமகிழ்ந்து, புணர் - முன் வேண்டின காலத்தென்னை மணம் புணர்ந்த, சேய - முருகனே! வடசேடி - வடக்கின் கண்ணதாகிய விஞ்சையருலகம், வணங்கு - வழிபடத்தக்க, திருத்தணி - திருத்தணிகைக்கு, காவல - தலைவனே! நின் - நினது, செருக்கால் - செருக்கினால், சேடி - கர்வித்திருக்கின்ற, வணங்கு - துவளாநின்ற, கொடி -

கொடிபோன்ற, இடையாரை - இடையையுடைய பரத்தையரை, என் செப்பு - நிந்தித்துப் பேசவேண்டிய காரணமென்னவிருக்கின்றது? முலைச்சேகு - எனது கொங்கையின் திரட்சியை, இவணம் - இப்படித் திரட்சியின்மையாகும்படி, குதலை - மழலைச் சொல்லையுடைய, களிறு - என்பாலன், ஈந்தது - தந்து விட்டது, (ஆதலால்) செல்ல - என்னிடத்து வராமற்செல்லும்படி, நில் - தூரமாகநில்.

(க-ரை.) விஞ்சையரும் வழிபடுவதற்குரியதாகிய திருத்தணிகாசலத்தில் வாழ்கின்றவனே! எனது தோள் அழகியதென்று மெச்சி முன் வேண்டினகாலத்தில் மணம் புணர்ந்த முருகப்பெருமானே! நினது யின்பம் அனுபவிக்கின்ற செருக்கினால் கர்வித்திருக்கின்ற பரத்தையரை யான் நிந்தித்துப் பேசவேண்டிய காரணமென்னவிருக்கின்றது? எனது கன்னிகைப்பருவத்தை மழலைமொழியையுடைய என்பாலன் மாறுதல் செய்துவிட்டான், ஆதலின் இனி என்னிடம் வராமல் நின்றுகொள்ள வேண்டும் என்பதாம்.

(வி-ரை.) சீவாத்துமாவானது பூரண சுத்தியைப் பெற்றபோது பரமாத்துமாவின் சன்னதியிற் பிரவேசித்து, தான் தனியாகவும், தனது இயற்கையான மனசாட்சியுடனும் ஜனன மரணமற்ற தன்மையிற்பக்குவமடைந்து பரமாத்துமாவின் முன்னிலையில் சதானந்தத்தையனுபவித்தற்கேதுவாய் நமது சுவாமிகள் முருகன் திருவருட்செல்வம்படைத்த காரணம்பற்றி, அடியவணுகிய தம்மைப் பெண்மைப் படுத்தி நாயகியாகவும், முருகப்பெருமானை நாயகனாகவுங்கொண்டு தமது மனம் துவிதபாவனையற்று பரமானந்த போதமாகிய பாலகனைப் பெற்றுவிட்டதென்னும் தன்மையை விளக்கினார். நிட்களவடிவைக் கலந்துள்ள தமது இருதயம் சகளவடிவிற் பொருந்தாதென்னும் தத்வார்த்தமாக அவ்வடிவைத் தரிசிக்கின்ற அடியார்களை பரத்தையராகக்கொண்டு அவர்கள்பாற்சென்று கலந்துள்ளதால் என்

பால் வரவேண்டுவதில்லை எனவும் சொல்லியிருப்பது குறிக்கத்தகுந்ததாகும். உதாரணமாக கடோபநிஷத்தில் சில வாக்கியம் இங்கு வருவனவாகும்.

"இந்திரியங்களிலும் மனம் சிரேஷ்டம், மனதிலும் புத்தி சிரேஷ்டம், புத்தியிலும் சீவாத்துமா சிரேஷ்டம், சீவாத்துமாவிலும் அவ்யக்தம்பிரகிருதி சிரேஷ்டம், பிரகிருதியிலும் பரமாத்மா சிரேஷ்டம், அவர் வியாபகர், ஆனால் யாரும் பார்க்கும்படியான ரூபம் அல்லது அடையாளத்தை யுடையவரல்லர், அவரையறிந்தே சீவர்கள் முக்தர்களாகி அமிர்தத்துவத்தை யடைகின்றார்களென்பதாம்."

தைத்திரிய உபநிஷத்து

"மனதுடன் வாக்கு எதை அடையமாட்டாமல் எதிலிருந்து திரும்புகின்றதோ, அந்தப்பிரமத்தின் ஆனந்தத்தை யறிந்தவர் ஒரு பொழுதும் அஞ்சார்."

செல்லலை யம்பொழில் சூழ்செந்தி லானறி யானிறைகைச்
செல்லலை யம்பொழி லெங்கணு மேற்ப வெனத்தெறித்த
செல்லலை யம்பொழி லங்கைக் கருடீரு மானிறம்போற்
செல்லலை யம்பொழி லாகவ மாதுயிர் சேதிப்பதே. (93)

(ப-ரை.) செல் - மேகத்தை, அலை - அசைக்கின்ற, அம் - அழகிய, பொழில்சூழ் - சோலை சூழ்ந்த, செந்திலான் - திருச்செந்திற் பதியையுடையவன், அறியான் - அறிகின்றானில்லை, இறை - பரமசிவனது, கை - கரத்தில், செல்லல் - போகாதே, ஐயம் - பிச்சைக்கு, பொழில் எங்கணும் - உலகமெங்கும், ஏற்ப - இரக்கும்படியாய், என - என்று, தெறித்த - தமநிரத்தத்தை பிரமகபாலத்தில் தெறித்தவரும், செல்லல் - துன்பத்தையும், ஐயம் - பயத்தையும், பொழில் - பெருமையையுமுடைய, லங்கைக்கு - இலங்காபுரிக்கு, அருள் — உண்டாக்

கினவருமாகிய, திருமால் - ஸ்ரீராமரது, நிறம்போல் — நீலநிறத்தைப் போல, செல் - நடக்கின்ற, அல் - இராக்காலத்தில், ஐ அம்பு - மன்மதனது பஞ்சபாணமானது, ஒழி - அழியும்படி, லாகவும் - மிகவும் நொய்யதான, மாதுயிர் - மங்கையி னுயிரை, சேதிப்பது - வதைக்கின்றதை.

(க-ரை.) சிவபிரானது காத்திலிருக்கின்ற பிரம கபாலத்தை நிரப்புவதற்காக லங்காபுரியைப் பலியிட்டவரான விஷ்ணுவின் வடிவம்போன்ற இராக்காலத்தில் காமபாணங்கள் இம்மங்கையி னுயிரை சேதிக்கின்றதை செந்திலாதிபனுகிய முருகப்பெருமான் அறியானோ? என்பதாம்.

(வி-ரை.) இதுவும் முதற்கவியைப் போன்று பிரபஞ்சமயக்கத்தை வெறுத்து சீவேசுவர ஐக்கிய நிலயடையுந் தன்மையைக் குறிப்பனவாகும்.

சேதிக் கனைத்து களதாக்கு நோக்கினன் செல்வசெந்திற்
சேதிக் கனைத்து நிலைபெறச் சூரகஞ் சீரங்கமால்
சேதிக் கனைத்து வரிதோ யயில்கோடேற் சேர்க்கவந்தாற்
சேதிக் கனைத்து வருமாமறலி திறலினையே. (94)

(ப-ரை.) சேது - சிவந்த, இக்கனை - கருப்புவில்லை யுடைய மன்மதனை, துகளதாக்கும் - சாம்பலாகும்படி யெரித்த, நோக்கினன் - நெற்றிக்கண்ணையுடைய பரமசிவனது, செல்வ - மைந்தனே! செந்தில்சே - திருச்செந்தூர் முருகனே! திக்கு அனைத்தும் - திசைகளெங்கும், நிலைபெற - நிலைபெற்றிருக்கும்படியாயும், சூர் - சூரனுடைய, அங்கம் - உடலை, சீரங்கம் - திருவரங்கத்தில் வாசஞ் செய்கின்ற, மால் - விஷ்ணுவினது, சே - பிள்ளையாகிய பிரமா, திக்க - திகைக்கும்படி, னைத்து - அழித்து, உவரி - சமுத்திரத்தில், தோய் - மூழ்கிய, அயில்கொடு - வேலாயுதத்தைக்கொண்டு, என் சேர்க்கவந்

தால் - என்னை யமபடாள் கூட்டிக்கொண்டு போகவந்தால், சேதி - கண்டிப்பாயாக, கனைத்துவரும் - கனைத்துக்கொண்டு வாராநின்ற, மாமறலி - பெரிய யமனது, திறலினை-உக்கிரவல்லமையை.

(க-ரை.) மகரகேதனனை நெற்றிக்கண்ணு லெரித்தவனான சிவ பிரானது அருமைச்செல்வனே! திருச்செந்திற்பதியிற் கோயில் கொண்டருளிய கந்தப்பெருமானே! வச்சிரயாக்கை படைத்தவனான சூரபன்மனை யழித்த வெற்றிவேலாயுதத்தினால் என்னைப் பாதிக்க வருகின்ற யமனது வன்மையை யொழித்து நினது சரணகமலங் களைத் தந்தருளவேண்டும் என்பதாம்.

(வி-ரை.) எமவாதையை நீக்கித் திருவடிப்பேற்றை யருள வேண்டும் என்றார்.

திறவா வனக புரிவாச னீக்கச் சிகரிநெஞ்சந்
திறவா வனச முனியை வென்றோய் தென்றிசைத்திருச்செந்
திறவா வனமயி லோயந்த காலமென் சிந்தைவைக்கத்
திறவா வனநின் றிருவான தண்டைத் திருவடியே. (95)

(ப-ரை.) திறவு - திறவுகோல், ஆ - ஆனவனே! அனக - பாவ மற்ற, புரி - கைலாயத்தினது, வாசல்—கதவை, நீக்க - திறக்க, சிகரி- கிரவுஞ்சகிரியினது, நெஞ்சம் - மார்பை, திறவு - பிளந்து, ஆ - ஆச் சரியமாக, வனச - தாமரையில் வாசஞ்செய்கின்ற, முனியை - பிரம னையும், வென்றோய் - செயித்தவனே! தென்திசை - தெற்கின்கண்ண தாகிய, திருச்செந்தில் - திருச்செந்தூரில், தவா - நீங்காதமர்ந்தருளு கின்ற, வன - அழகிய, மயிலோய் - மயில்வாகனத்தையுடையவனே! அந்த காலம் - என்னுடல் கெடும் அநித்யகாலத்தில், என் சிந்தை- எனது சிந்தனையை, வைக்க - ஒருவழிப்படுத்திச் சேர்ப்பதற்கு, திற வாவன - அடைக்கலஸ்தான மெவையெனில், நின் - நினது, திரு

ஆன - சிறப்பையுடையனவாகிய, தண்டை - தண்டையை யணிந்த, திருவடி - திருவடியே.

(க-ரை.) கயிலாயகிரியாகிய வெள்ளிமலைவாயிலுக்குத் திறவு கோல் போன்றவனே! மாயைக்குரிய கிரவுஞ்சகிரியையும் வேதனுகிய பிரமாவையும் வென்றவனே! திருச்செந்திற்பதியிற் கோயில்கொண் டருளிய மயில்வாகனப்பெருமானே! எனது சரீரம் சிதையுங்காலத் தில் நான் சிந்திக்கத்தகுந்ததும் எனக்கு அடைக்கலம் அளித்தற்குரிய தும் கிண்கிணியணிந்த நினது சரணகமலங்களேயாகும் என்பதாம்.

(வி-ரை.) நமது சுவாமிகள் முருகன்றிருவருட் செல்வம் படைத்தவராதலின் அவனது சரணகமலங்களில் அடைக்கலம் பூண்டுள்ள தன்மையை விளக்கினுர் என்க.

திருக்கையம் போதிக ளோகஞ் சமோநஞ்ச மோதிருமால்
திருக்கையம் போசெய்ய வேலோ விலோசனந் தென்னனங்கத்
திருக்கையம் போருகக் கைந்நீற்றின் மாற்றித்தென் னூல்சிவப
திருக்கையம் போக வுரைத்தோன் சிலம்பிற் சிறுமிதற்கே. ()

(ப-ரை.) திருக்கை - திருக்கையென்னு மீனையுடைய, அம் போதிகளோ - சமுத்திரங்களோ, கஞ்சமோ - தாமரையோ! நஞ் சமோ - விஷமோ! திருமால் - விஷ்ணுவினது, திருக்கை-திருக்காத்தி லிருக்கின்ற, அம்போ - பாணமோ! செய்ய - சிவந்த, வேலோ- வேலாயுதமோ! விலோசனம் - கண், தென்னன் - கூன்பாண்டியனது, அங்கத்திருக்கை - முதுகின்கூனை, அம்போருகம் - தாமரை மலர் போன்ற, கைந்நீற்றின் - காத்திற்றரித்த திருநீற்றினுல், மாற்றி- நீக்கி, தென் நூல் - தமிழ்நூலாகிய, சிவபத்தி - சிவபத்தியை விளை விக்கும், ருக்குருக்கு - வேதாசாரமாகிய (தேவாரத்தை) ஐயம்போக- பாசமய நூல்களினுலுண்டாகுஞ் சந்தேக நிவர்த்தியாக, உரைத் தோன் - சம்பந்தப்பிள்ளையா யவதரித்து திருவாய்மலர்ந்தருளிய

குமாரக்கடவுளது, சிலம்பில் - மலையின்கணிருக்கின்ற, சிறுமிதற்கு-சிறியாளாகிய கன்னிக்கு.

(க-ரை.) ஞானசம்பந்தரா யவதரித்து சமணமதம் பூண்டிருந்த பாண்டியனது கூனை திருநீற்று மகிமையால் நிவர்த்திசெய்தும், எச் சமயத்திற்கும் சைவசமயமே மெய்ச்சமயமென்பதைப் போதிப்ப தாகிய தமிழ்வேதமென்னும் தேவாரப் பதிகங்களை உலகத்தில் வெளி யிட்டருளியவருமான ஸ்ரீ குமாரக்கடவுள் கோயில்கொண்டருளிய மலையினிடத்து வாழும் கன்னிகையினது கண்களானது கடலோ! தாமரைமலரோ! நஞ்சோ! அம்போ! சிவந்த வேலாயுதமோ! என்ப தாகும்.

(வி-ரை.) அன்பர்கட்குக் காருண்யங்காட்டுவதும் அவர்கட்குத் தீமைபுரிய நினைக்கின்ற துன்மார்க்கர்களைச் சினந்தழியச் செய்வதும் முருகப்பெருமான் திருநேத்திரங்களின் தன்மையாதலின் நமது சுவாமிகள் அவன்றிருவருட்டிறத்தை ஒரு கன்னியின் விழிகளுக்கு உவமையாக்கி வியந்து கூறினர் என்க. நன்மைக்கு - கடலும், தாமரையும், துஷ்டர்களை அழிக்கின்றதற்குரிய தீமைக்கு-நஞ்சும், அம்பும், வேலும், பொருத்தமாகின்றன. உதாரணம் வருவனகாண்க. "பாறுலாவரு களேவரத்தமலை யும்படிமேல், வீறுசோணித நீத்தமும் வேவுறவிழித்து, நீறதாக்கினன் சூரனையட் டிலனின்று, ஞறுமாமுக ஞடலையுன் னினனுங்கொல்'' என்பது தேவர்கட் கிடும்பை புரிந்த சூரபன்மன் வதைப்படலம் கந்தப்புராணமாகும்.

சிறுமிக் குமர நிகர்வீர் பகிரச் சிதை யுயிர்த்துச்
சிறுமிக் குமர சரணமேன்னீ ருய்விர் சேந்தினைமேற்
சிறுமிக் குமர புரைத்துநின் றேன்சிலை வேட்டுவனேச்
சிறுமிக் குமர வணிமுடி யான்மகன் சீரடிக்கே. (97)

(ப-ரை.) சிறு - சிறிதான, உமிக்கும் - குற்றுமியை யாயினும், மாரிகர்வீர் பகிர - பிறர்க் கிட்டுண்ண மனங்கூடாமன் மரம்போன் றிருப்பவரே! சிதை - அழிந்துபோவதும், உயிர் - பிராணனுக்கு, துச்சில் - ஒதுக்கிடமுமாகிய இவ்வுடலின்கண், தும்மி ஒரு தும்ம லுண்டாகும் அக்காலத்தினும், குமா - குமரனே! சரணம் - உனக் கடைக்கலம், என்னீர்-என்று சொல்லுங்கள், உய்வீர் - பிழைப்பீர்கள், செம் - சிவந்த, தினைமேல் - தினைப்புனத்தில் வாசஞ்செய்த, சிறு மிக்கு - வள்ளிநாயகிக்கு, மாபு - தமது மரபின் வழிகளை, உரைத்து- எடுத்துரைத்து, நின்றோன் - குறையிரந்து நின்றவனும், சிலை - வில்லை யுடைய, வேட்டுவன் - வேடத் திருமேனியையுடைய கண்ணப்ப நாயனர், எச்சில் - ஊண் முதலியவற்றை முன் ருசி பார்த்து நிவே தித்த எச்சிலை, அு - உவப்புடனே யுண்டவராகிய, மிக்கும்-மேன்மை யாக, அரவு - சர்ப்பாபரணத்தை, அணி - தரித்த, முடியான் - முடியை யுடைய பரமசிவனது, மகன் - மைந்தனுமாகிய குமாரக்கடவுளின், சீரடிக்கு - சிறப்பையுடைய திருவடியைக் கருதிக்கொண்டே.

(க-ரை.) அழிந்துபோகுந் தன்மையாகிய புலாலுடம்பைப் பெற்றும் குற்றுமியாயினும் இரப்பவர்க்கு யிட்டுண்ண மனங்கூடாம லிருக்கின்றவராகிய மரம்போன்ற மாந்தர்களே! தினைப்புனக் குற வஞ்சியின் இன்ப நாயகனும், வேடனாகிய கண்ணப்பன் நிவேதித்த எச்சிலை இனிமையெனவுண்ட சிவபிரானது செல்வக்குமாரனுமான கந்தப்பெருமானுடைய பரிசுத்தம் வாய்ந்த திருவடிமலரை நீங்கள் தும்மும்போதாயினும் வாயினுற் றுதிப்பீராகில் மனவிருள் நீங்கிப் பிழைப்பீர்கள் என்பதாம்.

(வி-ரை.) சரீரமும் அனுபவிக்கின்ற இவ்வுலகபோகங்களும் நிலையற்றதென்று தெளிவுற வுணர்ந்திருந்தும் பிறர்க் கிட்டுண்ண மனமிசையாத பாமரர்களாகிய லோபிகளுக்குரிய போதனையா

மென்க. தும்மலிற்கூட பிராணன் உடலைவிட்டு நீங்கிவிடுவ துண்மை யாதலின் அதுசமயங்கூட மறந்துவிடாது காருண்ய மூர்த்தியாகிய முருகப்பெருமான் திருநாமத்தை மெய்யன்புடன் சொல்லவேண்டும் என்பதை விளக்குகின்றனவாகும்.

"ஒன்றென் றிரு! தெய்வமுண்டென் றிரு! உயர்செல்வமெல்லா
அன்றென் றிரு! பசித்தோர்முகம்பார்! நல்லறமுநட்பு [ம்
நன்றென் றிரு! நடுநீங்காமலே நமக்கிட்டபடி
யென்றென் றிரு! மனமே! யுனக் குபதேசமிதே"

—பட்டினத்தடிகள்

தெய்வமொன்றே யெனவும், அத் தெய்வமே அழியாத பரம்பொரு ளெனவும், மோக திரவியங்களான செல்வமாதியனைத்தும், நிலையில் லாத பொருளெனவும், ஆன்மாக்கள் அறமுங் கருணையும் பொருந் தினவரா யிருக்கவேண்டுமெனவும், முருகன் திருவருட் செல்வம் படைத்தவரான நமது சுவாமிகளுணர்த்திய பொன்மொழிக்கிணங்க அடிகளும் நவின்றுள்ளாரென்க இன்னும் யாக்கையின் றன்மைபற்றி

"விட்டுவிடப் போகுதுயிர் விட்டவுடனே யுடலைச்
சுட்டுவிடப் போகின்றார் சுற்றத்தார்—பட்டதுபட்
டெங்நேர முஞ்சிவனை யேத்துங்கள்! போற்றுங்கள்!
சொன்னே னதுவே சுகம்." என்னும் —வெண்பாவினாலு

முணர்க.

சீரங்க ராகமற மோதுதி கிரிசேங் கைகோண்ட
சீரங்க ராகம ருகந்த தேசிகசேந் திலைமேற்
சீரங்க ராகதன கிரிதோய் கந்த சேந்தமிழ்நூற்
சீரங்க ராகவி னேதவேன் பார்க்கில்லை தீவினையே. (98)

(ப-ரை.) சீரம் - கலப்பையையும், கரா - முதலையினது, கம்-தலையை, அற - அறும்படி, மோது - அமர்செய்த, திகிரி - சக்கரத்தையும், செம் - சிவந்த, கை — கரத்தில், கொண்ட - தரித்திருக்கும், சீரங்கர்-திருவரங்கத்தையுடைய திருமாலும், ஆகமர்-ஆகம வேதத்தையருளிய பரமசிவனும், உகந்த - விரும்பத்தக்க, தேசிக - அழகனே! செம் - சிவந்த, தினைமேல்—தினைப்புனத்தில் வாழும், சீர் - சிறந்த வள்ளிநாயகியினது, அங்கராக - சாந்தணிந்த, தனம் கிரி - தனமாகிய மலையை, தோய் - தழுவிய, கந்த - குமாரக்கடவுளே! செந்தமிழ்நூல்-செவ்விய தமிழ்ப்பனுவலின், சீரங்க - சீர்முதலிய எட்டுறுப்புக்குரிய பாவலனே! ராகவிநோத - கீதத்திலுல்லாசனே! என்பார்க்கு - என்று நாடோறுந் துதிக்கின்றவர்கட்கு, தீவினையில்லை - கொடிய வினைகள் சேரமாட்டாது.

(க-ரை.) கலப்பையென்னு மாயுதத்தையும், சக்காயுதத்தையும், கொண்ட முகுந்தனது திருமருகா! சுந்தரவடிவிசைந்த முருகா! தினைப்புன மங்கையாகிய வள்ளிநாயகியை மணம்புரிந்த கந்தப் பெருமானே! சகல கலாவல்லவனே! என்று துதிக்கத்தகுந்த அன்பர்களைத் தீயவினைகள் சாராது நீங்கிவிடும் என்பதாகும்.

(வி-ரை.) முருகன் பிரபாவங்களைப் புகழ்ந்து போற்றுகின்ற அடியார்களிடம் தீவினை யணுகாதென்பதை ஈதுணர்த்துவதாகும். முத்தமிழ்ப்புலவன், வித்வமூர்த்தி கலாவிநோதன், சகல கலாவல்லவனென்னும் நாமங்கள் கந்தப்பெருமானுக் குரியதாகுமென்க.

"இவ்வாறச் சபையினர்தாங் கேட்டுநனி விம்முதமுற்
றியம்பொணுத, துவ்வாரு மொளிவடிவிற் கந்தபுரஞ் சென்
றிறையைத் துதித்துநிற்ப, வவ்வாறங் குணர்ந்தருளிப் புன்
னகைபூத் திவ்வரிசை யழகிற்கொண்டேன், தவ்வாத குணத்தி
னனுஞ் சகலகலா வல்லவனுஞ் சாமிதானே." —தனிப்பாடல்

"பின்பா வலரெல்லாம் பெருவணிகக் குலமணியை
யன்பா லழைத்தேகித் தமதவையத் திடையிருத்தா
நன்பான் மலர்நறுஞ் சாந்துகொண் டருச்சித்தனர்நயந்தே
முன்பா விருந்தருந்தீந் தமிழ்மொழிந்தா ரவைகேளா."

—திருவிளையாடற்புராணம்

"முன்னையோர் முத்திநலத் தந்தணன் றன்பொருட்டா
முதல்வனொரு வித்துவான் வடிவமதைக் கொண்டான்
பின்னையுமோர் முத்திதலத் தந்தணனுக் கென்றே
பிரான்மக னுமக்கோலம் பெட்புடனே கொண்டான்."

—அபியுக்தர்வாக்கு

தீவினை யற்ற சினந்தீ ரகத்துண்மெய்த் தீபநந்தந்
தீவினை யற்ற வனந்தா தெடுத்தனஞ் செந்தினைமேல்
தீவினை யற்ற புனமான் கொழுநன் செழுங்கனகத்
தீவினை யற்ற வடியார்க் கருள்பெருஞ் செல்வனுக்கே. **(99)**

(ப-ரை.) தீ - அக்கினியானவன், வினையற்ற - தீட்சண்யமாகத் தகிக்கின்ற தன் செய்கையற்றதுபோல், சினம் தீர் - கோபம் நீங்கிய, அகத்துள் - நமது சாந்த இருதயத்துள், மெய் - உண்மையாகிய, தீபம் - ஞானவிளக்கை, நந்தம் தீவினை-நம்முடைய தீவினையாகிய, அல் - இருளானது, தவ - கெடும்படி, நந்தாது - அவிந்துபோகாமல், எடுத்தனம்—ஏற்றிவைத்தோம், செம் - சிவந்த, தினைமேல் - தினைப் பயிர் விளைவில், தீ - தீய்ந்துபோகும், வினை அற்ற-செய்கையில்லாத, புன - புனத்தில் வாழும், மான் - மான்போன்ற கண்ணையுமுடைய வள்ளியம்மைக்கு, கொழுநன் - நாயகனாகிய, செழும் - செழுமை தங்கிய, கனகத் தீவினை - பொன்மயமாய்ப் பிரகாசிக்கின்ற மோட்ச வுலகத்தை, அற்ற - பாசபந்தங்கணீங்கிய, அடியார்க்கு - தமது அடியார்கட்கு, அருள் - கொடுத்தருள்கின்ற, பெரும் - பெரிய, செல்வனுக்கு - அருணிறைந்த செல்வனுக்கு.

(க-ரை.) தினைப்புனத்தில் வளர்கின்ற குறவஞ்சியாகிய வள்ளி நாயகிக்குத் தலைவனும், பந்தபாசங்களற்ற சன்மார்க்க சீலர்களுக்கு முத்தியுலகை யளிக்கின்றவனுமாகிய கந்தக் கடவுளுக்கு நமது சாந்த நிலையுற்ற இருதயமாகிய அகத்துள் அவனது அருண்ஞானமாகிய தீபத்தை ஏற்றியுள்ளோம் என்பதாம்.

(வி-ரை.) உலகமயக்கமாகிய பந்தபாசங்கணீங்கிப் பற்றற்ற இருதயவெளியில் அருண்ஞான வொளிதோன்று மென்பதை இங்கு வெளியிட்டார் என்க. மெய்யன்பர்களின் இலட்சணமதுவேயாகும். அவரது மனத்தூய்மை இங்கு விளக்குகின்ற உதாரணங்களாலுணர்க.

“அன்புறு சிந்தையின்மே லெழுமவ் வொளியின்புறு
 கண்ணி யொடேற விசைந்தன
துன்புறு கண்ணி யைந்தாடுந் துடக்கற்று
 நண்புறு சிந்தையை நாடுமினீரே.” —திருமந்திரம்

யின்னுமவ்வித ஞானச்செல்வர்களின் தன்மையாதெனின்,

“உம்பர்வா ழுலகம் வேண்டா ருலகர சாட்சி வேண்டார்
பொன்புனை மகளிர் வேண்டார் புண்ணிய பாவம் வேண்டார்
இன்பொடு துன்பம் வேண்டா ரிறப்பொடு பிறப்பும்வேண்டார்
ஐம்புலப் பகையை வேண்டா ரறிவினை யறிந்த மேலோர்.”

என்னும் ஞானரகசியத்தானுமுணர்க.

செல்வந் திகழு மலநெஞ்ச மேயவன் றெய்வமின்னூர்
செல்வந் திகழு நமதின்மை தீர்க்கும்வேங் கூற்றுவர்க்குச்
செல்வந் திகழுந் திருக்கையில் வேறினை காத்தசெல்வி
செல்வந் திகழு மணவாள னல்குந் திருவடியே. **(100)**

(ப-ரை.) செல்—அங்குசென்று, வந்தி - வணக்கஞ்செய், கழுமலம் - குமாரக்கடவுள்முன் ஞானசம்பந்தரா யவதரித்தருளிய சீகாழிப்பதியின்கண், நெஞ்சமே - இருதயமே! அவன் - அவனது,

தெய்வ - தெய்வீகமாகிய, மின் - தெய்வயானை, ஊர்-ஏறிவருகின்ற, செல் - மேகவாகனமானது, வந்து - வந்து, இகழும் - (பிறரால்) இகழப்படும், நமது-நம்முடைய, இன்மை - இல்லாமையாவும், தீர்க்கும்—நீக்கிவிடும், வெம் - கொடிய, கூற்றுவற்கு-யமனுக்கு, செம்-நம்மேல் நடப்பதாகிய, வந்தி - கொடுமையை, கழும் - தடைத்துவிடும், திருக்கையில் - (முருகக்கடவுளது) திருக்கரத்தின், வேல் - வேலாயுதமானது, தினைகாத்த - தினைப்புனங் காவல்பூண்ட, செல்வி - வள்ளி நாயகியினது, செல்வம் - பெருஞ்சிறப்பாக, திகழும் - (நிறைந்து) பிரகாசிக்கின்ற, மணவாளன் - நாயகனாகிய கந்தப்பெருமான், திருவடிநல்கும் - திருவடித்தாமரையை நமக்குத் தந்தருளுவார்.

(க-ரை.) ஹே நெஞ்சமே! விண்ணவர்கோன் மகள் தேவகுஞ்சரியினது வாகனமாகிய மேகமானது நமது இல்லாமையென்னும் வறுமை யாவும் ஒழித்துவிடும் முருகப்பெருமானுடைய வெற்றி வேலாயுதமானது யமபயத்தை நிவர்த்திக்கும் அந்த வள்ளிநாயகனாகிய கந்தக்கடவுள் தமது திருவடிமலர்களைத் தஞ்சமாக அளித்து நித்ய செல்வத்தைத் தந்தருளுவார் ஆதலின், அவர் ஞானசம்பந்தராயவதரித்துள்ள சீகாழிப்பதியிற் சென்று துதி செய்வாயாக என்பதாகும்.

(வி-ரை.) முருகக்கடவுளே சீகாழிப்பதியில் ஞானசம்பந்தப் பிள்ளையாக அவதரித்து அத்தலத்தில் உமாதேவியிடம் ஞானப் பாலுண்டு தேவாரப்பதிகங்கள் பாடி மெய்ச்சமயமாகிய சைவசமயத்தை வளர்த்தவராதலின் சன்மார்க்கவாயிலாக அவரைத் துதித்துப் பரம ஐஸ்வரியத்தை யடையவேண்டுமென்பதை நமது சுவாமிகள் உலகத்தாருக்கு உணர்த்தியருளினர் என்க.

கந்தரந்தாதி மூலமும் விருத்தியுரையும்
முற்றிற்று.